
என்றும் மகிழ்வுடன்
பிரேமா
என்றும் மகிழ்வுடன்!
பிரேமா
புகழ் பெற்று வரும்
பிரேமாவின்
10ஆவது நாவல்

## முன்னுரை

அன்பான வாசகர்களுக்கு,

எனக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய பத்தாவது கதையில் ஒரு பாசமான குடும்பத்தை உங்களுக்கு அறிமுகப்படுத்தி இருக்கிறேன். அவர்களில் உங்களின் மனம் கவர்ந்தவர் யாரென்பதை தெரிந்து கொள்ள ஆவலுடன் காத்திருக்கிறேன்.

இக்கதையில் உள்ள நிறை குறைகளை premaarumugam@yahoo.com என்ற என் மின்னஞ்சல் முகவரிக்கு தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி! மீண்டும் சந்திப்போம்!

இப்படிக்கு,
பிரேமா

# என்றும் மகிழ்வுடன்...



## 1

"திருஷ்டி சுத்தணும், வினய் தம்பி, நீங்க மூணு பேரும் ஒண்ணா சேர்ந்து நில்லுங்க" என்று ரத்தினம் கூறவும்,

வினய் தன் தாய் ரேணுகாவையும் தம்பி மனோஜையும் இழுத்து வந்து தன்னருகில் நிறுத்தினான். பூசணிக்காயை வைத்து அவர்கள் மூவருக்கும் திருஷ்டி சுத்திய ரத்தினம் அதை உடைப்பதற்காக வெளியேறினார்.

"கிரஹப்பிரவேசம் அமர்க்களமா முடிஞ்சிடுத்து, நான் உத்தரவு வாங்கிக்கிறேன்" என்று அய்யர் அவர்களிடம் விடை பெற்றார்.

வந்திருந்த அனைவரும் அந்த மூன்று படுக்கை அறை கொண்ட ஃப்ளாட்டை புகழ்ந்து தள்ளினார்கள்.

''சில்ட்ரன்ஸ் பார்க், டிராக், ஸ்விம்மிங் பூல் என்று எல்லாமே உங்க அபார்ட்மென்டிலே இருக்கு. உங்களுக்கு வசதியா இருக்கும். எப்போ குடி வரப் போறீங்க?'' என்று ஒருவர் கேட்க.

''இன்னும் கொஞ்சம் மரவேலை பாக்கி இருக்கு. அது முடிஞ்சதும் வந்துடுவோம்'' என்று ரேணுகா பதில் அளித்தார்.

''அப்படின்னா இப்போ குடியிருக்கிற உங்க அப்பா வீட்டை என்ன செய்யப் போறீங்க?''

''அந்த வீடு சின்னது. வீட்டை விட காலி தான் நிறைய இருக்கு. அதைப் பெருசா எடுத்துக் கட்டணும் என்று வினய்க்கு ஆசை. இன்னும் கொஞ்ச வருஷம் கழிச்சு தொடங்கணும். அது வரைக்கும் அதை வாடகைக்கு விடணும்.''

''பெரிய வீடா வாங்கியாச்சு. எப்போ கல்யாணச் சாப்பாடு போடப் போறீங்க?'' என்று இன்னொருவர் கேட்டதும், ரேணுகா மகனைத் திரும்பிப் பார்த்தார்.

மாநிறத்தில் களையான முகத்துடனும் அளவான உடற்கட்டுடனும் நின்றிருந்த மகனைப் பெருமை பொங்கப் பார்த்தார்.

''இன்னும் மூணு மாசத்திலே வினய்க்கு இருபத்தொன்பது தொடங்கிடும். அதனால கூடிய சீக்கிரமே அவனுக்கு ஒரு கல்யாணம் பண்ணி வைக்கணும்'' என்று ரேணுகா கூறினார்.

'என் மகனின் குணத்துக்கும் பொறுப்புணர்ச்சிக்கும் ஏற்ற பெண் அமைந்து அவன் சிறப்பாக வாழ வேண்டும்' என்று ரேணுகா மனதிற்குள் வேண்டிக் கொண்டார்.

வந்திருந்த அனைவரும் கிளம்பிச் சென்றதும், ''என்னம்மா உங்க அப்பா வீட்டை விட்டுட்டு இங்க குடி வரணுமேன்னு வருத்தமா இருக்கா?'' என்று வினய் கேட்க,

''வீட்டிலே என்னடா விஜய் இருக்கு? அதுல குடியிருக்கிற மனுஷங்களை பொறுத்து தான் நம்மோட சந்தோஷமும் துக்கமும் அடங்கி இருக்கு'' என்று ரேணுகா கூறினார்.

''ஆனா எனக்கு வருத்தமா இருக்கு'' என்று மலர்விழி அனைவரும் அவள் புறம் திரும்பிப் பார்த்தனர்.

''இவ்வளவு வருஷமும் ஒண்ணா... பக்கத்து பக்கத்து வீட்டிலே இருந்துட்டு இப்போ நீங்க மட்டும் தனியா போறதை நினைச்சா எனக்கு கவலையா இருக்கு'' என்று நிஜமான வருத்தத்தில் மலர்விழி உரைக்க,

''மலர் சந்தோஷமான நேரத்திலே என்ன பேசுறதுன்னு உனக்குத் தெரியாதா?'' என்று மலர்விழியின் தந்தை ரத்தினம் அவளைக் கடிந்து கொண்டார்.

''சின்னு இன்னும் சில மாசத்திலே நீ டாக்டர் ஆகிடுவ தானே! நாலு பேருக்கு வைத்தியம் பார்க்கிறேன்னு பாவ்லா பண்ணி துட்டு சேர்த்து இதே அபார்ட்மென்ட்டிலே ஒரு ஃப்ளாட் வாங்கி குடி வந்துடு. அப்புறமா எங்களை நீ தினமும் பார்க்கலாம்'' என்று வினய் அவளுக்கு வழி சொல்லிக் கொடுத்தான்.

''வேற ஃப்ளாட் எதுக்கு? இதே ஃப்ளாட்டுக்கே நான் குடி வருவேன்' என்று மலர்விழி மனதிற்குள் கூறிக் கொண்டாள்.

ரத்தினமும் அவர் மனைவியும் மலர்விழியை அழைத்துக் கொண்டு தங்கள் வீட்டிற்குக் கிளம்பினார்கள்.

''பை சின்னு. நான் இங்கே இருந்து அப்படியே சிங்கப்பூர் கிளம்பிடுவேன்'' என்று வினய் அவளுக்கு விடை கொடுத்தான்.

''ஓ.கே பை. நான் கேட்டது உங்களுக்கு ஞாபகம் இருக்கு தானே? ஊருக்குப் போனதும் மறக்காமல் அனுப்புங்க'' என்றாள்.

''கண்டிப்பா'' என்று வினய் கூறியதும் அவர்கள் மூவரும் கிளம்பினார்கள்.

''உன் பிராஜெக்ட் முடிஞ்சு நீ இந்தியா வர இன்னும் எவ்வளவு நாள் ஆகும் வினய்?'' என்று ரேணுகா கேட்கவும்.

''என்னம்மா கஷ்டமா இருக்கா? இல்ல வேற ஏதாச்சும் பிரச்சனையா? இதுக்கு தான் நான் ஃபாரின் போக மாட்டேன் என்று சொன்னேன்'' என்று அவன் படபடக்க,

''அம்மா எப்போ உன்கிட்ட பிரச்சனைன்னு சொன்னாங்கண்ணா? நீ பாட்டுக்கு அடுக்கிக்கிட்டே போற. பிள்ளையைப் பார்க்காமல் இருக்கணும் என்றால் அம்மாவுக்கு கஷ்டமா இருக்காதா என்ன?'' என்று மனோஜ் இடைபுகுந்து அண்ணனை அதட்டினான்.



மனோஜ் தன் அண்ணனை விட ஆறு வயது சின்னவன். மனோஜ் அவனை அண்ணா என்று அழைத்தாலும் அண்ணன் மீது உள்ள நெருக்கத்தை பறைசாற்றும் வகையில் அவனை ஒருமையில் தான் அழைப்பான்.

''போக மாட்டேன்னு சொன்னவனை நீங்க தானேடா வற்புறுத்தி போக வச்சீங்க'' என்று வினய் அங்கலாய்க்க.

''நான் பொறந்த சில மாசத்திலேயே அப்பா இறந்துட்டார். அவர் இறந்ததுக்கு அப்புறம் நீ தான் எங்க ரெண்டு பேரையும் கவனிச்சுக்கிட்டே, காலேஜ் படிக்கிறதுக்கு கூட வேற ஊருக்கு போக மாட்டேனுட்ட, நான் காலேஜ் படிக்கும் போது உனக்கு அமெரிக்கா போக சான்ஸ் கிடைச்சது. போனியா நீ?! வழக்கம் போல எங்ககிட்ட இருந்து மறைச்சுட்டு நான் காலேஜ் முடிக்கிற வரைக்கும் சென்னையிலேயே தானே இருந்தே. இப்ப கூட சிங்கப்பூர் என்பதால அடிக்கடி வரலாம் என்று தானே உன்னை அனுப்பினோம். நீ எங்களுக்காக வரும் வாய்ப்பை எல்லாம் மறுத்துட்டு உன் ஃப்யூச்சரை பாழாக்க நினைச்சா நாங்க எப்படிண்ணா சும்மா இருப்போம்?'' என்று மனோஜ் கேட்டான்.

''பொல்லாத ஃப்யூச்சர்'' என்று முணுமுணுத்த வினய் வேகமாக தாயின் அருகே சென்று,

''இன்னும் மூணு மாசத்திலே திரும்பி வந்துடுவேன். அதுக்கு அப்புறமா எந்த ஊருக்கும் போக மாட்டேன். என்னை நீங்க போகச் சொல்லக் கூடாது'' என்று கறார் குரலில் மிரட்டினான்.

"அவனவன் அம்மாவை விட்டுட்டுத் தனியாப் போற திலே குறியா இருக்காங்க. நீ என்னடான்னா அம்மா வையும் தம்பியையும் விட்டுட்டு போக மாட்டேங்கிற. இந்த ரெண்டு வருஷமா நீ சிங்கப்பூர் போய் சம் பாதிச்சதால தானேடா கடனே இல்லாமல் இந்த வீட்டை வாங்க முடிஞ்சது" என்று ரேணுகா கூறியும் அவன் இளகாமல் நின்றான்.

"சரிடா, இனிமே உன்னை சென்னையை விட்டு அனுப்ப மாட்டேன். நீ இங்க இருந்து சம்பாதிக்கிறதே போதும்" என்றார்.

"இது நல்ல பிள்ளைக்கு அழகு" என்று கூறிய வினய் அவரது கன்னத்தில் முத்தமிட்டான்.

தங்களை விட்டுப் பிரியக் கூடாது என்று நினைக்கும் மகனது எண்ணத்தைக் கண்டு எப்போதும் போல் ரேணுகா பெருமிதம் கொண்டார்.

'வரப் போகும் மருமகளும் இந்தக் குடும்பத்தில் ஒருத்தியாய் கலந்து விட்டால் எனக்கு அது போதும் ஆண்டவா!' என ஆண்டவனிடம் கோரிக்கை வைத்தார்.

வினய் மனமே இல்லாமல் சிங்கப்பூருக்கு கிளம்பிச் சென்றான். விமான நிலையத்தில் பெட்டிகளை ஒப் படைத்து விட்டு போர்டிங் பாஸை பெற்றுக் கொண்டு நடந்து சென்று கொண்டிருந்தவனை பின்னால் இருந்து யாரோ ஓங்கி அடித்தார்கள்.

'நம்ம பிரண்ட்ஸ் யாராவது அடிக்கிறானுங்களா?!" என்று எண்ணிக் கொண்டே வினய் திரும்பிப் பார்த் தான்.



அங்கே ஐம்பது வயதுக்கு மேல் இருந்த மனிதர் நின்று கொண்டிருந்தார். அவரைப் பார்த்து அதிர்ந்தவன் 'இவர் எதுக்கு என்னை அடிச்சார்?!' என எரிச்சலும் கோபமும் அடைந்தான்.

"யார் சார் நீங்க? என்னை எதுக்கு அடிச்சீங்க?" என்று வினய் கோபத்துடன் கேட்க,

"உனக்கு பொண்ணுங்ககிட்ட எப்படி நடந்துக்கணும் என்று தெரியாதாடா?" என்றார் அந்த மனிதர்.

"எதுக்கு என்னை 'டா' போட்டு பேசுறீங்க? அப்புறமா நானும் வாய்யா போய்யான்னு மரியாதை இல்லாமல் பேசுவேன்."

"உனக்கெல்லாம் எதுக்குடா மரியாதை? உங்கம்மா உன்னை சரியா வளர்க்கலையா?" என்று அவனது கன்னத்தில் அறைய வினய் அவரது சட்டை காலரை கொத்தாகப் பிடித்தான்.

அவர்களை கடந்து செல்ல வேண்டியவர்கள் நின்று இவர்களை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தார்கள். வினய்க்கு அவமானமாக இருந்தது. பெண்கள் விஷ யத்தில் தான் தவறு செய்ததாக எழுந்த பொய்யான குற்றச்சாட்டில் அவன் கொதித்துப் போய் இருந்தான்.

அங்கே நடந்த சண்டையால் உண்டான சப்தத்தால் காவலாளிகள் அந்த இடத்திற்கு விரைந்து வந்தனர். வினய் அவரது சட்டையை விடுவித்தான்.

"என்னாச்சு? எதுக்கு சண்டை?" என்று காவலாளிகள் விசாரிக்க அந்த மனிதர் நடந்ததை கூறத் தொடங்கி னார்.

''சார் என் பேர் பாண்டியன். டைகர் ஏர்வேஸ்ஸிலே சிங்கப்பூர் போறதுக்காக வந்தேன். இவன் போர்டிங் பாஸ் வாங்க எனக்கு பின்னாடி லைனிலே நின்னுக்கிட்டு இருந்தான். நான் டிக்கெட் வாங்கிட்டு கொஞ்ச தூரம் நடந்து வந்ததுக்கு அப்புறமா தான் எங்க வீட்டுப் பொண்ணுகிட்ட இவன் வாலாட்டி இருக்கான் என்ற விஷயம் எனக்குத் தெரிஞ்சது.

கையை காலை வச்சுக்கிட்டு லைனிலே நிக்காமல் முன்னாடி இருக்கிற பொண்ணை உரசிப் பார்த்து இருக்கான். அவ பயந்துக்கிட்டு மெதுவா என்னிடம் தகவல் சொன்னாள். இவனை எப்படி நான் சும்மா விட முடியும்?'' என்ற காவலாளிகளிடம் நியாயம் கேட்டார்.

இந்த சண்டை மட்டும் ரோட்டிலே நடந்திருந்தால் பொது மக்கள் ஒன்று சேர்ந்து, ''அவனை நல்லா சாத்துங்க. இவனுங்களை எல்லாம் சும்மா விடக் கூடாது. நீயெல்லாம் அக்கா தங்கச்சியோட பிறக்கலை?'' என்று ஆளுக்கொன்றாய் கூறி தர்ம அடி கொடுத்திருப்பார்கள்.

ஆனால் சண்டை நடந்தது விமான நிலையம் என்பதால் அது மாதிரியான வசனங்கள் வெளிவரவில்லை. ஆனால் சுற்றி நின்றவர்களின் பார்வை உணர்த்திய செய்தி அது தான். வினய் மிகவும் அவமானமாக உணர்ந்தான்.

அந்தப் பெண் அவரிடம் எதையோ சொல்ல முற்பட்டாள். அதைக் கண்டு கொள்ளாமல், ''ரெண்டு தட்டு தட்டி அனுப்புங்க சார். முடிஞ்சா ஒரு மாசம் ஜெயிலில் போடுங்க. நான் வேணா கம்ப்ளைன்ட் கொடுக்கிறேன்'' என்றார்.



தனது இரு கைகளையும் மார்பிற்கு குறுக்காக கட்டிக் கொண்டு வினய் அவர் கூறிய கதையை கேட்டுக் கொண்டு இருந்தான்.

''என்ன தெனாவட்டா போஸ் கொடுக்கிறான் பாருங்க சார். கொழுப்பு!'' என்று பாண்டியன் திட்ட,

''ஆமா. நீங்க தான் எனக்கு பாலும் நெய்யுமா ஊட்டி வளர்த்தீங்க பாருங்க. அதான் எனக்கு கொழுப்பு கூடிப் போச்சு'' என்று அவரிடம் கிண்டலடித்தவன் அந்தக் காவலாளியிடம் திரும்பி.

''இவருக்கு பின்னாடி நின்னவன் போர்டிங் பாஸ் வாங்கினானா இல்லை லைனிலே சும்மா நின்னு வம்பு வளர்த்தானான்னு கேளுங்க சார்'' என்றான்.

பாண்டியன் அந்தப் பெண்ணை திரும்பிப் பார்த்து வினவினார். அவளோ, ''அவன் போர்டிங் பாஸ் வாங்கினான். இவரை மாதிரி ப்ளூ ஜீன்ஸும் ப்ளாக் ஜெர்கினும் தான் போட்டு இருந்தான். ஆனா முகச் சாயல் வேற மாதிரி இருக்கு'' என்றாள்.

அதைக் கேட்ட காவலாளிகள், ''என்னம்மா உன்கிட்ட வாலாட்டினவன் இவன் இல்லையா?'' என்று அந்தப் பெண்ணிடமே நேரடியாக விசாரணையை மேற்கொண்டனர்.

''இவர் இல்லைன்னு தான் நினைக்கிறேன். நான் முகத்தை சரியாப் பார்க்கலை'' என்றாள்.

''இவனை நல்லா அடிச்சு விசாரிங்க சார். உண்மையை சொல்லுவான்'' என்று பாண்டியன் அப்போதும் எகிறினார்.

வினய் அந்த காவலாளிகளிடம் திரும்பி, ''சார் நானும் சிங்கப்பூர் தான் போறேன். ஆனா நான் போகப் போறது சிங்கப்பூர் ஏர்லைன்ஸில். எனக்கு தெரிஞ்சு சிங்கப்பூர் ஏர்லைன்ஸோட போர்டிங் பாஸை டைகர் ஏர்லைன்ஸ் க்யூவிலே நின்னு வாங்க முடியாது'' என்றவன் பாண்டியனை பார்த்து கேலியாகச் சிரித்துவிட்டு தனது டிக்கட்டை எடுத்து அந்தக் காவலாளிகளிடம் காட்டினான்.

அவர்கள் அதை சரிபார்த்துக் கொண்டிருக்கும் போதே, ''நீங்க வேணா டைகர் ஏர்வேஸ் கவுண்டரில் போய் இவங்களுக்கு அடுத்து யார் டிக்கெட் வாங்கினாங்கன்னு செக் பண்ணிக்கோங்க. நான் போகட்டுமா?'' என்று அந்தக் காவலாளிகளிடம் கேட்க.

அவன் கூறியது உண்மை என்பதால் அந்தக் காவலாளிகள், ''யெஸ் சார். யூ மே கோ'' என்று அவனை அனுப்பி வைத்தார்கள்.

அந்தப் பெண், ''சாரி'' என்றாள். ஆனால் அப்போதும் பாண்டியன் விறைப்பாகவே நின்று கொண்டிருந்தார்.

''எங்க அம்மா என்னை சரியா தான் வளர்த்து இருக்காங்க. ஆனா உங்க அம்மா உங்களை சரியா வளர்க்கலை போல! செஞ்ச தப்புக்கு கேட்கிற நல்ல பழக்கம் கூட இல்லை!'' என்று கேலியாக உரைத்தான்.

'என் வாழ்க்கையிலே உன்னை சந்திக்கவே கூடாது. அப்படிச் சந்தித்தால் உன்னை விட மாட்டேன்!' என்பது போல் வினய் அவரை உறுத்து விழித்துவிட்டு அந்த இடம் விட்டு அகன்றான்.





# 2

வினய் சிங்கப்பூர் வந்து சேர்ந்து இரண்டு நாட்கள் கழிந்தது. அவன் தனது அலுவலகத்திற்கு சென்று கொண்டிருக்கும் பொழுது வழியில் ஒரு பெண்ணை கண்டான். அவள் ஒரு சைனீஸ் குழந்தையின் அழுகையை நிறுத்த பிரம்ம பிரயத்தனம் பட்டுக் கொண்டிருந்தாள்.

அவள் தனது முகத்தை அஷ்ட கோணலாக்கிக் கொண்டு ஏதேதோ வித்தைகள் காட்டி அந்தக் குழந்தையை சிரிக்க வைக்க முயன்று கொண்டிருந்தாள். அவளது நடவடிக்கைகளை வினய் ஓரமாக நின்று கவனிக்க ஆரம்பித்தான்.

அந்த குழந்தை ஒரு சைனீஸ் குழந்தை என்று பார்த்த உடனே தெரிந்தது போல் அதை சமாதானம் செய்யும் குமரி ஒரு இந்தியப் பெண் என்று முகச் சாயலை வைத்தே அவனால் எளிதாக கணிக்க முடிந்தது.

குழந்தையின் அருகில் சைனீஸ் பெண்ணொருத்தி நின்று கொண்டிருந்ததால் அது அவளுடைய குழந்தையாக இருக்கக்கூடும் என்று வினய் எண்ணிக் கொண்டான்.

பொதுவாக அவன் பெண்களை சுவாரஸ்யமாக வேடிக்கை பார்க்க மாட்டான். அடுத்தவரின் குழந்

தையை சமாதானம் செய்ய பொது இடத்தில் அவள் தன்னை தானே கோமாளியாக மாற்றிக் கொண்டு... யாரைப் பற்றியும் கவலைப்படாது குரங்கு சேட்டைகள் செய்து கொண்டிருந்ததால் வினய்க்கு அது வித்தியாச மாகப்பட்டது. எனவே நின்று கவனித்தான்.

ஒரு வழியாய் அந்தக் குழந்தையை சிரிக்க வைத் தவள் அதன் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு அந்தக் குழந்தையை பார்த்து கை அசைத்துவிட்டுச் சென்றாள்.

தன் உதடுகளில் இளநகை படர வினய் அவ்விடம் விட்டு அகன்றான். அதற்கு மேல் அவன் அவளைப் பற்றி ஆராய முற்படவில்லை. அவன் தனது அலுவலகத்திற்கு வந்து சேர்ந்து வேலையில் ஆழ்ந்தான்.

அவனது வேலையை கலைக்கும் வண்ணம் அவனது கைப்பேசி சிணுங்கவும் அதை எடுத்தான். அதற்குள் அழைப்பு மணி துண்டிக்கப்பட்டதும்.

''வேலை நேரத்திலே எனக்கு மிஸ்ட் கால் கொடுக்கிற அதிபுத்திசாலி யாரு?'' என்ற கேட்டுக் கொண்டே கைப்பேசியை ஆராய்ந்தான்.

அழைத்தது மலர்விழி என்று தெரிந்ததும் ஒரு புன்னகையுடனே அவளை அழைத்தான்.

''சின்னு நீ சொன்ன புக்கை லைப்ரரியில் இருந்து எடுத்துட்டு வந்து, நீ கேட்ட டாபிக்கை ஸ்கேன் பண்ணி, உன்னோட மெயில் ஐடிக்கு அனுப்பிட்டேன். ஏதாச்சும் ஒரு பிரவுஸிங் சென்ட்டருக்கு போய்ப் பாரு'' என்று அவளைப் பேசவிடாது கூறியவன்,



''நீ சொன்ன வேலையை பார்த்துட்டேன். இப்போ நான் ஆபீஸ் வேலையை பார்க்கட்டுமா?'' என்று அவளிடம் உத்தரவு கேட்டான்.

''அது!'' என்ற கெத்தாக மொழிந்த மலர்விழி, ''இனி உங்க வேலையை நீங்க தாராளமா பார்க்கலாம்'' என்று அனுமதி வழங்கவும்,

''எல்லாம் என் நேரம்'' என்று கூறி அழைப்பைத் துண்டித்தான்.

அன்று மதியமே அவன் அந்தப் பெண்ணை மீண்டும் சந்தித்தான். அதுவும் அவனது அலுவலக வளாகத்திலேயே சந்திக்கவும் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

'இந்தப் பொண்ணு என் ஆபிஸிலா வேலை செய்யு றாள்? இது நாள் வரைக்கும் என் கண்ணிலே படவே இல்லையே' என நினைத்தான்.

அவளுடன் வந்த பெண் இவனுக்கு நன்றாகத் தெரிந்தவள் என்ற காரணத்தால், ''வினய் மீட் மிஸ் ஹரிணி'' என்று அறிமுகப்படுத்தினாள்.

''ஹாய்! ஐ கேம் டூ நோ தட் யூ ஆர் ஃப்ரம் இண்டியா. ஐயம் சோ க்ளாட் டூ மீட் யூ'' என்ற ஹரிணி கூறியதும்,

வினய் மரியாதை நிமித்தம் அவளுக்கு கை கொடுத்து, ''ஈவன் ஐ ஃபீல் ஹாப்பி டூ மீட் யூ'' என்றான்.

அதன் பின் அவள் ஆங்கிலத்தில் பொளந்து கட்ட... அவனும் இடைவிடாது ஆங்கிலத்திலேயே அவளுக்கு பதில் அளித்தான்.

இவள் வட இந்தியப் பெண்ணோ என்று வினய் நினைக்க ஆரம்பித்தான். அவளது கோதுமை நிறம் அவனது எண்ணத்திற்கு வலு சேர்த்தது.

அவள் தன்னுடைய சிறு வயதிலேயே சிங்கப்பூர் வந்து குடியேறி விட்டதாக தெரிவித்தாள். அவள் லொட லொட என்று பேசிக் கொண்டே போனாள்.

''அட! ரேடியோ ஜாக்கியா போக வேண்டிய பொண்ணை இஞ்சினியருக்கு படிக்க வச்சு ஆபீஸ் வேலைக்கு அனுப்பிட்டாங்க போல! மூச்சு விடாது பேசுறாளே!'' என்று சுத்தமான தொழில் வினய் வாய் விட்டுப் புலம்ப.

''ஹேய், நீங்க தமிழா?'' என்று அவள் ஆச்சரியப்பட்ட வினய் விழி பிதுங்கி நின்றான்.

அவளோ அவனது கேலியை கண்டு கொள்ளாது,. ''தமிழ் முகத்தை பார்த்தால் எனக்கு ரொம்ப சந்தோஷமாகிடும் தெரியுமா? எனக்கு சென்னையிலே போய் செட்டிலாகணும் என்று ரொம்ப ஆசை'' என்று அவள் மீண்டும் தனது பேச்சை தொடர்ந்தாள்.

''ஒரு நிமிஷம் ஹரிணி. உங்க அம்மாவும் அப்பாவும் வீட்டிலே இல்லையா?'' என்று கேட்டான்.

''கரெக்ட். ரெண்டு நாளா வீட்டிலே இல்லை. ஊருக்கு போய் இருக்காங்க. எப்படி கரெக்டா கண்டு பிடிச்சீங்க?'' என்று அவள் ஆச்சரியப்பட,

''நம்ம பேச்சைக் கேட்க அடிமை ஒருத்தன் சிக்கிட்டான்னு நீங்க போடற ப்ளேடை வச்சு தான்'' என்றதும் அவள் ஹிஹி என்று அசடு வழிந்தாள்.



''சாரி. ரெண்டு நாளா வீட்டிலே பேச ஆளே கிடைக்கலையா... அதான் பேச ஆள் கிடைச்சதுன்னதும் அறுத்துத் தள்ளிட்டேன்.''

''அதெல்லாம் சரி. புதுசா பார்க்கிற என்கிட்டே எப்படி இவ்வளவு சகஜமா பேசுனீங்க?''

''புதுசா பார்க்கிறேனா? இல்லையே. நான் உங்களை நம்மோட ஆபீஸ் கேம்பஸில் வச்சு பல தடவை பார்த்து இருக்கேன். இன்னைக்கு தான் பக்கத்திலே வந்து பேசுறேன்.''

''அப்படியா? நான் இன்னைக்கு தான் உங்களை முதல் முதலா பார்த்தேன். ஒரு குழந்தையோட அழுகையை நிறுத்த கோமாளி வேஷம் போட்டுக்கிட்டு இருந்த போது'' என்றதும்.

''அதை பார்த்தீங்களா? பாவம் அந்த பேபி. அடி பட்டதால அழுதாள். அவ வலியை என்னால வாங்கிக்க முடியாது. அதான் அவளை சிரிக்க வச்சேன். ஏதோ என்னால முடிஞ்சதை செஞ்சேன்'' என்றவளை பார்த்து வினய் பெரிதாக புன்னகைத்தான்.

''ஓ.கே பை'' என்று விடைபெற்று அவள் தன் தோழியுடன் கிளம்பினாள்.

''நான் ஒரு போன் பேசிட்டு வரதுக்கு முன்னாடி வினய் காதிலே ரத்தம் வர வச்சுட்ட போல!'' என்று அவள் தோழி கிண்டல் செய்து கொண்டே ஹரிணியுடன் சென்றாள்.

குழந்தைத்தனமான முகம் என்று ஹரிணியின் தோற்றம் பற்றிய முதல் அபிப்பிராயம் அவனின் மனதில் பதிந்தது.

அவர்கள் இருவரது வீடும் அருகிலேயே இருந்தன. அதனால் அதன் பின்பு அவன் அவளை அடிக்கடி சந்தித்தான்.

மெல்ல மெல்ல அவள் தன் மனதிற்குள் நுழைவதை வினய் உணர்ந்தான். அவளது தோற்றம் மட்டுமல்ல அவளது குணமும் அழகு தான் என்று அவனுக்குத் தோன்றியது. இவள் தன் வீட்டுக்கு பொருத்தமானவள் என்று நம்பினான்.



# 3

ரேணுகா புது வீட்டிற்கு மனோஜுடன் குடி புகுந்தார். அதே தளத்தில் ஏற்கனவே குடியேறி இருந்த அவர் வயதை ஒத்த அபிராமியோடு அவருக்கு பரிச்சயம் ஏற்பட்டது. அபிராமி தன்னைக் காட்டிலும் ஒரு அப்பாவி என்பது ரேணுகாவிற்கு புரிந்தது.

அபிராமியின் வற்புறுத்தலின் காரணமாக அவரது வீட்டிற்கு ரேணுகா சென்றார். அபிராமியும் அவரது கணவரும் இருக்கும் புகைப்படம் பெரிதாக்கப்பட்டு வரவேற்பறையில் மாட்டப்பட்டிருந்தது.

அதைக் கண்ட ரேணுகா, "போட்டோ ரொம்ப நல்லா இருக்கு. ரொம்பப் பொருத்தமான ஜோடி" என்று கூறினார்.



அபிராமி வெட்கத்துடன் சிரித்துக் கொண்டே, "எல்லோரும் அப்படி தான் சொல்லுவாங்க" என்றார்.

"எங்க வீட்டுக்காரர் வேலை விஷயமா வெளியூர் போய் இருக்கார். வர ரெண்டு மூணு வாரம் ஆகும். நாங்க முன்னாடி தனி வீட்டில் இருந்தோம். அதுவும் சொந்த வீடு தான். எங்கப்பா எனக்கு சீதனமா கொடுத்தார். இவர் இது மாதிரி ஊருக்கு போனால் எனக்கு ரொம்ப போர் அடிக்குதுன்னு சொல்லி நான் தான் அபார்ட்மெண்ட்டுக்கு குடி போகலாம் என்று சொன்னேன். அதனால அந்த வீட்டை வித்துட்டு இந்த வீட்டை வாங்கினோம்.

ஃப்ளாட்ன்னா பக்கத்திலே பேச்சுத் துணைக்கு ஆள் கிடைப்பாங்கன்னு நினைச்சு வந்தேன். எனக்கு உங்களை பார்த்ததுமே ரொம்பப் பிடிச்சிருச்சு. உங்களை நான் அக்கான்னு கூப்பிடலாமா?" என்று அனுமதி கேட்ட அபிராமி ரேணுகா சரியெனத் தலையாட்டவும் தனது கதையை கூற ஆரம்பித்தார்.

"நாங்க கல்யாணமான புதுசிலே பம்பாயிலே குடியிருந்தோம். பத்து வருஷம் கழிச்சு தான் சென்னைக்கு வந்தோம். எனக்கு குழந்தை எதுவும் இல்லைக்கா. இருபது வருஷத்துக்கு முன்னாடி கருத்தரிக்க தாமதமாச்சுன்னா உடனே ஹாஸ்பிட்டலுக்கு போய் ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிற வழக்கம் இல்லையா... என்ன பிரச்சனைன்னு தெரியாமலே கொஞ்ச வருஷம் இருந்துட்டோம்.

அந்தக் கொஞ்ச வருஷம் ரொம்ப வருத்தப்பட்டேன். அப்புறம் மெடிக்கல் செக் அப் பண்ணி பார்த்ததிலே

அவருக்கு ஏதோ பிரச்சனை இருக்குன்னு டாக்டர் சொன்னதா அவர் சொன்னார். அதுக்கு அப்புறமா நான் வருத்தப்படுறதை நிறுத்திட்டேன். நான் வருத்தப்பட்டா அவரும் வருத்தப்படுவார் இல்லையா?'' என்று அவர் கேட்கவும் ரேணுகா அபிராமியின் கையை தட்டிக் கொடுத்தார்.

''உங்களுக்கு எத்தனை பசங்க அக்கா?'' என்று அபிராமி விசாரிக்கவும்,

''ரெண்டு பசங்க, சின்னவன் மனோஜ். இங்க தான் சாஃப்ட்வேர் இஞ்சினியரா வேலை பார்க்கிறான். பெரியவன் வினய் சிங்கப்பூரிலே இருக்கான். அவனும் இஞ்சினியர் தான்'' என்றதும்,

''எங்க அண்ணன் பேமிலி கூட சிங்கப்பூரிலே தான் இருக்காங்க'' என்று அபிராமி உற்சாகத்துடன் கூறினார்.

''உங்க ஹஸ்பண்ட் எங்கே வேலை பார்க்கிறார்?'' என்று அபிராமி விசாரிக்கவும், ரேணுகா சில நொடிகள் அமைதியா இருந்தார்.

''எங்க மனோஜ் பிறந்த கொஞ்ச மாசத்திலே ஒரு ஆக்ஸிடென்ட் ஆச்சு. அதிலே அவனுக்கு முழங் காலுக்கு கீழ ரெண்டு காலையும் எடுக்க வேண்டியதா போச்சு. எங்க வீட்டுக்காரரும் போயிட்டார்'' என்று ரேணுகா கூறியதும்.

''அச்சோ! தெரியாம கேட்டுட்டேன் அக்கா'' என்று வருத்தப்பட்ட அபிராமி.

''மனோஜுக்கு கால் இல்லைன்னு சொல்றீங்க. ஆனா அவன் நல்லா தானே நடக்கிறான். அது எப்படி?'' என்று



''முதல்ல வீல் சேரில் தான் வச்சு பார்த்துக்கிட்டோம். பிராஸ்தடிக்ஸ் (Prosthetics) அப்படின்னு சொல்லுற செயற்கை கால் பொருத்த சொல்லி எவ்வளவோ கெஞ்சினோம். அதை பொருத்தினா ரொம்ப வலிக்கும் என்று மனோஜ் பயந்துக்கிட்டு மாட்டேன்னு சொல்லிட்டான்.

அப்புறம் எங்க வினய் மனோஜுக்காக தன் வாழ்க் கையை கூடப் பார்த்துக்க மாட்டேங்கிறான் என்றதும் தான் மனோஜ் இந்த செயற்கை கால் பொருத்த சம் மதிச்சான். இதுக்காக நிறைய பயிற்சி நிறைய வலின்னு என் பையன் ரொம்ப அவஸ்தைப்பட்டான்.

குழந்தைங்க நடை பழகுகிற மாதிரி தான் நடக்க பழகினான். முதல்ல கம்பியை பிடிச்சிக்கிட்டு நடக் கணும். பல வருஷங்களாக நடைன்னா என்னன்னு தெரியாமலே இருந்துட்டதால அவனால சுலபமா நடக்க முடியலை. ஒரு கால் மட்டும் கட்டைக் கால் என்றால் கூடப் பரவாயில்லை. ரெண்டு காலுமே கட்டைக் காலா.... ரொம்பக் கஷ்டப்பட்டான்.

ஆனா எங்க வினய் அவன் கூடவே இருந்து அவனை பார்த்துக்கிட்டான். என்னைக் கேட்டா மனோஜ் செயற்கை கால் இருப்பதால் நடக்கலை. அவன் நடக் கிறதுக்கு காரணமே எங்க வினய் தான் என்று சொல்லு வேன்.

அவனை பிள்ளையா பெற நான் எந்த ஜென்மத்திலே புண்ணியம் செஞ்சேனோ தெரியலை. ரொம்பப் பொறுப்பானவன். ரொம்பப் பாசமானவன்'' என்று பெரிய மகனை பற்றிப் பேசிய ரேணுகாவின் கண் ணோரம் நீர் வழிந்தது.

''மனோஜை வீல் சேரிலே வச்சு பார்த்துக்கிறதுக்கு ரொம்பக் கஷ்டப்பட்டீங்களா?'' என்று அபிராமி விசாரித்தார்.

''சின்ன பிள்ளையா இருக்கிற போது அவனை தூக்கறது எனக்கு லேசா இருந்துச்சு. ஆனா அதுவே அவன் வளர வளர... அவனை என்னால தனியா தூக்க முடியலை. எங்க அப்பா இல்லைன்னா வினய் ஹெல்ப் பண்ணுவாங்க.

வினய் தான் வீல் சேரை தள்ளிக்கிட்டு மனோஜை ஸ்கூலுக்கு கூட்டிட்டுப் போவான். அது மட்டுமில்லை. மனோஜுக்கு பாட்டு பாட நல்லா வருதுன்னு அவனை கர்னாடிக் க்ளாஸுக்கு கூட கூட்டிட்டுப் போவான். நான் கூட ஏன்டா சிரமப்படுறே வேண்டாம்னு சொல்லிப் பார்த்தேன், எங்க வினய் அதை காதிலேயே வாங்கிக் கலை.

மனோஜ் தன்னால எல்லோர் மாதிரியும் நடக்க முடியலையேன்னு ஒதுங்கி ஒதுங்கிப் போவான். வினய் தான் இழுத்து வச்சு அவனை எல்லோர் கூடவும் கலந்து பேச வைப்பான். அவனோட தாழ்வு மனப்பான்மையை போக்கி அவனை நடமாட வச்சதுக்கு வினய் ஒரு காரணம் என்றால் மலர்விழி இன்னொரு காரணம். அவளுக்கு நான் ரொம்ப நன்றிக் கடன்பட்டிருக்கேன்.

ஆனா என்னோட கஷ்டமெல்லாம் ஒரு கஷ்டமே இல்லைன்னு சொல்லுவேன். மூளை வளர்ச்சி சரியில்லாத குழந்தைகளை வச்சுக்கிட்டு எத்தனை பெற்றோர்கள் கஷ்டப்படுறாங்க. அவங்க நிலைமையை யோசிச்சுப் பார்த்தால் என்னோடது ஒண்ணுமே இல்லை.



அந்தக் குழந்தைகளால பேச முடியாது... மனசிலே நினைக்கிறதை சொல்ல முடியாது. எத்தனை வயசானாலும் அவங்களோட பெத்தவங்களுக்கு அவங்க ஒரு குழந்தை தான்.

சமீபத்திலே ஆனந்த விகடனிலே ஒரு கட்டுரை படிச்சேன். கோயம்புத்தூரைச் சேர்ந்த சித்ரா சுப்ர மணியன் தன்னோட பையன் பரத் பத்தி சொல்லி யிருந்தாங்க. அவன் ஆட்டிஸத்தால் பாதிக்கப்பட்ட பையன் என்று தெரிஞ்சதும் சித்ரா அவனுக்காக ஆட்டிஸம் பத்தி தேடித் தேடி தகவல் சேகரிச்சிருக்காங்க. பரத்தை மத்த குழந்தைகளை போல டிகிரி படிக்க வச்சு வேலை பார்க்க வைக்கிற அளவுக்கு அவனை உயர்த்தி இருக்காங்க. அவங்க நிறைய சாதிச்சு இருக்காங்க.

உண்மையிலே அவங்க ரொம்ப கிரேட். என் பையனுக்கு கால் இல்லைங்கிறதையே ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விதமா பேசுவாங்க. சில பேர் அனுதாபமா பார்ப்பாங்க. சில பேர் முகத்தை சுளிச்சுக்கிட்டு போவாங்க.

ஆட்டிஸத்தால் பாதிக்கப்பட்ட அந்தப் பையனை இந்த சமூகம் சும்மாவா விட்டு இருக்கும்? அந்த அம்மா அதையெல்லாம் கடந்து இன்னைக்கு ஜெயிச்சு நிக் கிறாங்க. அவங்களைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட ணும் என்று தோணுச்சு'' என்று ரேணுகா அடுத்தவரின் கஷ் டத்தை தனதாக உணர்ந்து கூறவும் அபிராமி நெகிழ்ந்தார்.

''நான் வந்து மனோஜை பார்க்கலாமா?'' என்று கேட்டு ரேணுகாவுடன் சென்று மனோஜை பார்த்துப் பேசினார். பின்பு அதுவே தினமும் வாடிக்கையானது

மனோஜின் பாதி பேச்சு வினய் பற்றியதாகத் தான் இருக்கும். அண்ணன் தம்பிக்குள் இருக்கும் சகோதர பாசத்தை அபிராமி புரிந்து கொண்டார்.



# 4

ஹரிணி தனது காரை நிறுத்திவிட்டு கடையில் இருந்து வாங்கி வந்திருந்த பொருட்கள் அடங்கிய பையை தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு தனது வீட்டை நோக்கி நடை போட்டாள்.

''ஹலோ! நான் ஹெல்ப் பண்ணட்டுமா?'' என்ற குரல் அருகே கேட்கவும் திரும்பிப் பார்த்தாள்.

''ஹாய் வினய்! இல்ல... நானே தூக்கிடுவேன்'' என்று கூறினாள்.

அவள் வாய் தான் அப்படிச் சொன்னது. ஆனால் முகமோ பலுவை தூக்க முடியாமல் சுளித்து வைத்தது.

''பரவாயில்லை ஹரிணி. நான் கொண்டு வந்து தரேன்'' என்று கூறி ஒரு பெரிய பையை அவளிடம் இருந்து வாங்கிக் கொண்டான்.

'இங்கு யாரைப் பார்க்க வந்தாய்?' என்று ஹரிணி தன்னைப் பார்த்துக் கேள்வி கேட்டால் என்ன பதில் சொல்ல வேண்டும் என வினய் பல பதில்கள் யோசித்து



வைத்திருக்க... அவளோ அந்தக் கேள்வியை கேட்கவே இல்லை.

'தப்பிச்சடா வினய்!' என்று மனதிற்குள் ஆசுவாசப் பட்டுக் கொண்டான்.

தனது வீட்டிற்குள் வரவேற்றவள் அவனை சோபாவில் அமர வைத்து விட்டு பொருட்களை உள்ளே எடுத்துச் சென்றாள். திரும்பி வந்தவள் அவனுக்கு எதிர் சோபாவில் அமர்ந்து கொண்டாள்.

''என்ன ஹரிணி வீட்டிலே யாரும் இல்லையா?''

''அம்மாவும் அப்பாவும் வெளியே போய் இருக்காங்க. என் தங்கச்சி அவ பிரண்டு வீட்டுக்கு போய் இருக்காள்'' என்றவள் அவனுடன் அலுவலக விஷயங்களை பேசினாள். ஐந்து நிமிடங்கள் கடந்த போது.

''உங்களுக்கு ஏதாச்சும் சாப்பிட கொண்டு வரேன்'' என்று கூறிவிட்டு சமையலறைக்கு சென்றாள்.

''சே! வீட்டிலே சாப்பிட ஒண்ணுமே இல்லாமல் இப்படியா சுத்தமா துடைச்சு வச்சு இருப்பாங்க. இந்த அம்மாவுக்கு கொஞ்சம் கூடப் பொறுப்பே இல்லை'' என்று மென்குரலில் திட்டியவள்,

அலமாரியை திறந்து ஏதாவது சிக்குகிறதா என்று தேடிப் பார்த்தாள். ஒரு பாப் கார்ன் பாக்கெட் சிக்கவும் அதை பொறித்துக் கொடுத்துவிடலாம் என்ற முடிவிற்கு வந்தாள்.

வேகமாக அந்தப் பாக்கெட்டை கத்தரித்து மைக்ரோவேவ் ஒவன் அருகில் சென்ற போது தான் அது பழுதாகி இருப்பது அவளது நினைவிற்கு வந்தது.

'அடடா! மைக்ரோவேவ் ஓவன் ரிப்பேர் ஆகிடுச்சுன்னு அம்மா சொன்னாங்களே. நம்மகிட்ட பாப் கார்ன் மேக்கர் கூட இல்லை. இப்போ இதை எப்படிப் பொறிக்கிறது?!' என்று விழித்தாள்.

'ஹையா ஐடியா! அத்தை சென்னையிலே ஓவன் இல்லாமலே அடுப்பில் வச்சுப் பொறிப்பாங்களே! அதே மாதிரி நாமளும் டிரை பண்ணுவோம்' என்று தனக்குள் கூறிக் கொண்டவள்.

ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து அதில் அந்த எண்ணெய்யோடு இருந்த சோளத்தை கொட்டினாள்.

பொவாக சோளம் பொறிய ஆரம்பித்ததும் வெடித்துச் சிதறும். அதனால் பாத்திரத்தை மூடி வைப்பார்கள். அதனால் அந்த சோளம் அந்த மூடியில் பட்டுத் தெறித்து மீண்டும் பாத்திரத்திலேயே விழும்.

ஆனால் சமையல் என்றால் என்னவென்று கேட்கும் ஹரிணிக்கு இந்த அடிப்படை உண்மை தெரியாததால் அவள் அந்தப் பாத்திரத்தை மூடவில்லை.

சோளம் பொறிய ஆரம்பித்ததும் வெளியே வந்து விழவும் பயந்து போய் அடுப்பில் இருந்து வெகுதூரம் தள்ளிச் சென்று நின்று கொண்டாள்.

''இதென்ன... இப்படித் தெறிக்குது? சட்டியிலே வச்சு பொறிக்கிறதிலே இவ்வளவு கஷ்டம் இருக்கா? சென்னை மக்கள் பாப் கார்ன் பொறிக்கணும் என்றால் முதல்ல கிச்சனை க்ளீன் பண்ணிட்டு தான் பொறிக்கவே ஆரம்பிக்கணும்? அப்போ தானே கீழே விழுகிற பாப் கார்னை பொறுக்கி எடுத்து சாப்பிட முடியும்! சென்னை



மக்கள் உண்மையிலே ரொம்பப் பாவம்!'' என்று பரிதாபப்பட்டுக் கொண்டாள்.

அது அதிக அளவில் தெறிக்க ஆரம்பித்ததும் சமையல் அறைக்கு வெளியிலே வந்து நின்று கொண்டு அதை எட்டி எட்டிப் பார்க்க ஆரம்பித்தாள்.

இவள் என்ன செய்கிறாள் என்று குழம்பிய வினய் அவள் அருகில் சென்று பார்த்தான். பார்த்தவன் தலையில் அடித்துக் கொண்டு அவளை நகர்த்திவிட்டு உள்ளே சென்று அந்தப் பாத்திரத்தின் மேல் ஒரு மூடியைப் போட்டு மூடினான்.

அதன் பின்பு அது தெறித்து வெளியே விழவில்லை என்பதை கண்ட ஹரிணி, ''இதுல இப்படி ஒரு டெக்னிக் இருக்கா? எனக்கு இது தெரியாமல் போச்சே!'' என அங்கலாய்த்தாள்.

வினய் தன் மனதிற்குள், 'அம்மா உங்க மருமகளோட நளபாகத்தை பார்த்து நான் அப்படியே பூரிச்சு போய் நிற்கிறேன். இவ சத்தியமா உங்களுக்கு ஒரு வேலையும் செஞ்சு தர மாட்டாள். இவளுக்கும் சேர்த்து நீங்க தான் செய்யணும் போல! பாவம்மா நீங்க!' எனப் புலம்பிக் கொண்டு இருந்தான்.

அந்தச் சோளம் பொறிந்ததும் அடுப்பை அணைத்தவள் அவனிடம் திரும்பி, ''உங்களுக்கு நல்லா சமைக்க தெரியுமா?'' என்று கேட்டாள்.

''நான் காலையிலே பிரட், கார்ன் ப்ளேக்ஸ் இல் லைன்னா ஃப்ரூட்ஸ் சாப்பிட்டு சமாளிச்சுடுவேன். மதியமும் நைட்டும் வெளியே சாப்பிட்டு விடுவேன்.

தயிர் சாதம் மட்டும் அப்பப்போ வீட்டிலே சாப்பிடுவேன். எப்பவாது ஹோட்டல் சாப்பாடு போர் அடிச்சா குழம்பு காயெல்லாம் பண்ணலாம் என்று முடிவு பண்ணி எங்க அம்மாவுக்கு போன் பண்ணி கேட்பேன். அவங்க சொல்லச் சொல்ல இங்க நான் சமைப்பேன்.''

''அப்படின்னா உங்களுக்கு சமைக்க தெரியும் தானே?'' என்ற அவள் கேட்டதும் அவன் தலையை எல்லா திசைகளிலும் ஆட்டினான்.

''இதை நான் ஆமான்னு எடுத்துக்கணுமா? இல்லைன்னா?'' என்று அவள் சந்தேகம் கேட்க.

''எங்கம்மா கேசரி செய்ய ரெசிபி சொன்னால் நான் பாயாசம் செய்வேன். அப்படின்னா எனக்கு சமைக்கத் தெரியுமா இல்லையான்னு நீயே முடிவு பண்ணிக்கோ!'' என்றதும் அவள் புரியாது விழித்தாள்.

''அதாவது சாலிட்டா செய்ய வேண்டிய சமையலை நான் லிக்விட்டா செஞ்சு முடிப்பேன் என்று சொல்ல வந்தேன்.''

''அப்போ எனக்கு சமையல் சுத்தமா தெரியாதுன்னு சொல்ல வேண்டியது தானே? அதுக்கு எதுக்கு கிரைண்டர் குழவி மாதிரி உங்க தலையை போட்டு ஆட்டுனீங்க?'' என்று கிண்டல் பண்ணினாள்.

'எல்லாம் என் நேரம். பாப் கார்னை பறக்க விட்ட நீயெல்லாம் எனக்கு அட்வைஸ் பண்ணுற அளவுக்கு என் நேரம் மோசமா இருக்கு' என நினைத்து பெருமூச்சு விட்டான்.





''நீங்க சோபாவிலே உட்காருங்க. நான் இதோ வரேன்'' என்றதும் அவன் வரவேற்பறை நோக்கிச் சென்றான்.

''ஆண்டவா! இவ இன்னும் என்னென்ன செய்யக் காத்து இருக்காளோ?! நான் பத்திரமா வீடு போய் சேர்வது உன் பொறுப்பு'' என்று மெல்லிய குரலில் வேண்டிக் கொண்டான்.

அவள் புதிதாய் எந்த சமையலும் செய்ய முயற்சிக்கவில்லை. மாறாக கீழே சிந்தி இருந்த சோளங்களை ஒரு தட்டில் அள்ளினாள். சட்டியில் இருந்த சோளத்தின் எண்ணிக்கை இருபது கூட தாண்டாது என்று தெரிந்ததால் அதை வினய்க்கு கொடுக்க முடியாது என்று தீர்மானித்தாள்.

கீழே அள்ளிய சோளங்களோடு அவன் முன்னே அமர்ந்து டிஷ்யூ பேப்பர் என்று சொல்லப்படும் மெல்லிய காகிதங்கள் கொண்டு அவற்றை துடைக்க ஆரம்பித்தாள்.

'இதை நம்ம தலையிலே கட்டிவிடுவாளோ?' என வினய் பயந்து போய் அமர்ந்திருந்தான்.

துடைத்து முடித்தவள், ''நான் இதை மொட்டை மாடியிலே வச்சுட்டு வரேன்'' என்றாள்.

அவன் புரியாது விழிப்பதை பார்த்தவள், ''உங்களுக்காக தான் பண்ணினேன். ஆனா இப்போ உங்களால சாப்பிட முடியாது இல்ல?'' என்றதும்,

'பரவாயில்லைடா வினய்! உன் வருங்காலம் கொஞ்சம் டேஞ்சரா இருந்தாலும் இன்னைக்கு உனக்கு நேரம் நல்லா இருக்கு போல!' என நினைத்து நிம்மதியாக மூச்சு விட்டான்.

''எங்க அபார்ட்மென்ட் மொட்டை மாடியிலே புறா வரும். இதைக் கொண்டு போய் அங்க வச்சால் அது சாப்பிடும். அதான் போய் வச்சிட்டு வரேன்'' என்றாள்.

''புறாவுக்கு தானே போடப் போறே? அதை எதுக்கு டிஷ்யூ வச்சு துடைச்சே? அப்படியே வச்சால் புறா புறக் கணிச்சிடுமா?'' என்று கேட்டான்.

''புறக்கணிச்சிடுமான்னா என்ன?'' என்று அவள் சந்தேகம் கேட்க,

'இது வேறயா?!' என்பது போல் பார்த்தான். சிங்கப்பூர் சீமாட்டிக்கு சமையல் மட்டுமல்ல... தமிழும் ததிகிணத் தோமா என நொந்து கொண்டே,

''புறா ரிஜெக்ட் பண்ணிடுமான்னு கேட்டேன்'' என்று விளக்கமளித்தான்.

''அப்படி இல்ல... நியாயமா பார்த்தா நாம சாப்பிடக் கூடியதை தான் மத்தவங்களுக்கு... அது புறாவா இருந் தாலும் சாப்பிடக் கொடுக்கணும் என்று நான் நினைப் பேன். எங்கம்மா காலையிலே தான் கிச்சனை நல்லா க்ளீன் பண்ணினாங்க. தரை சுத்தமா தான் இருந்துச்சு. இருந்தாலும் அதை துடைச்சிட்டு போட்டால் எனக்கு ஒரு திருப்தி'' என்றதும் வினய் புன்னகைத்தான்.

''நீங்க உட்கார்ந்து இருங்க. நான் வந்துடுறேன்'' என்று கூறி வெளியேறினாள்.

வினய் அந்த வரவேற்பறையை தன் கண்களால் துழாவினான். அருகே சில புகைப்படங்கள் இருப்பதைப் பார்த்து அதை எடுத்துப் பார்த்தான்.



முதல் புகைப்படத்தில் ஹரிணி இரு பெரியவர் களுடன் இருந்தாள். அது அவளது பெற்றோர்களாக இருக்க வேண்டும் என்று நினைத்தான். ஹரிணிக்கும் அவள் அம்மாவிற்கும் சாயல் ஒற்றுமை இருந்தது.

அடுத்தடுத்த படங்களில் ஹரிணியே இருக்க வினய் அவளை ரசித்துப் பார்க்க ஆரம்பித்தான்.

'வினய் நீ உன் காதலை அவளிடம் சொல்லி சம்மதம் வாங்காத நிலையில் அவளை இது போல் ஆர்வமாக பார்ப்பது தப்பு' என்று அவனது மனசாட்சி எடுத் துரைத்தது.

'உன்னை யாராச்சும் கூப்பிட்டாங்களா? பேசாமல் போ!' என்று அதை அட்கியவன் தன் மனதிற்குள் புகுந்து விட்டவளை ரசிக்க ஆரம்பித்தான்.

அவன் அடுத்த புகைப்படத்தை பார்த்து அதிர்ச்சி அடைந்தான். ஏனென்றால் ஹரிணியுடன் ஒரு பெண் இருந்தாள். அவள் வேறு யாருமல்ல.. அன்று விமான நிலையத்தில் பாண்டியன் அவனுடன் சண்டை போடக் காரணமானவள்.

'இவ எப்படி ஹரிணி கூட போட்டோவிலே இருக் காள்? அப்படின்னா அந்தப் பாண்டியன் இவளுக்கு சொந்தமா? இவளைக் கல்யாணம் பண்ணினால் அந்த பாண்டியன் முகத்திலே முழிக்க வேண்டி வருமா? இது தேவையா வினய்?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

ஆனாலும் மனம் ஹரிணியின் புறமே சாய்ந்தது. அந்த சமயம் ஹரிணி திரும்பி வந்தாள்.

அவளிடம் அந்தப் பெண்ணை பற்றி மட்டும் விசாரிக்க முடியாது என்பதால் முதல் புகைப்படத்தைக் காட்டி, "இவங்க உன்னோட அம்மா அப்பாவா?" என்று கேட்டான்.

அவள் ஆமாம் என்றதும் அடுத்தடுத்து உள்ள புகைப் படங்களை காட்டி அவன் விசாரித்தான். விமான நிலை யத்தில் சந்தித்த பெண்ணைக் காட்டி வினய் விசாரித் தான்.

ஹரிணி புன்னகைத்தவாறே, "இவ என்னோட ஒரே தங்கச்சி சாதனா" என்று கூறி வினய் நெஞ்சில் நெருப்பை அள்ளிக் கொட்டினாள்.

'அப்போ அந்தப் பாண்டியன் கண்டிப்பா இவளுக்கு உறவுக்காரர் தான்' என்று மனம் அறிவுறுத்தியது.

அதன் பின்பு அவன் அசுவாரஸ்யமாய் அடுத்தடுத்த புகைப்படங்களை பார்வையிட்டான். அவள் உற்சாகமாய் விளக்கிக் கொண்டே வந்தாள்.

"இவங்க என்னோட அப்பாவோட ஒரே தங்கச்சி. அபிராமி அத்தை. இவர் அவங்களோட ஹஸ்பண்ட், பேர் பாண்டியன்" என்று அவள் அறிமுகப்படுத்தவும்,

"அப்படியா?" என்று மட்டும் கேட்டுக் கொண்டான்.

'அந்த ஆள் முகத்திலே நான் முழிக்கக் கூடாதுன்னு நினைச்சா விதி வேற மாதிரி முடிவு பண்ணி இருக்கு போல' என நொந்து போனான்.

'அவரை பார்க்கும் போதெல்லாம் நமக்கு கடுப்பு வருமே! எப்படி சமாளிக்கிறது?' என்று சிந்திக்க ஆரம் பித்தான்.



ஹரிணி அவனிடம் எதுவோ கேட்க அது அவனது காதிலேயே விழவில்லை. இது என்ன பூலோகமா என்ற ரீதியில் அமர்ந்திருந்தான்.

"ஹலோ வினய்! கண்ணை திறந்து வச்சுக்கிட்டு தூங்குறீங்களா?" என்று அவள் கேட்டதும், அவன்.

"சாரி. ஏதோ யோசனை" என்று கூறி முறுவலிக்க முயன்றான்.

அதற்கு பின்பு அவளிடம் சில நிமிடங்கள் பேசி விட்டு விடை பெற்றான்.

அதற்கு அடுத்து வந்த இரு நாட்களும் என்ன முடிவு எடுக்கலாம் என்று சிந்தித்தான். முன்பின் தெரியாத ஒரு குழந்தையின் அழுகையை காணப் பொறுக்காதவள் தன் குடும்பத்தினரையும் நல்லபடியாகப் பார்த்துக் கொள் வாள் என்று அவனுக்குத் தோன்றியது. அவன் மனம் ஹரிணியை இழக்க மறுத்தது என்றதும் தனது முடிவை பற்றி ரேணுகாவிடம் கூறினான்.

அவன் இது நாள் வரையில் ரேணுகாவிடம் எதையும் மறைத்ததில்லை.

"உனக்கு ரொம்பப் பிடிச்சிருக்குன்னா வேற எதை பத்தியும் யோசிக்காதே வினய்" என்று மட்டும் ரேணுகா கூறினார்.

'ஹரிணி நம்ம குடும்பத்துக்கு ஏத்த பொண்ணா?' என்றெல்லாம் அவர் கேட்கவில்லை. அவருக்கு தன் மகன் மேல் அத்தனை நம்பிக்கை. வினய் எந்த முடி வெடுத்தாலும் அதை தன் குடும்பத்தை முன்னிறுத் தியே எடுப்பான் என்பதால் ஹரிணி தங்கள்

குடும்பத்துக்கு ஏற்ற பெண்ணாய் தான் இருப்பாள் என்று ரேணுகா நம்பினார்.



# 5

ரேணுகா சம்மதம் தெரிவித்ததும் ஹரிணியிடம் தன் காதலை தெரிவிக்க எண்ணிய வினய் அவளை வெளியே அழைத்துச் செல்ல விரும்பினான்.

"ஹரிணி இன்னைக்கு நைட் டின்னர் போகலாமா?" என்று அவன் கேட்டதும் அவள் சம்மதித்தாள்.

"என் கூட காரிலே வருகிறாயா? நான் உன்னோட அபார்ட்மென்ட் வாசலிலே பிக் அப் பண்ணிக்கிறேன்" என்றதும் தலையாட்டினாள்.

ஆகாய புளூ ஜீன்ஸ் பேண்ட் அணிந்து அடர் புளூ டி-ஷர்ட் அணிந்தவன் கண்ணாடி முன் நின்று திரும்பித் திரும்பிப் பார்த்தான்.

"என்ன டிரஸ் பண்ணி என்ன செய்ய? எப்படியும் அவ என்னை ஸ்பெஷலா லுக் விடப் போறதில்லை. எல்லோரையும் பார்க்கிற மாதிரி தான் பார்ப்பாள்" என்று புலம்பிக் கொண்டே வாசனை திரவியத்தை தன் மேல் அடித்துக் கொண்டு கிளம்பினான். தனது நண்பனின் காரை எடுத்துக் கொண்டு அவளது அபார்ட்மென்ட்டிற்கு சென்றான்.



ஹரிணி ஆகாய நீல வண்ணத்தில் லாங் ஸ்கர்ட்டும் வெள்ளை டாப்ஸில் அதே நிறத்தில் சின்ன சின்ன பூக்கள் டிசைன் செய்யப்பட்ட உடையை அணிந்து வந்தாள்.

'இதப் பாருடா! மேட்சிங்கா டிரஸ் பண்ணிட்டு வந்து இருக்காள்! ஆனா அதை கவனிக்க மாட்டாளே' என்று தலையை உலுக்கிக் கொண்டான்.

"கெட் இன்" என்று அவன் கார்க் கதவை திறந்து விட்டதும் ஏறி அமர்ந்தவள் அவனை தவிர உலகில் உள்ள அனைவரைப் பற்றியும் பேச ஆரம்பித்தாள்.

அவனது கார் மலையில் ஏறவும் வெளியே பார்த்தவள், "ஹேய் வினய்! மவுண்ட் ஃபேபரா போறோம்?" என்று ஆச்சரியமாகக் கேட்டாள்.

"ஆமா அங்க தான். உனக்கு பிடிக்காதா?"

"மவுண்ட் ஃபேபர் செம சீனரி நிறைஞ்ச இடம். அதைப் போய் யாருக்காச்சும் பிடிக்காமல் போகுமா? சூப்பரா இருக்கும்."

தி ஜூவல் பாக்ஸ் உணவகத்தின் முன் அவன் காரை நிறுத்தியதும் காரில் இருந்து இறங்கியவள் சுற்றிலும் உள்ள இயற்கை அழகில் மயங்கிப் போய் நின்று கொண்டு இருந்தாள்.

'தப்புப் பண்ணிட்டடா வினய். அவகிட்ட ப்ரபோஸ் பண்ணுறதுக்கு முன்னாடி எனக்கு உன்னை பிடிச்சிருக்குன்னு பார்வையால அட்லீஸ்ட் அவளுக்கு உணர்த்தி இருக்கணும். அப்போ தான் உன்னை கொஞ்சமாச்சும் அவள் திரும்பி பார்த்து இருப்பாள். இப்போ பாரு...

உன்னை விட்டுட்டு செடி, கொடி, மலைன்னு வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்காள்' என்று மனதுக்குள் புலம்பிக் கொண்டான்.

'நீ லவ்வை சொன்ன பிறகாவது அவ உன்னை லுக்கு விடுறாளா பாருடா!' என்று அவனது மனசாட்சி அவனை கேலி பண்ணியது.

''வா ஹரிணி உள்ளே போய் உட்காரலாம்'' என்றதும் மனமே இல்லாமல் அந்த இடம் விட்டு நகர்ந்தாள்.

''இங்க நீங்க நிறைய தடவை வந்து இருக்கீங்களா?''

''இல்லை. இதான் செகன்ட் டைம்'' என்றான்.

அவன் ஒரு மேஜையில் அமர்ந்து அவளுக்கு பிடித்ததை கேட்டு உணவை ஆர்டர் பண்ணினான்.

அலுவலக நண்பர்கள் சிலரோடு தாங்கள் இருவரும் வெளியே சாப்பிடப் போகிறோம் என நினைத்தே ஹரிணி அவன் அழைத்த போது மறுக்காமல் வந்தாள். ஆனால் யாருமே தென்படவில்லை என்றதும்,

''என்ன வினய் நாம ரெண்டு பேர் மட்டும் தானா? வேற யாரும் வரப் போறது இல்லையா?'' என்று ஆச்சியமாகக் கேட்டாள்.

'உனக்கு அதுவே இப்போ தான் புரிஞ்சதா? கிழிஞ்சது போ!' என்று நினைத்துக் கொண்டான்.

''இந்த விஷயத்தை என்னால எல்லோருக்கும் முன்னாடி தண்டோரோ போட முடியாது ஹரிணி'' என்று அவன் கூறியதும் அவள் தனது கைப்பேசியை ஆராய ஆரம்பித்தாள்.



'எவன்டா கண்டுபிடிச்சான் இந்த செல்போனை?' என்று வினய் கடுப்பானான்.

''நம்ம பிரண்ட்ஸ் யாரும் வரலையான்னு கேட்டதுக்கு எதுக்கு டிரம்ஸ் அடிச்சு பப்ளிக்கா பேச விரும்பலைன்னு சொல்லுறீங்க?'' என்று அவள் சந்தேகம் கேட்க அவன் அவளை மேலிருந்து கீழாக பார்வையிட்டான்.

''எதுக்கு இப்படிப் பார்க்கிறீங்க?''

''இல்ல... நீ மனித உருவத்திலே இருக்கிற ரோபோவோன்னு பார்க்கிறேன்.''

''ஏன் அப்படி சொல்லுறீங்க?''

''நான் ஒரு ஸ்டேட்மெண்ட் சொல்லி இரண்டு நிமிஷம் கழிச்சு லேட்டா எதிர் கேள்வி கேட்டியா... அதான் பேட்டரி வீக்கான ரோபோவா இருப்பியோன்னு நினைச்சேன்'' என்று அவளை கிண்டல் பண்ண,

''நீங்க சொன்ன வார்த்தைக்கு எனக்கு அர்த்தம் தெரியலை. அதான் டிக்ஷனரியிலே தேடிப் பார்த்துக் கண்டுபிடிச்சேன்'' என்று அவள் பதில் அளிக்கவும்.

''இதை தான் உன்னோட செல்போனிலே நோண்டிக்கிட்டு இருந்தியா? சுத்தம். அப்போ உன்கிட்ட பேசணும்ன்னா நான் உனக்கு அகராதியா மாறணுமா?'' என நொந்து போனான்.

சாப்பாடு வந்ததும் அவள் அமைதியாகச் சாப்பிட ஆரம்பித்தாள்.

'என்னை கொஞ்சமாச்சும் நிமிர்ந்து பார்க்கிறாளா பாரு! நல்லா சாப்பாட்டை வெட்டிக்கிட்டு இருக்காள்' என்று பெருமினான்.

'நீயும் சொல்ல வேண்டிய விஷயத்தை சொல்லாம வெட்டியா தானேடா இருக்கே! அதான் அவ சாப் பாட்டை வெட்டுறாள்' என்று மனசாட்சி கிண்டல் பண்ணவும்,

''இந்த இடம் ரொம்ப ரொமாண்டிக்கா இருக்கு இல்ல?'' என்று வினய் பேச்சை தொடங்கினான்.

''நீங்க ரொமாண்டிக்குன்னு சொன்ன உடனே தான் எனக்கு ஞாபகம் வருது. நாம ரெண்டு பேரும் மட்டும் இந்த ரெஸ்டாரண்டுக்கு வரப் போறதா எனக்கு முன் னாடியே தெரிஞ்சிருந்தா நான் உங்க கூட வந்திருக்கவே மாட்டேன்'' என்று அவள் கூறியதும் வினய் முகம் மாறினான்.

'என் கூட தனியா வர மாட்டாளா? அந்த அளவிற்கு நான் நம்பத் தகுந்த ஆளா இவளுக்கு தோணலையா?' என்று மனம் வருந்தினான்.

அவனின் முகமாற்றத்தை கவனிக்காது அவள் மேலும் கூற ஆரம்பித்தாள்.

''நான் ஏற்கனவே என் பேமிலியோட இந்த ரெஸ்டாரண்ட்டுக்கு வந்திருக்கேன். இந்த இடம் ரொம்ப ரொமாண்டிக்கா இருந்துச்சா... அதனால் என் ஹஸ்பண்ட் கூட இங்க தனியா வரணும் என்று ப்ளான் பண்ணி இருந்தேன்'' என்றதும்,

'ப்பூ! இவ்வளவு தானா விஷயம்!' என்பது போல் ஆசுவாசப் பெருமூச்சு விட்டான்.

''சூப்பர் ஹனி. உன்னோட ஆசை என் ஞான திருஷ்டியிலேய தெரிஞ்சது. அதான் நான் கரெக்ட்டா



கூட்டிட்டு வந்துட்டேன்'' என்றதும் அவள் மீண்டும் அகராதியில் தேட ஆரம்பிக்கவும்.

'நாம புரியாத வார்த்தை என்ன சொன்னோம்?' என்று வினய் யோசிக்க ஆரம்பித்தான்.

''ஹேய்! வெயிட் வெயிட். உனக்கு ஞானதிருஷ் டின்னா என்னன்னு தெரியணும். அவ்வளவு தானே. அப்படின்னா...'' என்று தொடங்கியவன்.

'இவளுக்கு இந்த வார்த்தைக்கு அர்த்தம் சொன்னா அவ அதுக்கு ஆயிரம் விளக்கம் கேட்பாள். அப்புறம் இந்த இடம் தமிழ் பாடம் எடுக்கிற இடமா மாறிடும்டா வினய். சிம்பிளா அவளுக்கு புரியுற மாதிரி சொல்லி சமாளி' என்று தனக்குள் கூறிக் கொண்டவன்,

''உனக்கு புரியுற மாதிரி சொல்லணும், என்றால் Esp.Extra Sensory Perception'' என்றதும் அவள் புரியாது விழித்தாள்.

''அதாவது நீ மனசுல நினைச்சதை நான் புரிஞ்சுக் கிட்டு நிறைவேத்தி வச்சுட்டேன்'' என்றான்.

அப்போதும் அவள் ஒன்றும் சொல்லாது அவனை தீர்க்கமாகப் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

''சுத்த ஞானசூன்யம்'' என்று முணுமுணுத்தவன், ''எப்படியும் நாம கொஞ்ச நாள் கழிச்சு கல்யாணம் பண்ணப் போறோமில்லையா...'' என்றதும்,

''வாட்?!!!!'' என்று அதிர்ச்சியுடன் கேட்டவள் அவனை குழப்பமாகப் பார்வையிட்டவள்.

''யெஸ். ஐ லவ் யூ. நாம கல்யாணம் பண்ணிக் கலாமா?'' என்று அவன் கேட்டதும் அவனை திகைப் பாய் பார்த்தாள்.

'என்னோட லவ் ப்ரபோஸலை ரொமாண்டிக்கா சொல்ல ஆசைப்பட்டு இவ்வளவு தூரம் கூட்டிட்டு வந்தேன். கடைசியிலே இப்படி சொல்ல வச்சுட்டியே!' என்று அவளை மனதிற்குள் திட்டிக் கொண்டான்.

"நான்..." என்று ஹரிணி தொடங்கவும்,

"டேக் யுவர் ஓன் டைம் ஹரிணி. நீ பொறுமையா பதில் சொன்னால் போதும்" என்று கூறினான்.

அவர்கள் வீடு சென்று சேரும் வரைக்கும் அவர்களிடையே அமைதி நிலவியது. அடுத்து வந்த இரு நாட்கள் விடுமுறை என்பதால் அவளை அலுவலகத்தில் சந்திக்கும் வாய்ப்பு அவனுக்கு கிடைக்கவில்லை.

'என்ன பதில் சொல்லுவாள்?' என்ற கேள்வியே அவன் மனமெங்கும் வியாபித்திருந்தது. இவன் தவியாய் தவித்துக் கொண்டிருந்தான்.

ஆனால் உணவகத்தில் இருந்து வீடு திரும்பிய ஹரிணியோ நேராக தன் தந்தையிடம் சென்று பேசினாள்.

"அப்பா நான் சென்னையிலே செட்டில் ஆக ஆசைப் படுறதா சொன்ன போது நீங்க என்ன சொன்னீங்க?"

"என்னடா சொன்னேன்? எனக்கு மறந்து போச்சே" என்று அவள் தந்தை சிவராமன் அவளை சீண்ட,

"எனக்கு சென்னையிலே மாப்பிள்ளை பார்த்து கட்டி வைக்கிறதா சொன்னீங்க இல்ல. இப்ப ஒரு சென்னை மாப்பிள்ளை வந்து இருக்கார்" என்றாள்.

"என்னது? நீயே மாப்பிள்ளை தேட ஆரம்பிச்சுட் டியா? மேட்ரிமோனியல் சைட் மூலமாவா?" என்று அவர் அதிர்ச்சியுடன் கேட்க,



ஹரிணியின் தாயும் சாதனாவும் அவளருகே வந்து அமர்ந்தனர்.

"ப்ச்சு இதெல்லாம் இல்லப்பா. எங்க ஆபீஸிலே வொர்க் பண்ணுறார். சென்னையிலே இருந்து ப்ராஜெக்ட் பண்ண வந்து இருக்கார். எனக்கு கொஞ்ச நாளா தெரியும். நான் கூட அன்னைக்கு சொன்னேன் இல்ல... ஒரு தமிழ் பையன் பிரண்டாகி இருக் கார்ன்னு.... அது இவர் தான். இன்னைக்கு என்னை ரெஸ்டாரண்ட்டுக்கு கூட்டிட்டு போய் ஐ லவ் யூ. நாம கல்யாணம் பண்ணிக்கலாமான்னு கேட்டார்" என்றதும் அனைவரும் அவளையே பார்த்திருந்தனர்.

"அதுக்கு நீயென்ன பதிலைச் சொன்னே?" என்று அவள் தாய் கேட்கவும்.

"என்ன சொல்லட்டும் என்று தான் உங்ககிட்ட கேட்கிறேன்" என்றாள்.

"சுத்தம்" என்று சாதனா தன் தலையில் அடித்துக் கொண்டாள்.

"ஒண்ணு ஐ டூ லவ் யூன்னு சொல்லிட்டு வந்து இருக்கணும். இல்லையா.... ரெண்டு நாள் நல்லா யோசிச்சு நீயே அவருக்கு ஒரு பதில் சொல்லி இருக் கணும். அதை விட்டுட்டு அப்பாகிட்ட வந்து கேட்டுக் கிட்டு நிக்குற... நீயெல்லாம் சிங்கப்பூரிலே வளர்ந் தேன்னு வெளியிலே சொல்லிடாதே ஹரிணி" என்று சாதனா அக்காவைக் கிண்டல் பண்ண.

"எனக்கு டாடி மாப்பிள்ளை பார்த்துத் தாரதா சொல்லி இருந்தார் இல்ல... அப்புறம் எப்படி நான் வினய்க்கு

பதில் சொல்ல முடியும்? டாடி என்ன சொல்லுறாரோ அது தான் என்னோட பதில்'' என்று ஹரிணி கூறவும் சிவராமன் புன்னகைத்தார்.

''அப்பா நான் இப்பவே சொல்லிடுறேன். நானெல்லாம் உங்க செல்லப் பொண்ணு போல கேள்வி கேட்டுக்கிட்டு உங்க முன்னாடி வந்து நிக்க மாட்டேன். நீங்க அப்படி ஒரு எதிர்பார்ப்பை என் விஷயத்திலே வச்சுக்காதீங்க'' என்று சாதனா வேகவேகமாகக் கூற,

''நீயே உன் கல்யாணத்தை முடிவு பண்ணி எங்க கிட்ட உன் கல்யாணப் பத்திரிகையை நீட்டுவேன்னு எங்களுக்கு நல்லா தெரியும்மா'' என்று சிவராமன் கிண்டலாக உரைத்தார்.

''அது!'' என்று கெத்தாக சாதனா உரைத்தாள்.

''உன் பேச்சை அப்புறமா பார்ப்போம். முதல்ல ஹரிணி விஷயத்தை பார்ப்போம்'' என்று ஹரிணியின் தாய் கூறவும்,

''பையனை பத்தி உனக்கு தெரிஞ்சதெல்லாம் சொல்லும்மா'' என்று சிவராமன் ஹரிணியிடம் விசாரணை மேற்கொண்டார். அவள் தனக்கு தெரிந்தவற்றை கூறினாள்.

அப்போது அவரது தங்கை அபிராமி சென்னையில் இருந்து அழைத்தார். சிவராமன் விஷயம் கூற... சில பல கேள்விகளுக்கு பின் வினய் ரேணுகாவின் மூத்த மகன் என்று அபிராமிக்கு புரிந்து போனது.

அதன் பின் வந்த நாட்களில் வினய் வீட்டினரின் ஜாதகம் தனியார் துப்பறியும் நிறுவனத்தினரால்



அலசப்பட்டது. அவர்களும் அபிராமியும் அந்தக் குடும்பத்தை பற்றி நற்சான்றிதழ் வழங்கியதால் நான்காம் நாள் ஹரிணியை வினய்க்கு திருமணம் செய்து வைக்கும் முடிவினை சிவராமன் எடுத்தார்.



# 6

சிவராமன் நேராகச் சென்று வினய் வீட்டுக் கதவைத் தட்டினார்.

கதவைத் திறந்த வினய் இவர் ஹரிணியோட அப்பா வாச்சே என்று எண்ணிக் கொண்டே, ''வாங்க அங்கிள்'' என்று அவரை வரவேற்றான்.

அவனை நேரில் பார்த்த சிவராமனுக்கு அவனது தோற்றம் திருப்தியை கொடுத்தது.

''ஹரிணி என்கிட்ட எல்லா விஷயமும் சொன்னாள்'' என்ற அவர் ஆரம்பிக்க,

'இவர் இப்ப என்னைக் கேள்வி கேட்க வந்திருக்காரா? இல்லை அடிக்கவா? காதலுக்காக சில பல அடிகள் வாங்கினால் தப்பில்லைடா வினய்!' என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டு அமர்ந்திருந்தான்.

''விசாரிச்சுப் பார்த்ததிலே எல்லோரும் உங்களைப் பத்தி நல்லவிதமா சொன்னாங்க. எங்க எல்லோருக்கும்

பூரண சம்மதம். உங்க வீட்டிலே..." என்று அவர் தொடங்க.

வினய் புன்னகை முகமாய், "அம்மாகிட்ட நான் ஏற்கனவே பேசிட்டேன் அங்கிள். நீங்க இப்போ பேசுறீங்களா?" என்று கேட்டு அவரை ரேணுகாவுடன் ஸ்கைப்பில் பேச ஏற்பாடு செய்தான்.

சிவராமனும் ரேணுகாவும் பேசி திருமணத்தை வினய் பிராஜெக்ட் முடிந்து இந்தியா வந்தவுடன் வைத்துக் கொள்ளலாம் என முடிவு செய்தனர்.

"மாப்பிள்ளை அதுக்குள்ள ஹரிணிக்கும் இந்தியாவிலே வேலைக்கு ஏற்பாடு செஞ்சிடலாம்" என்று சிவராமன் கூற வினய் அவரது கருத்தை ஆமோதித்தான்.

"என் தங்கச்சி அபிராமி உங்க ஃப்ளாட் பக்கத்திலே தான் இருக்காள். அங்க வச்சே பொண்ணு பார்க்கிற நிகழ்ச்சியை வச்சுக்கலாம்" என்று அவர் கூறவும்,

'அபிராமியா? அப்போ அந்த பாண்டியன் என் வீட்டுக்கு பக்கத்திலேயா இருக்கார். இவங்க பாண்டியனுக்கு சொந்தக்காரங்க என்பதால விசேஷ வீட்டிலே அவர் முகத்திலே முழிக்கணும் என்று நினைச்சேன். இப்போ பார்த்தா தினம் தினம் முழிக்க வேண்டி இருக்கும் போலவே!' என்று வினய் வெறுத்துப் போனான்.

மறுநாள் அவன் அலுவலகம் சென்றான். நான்கு நாட்களுக்கு பின்பு அன்று தான் ஹரிணி அவன் கண் முன்னால் வந்தாள். அவளது அலங்காரமும் அவளது முக மலர்ச்சியும் வினய்க்கு மகிழ்ச்சி அளித்தது என்றாலும்



அவன் தன் முகத்தை விறைப்பாகவே வைத்துக் கொண்டான்.

"ஹாய் வினய்!" என்று அவள் கிசுகிசுப்பாய் மொழிய அவனும் பதிலுக்கு ஒரு ஹாய் சொல்லிவிட்டு அந்த இடம் விட்டு நகர்ந்தான். ஹரிணி ஏமாற்றமாய் உணர்ந்தாள்.

'என்ன இவர் ஒண்ணும் சொல்லாமல் போறார். அவர் கேட்டதுக்கு ஒரு பதில் சொல்லிட்டு தான் அவர் முகத்திலே முழிக்கணும் என்று நான் ரெண்டு நாள் லீவ் போட்டுட்டு ஆபீஸுக்கு கூட வராமல் வீட்டிலேயே இருந்தேன். நேத்து நைட் அப்பா ஓகே சொன்னவுடன் தூக்கமில்லாமல் எப்படா விடியும் என்று காத்திருந்து ஆபீஸுக்கு வந்தால்... இவர் இப்படி முகத்தை திருப் பிக்கிட்டு போறார்' என்று வருத்தப்பட்டாள்.

'ஒரு வேளை முக்கியமான வேலையா இருக்கும்' என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டாள்.

அன்று மதிய இடைவேளையின் போது வினய் தன் நண்பர்களுடன் அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந் தான்.

ஹரிணி அவனுக்கு எதிரே அமர்ந்து கொண்டு தன் கைப்பேசியின் மூலம் வினய்க்கு குறுஞ்செய்தி அனுப்ப ஆரம்பித்தாள்.

"ரொம்ப பிசியா இருக்கீங்களா?" என்று முதல் செய் தியை அனுப்பி வைத்தாள். அவன் தனது கைப்பேசியை எடுத்துப் பார்த்து விட்டு பதிலொன்றும் அனுப்பாமல் தன் நண்பர்களுடன் அரட்டை அடித்துக் கொண் டிருந்தான்.

"ஏன் மேல ஏதாச்சும் கோபமா?" என்று அடுத்த செய்தி பறந்தது.

"நான் உங்ககிட்ட பேசணும். நீங்க எப்போ ஃப்ரீ?" என்று அவள் குறுஞ்செய்திகளாக அனுப்பிக் கொண்டிருக்க... அவனும் அவற்றை படித்து விட்டு கண்டு கொள்ளாமல் தன் பேச்சை தொடர்ந்து கொண்டிருந்தான்.

அப்பொழுது ஹரிணியின் தோழி, "என்னாச்சு ஹரிணி? ரொம்ப நேரமா வினய் முகத்தையே பார்த்துக்கிட்டு இருக்க? வாட் இஸ் தி மேட்டர்? லவ் ஸ்டார்ட் ஆகிடுச்சா?" என்று கேட்டாள்.

"கூடிய சீக்கிரமே எனக்கும் அவருக்கும் கல்யாணமாகப் போகுது" என்று ஹரிணி கூறவும் அவளது தோழி அவளுக்கு கை குலுக்கி வாழ்த்தினாள்.

அவள் உடனே தன் நண்பர்களுக்கெல்லாம் தெரிவிக்க... அனைவரும் வினய் முன் சூழ்ந்தனர். "கங்கிராட்ஸ்!" என்று கூறி ஆளாளுக்கு கை குலுக்க வினய் புன்சிரிப்போடு ஏற்றுக் கொண்டான்.

"சொல்லவே இல்லை. எப்போ எங்களுக்கெல்லாம் ட்ரீட்?" என்று அவர்கள் கேட்டதும்.

"நேத்து நைட் தான் முடிவு பண்ணினாங்க. ட்ரீட் தானே? தந்துட்டால் போச்சு. எப்போ போகலாம்?" என்று வினய் திருப்பிக் கேட்க.

"இன்னைக்கு நைட் போகலாமா?" என்று கேட்டனர்.

"இன்னைக்கு நைட் வேண்டாம். நாங்க டின்னர் போறோம். இன்னொரு நாள் போகலாம்" என்று வினய் கூறினான்.



'இன்னைக்கு நைட் டின்னர் போறோமா? நம்மகிட்ட எப்போ சொன்னார்? இப்படி பப்ளிக்கா சொல்லுறதை கேட்டு நாம ரெடி ஆகி இவர் கூட கிளம்பிப் போகணுமா? அதெல்லாம் முடியாது' என்று ஹரிணி நினைத்துக் கொண்டாள்.

அன்று மாலை சாதனா அவர்கள் அலுவலகத்திற்கு அவனை தேடி வந்திருந்தாள்.

"ஹாய் சாதனா."

"என்னை உங்களுக்கு தெரியுமா? ஐ மீன் நான் ஹரிணி தங்கச்சின்னு. எப்படி?"

"ம்ம்... போட்டோவிலே பார்த்திருக்கேன். உங்க அக்காவை பார்க்க வந்தியா?"

"இல்ல மாமா. உங்களை தான் பார்க்க வந்தேன்."

"என்னையா? என்ன விஷயம்?"

"சாரி மாமா" என்று அவள் ஆரம்பிக்கவும்,

"சாரியா? எதுக்கு?" என்று கேட்டான்.

"அன்னைக்கு ஏர்போர்ட்டிலே..." என்று அவள் தொடங்கவும்,

"அதுக்கு தான் அன்னைக்கே சாரி சொல்லிட்டியே. ஜஸ்ட் ஃபர்கெட் இட்" என்றான்.

"உங்க போட்டோ பார்த்த உடனே நான் அப்பாகிட்ட விஷயம் சொன்னேன். அவர் தான் உங்ககிட்ட சாரி சொல்லச் சொன்னார்."

"அதை விடு சாதனா. அப்புறமா அன்னைக்கு என்னாச்சு? அவனை பிடிச்சீங்களா?"

"ம்ம்ம் பிடிச்சோம்" என்று அன்று நடந்ததை அவனிடம் கூறினாள்.

இவர்கள் பேசிக் கொண்டிருப்பதை பார்த்த ஹரிணி, 'இவ எதுக்கு இங்க வந்திருக்கா?' என்று நினைத்துக் கொண்டே அவர்கள் அருகில் வந்தாள்.

ஹரிணியை கண்டவன் சாதனாவிடம், "நீ உங்க அக்கா கூட சேர்ந்து வீட்டுக்கு போ. எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு" என்று கூறிவிட்டு நகர்ந்து போனான்.

செல்லும் அவனையே முறைத்துக் கொண்டு ஹரிணி நின்றிருக்க...

"என்னக்கா முதல் நாளே லடாயா?" என்று சாதனா அவளை சீண்டினாள். ஹரிணி காலையில் இருந்து நடந்ததை விவரித்தாள்.

"வாக்கா சீக்கிரமா வீட்டுக்கு போகலாம். நீ வேற மாமா கூட டின்னருக்கு போகணும்" என்று சாதனா ஹரிணியின் கைப்பிடித்து இழுக்க,

"நானொண்ணும் அவர் கூடப் போறதா இல்லை" என்று ஹரிணி முறுக்கிக் கொண்டாள்.

"ஆர் யு ஷ்யூர்?"

"ஆமா. ஷ்யூரா போக மாட்டேன்."

"அப்போ நான் போறேன்" என்று சாதனா கூறவும்,

"என்னது நீ போகப் போறியா? எங்கே?" என்று ஹரிணி அலறினாள்.

"மாமா கூட சேர்ந்து டின்னருக்கு தான். மாமா ...ட்டா இருக்கார். உனக்கு வேண்டாம்னா நீ



ஒதுங்கிக்கோ. நான் பார்த்துக்கிறேன்" என்றதும் சாதனாவின் காதைப் படித்து ஹரிணி திருகினாள்.

"பிசாசே! காதை விடுடி. அவ்வளவு கோபம் வந்தா கிளம்பிப் போ. எதுக்கு காலையிலே இருந்து நீங்க முறுக்கா, சீடையா, தட்டையா இருக்கீங்கன்னு கேட்டுட்டு வா" என்று சாதனா கிண்டல் செய்யவும்,

அவள் சொல்வது போலவே செய்யலாம் என்று ஹரிணி தீர்மானித்தாள்.

"எத்தனை மணிக்குன்னு தெரியலையே" என்று ஹரிணி புலம்ப,

"இரு கேட்டுச் சொல்லுறேன்" என்று கூறிய சாதனா தன் மாமாவிடம் கேட்டு அக்காவிற்கு விவரம் தெரிவித்தாள்.

அதன்படி ஹரிணி தயாராகி அவர்களது அபார்மென்ட் வாசலில் காத்திருந்தாள். சொன்ன நேரத்திற்கு வினய் வந்து சேர்ந்தான்.

ஹரிணி முன் பக்கக் கதவை திறந்து கொண்டு ஏறவும் கார் சீறிப் பாய்ந்தது. காரில் பாட்டுச் சத்தம் மட்டுமே கேட்டது. அன்று போல் இன்றும் கார் மவுண்ட் ஃபேபர் நோக்கிச் சென்றது.

ஆனால் இன்று உணவகத்தில் அவர்கள் உணவருந்தச் செல்லவில்லை. 'ஸ்கை டைனிங்' என்று சொல்லப்படும் கேபிள் காரின் உள்ளே உணவருந்துவதற்கு வினய் ஏற்பாடு செய்திருந்தான்.

சென்டோசாவிற்கும் மவுண்ட் ஃபேபருக்கும் இடையே அந்த கேபிள் கார் போய் வந்து கொண்டிருக்கும்.

ஒன்றரை மணி நேரம் ஒருவர் உள்ளே அமர்ந்தவாறு உணவருந்தலாம். அதுவே ஸ்கை டைனிங்.

''ஹேவ் எ ரொமாண்டிக் அவர்'' என்று அவர்கள் இவர்கள் இருவரையம் வாழ்த்தி அனுப்பினார்கள்.

'ஆமா! இங்க பேச்சுக்கே வழி இல்லையாம். இதுல ரொமான்ஸ் ஒண்ணு தான் குறைச்சல்' என்று ஹரிணி மனதிற்குள் குறைபட்டுக் கொண்டாள்.

கேபிள் கார் நகர ஆரம்பித்ததும் வினய் அந்தக் கண்ணாடி தடுப்பின் அருகே சென்ற நின்று கொண்டு வெளியே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான். விளக்கு களின் ஒளிர்வில் சிங்கப்பூரை அவன் ரசித்துக் கொண்டிருக்க ஹரிணி கடுப்புடன் அவன் அருகில் சென்று.

''என்னை கூட்டிட்டு வந்துட்டு அங்க என்ன வேடிக்கை பார்க்கிறீங்க?'' என்ற கேட்டாள்.

அவளைத் திரும்பிப் பார்க்காமலே, ''அன்னைக்கு நீ கூட தான் செடி, கொடி, மலைன்னு வேடிக்கை பார்த்தே! நான் ஏதாச்சும் சொன்னேனா?'' என்று திருப்பிக் கேட்டான்.

''அன்னைக்கும் இன்னைக்கும் ஒண்ணா?''

''என்னை பொறுத்த அளவிலே ரெண்டு நாளும் ஒண்ணு தான். எந்த மாற்றமும் இல்லை.''

ஹரிணி காலையில் இருந்து கேட்க நினைத்ததை கேட்டுவிடும் நோக்கத்தோடு ''மதியம் எத்தனை எஸ்.எம்.எஸ் அனுப்பினேன். ஒண்ணுக்காவது ரிப்ளை பண்ணுனீங்களா? நான் பார்க்கலை, படிக்கலைன்னு



பொய் சொல்லாதீங்க. நீங்க அதையெல்லாம் படிச்சதை நானே பார்த்தேன்'' என்று கோபமாகக் கூறினாள்.

''நான் ஏன் பொய் சொல்லணும்? நீ அனுப்பியதை நான் படிச்சேன்.''

''அப்புறம் ஏன் பதில் சொல்லலை?''

''உங்க அப்பாவை நான் இன்னும் பார்க்கலையே.''

''எங்க அப்பாவா? அவரை எதுக்கு நீங்க பார்க்கணும்?''

''உன்னோட எஸ்.எம்.எஸ்ஸுக்கு பதிலை நான் அவர்கிட்ட தானே சொல்லணும்?''

''அவர்கிட்ட எதுக்கு சொல்லணும்? நம்ம ரெண்டு பேருக்கு இடையிலே அவரை எதுக்கு இழுக்குறீங்க?''

''நானா இழுத்தேன்? நான் உன்கிட்ட ஐ லவ் யூ சொன்னால் அதுக்கு பதிலை நீயே நேடியா என்கிட்ட வந்து சொல்லாமல் உன் அப்பா மூலமா நீ தான் பதில் சொல்லிட்டே. அதான் நானும் உங்க அப்பா மூலமாவே பதில் சொல்லலாம் என்று வெயிட் பண்ணுறேன்'' என்று அவன் அலட்டாமல் சொல்ல,

அவனது கோபத்திற்கான காரணம் அவளுக்குப் புரிந்தது.

''நான் எங்க அப்பா கூட ரொம்ப க்ளோஸ்'' என்று மெதுவான குரலில் கூறினாள்.

''இருந்துட்டுப் போ. நான் என்ன வேண்டாம் என்றா சொல்லுறேன்.''

''அதனால நான் அவர்கிட்ட டிஸ்கஸ் பண்ணினேன்.''

''நான் கூட தான் உன்னை பத்தி எங்க அம்மாகிட்டே பேசினேன். அதுக்காக ஐ லவ் யூன்னு எங்க அம்மாவை விட்டா சொல்ல வச்சேன்?'' என்றதும் அவள் அமைதி யானாள்.

இதற்கு என்ன பதிலைச் சொல்வது என்று அவளுக்குப் புரியவில்லை.

'நான்கு நாட்களாய் இவன் என் பதிலுக்காக ஆர்வமாய் வெயிட் பண்ணி இருக்கான். என் அப்பா மூலம் பதில் தெரிந்து கொண்டதில் அவனுக்கு ஏமாற்றம் ஏற்பட்ட இருக்கு. அப்பா சம்மதம் சொன்ன பின்னால் நாம நேரில் போய் பேசி இருக்கணுமோ?' என்று அவளுக்கு காலம் கடந்த ஞானோதயம் உண் டானது.

அவள் பாவமாக அவன் முகத்தை ஏறிட்டுப் பார்க்க அவனோ வெளியே வேடிக்கை பார்ப்பதிலேயே குறியாக இருந்தான்.

அவள் மெதுவான குரலில், ''சாரி வினு. நான் அந்த ஆங்கிளில் திங்க் பண்ணிப் பார்க்கலை. சாரி. இனிமே இது மாதிரி நடக்காமல் பார்த்துக்கிறேன்'' என்றாள்.

அவனை நிமிர்ந்து பார்க்க திராணியற்று தன் தலையை குனிந்து கொண்டாள். அவன் அவளை திரும்பிப் பார்த்தான். நன்கு அலங்கரித்துக் கொண்டு புடவையில் வந்திருந்தவளை புன்னகையுடன் பார்த் தவன் அவளது இடுப்பில் கை வைத்து தன்னருகே இழுத்துக் கொண்டான்.

அவனது கை தன் இடுப்பில் பட்டவுடன் உடலெல்லாம் சிலிர்ப்பதைக் கண்டாள். அவன் மீது சாய்ந்து கொண்டாள்.



அவன் அவளை அணைத்துக் கொண்டான். தன் வலது கையால் அவள் முகவாயை நிமிர்த்த முயல அவள் அவனது மார்பிலேயே தன் முகத்தை புதைத்துக் கொண்டாள்.

அவன் அவளது காதில் கிசுகிசுப்பாய், ''ஹனி என்னை நிமிர்ந்து பாரு'' என்றான்.

அவனது அந்த அழைப்பு அவளுக்குள் மாற்றங்களை விளைவித்து அவளை படபடக்க வைத்தது. அவள் மெதுவாக தன் தலையை நிமிர்த்தி அவனது முகத்தை பார்த்தாள். அவனது கண்களில் வழிந்த காதலில் தன்னைத் தொலைத்தாள்.

''ஐ லவ் யூ ஹனி'' என்று அவன் கூறவும்.

''ஐ லவ் யூ டூ வினு'' என்றாள்.

அவன் தனது இதழ்களால் அவளது இதழ்களை சிறை செய்தான். அந்த நெடிய முத்தத்தினால் இருவருமே கிறங்கிப் போய் நின்றிருந்தனர்.

''ஹனி நீ தந்த ஹனி நல்லா இருந்துச்சுடா'' என்று அவன் கிறக்கமாய் கூற அவள் வெட்கினாள்.

அதற்கு பின்பு அவர்கள் என்ன பேசினார்கள், என்ன உண்டார்கள் என்பது அவர்களுக்கே தெரியவில்லை. அவளது அபார்ட்மென்ட் வாசலில் இறக்கி விட்டவன்.

''பை ஹனி. குட் நைட். நாளைக்கு மார்னிங் ஆபீஸில் பார்க்கலாம்'' என்றான்.

''குட் நைட். ஸ்வீட் டிரிம்ஸ்'' என்று ஹரிணி கூறியதும்.

அவன் தன் இதழ்களை குவித்துக் காட்டி கண் அடித்து விட்டு, "ஸ்வீட் டிரீம்ஸ் ஹனி" என்று கூறி அவளை சிவக்க வைத்தான்.

அவன் கார் நகர்ந்த பின்னும் சில நொடிகள் அதே இடத்தில் நின்று விட்டு அதன் பின்பே அவள் தனது வீட்டிற்குச் சென்றாள்.

போகும் போது அழுது வடிந்து கொண்டு சென்ற தன் அக்கா உற்சாக பந்தாய் திரும்பி வந்ததைக் கண்ட சாதனா புன்னகைத்துக் கொண்டாள். அவளை வெறுப்பேற்றும் பொருட்டு,

"என்னக்கா மாமா உனக்கு செட்டாவாரா? இல்லைன்னா மாமாவை நான் எனக்கு செட் பண்ணிக் கட்டுமா?" என்று கேட்டாள்.

"முடிஞ்சா டிரை பண்ணிப் பாரு" என்று கெத்தாக மொழிந்து விட்டுப் போன அக்காவை புன்சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள் சாதனா.



## 7

படுக்கையில் படுத்து அரை மணி நேரமாகியும் ஹரிணிக்கு தூக்கம் வரவில்லை. அவளது கைப்பேசி சிணுங்கவும் எடுத்துப் பார்த்தாள். அவளது எண்ணத்தின் நாயகன் தான் அழைத்திருந்தான்.



அவள் அதை இயக்கி காதில் வைத்து, "ஹலோ!" என்றாள்.

"தூங்கிட்டியா ஹனி?"

"தூங்கினால் ஃபர்ஸ்ட் ரிங்கிலேயே எப்படி போனை எடுப்பேன்?"

"ஏன் தூங்கலை?"

"தூக்கம் வரலை வினு."

"என்னை நினைச்சுக்கிட்டு இருந்தியா?"

"இல்லையே. ஆபீஸ் வேலையை பார்ப்போம் என்று லேப் டாப்பில் வேலை செஞ்சுகிட்டு இருந்தேன்" என்று அவள் சிரிக்காமல் கூற.

"சாரி. உன்னை டிஸ்டர்ப் பண்ணிட்டேனா? நீ உன் வேலையை பாரு" என்றவன் அழைப்பை துண்டித்தான்.

'அச்சோ! கோபமா வச்சுட்டாரா?' என்று பயந்தவள் அவனைத் திரும்ப அழைத்தாள்.

உதட்டில் நிறைந்த புன்னகையுடன் அவன் தனது அலைபேசி இயக்கி காதில் வைத்து, "ஹலோ!" என்க,

"கோவிச்சுக்கிட்டீங்களா வினு?" என்று பயந்து போய் கேட்டாள்.

"ஈஸி ஹரிணி. ஈஸி. என்ன பயந்துட்டியா? நீ என்னை கிண்டல் பண்ணுறேன்னு எனக்கு நல்லாத் தெரிஞ்சது. அதான் நானும் உன்னை பதிலுக்கு கிண்டல் பண்ண போனை கட் பண்ணினேன்" என்ற விளக்க மளித்தான்.

"அப்பாடா! கொஞ்ச நேரத்திலே பயந்துட்டேன்."

"நான் கோபக்காரன் கிடையாது ஹனி. இன்னைக்கு காலையில் இருந்து உன் கூடப் பேசாமல் இருந்ததை வச்சு நீ என்னை கோபக்காரன் என்று முடிவு பண்ணிட்டியா?

உன்கிட்ட லவ்வை சொல்லிப் போன பின்னால... அந்த நாலு நாளில்... சனியும் ஞாயிறும் கூட நான் அவ்வளவு பரபரப்பா இல்லை. உனக்கு யோசிக்க ரெண்டு நாளாச்சும் வேண்டாமான்னு என்னை நானே சமாதானம் செஞ்சுக்கிட்டேன்.

மன்டே உன்னைப் பார்க்கலாம் என்று ஆசையா நான் ஆபிஸ் போனேன். நீ வரலை. அடுத்த நாளும் நீ வரலை. ஆனா அன்னைக்கு நைட் உங்க அப்பா வந்தார். எனக்கு அவர் சொன்ன விஷயம் சந்தோஷத்தை தந்தாலும் நீ வந்து சொல்லாதது ரொம்ப ஏமாத்தமா இருந்துச்சு. அதான் அப்படி ரியாக்ட் பண்ணினேன். நீ பயந்துட்டியா?" என்று அவன் கேட்டதும்,

"வினு நான் சொல்ல வேண்டியதை போனிலேயே சொல்லிடுறேன். பாரினிலே வளர்ந்த பொண்ணுகிட்ட இருந்து நீங்க இப்படி ஒரு ரியாக்ஷன் எதிர்பார்த்து இருக்க மாட்டீங்க. நான் தான் பாரினிலே வளர்ந்தேன். ஆனா என்னை வளர்த்தவங்க இன்டியன்ஸ் தானே? அதிலேயும் எங்க அம்மா ரொம்ப மாடர்னான லேடி கிடையாது. அதனால நாம பக்கா தமிழ் நாட்டுப் பொண்ணா தான் வளர்ந்தேன். என்ன ஒண்ணு... தமிழ் தான் கொஞ்சம் தகராறு பண்ணும்.

என் கல்யாணத்தை பத்தி பேச்சு வந்த போதே நான் எங்க அப்பா பார்க்கிற மாப்பிள்ளையை தான்



கட்டிக்குவேன் என்று சொன்னேன். யாரையாவது காதலிச்சால் என்கிட்ட வந்து தயங்காமல் சொல்லும்மான்னு எங்க அப்பாவும் எனக்கு சுதந்திரம் கொடுத்து இருந்தார்.

ஆனா எனக்கு யார் மேலவும் அப்படி ஒரு இன்ட்ரஸ்ட் வரலை. தப்பா நினைச்சுக்காதீங்க வினய். உங்க மேலயும் சேர்த்து தான் சொல்லுறேன். நீங்க உங்க லவ்வை சொன்ன போது எனக்கு எந்த ஃபீலிங்கும் இல்லை."

"மனசை ரொம்ப குளிர வைக்கிற ஹனி" என்று அவன் ஏக்கப் பெருமூச்சு விட்டான்.

ஒரு முறுவலுடனே, "நான் முழுசா சொல்லிடுறேன் வினு. ஒண்ணை மட்டும் மறந்துடாதீங்க, உங்களை எனக்கு பிடிக்கலைன்னா எங்க அப்பா வரைக்கும் இந்த விஷயத்தை நான் கொண்டே போய் இருக்க மாட்டேன்" என்றதும்,

அவன் அழுத்தமாய் ஒரு முத்தம் கொடுத்தான். அந்த முத்தம் அவளது பேச்சை தடை செய்தது. உடல் சிலிர்க்க அவள் அமைதியை கடைபிடித்தாள்.

"ம்ம்ம் சொல்லு ஹனி."

"நீங்க இப்படிப் பண்ணினா நான் எப்படிச் சொல்லுறதாம்?" என்று அவள் சிணுங்க.

"நான் என்ன ஹனி பண்ணினேன்? சும்மா சத்தம் கொடுத்தேன்."

"அது சத்தமா?" என்று அவள் கோபமாகக் கேட்க.

"அது சத்தமில்லையா? முத்தமா? அப்போ அது சும்மா இல்லையா? உம்மாவா ஹனி?" என்றதும் ம்ம்ம் என்று ஒலி எழுப்பினாள்.

அதன் பின்பு அன்று தங்கள் வீட்டில் அவர்கள் பேசியதை தெரிவித்தாள். சாதனாவின் கிண்டல் களையும் சேர்த்துச் சொன்னாள்.

''என்ன ஒரு தைரியம் வினு அவளுக்கு. என்கிட் டவே வந்து நான் மாமாவை கரெக்ட் பண்ணிக்கட்டு மான்னு கேட்கிறாள். உன்னால முடிஞ்சா டிரை பண் ணிக்கோ போடின்னு சொல்லிட்டேன்.''

''அவ அப்படியா சொன்னாள்? நீ கவலைப்படாதே ஹனி. நான் அவளை அடுத்த தடவை பார்க்கிற போது நீ எனக்கு கூடப் பிறக்காத தங்கச்சின்னு சொல்லுறேன். அதுக்கு மேல அவளால உன்னை கிண்டல் பண்ண முடியாதில்லை'' என்றதும்.

இப்போது ஹரிணி அழுத்தமான ஒரு முத்தத்தை பார்சல் பண்ணினாள். இப்பொழுது அவன் அமைதி யாகிவிட... அதன் பின்பு அவர்கள் பேசி முடித்து இருவரும் தூங்கச் செல்ல வெகு நேரமாயிற்று.

அடுத்த நாள் அவன் ஹரிணியை பார்த்த பொழுது அவளிடம் தன் குடும்பத்தாரை பற்றித் தெரிவித்தான். மனோஜ் பற்றி ஏற்கனவே சிவராமன் தெரிவித்து இருந்ததால் அவன் கூறிய போது ஹரிணிக்கு வருத்த மாக இருந்ததே ஒழிய அதிர்ச்சியாக இல்லை.

''எனக்கு ஒரே ஒரு வேண்டுகோள் தான் ஹனி. நீ எங்க வீட்டு மூத்த மருமகளா எங்க குடும்பத்தை நல்லபடியா பார்த்துக்கணும்.''

''வினு எனக்கு அவ்வளவு பொறுப்பை சுமக்கத் தெரியுமான்னு தெரியலை. என்னால எந்தப் பிரச்



சனையும் உங்களுக்க வராது. அதை மட்டும் நான் உறுதியா சொல்லுவேன்'' என்றாள்.

அவன் ஹரிணியை மனோஜுடன் ஸ்கைப் மூலமாக பேச வைத்தான். தன் தம்பி நன்றாகப் பாடுவான் என்று கூறி மனோஜை ஒரு பாடலை பாட வைத்து ஹரிணியை கேட்க வைத்தான். தன் அம்மாவையும் அறிமுகம் செய்து வைத்தான்.

''இவங்க ரெண்டு பேர் தவிர இன்னொருத்தி இருக் காள். என் கூடப் பிறக்காத தங்கச்சி சின்னு. அவளை உனக்கு நேரிலே அறிமுகப்படுத்துறேன். மேடம் ஒரு டாக்டர். ஹவுஸ் சர்ஜன் பண்ணிக்கிட்டு இருக்காள்'' என்றான்.

அவனது முகத்தில் தெரிந்த மென்மையே அவள் வினய்க்கு மிகவும் பிடித்தமானவள் என்பது ஹரிணிக்கு புரிந்தது.

அந்த வார இறுதியில் அவர்கள் அனைவருமே சென்னை சென்றார்கள். அன்று மாலையே பெண் பார்க்கும் வைபவம் நடந்தது.

''நான் என்ன உன்னை இப்ப தான் பார்க்கப் போறேனா? எதுக்கு இதெல்லாம்?'' என்று வினய் கேட்ட போது.

''நானும் இதேயே தான் எங்க அப்பாகிட்ட கேட்டேன். சும்மா பார்மாலிட்டிக்கும்மா. நேரிலே உட்கார்ந்து கல்யாணத் தேதியை முடிவு பண்ணத் தான் இப்படி ஒரு மீட்டிங்குன்னு சொன்னார்'' என்று ஹரிணி கூறவும் அவனும் ஒன்றும் சொல்லவில்லை.

அன்று மாலை அவன் பாண்டியனின் வீட்டிற்குள் வேண்டா வெறுப்பாக நுழைந்தான். பாண்டியன் இவனை எதிர்பார்க்கவில்லை என்பதை அவரது அதிர்ந்த பார்வையே சொல்லியது.

அனைவரும் திருமணம் குறித்தப் பேச ஆரம்பித்தார்கள்.

வினய் சிவராமனிடம், ''மாமா உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லணும். எனக்கு ஆறு வயசா இருக்கும் போது எங்க அப்பா இறந்துட்டார். அவர் இருக்கும் போதும் எங்க அம்மாவை நல்லாப் பார்த்துக்கலை. அதனால நாங்க அவர் பத்தின பேச்சை எங்க வீட்டிலே பேசுறது கூட இல்லை.

எங்க அம்மா சில வருஷம் விதவை கோலத்திலே தான் இருந்தாங்க. எனக்கு விவரம் தெரிஞ்சு நான் தான் அவங்களை பொட்டு வைக்கச் சொல்லி வற்புறுத்தி பொட்டு வைக்க வச்சேன்.

இந்தக் கல்யாணத்திலே எங்க அம்மா தான் எல்லாக் காரியமும் செய்வாங்க. அவங்க விதவை. அதனால அவங்க அப்படி செய்யக் கூடாதுன்னு நீங்க சொன்னீங்கன்னா...'' என்று சொல்லி நிறுத்த.

ஹரிணியின் முகம் வெளிறியது. ஒண்ணுமில்லை ஹரிணி என்பது போல் அவளிடம் ஜாடை காட்டியவன் சிவராமனிடம் திரும்பி,

''எங்க கல்யாணத்தை ரிஜிஸ்டர் மேரேஜா மாத்திட்டு ரிஷப்சன் மட்டும் வச்சுக்கலாம்'' என்றான்.



ரேணுகா ஏதோ தடுத்துக் கூற வாய் திறக்க, ''அம்மா நீங்க எதுவும் சொல்ல வேண்டாம். நான் சொன்னால் சொன்னது தான்'' என்று உறுதி படக் கூறினான்.

''மாப்பிள்ளை உங்க முடிவிலே எனக்கு எந்த மாத்துக் கருத்துமில்லை. சொல்லப் போனால் நீங்க சொல்லுறதை கேட்டு எனக்கு சந்தோஷம் தான்'' என்று சிவராமன் தெரிவித்துவிட முஹூர்த்த தேதி குறிக்கப் பட்டது.



# 8

மறுநாள் மதியம் சென்னையில் உள்ள அலுவலகத்திற்கு வினய் சென்று விட்டான். அன்று மாலை ரேணுகாவும் அபிராமியும் ரேணுகாவின் வீட்டில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

''ஹாய் ஆன்ட்டி!'' என்று அழைத்துக் கொண்டே ஹரிணி வீட்டினுள் நுழைந்தாள்.

''வா ஹரிணி'' என்று வரவேற்ற ரேணுகா அவளிடம், ''ஒண்ணு என்னை அத்தைன்னு கூப்பிடு. இல்லைன்னா அம்மான்னு கூப்பிடு. ஆன்ட்டின்னு கூப்பிட்டா எப்படியோ வித்தியாசமா இருக்கு'' என்று உரைத்தார்.

''அவ்வளவு தானே. சொல்லிட்டீங்க இல்ல'' என்றவள், ''இந்த ரெண்டு விரல்ல ஒன்னை தொடுங்க''

என்று தனது இரு விரல்களை அவர் முன் நீட்டிக் கேட்க,

''அத்தைன்னு கூப்பிடறதா இல்லை அம்மான்னு கூப்பிடறதான்னு பார்க்கப் போறியா?'' என்று கேட்ட வாறே ரேணுகா அவளது விரல் ஒன்றை பற்ற,

''ஹையா! நான் இனிமே உங்களை ரேணும்மான்னு தான் கூப்பிடுவேன். நீங்களே ஓ.கேன்னு சொல்லிட் டீங்க'' என்று ஹரிணி உற்சாகமாகக் கூவினாள்.

''இன்னொரு விரலில் என்ன வைச்சிருந்தே?'' என்று ரேணுகா சந்தேகம் கேட்க,

'''ரேகாம்மான்னு வைச்சிருந்தேன்'' என்று அவள் கூறவும்.

அருகில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த அபிராமி, ''ஆக மொத்தம் அத்தைன்னு கூப்பிட வேண்டாம் என்று முடிவு பண்ணிட்டே. அப்ப அம்மான்னு மட்டும் கூப்பிட வேண்டியது தானே? எதுக்கு கூடவே அவங்க பேரையும் சேர்த்துக்கிறே?'' எனக் கேட்டார்.

''நான் எங்கம்மாவை சொல்லுறேனா இல்லை இவங்களையான்னு கேட்கிறவங்க குழம்பக் கூடாது இல்ல. அதுக்கு தான்'' என்று தன் அத்தையிடம் விளக்கம் கூறியவள்.

''ரேணும்மா உங்களுக்கு ஓ.கேயான்னு சொல்லவே இல்லையே'' என்று கேட்டாள்.

''எனக்கு ஆன்ட்டியை தவிர எதுவா இருந்தாலும் ஓ.கே'' என்று அவர் சந்தோஷத்துடன் மொழியவும்,



அருகில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த அபிராமியின் முகம் வாடலாயிற்று.

''சரி ரேணும்மா நான் வினய் கூட டின்னர் போறேன். அதனால அவருக்கு நைட் சாப்பாடு வேண்டாம். அதை சொல்ல தான் வந்தேன்.''

''என்ஜாய் அண்ணி!'' என்று மனோஜ் உள்ளிருந்து குரல் கொடுக்க.

''ஹேய் மனோ! நீங்க இவ்வளவு நேரம் உள்ளேயா இருந்தீங்க? சாரி நான் உங்களை கவனிக்கலை.''

''நான் உங்க கண்ணுக்கு தெரிஞ்சால் தான் அண்ணி தப்பு. தெரியலை என்றால் எவ்ரி திங் இஸ் நார்மல் என்று அர்த்தம்'' என்று அவன் தன் வருங்கால அண் ணியை கலாட்டா செய்ய,

''பாருங்க ரேணும்மா. அண்ணனும் தம்பியும் என்னை கிண்டல் பண்ணுறதையே தொழிலா வச்சு இருக்காங்க'' என்ற தன் வருங்கால மாமியாரிடம் செல்லம் கொஞ்சினாள்.

''கவலைப்படாதே ஹரிணி. நாம ரெண்டு பேரும் ஒண்ணா கூட்டணி அமைச்சிடலாம். அப்புறமா இந்த பயலுக நம்ம பக்கம் வந்து தானே ஆகணும்?'' என்று ரேணுகா கூறவும்.

''தாங்க்ஸ் ரேணும்மா'' என்று மலர்ச்சியுடன் கூறி விட்டு மனோஜிடம் திரும்பி.

எங்களை ஒண்ணும் அசைக்க முடியாது என்பது போல் தன் வலது கை பெருவிரலை ஆட்டிக் காண்பித் தாள். அப்போது மலர்விழி வீட்டினுள் நுழைந்தாள்.

''வா மலர்!'' என்று வரவேற்ற ரேணுகா. ''ஹரிணி இவ மலர். வினய்க்கு ரொம்ப க்ளோஸ்'' என்று அறிமுகப்படுத்தினார்.

'வினய் எப்படி என்னை விட இன்னொரு பெண்ணிடம் நெருக்கமாகப் பழகலாம்?!' என நினைத்த ஹரிணி மலர்விழியிடம் வேண்டா வெறுப்பாய் ஹலோ சொன்னாள்.

'இவங்களுக்கு என்னை பிடிக்கலை போலவே! என்ன செய்யுறுது?' என்று மலர்விழி மனம் வாடினாள்.

''அண்ணனை பார்க்க வந்தியா சின்னு?'' என்று மனோஜ் வினவவும்.

ஹரிணி உற்சாகமே உருவாக, ''ஹேய் நீ தான் சின்னுவா? வினய் உன்னை பத்தி நிறைய சொல்லி இருக்கார். ரேணும்மா உன்னை மலருன்னு சொன்னதால எனக்கு நீ யாருன்னு தெரியலை...'' என்று சொன்னவள் அவள் அருகே சென்று அவளை அணைத்துக் கொண்டாள்.

''அண்ணி! கொஞ்ச நேரத்திலே என்னை டென்ஷன் பண்ணிட்டீங்க. என்னடா அண்ணி நம்மளை இந்த முறை முறைக்கிறாங்களேன்னு நான் பயந்துட்டேன்'' என்று பயம் அகன்றவளாய் மலர்விழி கூறினாள்.

''அது ரேணும்மா நீ வினய்க்கு க்ளோஸ் என்று சொன்னதும்...'' என்றவள் தொடராது நிறுத்த... அனைவரும் எங்களுக்கு புரிந்தது என்பது போல் சிரித்தனர்.

''வா மலர். நான் உனக்காக சிங்கப்பூரில் இருந்து ஒண்ணை வாங்கிட்டு வந்தேன்'' என்று அவளை கையோடு தன் அத்தை வீட்டுக்கு கூட்டிச் சென்றாள்.



அவள் சென்ற பின் ரேணுகா அபிராமியிடம், ''என்னாச்சு அபி? பேசிக்கிட்டு இருக்கும் போது திடீர்ன்னு உன் முகம் சோகமா மாறிடுச்சு?'' என்று கேட்டார்.

''இல்லைக்கா வந்து...'' என்று முதலில் தயங்கியவர் தன் மனதில் நினைப்பதை சொல்லிவிடும் நோக்கத்தோடு தொடர்ந்து பேச ஆரம்பித்தார்.

''இப்போ நீங்க ஹரிணிகிட்டே உரிமையா அம்மான்னு கூப்பிடுன்னு சொன்னீங்க தானே? என்னால அப்படி சொல்ல முடியலையேன்னு நினைச்சேன். சங்கடமா இருந்துச்சு.

அவளுக்கு நான் அத்தை முறை தான் என்றாலும் எனக்கு பிள்ளை இல்லாததால் அவளை என் பொண்ணா தான் நான் எப்பவும் மனசிலே நினைக்கிறேன். ஆனா அதுக்காக அவகிட்ட போய் என்னையும் அம்மான்னு கூப்பிடுன்னு சொல்ல முடியலை. எங்க அண்ணி தப்பா எடுத்துக்குவாங்களோன்னு பயந்துக்கிட்டு என் விருப்பத்தை நான் சொன்னதே இல்லை'' என்று ஏக்கத்துடன் மொழிந்தார்.

இதற்கு நான் எந்த விதமான ஆறுதல் வார்த்தைகளை சொல்ல முடியும் என்பது போல் ரேணுகா விழித்துக் கொண்டு அமைதி காத்தார்.

ஆனால் அருகில் இருந்த மனோஜ், ''நான் வேணா அப்படி கூப்பிடட்டுமா?'' என்று கேட்டான். அபிராமி அவனை ஆச்சரியமாக நோக்கவும்.

''அதுவும் நீங்க சம்மதிச்சால்...'' என்ற வரியை சேர்த்துச் சொன்னான்.

அபிராமி திகைப்பில் வாயடைத்து போய் அமைதியாக இருக்க மனோஜ் மேலும், "ஒரு வேளை கால் இல்லாத நான் உங்களை அப்படிக் கூப்பிட்டா உங்களுக்கு பிடிக்காதா?" என்று கேட்டான்.

அவனருகில் விரைந்து சென்ற அபிராமி அவனது வாயை அடைத்து, "என்ன வார்த்தை மனோ சொல் லிட்டே! நான் போய் உன்னை அப்படி நினைப்பேனா? பிள்ளை இல்லாதவங்களுக்கு தான் மனோ ஒரு பிள்ளையோட அருமை தெரியும். என் மனசிலே ஊனம் இருந்தால் தான் உன் ஊனம் எனக்கு பெருசாப்படும். நீ கூப்பிடு மனோ, என்னை தாராளமா அம்மான்னு கூப்பிடு!" என்றதும் மனோஜ்.

"அம்மா!!!" என்று உணர்ந்து உச்சரித்தான்.

அபிராமியின் மெய் சிலிர்த்தது. இத்தனை நாட்களாக எதைக் கேட்க வேண்டும் என்று ஏங்கித் தவித்தாரோ அந்த வார்த்தை உணர்ந்து உச்சரிக்கப்பட்டதில் அவர் அங்கமெல்லாம் மெல்லிய நடுக்கம் பரவியது. கண்கள் குளமாகின.

இதில் உங்களுக்கு ஆட்சேபணை ஏதும் இல்லையே என்பது போல் ரேணுகாவை அபிராமி திரும்பிப் பார்க்க ரேணுகா மலர்ந்த முகத்துடன் புன்னகைத்தார்.

"ரொம்ப சந்தோஷம் மனோஜ். நீ வந்து கூப்பிடணும் என்று தான் கடவுள் இத்தனை நாளா என் விருப்பத்தை ஹரிணிகிட்டே சொல்ல விடாமல் தடுத்த இருக்கார் போல. அவ என்னை அம்மான்னு கூப்பிட்டு இருந்தால் கூட எனக்கு இவ்வளவு சந்தோஷம் கிடைச்சிருக்



காதுன்னு நினைக்கிறேன். ஏன்னா நான் அவளுக்கு உறவு முறையில் அத்தை என்ற நினைப்பு என் அடிமனசிலே எப்பவும் இருக்கும் தானே?! ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்கு மனோ, எனக்கு இது போதும். இது போதும்" என்று அரற்ற ஆம்பித்தார்.

"அபிராமி!" என்று ரேணுகா அவர் அருகில் சென்று தொட...

"ரொம்ப ரொம்ப தாங்க்ஸ் அக்கா. இந்த உதவியை நான் என்னைக்கும் மறக்க மாட்டேன்" என்று கூறி அவரை அணைத்துக் கொண்டு கண்ணீர் விடலானார்.

"அபிராமி என்ன இது? உதவின்னு சொல்லுறே? நான் என்ன செஞ்சேன்? அவனுக்கா உன்னை அப்படிக் கூப்பிடணும் என்று தோணியிருக்கு. கூப்பிட்டான். அப்படிப் பார்த்தா மனோ உன்னை அப்படி கூப்பிட நீ சம்மதிச்சதுக்கு நாங்க உனக்கு தாங்க்ஸ் சொல் லணுமா?" என்றதும்,

"அச்சச்சோ வேண்டாம்" என்று மறுத்த அபிராமி தன் கண்ணீரை துடைத்துக் கொண்டார்.

"எங்கிருந்தோ வந்த நீங்க எனக்கு பேச்சு துணைக்கு மட்டுமில்லாமல் என் மனக்காயத்துக்கு மருந்தாகவும் இருக்கீங்க. உங்களை இந்த வீட்டுக்கு அனுப்பி வைச்ச அந்தக் கடவுளுக்கு நன்றி சொல்லணும்."

"அண்ணன் தான் இந்த வீட்டை செலக்ட் பண்ணி னான். அப்போ அண்ணன் கடவுளாம்மா?" என்று மனோ கேட்க ரேணுகா புன்னகைத்தார்.



# 9

வினய் - ஹரிணி திருமணம் குறித்த முகூர்த்தத்தில் சுற்றமும் நட்பும் சூழ மிகச் சிறப்பாக நடந்தது. அபிராமியின் வீடே பெண் வீடாகக் கருதப்பட்டது. பெண்ணும் மாப்பிள்ளையும் மறுவீட்டுக்கு அங்கே சென்றார்கள்.

சிவராமனும் அவர் மனைவியும் அனைவரையும் வரவேற்றனர். "வாங்க மாப்பிள்ளை!" என்று அபிராமி பாசத்தோடு அழைத்தார்.

ஆனால் பாண்டியன் மட்டும் இறுகிப் போய் நின்றிருந்தார். வினய் தன் பங்கிற்கு அவரை முறைத்துக் கொண்டு நின்றான்.

"அவர் எங்க மாமா வினு. பழசை மறந்துடலாமே" என்று மெல்லிய குரலில் ஹரிணி கெஞ்சலாகக் கேட்டுப் பார்த்தாள்.

"இதை நீ அவர்கிட்ட சொல்லி என்னைப் பாசமா மாப்பிள்ளைன்னு கூப்பிடச் சொல்லேன் பார்ப்போம்" என்று இடக்காக பதில் அளித்தான்.

"நல்ல நாள் அதுவா அவரைப் பத்தின பேச்சு நமக்குள்ளே வேண்டாம் ஹனி!" என்றதும் அவள் அமைதியானாள்.



நல்ல நேரம் பார்த்து புகுந்த வீட்டிற்கு ஹரிணியை அழைத்து வந்தார்கள். மலர்விழி ஆரத்தி எடுத்தாள்.

"அண்ணா தட்டிலே காசு போடுங்க."

"அப்புறமா போடுறேன் சின்னு."

"அந்தப் பேச்செல்லாம் வேண்டாம். தட்டிலே காசு போட்டா தான் வழிவிடுவேன்" என்று அவள் மிரட்ட,

அவன் நூறு ரூபாய் எடுத்துக் கொடுத்ததும், "தாங்க்ஸ்" என்று சொல்லி வாங்கிக் கொண்டு வழிவிட்டாள்.

"என்ன மலர்... நூறு ரூபாயை வாங்கிட்டு சந்தோஷமா வழி விட்டுட்டீங்க. மாமா சிங்கப்பூருக்கு வரும் போது நானெல்லாம் ஒரு பெரிய அமௌன்ட்டை கலெக்ட் பண்ணாமல் வீட்டுக்குள்ளே விடமாட்டேன்" என்று சாதனா கூறினாள்.

"எங்க அண்ணனுக்கு என்னை நல்லா தெரியும். இது மாதிரி முக்கியமான தருணங்களில் அவர் எனக்கு தரும் பணத்தை நான் செலவு பண்ண மாட்டேன். பத்திரமா வச்சுப்பேன். அதான் அவர் நூறு ரூபாய் மட்டும் போட்டார்" என்று சிரித்துக் கொண்டே மலர்விழி கூற,

அப்படியா என்பது போல் சாதனா வினய் புறம் திரும்பிப் பார்க்க அவன் ஆமாம் என்று தலை அசைத்தான். அவர்களின் புரிதலைக் கண்டு ஹரிணியும் சாதனாவும் வியந்தார்கள்.

அன்று இரவு முதலிரவு அறைக்குள் ஹரிணி அனுப்பி வைக்கப்பட்டாள்.

''என்ன வினு பண்ணிக்கிட்டு இருக்கீங்க?'' என்று சாதாரணமாக கேள்வி கேட்டுக் கொண்டே ஹரிணி உள்ளே நுழைந்தாள்.

''ஹனி இந்த அச்சம், மடம், நாணம், பயிர்ப்புன்னு சொல்லுவாங்களே. அதெல்லாம் உன்கிட்ட இல்லையா?'' என்று வினய் கேட்டதும் அவள் தன் அலைபேசிக்காக கண்களை சுழட்ட,

''இனிமே இந்த அகராதியை நோண்டுற வேலையெல்லாம் வச்சுக்கக் கூடாது. நான் தான் உன் அகராதி. எதுவா இருந்தாலும் என்கிட்ட கேளு. நான் தெளிவாச் சொல்லுறேன்'' என்றவன்.

''நீ பாட்டுக்கு வெட்கப் படாமல் கேஷுவால ரூமுக்குள்ள வந்தியா... அதான் அப்படி கேட்டேன்'' என்று விளக்கினான்.

''நான் ஏன் வினு உங்களை பார்த்து வெட்கப் படணும்?''

''அப்படிங்கிற? அதையும் பார்த்துடுவோம்'' என்றவன் படுக்கையில் சாய்ந்த வாக்கில் அமர்ந்து கொண்டு அவளை இழுத்து தன் மேல் சாய்த்துக் கொண்டான்.

''ஹனி கிஸ் மீ'' என்று அவன் கிசுகிசுப்பாகக் கேட்கவும் அவள் வெட்கப்பட்டு ஊஹூம் என்று தலையாட்டினாள்.

''கிவ் மீ எ கிஸ்'' என்று இம்முறை அவன் அழுத்திச் சொல்ல அவன் மார்பிலேயே தன் தலையை புதைத்துக் கொண்டாள்.



''இப்போ தான் யாரோ வெட்கப்பட மாட்டேன்னு சொன்னாங்க'' என்று அவன் கேலியாகக் கூற,

''இதுக்கு வெட்கம் வராதா?'' என்று அவள் சிணுங்க,

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. இப்போ நான் கேட்டதை நீ தரணும்'' என்று அவன் மீண்டும் வலியுறுத்த அவள் தனது உதடுகளால் பட்டும் படாமலும் அவனது கன்னத்தில் முத்தமொன்றை பதித்தாள்.

''அய்யய்ய... என்னதிது?'' என்று அவன் கேலியாகக் கேட்டு, ''இதுக்கு பேரு கிஸ்ன்னு சொல்லாதே ஹனி. நல்லா அழுத்தமா கொடு'' என்று சொன்னதும்,

''அழுத்தமாத் தானே வேணும்?'' என்று கேட்டவள் அவனது கன்னத்தில் கடித்து வைக்க.

''அடிப்பாவி!'' என்று அவன் அலறினான்.

எழுந்து அமர்ந்து கொண்டு அவள் சிரிக்க ஆரம்பித்தாள்.

''இப்போ எதுக்கு என்னை கடிச்சு வச்சே?''

''கல்லானாலும் கணவன் சிறு புல்லானாலும் புருஷன் அப்படிங்கிற பழமொழியை மாத்திட்டாங்களாமே?''

''என்னன்னு மாத்திட்டாங்க?'' என்று அவன் வியப்புடன் கேட்க.

''மண்டையிலே கொட்டினாலும் மனைவி, பொளேர்ன்னு அறைஞ்சாலும் பொண்டாட்டின்னு'' என்று சிரித்துக் கொண்டே ஹரிணி கூறியதும்.

"இப்படியெல்லாம் உனக்கு தப்புத் தப்பா யார் சொல்லிக் கொடுத்தா?" என்று வினவினான்.

"நம்ம மலர் தான்."

"அவ எதுக்காக அப்படி சொல்லி இருப்பாள் தெரியுமா? அவ டாக்டர்க்கு படிச்சு முடிக்கப் போறா இல்லையா. தன்னை தேடி பேஷண்ட் வருவாங்களோ மாட்டாங்களோன்னு அவளுக்கு பயம் வந்து இருக்கு. என்னை பெர்மனன்ட் பேஷண்ட்டா மாத்த ப்ளான் பண்ணி உனக்கு புதுமொழி எல்லாம் சொல்லிக் கொடுத்து இருக்காள். நீ அவ பேச்சைக் கேட்காதே."

"அப்போ நான் யார் பேச்சை கேட்கணும்?"

"உனக்கு நான் சொல்லித் தரேன் ஹனி. அழுத்தமா கிஸ் கொடுக்கிறதுன்னா எப்படின்னு உனக்கு நான் பாடம் எடுக்கிறேன்" என்றவன் காதல் பாடங்களை கற்றுக் கொடுக்க ஆரம்பித்தான்.

அவன் அவளது உச்சந்தலையில் அழுத்தமாய் முத்தம் பதித்ததில் அவள் உடல் சிலிர்த்தது. ஹரிணி அவன் மேல் சாய்ந்து கொண்டாள்.

"முத்தம் கொடுத்தா இப்படி ஆளை கிறங்கடிக்கணும். அதை விட்டுட்டு அலற வைக்கக் கூடாது" என்றவன் தனது அடுத்த முத்தத்தை அவளது கன்னத்தில் கொடுத்தான்.

"வினு!" என்று கிறங்கிப் போய் அவனை கட்டிக் கொண்டாள். அதற்கு பிறகு அங்கு பேச்சுக்கு என்ன வேலை?





# 10

ஹரிணிக்கு சென்னையிலேயே வேலை கிடைத்தது. வினய் ஹரிணி, மனோஜ் மூவரும் வேலைக்கு சென்று விடுவார்கள். வழக்கம் போல் ரேணுகா வீட்டை கவனித்துக் கொண்டார்.

அபிராமி பகல் பொழுது முழுவதும் ரேணுகாவின் வீட்டிலேயே செலவு செய்வார். முன்பே அப்படித் தான் இருப்பார். இப்பொழுது சொந்தக்காரர்கள் ஆகிவிட்டதால் உரிமையோடு வந்து போனார்.

நாட்கள் வாரங்களாகி மாதங்களாய் உருண்டோடின. வினய் - ஹரிணிக்கு இடையே புரிதலும் காதலும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வந்ததே தவிர குறையவில்லை. அவர்களுக்கு இடையே இருக்கும் ஒரே பிரச்சனை பாண்டியன்.

அவர் வீட்டில் இருந்து வரும் உணவுகளை வினய் ருசி பார்ப்பது கூட இல்லை. ஹரிணி அவரிடம் நெருங்கிப் பேசினால் கூட அவன் கோபம் கொள்ளுவான்.

"அவர் என்ன உனக்கு தாய் மாமாவா? உங்க அம்மா கூடப் பிறந்தவரா? எதுக்கு அவர்கிட்ட நெருங்கிப் பழகணும்?" என்று கண்டிப்பான்.

''உங்களோட சண்டைக்காக என்னை அவர்கிட்ட பேசக் கூட விடமாட்டீர்களா?'' என்று ஹரிணி கேட்டதற்கு.

''நான் அப்படி ஒண்ணும் சொல்லலை. ஆனா எனக்கு பிடிக்காதவங்களை நீயும் தள்ளி வச்சா நான் ரொம்ப சந்தோஷப்படுவேன்'' என்று வெளிப்படையாகவே அவர் மீது விரோதம் பாராட்டினான்.

அவள் தன் மாமாவை தள்ளி வைக்கவில்லை. மாறாக அவர் பேச்சை கணவன் முன் எடுக்காமல் இருக்கப் பழகிக் கொண்டாள். அதனால் அவர்களிடையே பெரிதாக எந்தச் சண்டையும் வரவில்லை.

ஒரு நாள் காலையில் ஹரிணியும் மலர்விழியும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது மனோஜ் தன் அறையை விட்டு வெளியே வர அவன் தன் நடை தடுமாறி கீழே விழப் போனான், மலர்விழி அவனை தாவிப் பிடித்து அங்கிருந்த நாற்காலியில் அமர வைத்தாள்.

''சரியா மாட்டலைன்னு நினைக்கிறேன் சின்னு'' என்று மனோஜ் கூறவும்.

''எந்தக் கால் மனோ?'' என்று கேட்டவள். ''எதுக்கும் நான் ரெண்டு காலையும் செக் பண்ணுறேன்'' என்று கூறிக் கொண்டே அவனது பேண்ட்டை மடக்கி அவனது கட்டை காலை திருகி கழட்டினாள்.

அறையில் இருந்து வெளியே வந்த வினய், ''என்னாச்சு?'' என்று பதறிக் கொண்டே அவர்கள் அருகே வந்தான். விபரம் அறிந்து கொண்டவன் அடுத்த காலை கழட்ட ஆரம்பித்தான்.



அன்று தான் மனோஜின் வெட்டப்பட்ட இரண்டு கால்களையும் கண்ட ஹரிணியின் கண்களில் கண்ணீர் சுரந்தது. எப்படி வலித்திருக்கும்? எப்படித் தாங்கினானோ? என நினைத்தவள் மேலும் மேலும் கண்ணீர் பெருக்கினாள்.

வினய் மற்றும் மலரின் கவனம் மனோஜிடமே இருந்ததால் அவர்கள் ஹரிணியை கவனிக்கவில்லை.

''வலிக்குதாடா?'' என்று கேட்டுக் கொண்டே வினய் தம்பியின் கால்களை வருடிக் கொடுத்தான்.

''அண்ணா பிராஸ்தடிக்ஸை மாத்தணும். புதுசு வாங்கணும். இது வாங்கி ரொம்ப நாளாகிடுச்சு'' என்று மலர்விழி கூற,

''ஆமா சின்னு. நானும் நினைச்சுக்கிட்டு தான் இருந்தேன்'' என்று மலரிடம் கூறிய வினய், ''இன்னைக்கே போவோமா?'' என்று தம்பியிடம் கேட்டான்.

''உனக்கு ஏதோ முக்கியமான வேலை இருக்குன்னு சொன்னியே. நீ ஆபீஸுக்கு போண்ணா. நாம இன்னொரு நாள் போகலாம்'' என்று மனோஜ் மறுக்க.

''அண்ணா நானும் ஆன்ட்டியும் மனோவை கூட்டிட்டுப் போறோம். நீங்க ஆபீஸ் போங்க'' என்று மலர்விழி கூறவும் வினய் சம்மதித்தான்.

அவர்கள் திரும்பவும் அந்தக் கட்டை கால்களை மாட்டிவிட்டனர்.

''எழுந்து நடந்து பாருடா'' என்று கூறிய வினய் அவனை அணைத்தாற் போல் அவன் அருகிலேயே நிற்க மறுபுறம் மலர்விழி நின்றாள்.

''ஐயம் ஆல் ரைட். சரியா நடந்துடுவேன்'' என்ற மனோஜ் மெதுவாக எட்டு எடுத்து வைத்தான். ஒன்றும் வித்தியாசமாக இல்லை என்றதும் எப்போதும் போல் நடக்க ஆரம்பித்தான். அதன் பின்பே மலரும் வினய்யும் அவனை விட்டு விலகினர்.

வெளியில் இருந்து வீட்டிற்குள் நுழைந்த ரேணுகா வின் கண்களில் ஹரிணியின் கண்ணீர் தான் முதலில் பட்டது.

''அவளை என்னடா சொன்னீங்க?'' என்று அதட்டிக் கொண்டே ரேணுகா உள்ளே வர...

'யாரைக் கேட்கிறார்?' என்று மூவரும் குழம்பிப் போனார்கள். அதன் பின்பே அவர்கள் ஹரிணியை கவனித்தனர்.

ஹரிணியை நெருங்கிய அனைவரும், ''என்னாச்சு?'' என்று கேட்க,

''மனோ... மனோ ஆக்ஸிடென்ட்...'' என்று மட்டும் கூறிக் கொண்டே அவள் கண்ணீர் வடிக்க,

''அண்ணி சரியாப் போச்சு போங்க. எப்பவோ நடந்ததை நினைச்சு இப்ப அழறீங்களா? எனக்கு ஒண்ணும் இல்ல அண்ணி. நான் நல்லா தான் இருக்கேன். அப்பப்போ இப்படி ஏதாச்சும் ஆகும். கொஞ்சம் வலிக்கும். மத்தபடி நான் நல்லா இருக்கேன்'' என்று மனோஜ் சமாதானம் கூறிய பிறகே அவளது கண்ணீர் நின்றது.

ஹரிணிக்கு திருமணமாகி இரண்டாம் மாதம் நடக்கையில் ஹரிணி கருவுற்றாள். வீட்டில் உள்ள



அனைவரும் அவளை தாங்கினர். சிவராமன் தன் மனைவியை அழைத்துக் கொண்டு சென்னைக்கு வந்தார். அவர்கள் ஒரு வாரம் மகளை அருகில் இருந்து கவனித்துக் கொண்டார்கள்.

ஏழாம் மாதம் வளைகாப்பு நடத்தினார்கள். ஹரிணி சென்னையில் வேலை செய்வதால் வளைகாப்பு முடிந்த பிறகும் அவளது பெற்றோர் அவளை சிங்கப்பூர் அழைத்துச் செல்லவில்லை.

''என்னால முடியுற வரைக்கும் நான் ஆபீஸ் போறேன். அப்ப தான் குழந்தை பிறந்த பிறகு குழந்தை கூட அதிக நாள் இருக்கிற மாதிரி இருக்கும்'' என்று அவள் கூறியதை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

பிரசவ சமயத்தில் பெண் துணை அவசியம். சிங்கப் பூரில் ஹரிணியின் தாய் மட்டுமே இருக்கிறார். சென்னையில் என்றால் ரேணுகாவும் அபிராமியும் இருக்கிறார்கள். அதனால் பிரசவம் சென்னையிலே நடக்கட்டும் என்று தீர்மானித்தனர். ஹரிணி வீட்டைச் சேர்ந்தவர்களும் அந்த சமயத்தில் சென்னை வந்து கொள்ளலாம் என முடிவெடுத்தனர். குழந்தை பிறந்த பிறகு சிங்கப்பூர் கூட்டிச் செல்லலாம் என முடிவெடுத்தனர்.

ஹரிணி கர்ப்பமாகி எட்டு மாதங்கள் ஆன போது... ஒரு நாள் சாதனாவிடமிருந்து வினய்க்கு போன் வந்தது.

''ஹலோ வினய் ஹியர்.''

''மாமா'' என்று கூறிய சாதனா அழ ஆரம்பிக்க,

''என்னாச்சு சாதனா? ஏன் அழறே?'' என்று வினய் பதட்டத்தோடு கேட்டான்.

''அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. மயங்கி விழுந் துட்டாங்க. ஹாஸ்பிட்டலில் அட்மிட் பண்ணி இருக் கேன். அப்பா வேலை விஷயமாக அமெரிக்கா போய் இருக்கார்'' என்று அவள் அழுது கொண்டே துண்டு துண்டாக விஷயத்தை விளக்கினாள்.

''நான் உடனே கிளம்பி வரேன். ஹரிணிகிட்டே எது வும் சொல்ல வேண்டாம். ரொம்ப டென்ஷன் ஆவாள். நீ தைரியமா இரு. இன்னும் சில மணி நேரத்திலே நான் சிங்கப்பூரிலே இருப்பேன்'' என்றவன் அழைப்பைத் துண்டித்ததும் துரிதமாக செயல்பட்டான்.

சிங்கப்பூர் செல்ல வேண்டும் என்றதும் முதலில் அவன் நினைவில் வந்தது விசா பற்றிய நினைவு தான். அலுவலக வேலைக்காக வாங்கி இருந்த விசா இன்னும் காலாவாதியாகவில்லை. அதனால் விசா பிரச்சனை இராது.

'அலுவலக வேலையாகப் போகிறேன் என்று பொய் சொல்ல முடியாது. ஏற்கனவே அந்த வேலை முடிந்ததாக ஹரிணிகிட்ட சொல்லிட்டேன். மேலும் அலுவலகத்தில் இருந்து திரும்பப் போகச் சொன்னால் அன்று குட்டு வெளிப்பட்டுவிடும். என்ன செய்யலாம்?'' என்று யோசித்தான்.

ரேணுகாவிடமும் மனோஜிடமும் உண்மையை கூறியவன் ஹரிணியிடம் மட்டும் அலுவலக வேலை யாக மும்பை போவதாக கூறினான். பாண்டியனுக்கு ஜுரமாக இருந்ததால் அபிராமியால் எப்படியும் சிங் கப்பூர் வர முடியாது என நினைத்த வினய் அபிராமி யிடமும் உண்மையை சொல்லவில்லை.



வினய் ஹரிணியின் கைப்பேசியை அணைத்து தனது பெட்டியில் மறைத்து வைத்தான்.

ரேணுகாவிடம் சென்று, ''அம்மா நான் அவ செல் போனை எடுத்துட்டு போறேன்'' என்றான்.

''எதுக்குடா?'' என்று ரேணுகா ஆச்சரியமாக வினவ.

''நம்பர் டிஸ்ப்ளே ஆகுறதை வச்சு நான் சிங்கப்பூரில் இருந்து பேசுறேன் என்று அவ ஈஸியா கண்டுபிடிச் சிடுவாள். நான் நம்ம வீட்டு லேண்ட் லைன் போனுக்கே கூப்பிடுறேன். நம்ம வீட்டிலே காலர் ஐடி போன் இல் லாததால அவளால நான் எங்கே இருந்து பேசுறேன்னு கண்டு பிடிக்க முடியாது'' என்றான்.

''அது சரி. ஆனா அவ உன்னைக் கூப்பிடணும் என்று நினைச்சா... எந்த நம்பருக்கு கூப்பிட்டுப் பேசுவாள்?''

''வேலிட் பாயிண்ட். அடுத்த பொய்யை யோசிக்க எனக்கு கொஞ்சம் டைம் கொடுங்க. இப்போதைக்கு அவ உங்க செல்போனை கேட்டால்... பிரசவம் நெருங்குகிறதால செல்போனில் பேசுவதை கொஞ்சம் குறைச்சா நல்லதுன்னு சொல்லி வைங்க'' என்று கூறிவிட்டு சென்றான்.

அவன் சிங்கப்பூர் சென்று சேர்ந்த பொழுது மருத்து வர்கள் ஹரிணியின் தாய்க்கு மஞ்சள் காமாலை என்று கண்டுபிடித்து இருந்தனர். வினய் வந்ததும் சாதனா சற்று தெம்பாக உணர்ந்தாள்.

''எத்தனை நாளா பீவர் இருந்தது சாதனா?''

''ஒரு வாரமாகவே இருந்தது மாமா.''

''ஏன் எங்ககிட்ட சொல்லலை?''

''அம்மா தான் அக்கா வருத்தப்படுவான்னு சொல்ல வேண்டாம் என்று சொன்னாங்க. அதான் அம்மா மயங்கி விழுந்ததும் நான் அக்காக்கு போன் பண்ணாமல் உங்களுக்கு பண்ணினேன்.''

''நல்ல வேளை நீ எனக்கு போன் பண்ணினே'' என்றவன் எல்லாவற்றையும் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டான்.

சிங்கப்பூரில் இருந்து வினய் வீட்டு எண்ணிற்கு போன் செய்து பேசினான். போனை ஹரிணி தான் எடுத்தாள். பேசுவது வினய் என்று தெரிந்ததும்.

''ஏன் இவ்வளவு நேரமா பேசலை? நான் போட்டு போட்டு பார்த்தேன். உங்க போனுக்கு என்ன ஆச்சு? உங்க போனும் தொலைஞ்சு போச்சா?'' என்று பட படத்தாள்.

''உங்க போனும்... அப்படின்னா என்ன அர்த்தம்? வேற யார் போன் தொலைஞ்சு போச்சு?'' என்று வினய் ஒன்றும் அறியாதவனாய் கேட்க,

''என் போனைக் காணோம் வினய்'' என்றாள்.

''காணோமா? எங்க போச்சு? ஆபீஸில் விட்டுட் டியா?''

''எனக்கே தெரியலை. உங்க போனுக்கு என்ன ஆச்சு?''

''என் போன் நல்லா தான்டா இருக்கு. ஆனா சிம்மைக் காணோம்.''



''சிம் மட்டும் எப்படி தொலையும்?''

''போன் கைதவறி கீழே விழுந்திடுச்சு. பேட்டரி சிம் எல்லாம் தெறிச்சு விழுந்ததிலே சிம் மட்டும் கிடைக் கலை.''

''அது சரி நீங்க ஏன் லேன்ட் லைனுக்கு போன் பண்ணி இருக்கீங்க?''

''உன் போனுக்கு தான் டிரை பண்ணினேன். ஸ்விட்ச் ஆஃப்ன்னு வந்துச்சு. அதான் லேன்ட் லைனுக்கு பண்ணினேன்'' என்றவன் அவளுக்குத் தெரி யாமல் ஒரு பெருமூச்சை வெளியேற்றினான்.

'எத்தனை பொய்? இன்னும் எத்தனை நாளைக்கு சொல்லணுமோ?' என கவலைப்பட்டான்.

ஹரிணியின் தாயை இரண்டு நாட்கள் கழித்து மருத்துவமனையில் இருந்து அனுப்பி வைத்தார்கள். சிவராமன் சிங்கப்பூர் வந்து சேரும் வரை வினய் அங்கே இருந்தான்.

''சாரி மாப்பிள்ளை நீங்க நாலு நாளா இங்க இருக்கிறபடி ஆகிடுச்சு'' என்று அவர் வருத்தப்பட,

''என்ன மாமா இப்படிப் பேசுறீங்க? உங்க ரெண்டு பேரையும் பார்த்துக்க வேண்டியது என்னோட கடமை இல்லையா?'' என்று கூறி அவரை சமாதானம் செய் தான்.

''சாதனா போன் பண்ணின உடனே என்னால கிளம்ப முடியாமல் போச்சு மாப்பிள்ளை.''

''ஆபீஸ் வொர்க்ன்னா அப்படி தான் மாமா. மஞ்சள் காமாலைக்கு பத்தியச் சாப்பாடு தான் ரொம்ப முக்கியம்.

அத்தையை உங்களால பார்த்துக்க முடியுமா? இல்லைன்னா நான் அவங்களை சென்னைக்கு கூட்டிட்டு போகட்டுமா?'' என்று கேட்டான்.

''வேண்டாம் மாப்பிள்ளை. இங்க ஒரு பிரண்டு மூலமா ஒரு மூணு நாலு மாசத்துக்கு சமைக்க ஆள் ஏற்பாடு பண்ணிட்டேன். நானும் சாதனாவும் பார்த்துக்கிறோம். நீங்க ஹரிணியை பார்த்துக்கோங்க. பிரசவ நேரத்திலாச்சும் இவ தெம்பாகிடுவாளான்னு தெரியலை'' என்று சிவராமன் வருத்தப்பட,

''ஹரிணியை பத்தியோ அவ டெலிவரியை பத்தியோ நீங்க கவலைப்படாதீங்க மாமா. அம்மாவும் அபிராமி ஆன்ட்டியும் இருக்காங்க. நாங்க பார்த்துக்கிறோம்'' என்றான்.



## 11

அன்று ஹரிணியின் பிறந்த நாள். சிங்கப்பூரில் இருந்து வினய் தனியாகவும் சாதனாவும் அவள் தாயும் சேர்ந்தும் வாழ்த்து தெரிவித்து இருந்தனர்.

''ஏன்மா ரொம்ப டல்லா பேசுறீங்க?'' என்ற ஹரிணியின் கேள்விக்கு ஜலதோஷம் என்று கூறி அவள் தாய் சமாளித்து வைத்தார்.

ஹரிணி குளித்து முடித்து வெளியே வந்தாள். சோபாவில் இரு பரிசுகள் வண்ணக் காகிதங்களால்



சுற்றப்பட்டு வீற்றிருந்தன. அதன் அருகே அபிராமி ஒரு சிறிய பரிசுடன் அமர்ந்திருந்தார்.

''ஹேப்பி பர்த்டே ஹரிணி!'' என்று வாழ்த்திய அபிராமி.

''இதோடு சேர்த்து இதையும் பிரிச்சுப் பாரு'' என்று சோபாவில் இருந்த பரிசுகளை சுட்டிக் காட்டியவர். ''மாமா ஆபீஸுக்கு கிளம்பிப் போனதுக்கு அப்புறமா வரேன். ஒரு வாரமா காய்ச்சலில் படுத்துட்டு இன்னைக்கு தான் ஆபிஸ் கிளம்புறார்'' என்று கூறிக் கொண்டே சென்றார்.

ஹரிணி அந்த பரிசுகளை அள்ளிக் கொண்டு தனது அறை நோக்கித் திரும்பும் போது அங்கு வந்த ரேணுகாவும் மனோஜும் தங்களது வாழ்த்தை தெரிவித்தனர். அவளது கையில் இருந்த பரிசுப் பொருட்களை பார்த்தவர்கள் அதை பிரித்துப் பார்க்கச் சொன்னார்கள்.

''என் ரூமிலே போய் பார்க்கிறேன்'' என்றவள் அங்கிருந்து சென்றாள்.

அபிராமி அவளுக்கு ஒரு அலங்காரப் பொருளை பரிசாக அளித்திருந்தார். ஹரிணி மீதம் இருந்த அந்த இரண்டு பரிசுகளையும் பிரித்துப் பார்த்தாள். ஒன்றில் பட்டுப் புடவையும் இன்னொன்றில் ஒரு ஹைட்சைன் (hidesign) பிராண்ட் கைப்பையும் இருந்தது.

''அம்மா புடவை அனுப்பி இருக்காங்க. சாதனா ஹேண்ட்பேக் அனுப்பி இருக்காள். ரெண்டு பேருமே என் டேஸ்ட் தெரிஞ்சு எனக்கு பிடிச்ச மாதிரியே அனுப்பி இருக்காங்க. சூப்பர்'' என்று பாராட்டிக் கொண்டாள்.

அபிராமி தான் அந்தப் பரிசுகளையும் கொண்டு வந்தார் என்று ஹரிணி நினைத்துக் கொண்டாள். ஆனால் உண்மையில் அந்தப் புடவையை வாங்கியது ரேணுகா. கைப்பையை வாங்கியது மனோஜ்.

அவர்கள் அவள் கையில் அதைத் கொடுத்து வாழ்த்துத் தெரிவிக்க எண்ணி இருந்தார்கள். அதற்குள் அவளே அந்தப் பரிசுகளை கையில் எடுத்துக் கொண்டதால் அது பற்றி ஒன்றும் சொல்லாமல் வாழ்த்தினை மட்டும் தெரிவித்தார்கள்.

அன்று இரவு பதினொரு மணிக்கு வினய் சிங்கப்பூரில் இருந்து வீடு வந்து சேர்ந்தான்.

''சாரி ஹனி. நானும் காலையில் வந்துடணும் என்று ரொம்ப டிரை பண்ணினேன். ஆனா வேலை இழுத் துடுச்சு. எப்படியோ பர்த்டே முடியும் முன்னாடி வந்துட் டேனே!'' என்று அவன் பெருமைபட்டுக் கொள்ள அவள் முறைத்துக் கொண்டு நின்றாள்.

அவள் முதுகுப் பக்கம் சென்று அவளை அணைத்து அவளது கன்னத்தில் முத்தம் பதித்து, ''ஹேப்பி பர்த்டே ஹனி!'' என்றான். அவள் அப்பொழுதும் அமைதியாக இருக்கவும்.

''உன் கோபத்தைக் காட்ட இது நேரம் இல்லை ஹனி. வா முதல்ல வந்து கேக்கை வெட்டு'' என்று கூப்பிட்டும் அவள் அசைவதாய் இல்லை என்றதும்,

அவள் முன்னால் வந்தவன் தனது இரு கைகளால் அவள் கன்னம் தாங்கி, ''எனக்கு மட்டும் இன்னைக்கு உன் கூடவே இருக்கணும் என்று ஆசை இல்லையா? புரிஞ்சுக்கோடா ஹனி. உனக்காகத் தான் நான் ஓடோடி வந்து இருக்கேன். ஒன் அவர் தான் இருக்கு. அட்லீஸ்ட் இந்த ஒன் அவராச்சும் செலிபரேட் பண்ணலாமே. ப்ளீஸ்... ப்ளீஸ்...'' என்ற கெஞ்சியதும்,



''முதல் பர்த்டேவே இந்த லட்சணத்திலே இருக்கு. இனிமே என் பர்த்டேவை நான் மறந்துட வேண்டியது தான் போல!'' என்று அலுத்துக் கொண்டாள்.

''நீங்க என்னை வருத்தப்பட வச்சீங்க. ஆனா எங்க அம்மாவும் சாதனாவும் எனக்கு பர்த்டே கிஃப்ட் அனுப்பி என்னை சந்தோஷப்பட வச்சாங்க தெரியுமா?'' என்று கேட்டு அவள் தனக்கு வந்த பரிசுகளை பற்றிக் கூற வினய் யோசனையில் ஆழ்ந்தான்.

கடந்த பத்த நாட்களுக்கு மேலாய் ஹரிணியின் தாய் உடல் நலமின்றி படுத்துவிட்டதால் தன்னால் எந்த பரிசும் வாங்கி அனுப்ப முடியவில்லை என்று அங்கு சாதனா புலம்பிக் கொண்டு இருந்தாள். இங்கு ஹரி ணியோ வேறு கதை சொல்லிக் கொண்டு இருக்கிறாள். ஒண்ணும் புரியலையே என்று வினய் குழம்பினான்.

'இவ சொல்லும் புடவையும் ஹேண்ட்பேகும் தானே எங்க வீட்டிலும் கிஃப்ட்டா வாங்கி வச்சாங்க!' என்று நினைத்த வினய், ''அம்மாவும் மனோஜும் என்ன கொடுத்தாங்க?'' என்று கேட்டான்.

''அவங்க விஷ் தான் பண்ணினாங்க. ஒண்ணும் தரலை'' என்றதுமே வினய்க்கு பரிசு எங்கே இருந்து வந்தது என்று புரிந்து போனது.

ஆனால் அவர்கள் வாங்கின பரிசை ஹரிணி எப்படி தன் வீட்டில் இருந்து அனுப்பப்பட்டது என்று புரிந்து

கொண்டாள் என்ற விஷயம் தான் அவனுக்குப் புரிய வில்லை.

''வெளியே வா. அம்மாவும் மனோஜும் நமக்காக காத்துக்கிட்டு இருக்காங்க'' என்று கூறி அவளை தங்களது அறையில் இருந்து வரவேற்பறைக்கு அழைத்து சென்றான்.

சாப்பாட்டு மேஜையில் கேக் வைக்கப்பட்டு இருந்தது. மனோஜும் ரேணுகாவும் காத்திருந்தனர். அவள் அந்த கேக்கை வெட்டி அனைவருக்கும் கொடுத்து முடித்ததும் மனோஜ்,

''கிஃப்ட்...'' என்று ஆரம்பித்தான். ஆனால் வினய் காட்டிய சைகையினால் அந்த வார்த்தையோடு நிறுத்திக் கொண்டான்.

''என்ன மனோ கேட்டீங்க?'' என்று ஹரிணி கேட்டதும்.

'இப்போது நான் என்ன சொல்ல வேண்டும்?' என்பது போல் அவன் தன் அண்ணனை பார்வையிட.

''நான் ஏதாச்சும் கிஃப்ட் வாங்கித் தந்தேனான்னு கேட்கிறான்'' என்று வினய் பதில் கூறிவிட்டு ஒரு சின்ன பரிசு பொருளை அவளிடம் கொடுத்தான்.

அவள் அதில் என்ன இருக்கிறது என்று ஆவலோடு பிரித்து பார்க்கும் பொழுது வினய் பிரிஜ்ஜில் இருந்து குளிர் நீர் எடுப்பது போல் அங்கே செல்ல... மனோஜும் அங்கே வந்தான்.

''என்னண்ணா விஷயம்?''



''உங்க கிஃப்ட்டை அவ தன்னோட வீட்டில் இருந்து வந்ததா நினைச்சிக்கிட்டாள்'' என்று தந்தி பாஷையில் விஷயத்தை விளக்கிவிட்டு ஹரிணியின் பக்கத்தில் போய் நின்று கொண்டான்.

ரேணுகாவிற்கு பரிசுப் பொருளில் ஏதோ குளறுபடி என்பது வரையில் புரிந்தால் அவர் எதுவும் பேசாமல் அமைதியாக வேடிக்கை பார்த்தார். அழகிய கைக் கடிகாரத்தை வினய் பரிசளித்திருந்தான். அவனே அதை அவள் கையில் அணிவித்து விட்டான்.

''ரொம்ப நல்லா இருக்கு'' என்று அவள் ஆனந்தப் பட்டாள்.

''ரேணும்மா உங்க கிஃப்ட் எங்கே?'' என்று அவள் நேரடியாக ரேணுகாவிடம் கேட்க.

'ஆஹா! இதுல தான் குழப்பமா?' என்று ரேணுகா யோசிக்க ஆரம்பித்தார்.

அதற்குள் பொய் ஒன்றை யோசித்து வைத்திருந்த மனோஜ். ''அண்ணி உங்களுக்கு பிடிச்ச மாதிரி நீங்களே வாங்கிக்கட்டும் என்று நினைச்சு நானும் அம்மாவும் உங்களுக்கு கிஃப்ட் வவுச்சர் வாங்கி வச்சிருக்கோம்'' என்றவன்,

தன் தாயிடம் திரும்பி, ''அந்த வவுச்சரை எங்கேம்மா வச்சீங்க?'' என்றான்.

'இல்லாத வவுச்சரை கேட்டு ஏண்டா என் வயித்திலே புளியை கரைக்கிறே?' என்பது போல் ரேணுகா விழி பிதுங்கி நின்றார்.

''நான் காலையிலே குடுத்ததை நீங்க எடுத்துட்டுப் போகலையா? அப்போ என் ரூமிலே தான் இருக்கும். அதுக்கு எதுக்கு இந்த முழி முழிக்கிறீங்க? நீங்க முழிக்கிறதை பார்த்தா உங்களுக்கு அதை அண்ணிக்கு கொடுக்க மனசில்லைங்கிற மாதிரி இல்ல இருக்கு'' என்று ரேணுகாவை கிண்டல் பண்ணியவன்.

ஹரிணியிடம் திரும்பி, ''உங்க ரேணும்மாவை என்னன்னு விசாரிங்க அண்ணி'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

'அண்ணனும் தம்பியும் சேர்ந்து என்ன ஆட்டம் ஆடுறீங்கன்னே எனக்கு தெரியலை. திடீர்ன்னு என் பக்கம் திரும்பி அந்தப் பந்தை தூக்கிப் போடும்மான்னு சொன்னா... நான் கிரிக்கெட் பந்தை போடுறதா? இல்லை புட்பாலை தூக்கிப் போடுறதா?' என்று ரேணுகா மனதுக்குள் நொந்து கொண்டார்.

''வச்ச இடம் தெரியாமல் நான் யோசிச்சா... என்னைப் பத்தி எப்படி போட்டுக் கொடுக்கிறான் பாரு?'' என்று ரேணுகா தன் மருமகளிடம் புலம்ப,

''விடுங்க ரேணும்மா. அண்ணனும் தம்பியும் எப்படிப்பட்டவங்கன்னு எனக்குத் தெரியாதா என்ன?'' என்று அவள் மாமியாருக்கு ஆதரவாகக் கூறினாள்.

மனோஜ் தனக்கு வந்திருந்த பரிசுக் கூப்பனை கொண்டு வந்து தன் அண்ணியிடம் கொடுத்தான்.

''ரேணும்மா இந்த தடவை நான் இதை வாங்கிக் கறேன். ஆனா இனிமே நீங்களே எனக்கு எதாச்சும் வாங்கித் தரணும். பெரிசா தரணும் என்று அவசியமில்லை. ஆனா கிஃப்ட் நீங்க வாங்கினதா இருக்கணும். இன்னைக்கு காலையிலே மலர் கொடுத்த மாதிரி'' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

கலக்கிட்டடா என்பது போல் தம்பியை பார்த்து வினய் சைகை காண்பித்து விட்டு தனது அறைக்குச் சென்றான்.

வினய் தங்களது அறைக்குள் நுழைந்து படுக்கையில் அமர்ந்தான். ஹரிணி அவன் அருகே அமர்ந்து அவன் மேல் சாய்ந்து கொண்டாள்.

''ஐ மிஸ் யூ ஹனி'' என்று கூறிக் கொண்டே வினய் அவளது கன்னத்தில் முத்தம் பதிக்க அவள் அவனிடம் நெருங்கி அமர முயற்சித்தாள். வினய் அவளை தன்னோடு அணைத்துக் கொண்டான். அவள் அமைதியாக இருக்கவும்,

''என்னாச்சு ஹனி? நீ என்னை மிஸ் பண்ணலையா? அம்மாவும் மனோஜும் இருந்ததால ஜாலியா இருந்தியா?'' என்று கேட்டான்.

''எத்தனை பேர் இருந்தா என்ன? நீங்க இருக்கிற மாதிரி ஆகுமா? உங்களைப் பார்க்கலைன்னா எனக்கு என்னமோ... வெறுமையா இருக்கு வினு. குழந்தை பிறந்ததுக்கு அப்புறம் சிங்கப்பூர் போகணும். அப்போ உங்களைப் பார்க்காமல் எப்படி இருக்கப் போறேனோ தெரியலை'' என்று அவள் புலம்ப,

''ம்ம்ம்... இப்போ இப்படி தான் சொல்லுவ... ஆனா உன் குழந்தை வந்ததும் உனக்கு என் ஞாபகம் கூட வராது'' என்று கிண்டலடித்து அவளிடமிருந்து ஒரு செல்ல அடியை பெற்றுக் கொண்டான்.

மறுநாள் காலை வினய் சற்று தாமதமாக எழுந்தான். நான்கு நாட்கள் கழித்து அலுவலகம் செல்வதால் சற்றே பரபரப்பாகக் கிளம்பினான். அவன் தன் பெட்டியில் இருந்து துணிகளையெல்லாம் துவைக்கப் போட்டான். ஆனால் முக்கியமாய் மறைக்க வேண்டிய பொருட்களை பற்றிய சிந்தனையில்லாமல் அலுவலகத்திற்குச் சென்று விட்டான்.

அன்று மாலை அலுவலகத்தில் இருந்து ஹரிணி வீடு திரும்பினாள். வினய் கொண்டு வந்திருந்த பெட்டியை அல்மாரியில் வைப்பதற்காக அதை தூக்கினாள். மூடப்படாமல் இருந்த பெட்டி இரண்டாக பிளந்து கொண்டதும் அவள் அதை படுக்கையின் மேல் வைத்தாள்.

''லாக் போடாமலே போய் இருக்கார்'' என்று கணவனை திட்டிக்கொண்டே பெட்டியை சரியாக மூட நினைத்தவள் உள்ளிருந்த பொருளை பார்த்து அதிர்ந்தாள். ஏனெனில் அது அவளது கைப்பேசி.

''என் போன் எப்படி வினய் பெட்டிக்குள் வந்தது?'' என்று கேட்டுக் கொண்டே அவள் அந்த பெட்டியை தலை கீழாக கவிழ்த்தாள்.

உள்ளே இருந்த அனைத்து பொருட்களும் படுக்கையில் கொட்டப்பட்டது. அவற்றுள் முக்கியமானது அவளது கணவனின் சிம்கார்டும் பாஸ்போர்ட்டும். இது என்ன சிம் கார்ட் என்று அதை எடுத்து பார்க்க... அது காணாமல் போனதாக சொல்லப்பட்ட தன் கணவனின் சிம்கார்டாக இருக்குமோ என்ற சந்தேகம் அவளுக்கு வந்தது.

அவளது கவனம் பாஸ்போர்ட்டில் பதிந்தது.

''மும்பைக்கு எதுக்கு பாஸ்போர்ட் எடுத்துக்கிட்டு போய் இருக்கார்?'' என்று கேட்டுக் கொண்டே அதை திறந்து பார்த்தாள். அவன் சிங்கப்பூர் சென்று வந்து இருக்கிறான் என்ற விஷயம் அவளுக்கு விளங்கியது.

எதுக்கு இத்தனை பொய் என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டவள் அறையை விட்டு வெளியேறி வீட்டு எண்ணில் இருந்து தன் தங்கையை அழைத்தாள்.

''வினய் சிங்கப்பூர் வந்தாரா சாதனா? எதுக்கு? யாருக்கு என்ன ஆச்சு?'' என்ற அவள் கேள்விகளை அடுக்க அந்தப் பக்கம் சாதனா என்ன சொல்வதென்று தெரியாமல் விழித்தாள்.

ரேணுகா அவள் அருகே வந்து, ''என்னாச்சு ஹரிணி? யாருகிட்ட பேசுறே? உனக்கு எதுக்கு இப்படி வேர்த்து கொட்டுது? வந்து உட்காரு'' என்றார்.

''சொல்லு சாதனா'' என்று ஹரிணி போனில் மிரட்ட, ரேணுகா அவளிடம் இருந்து போனை வாங்கி, ''ஹலோ! நான் ரேணுகா பேசுறேன்'' என்றார்.

''அத்தை, அவளுக்கு மாமா சிங்கப்பூர் வந்தது தெரிஞ்சு போச்சு'' என்று சாதனா கூறியதும், ''நான் பார்த்துக்கிறேன்'' என்று சொன்னவர் அழைப்பை துண்டித்து மருமகளை சோபாவில் அமர வைத்து விஷயத்தை பக்குவமாய் விளக்கினார். அவள் கலங்கிப் போகவும்...

''நீ வருத்தப்படக் கூடாதுன்னு தான் இவ்வளவு தூரம் நாங்க பொய் சொன்னோம். உங்க அம்மா இப்போ

நல்லா இருக்காங்க. நீயே உங்க அம்மாகிட்ட பேசு'' என்றவர் போன் போட்டு தந்தார்.

அவளது அம்மா, சாதனா, சிவராமன் ஆகிய மூவரும் மாறி மாறி அவளை சமாதானப்படுத்தவும் சற்று தெம்பாக உணர்ந்தாள்.

''சரியாகிடும்மா ஹரிணி. கொஞ்சம் வீக்கா இருப் பாங்க. கொஞ்ச நாள் பத்தியமா சாப்பிடணும். அவ் வளவு தான்'' என்று ரேணுகா மருமகளை சமாதானம் செய்தார்.

அன்று இரவு வினய் தன் பங்கிற்கு ஆறுதல் சொல்லி அவளை தேற்றினான். அவளுக்கு தன் தாயை சென்று பார்க்க முடியவில்லையே என்று ஏக்கமாக இருந்தது.

ஒரு வாரம் கடந்த பின்பே பிறந்த நாள் பரிசுகளை வாங்கியது தன் பிறந்த வீட்டினர் இல்லை என்கிற விஷயம் ஹரிணிக்குத் தெரிய வந்தது. நேரில் வரும் போது பிறந்த நாள் பரிசு தருவதாக சாதனா போனில் கூறவும் ஹரிணிக்கு விஷயம் தெளிவாகியது.

அன்று ரேணுகா திருதிருவென விழித்ததையும் மனோஜ் கொடுத்த அந்த பரிசு கூப்பனை பற்றியும் சிந்தித்தவளுக்கு விஷயம் புரிந்தது. ரேணுகா தன் இரு மகன்களுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். அவர்கள் அருகே சென்றவள்,

''ஐயம் சாரி ரேணும்மா. அந்த பர்த்டே கிஃப்ட் எங்க அம்மா அனுப்பலையாமே? நீங்க வாங்கினதா? உங்க எல்லோரையும் நான் கஷ்டப்படுத்திட்டேனா?'' என்று வருத்தத்துடன் கேட்டாள்.

அவர்கள் மூவரும் சேர்ந்து அவளை சமாதானப் படுத்தினர். அவள் தன் மாமியாரிடம்,

''என்னைக் கல்யாணம் பண்ணுறதுக்கு முன்னாடி வினய் என்கிட்ட ஒரே கண்டிஷன் தான் போட்டார். நீ மூத்த மருமகளா இருந்த என் குடும்பத்தை பொறுப்பா நடத்தணும் என்று. என்னால அந்த அளவுக்கு பொறுப்பா நடந்துக்க முடியுமான்னு தெரியலை என்று நான் அன்னைக்கு அவர்கிட்ட சொன்னேன். ஆனா இப்ப சொல்லுறேன் ரேணும்மா.... என்னை சுத்தி இவ்வளவு பாசத்தைக் காட்டுற நீங்களெல்லாம் இருக்கும் போது... எதையும் சமாளிக்கலாம். ரொம்ப ரொம்ப தாங்க்ஸ்'' என்று உணர்ந்து கூறினாள்.

''அம்மாவுக்கே தாங்க்ஸ் சொல்லுவியா நீ?'' என்று கிண்டலாக கேட்ட ரேணுகா. ''எதை பத்தியும் நினைச்சு கவலைப்படாதே. சந்தோஷமா இரு'' என்று கூறினார்.

அறைக்குள் வந்த ஹரிணியிடம், ''எனக்கொரு டவுட் ஹரிணி. நீ எதை வச்சு அந்த கிஃப்ட் உங்க வீட்டில் இருந்து வந்ததுன்னு நினைச்சே?'' என்று வினய் கேட்டான்.

''அதுக்கு ரெண்டு காரணம் வினு. ஒண்ணு அபி அத்தை அந்த கிஃப்ட் பக்கத்திலே உட்கார்ந்துகிட்டு இருந்தாங்க. இதையும் பிரிச்சுப் பாருன்னு சொல்லிட்டுப் போனாங்க. ரெண்டாவது அந்த ஹேண்ட்பேக்கோட பிராண்ட். அது மலேசியாவில் கிடைக்கும் பிராண்ட். ஹைட்சைன் ஸ்டோர் சிங்கப்பூரில் கூட இல்லை. அதனால சாதனா தான் மலேசியாவில் இருந்து வாங்கி அனுப்பி இருக்காள் என்று நினைச்சுக்கிட்டேன். அந்த

பிராண்ட் இங்க கூடக் கிடைக்கும் என்று எனக்குத் தெரியாமல் போச்சு'' என்று அசடு வழிந்தாள்.



# 12

முப்பது நாட்கள் கடந்த போன ஹரிணி அழகிய ஆண் குழந்தையை பெற்றெடுத்தாள்.

ஹரிணியின் தாய் நோயின் தாக்கத்தால் பத்து கிலோ எடை குறைந்தார். ஒரு மாதம் கடந்த பின்பு அதீத பசி எடுக்கும். அப்போது இழந்த எடையை எல்லாம் திரும்பப் பெறுவார் என்று மருத்துவர்கள் கூறி இருந்தார்கள். அவரை பார்த்துக் கொள்ளவே ஒரு ஆள் தேவைப்பட்டதால் அவர் ஹரிணியின் பிரசவத்திற்காக சென்னை வரவில்லை.

ரேணுகாவும் அபிராமியும் ஹரிணியை கவனித்துக் கொண்டார்கள். மலரும் மருத்துவமனையில் ஹரிணிக்குத் துணை இருந்தாள். வினய் அலுவலகம் செல்லாமல் விடுப்பு எடுத்திருந்ததால் எந்தப் பிரச்சனையும் ஏற்படவில்லை.

சிவராமனும் சாதனாவும் சென்னைக்கு வந்து குழந்தையை பார்த்தனர். குழந்தைக்காக நகை மற்றும் ஆடைகளை அள்ளிக் கொண்டு வந்திருந்தார்கள். ஹரிணியின் தாய் சிங்கப்பூரில் தனியாக இருப்பதால் ஒரே நாளில் திரும்பிச் சென்றனர்.

மருத்துவமனையில் இருந்து கிளம்பும் அன்று பிரச்சனை ஆரம்பித்தது.

அபிராமி ஹரிணியிடம், ''நான் போய் உன்னோட ரூமை ரெடி பண்ணுறேன் ஹரிணி. நீ மாப்பிள்ளை கூட வந்துடு'' என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த வினய் தன் புருவத்தை உயர்த்தினான். அவர்கள் இருவரைத் தவிர அந்த அறையில் வேறு யாரும் இல்லை. அபிராமி வெளியேறியவுடன்.

''உங்க அத்தை என்ன சொல்லிட்டுப் போறாங்க ஹரிணி?'' என்று கேட்டான்.

''டெலிவரி சமயத்திலே அம்மா இங்க வந்த உடனே நானும் அவங்க கூட சேர்ந்து அத்தை வீட்டிலே தங்கலாம் என்று முன்னாடி ப்ளான் பண்ணி இருந்தோம். ஆனா அம்மாவால வர முடியாமல் போனதால நான் இத்தனை நாளும் அத்தை வீட்டுக்கு போய் தங்கலை. இன்னைக்கு ஹாஸ்பிட்டலில் இருந்து நேரா அத்தை வீட்டுக்கு போகலாம்...'' என்று அவள் இழுக்கவும்.

''எனக்கு அது பிடிக்காதுன்னு உனக்கு தெரியாதா ஹரிணி?'' என்று அவன் கோபமாகக் கேட்க அவள் அமைதியாக இருந்தாள்.

சில நொடிகள் தன் கண்களை மூடி அமைதியாக இருந்தவன், ''என் பேச்சை மீறி நீ அங்க போனால்.... நானோ, அம்மாவோ, மனோவோ உன்னை வந்து பார்க்க மாட்டோம். நீ எப்போ நம்ம வீட்டுக்கு வருவியோ அப்போ பார்த்துக்கிறோம்'' என்று தீர்மானமாக உரைத்தான்.

சிவராமன் சிங்கப்பூரில் இருந்து பேசும் போது கூட, ''நீ அத்தை வீட்டிலே இரும்மா. இன்னும் ஒரு மாசத்திலே அம்மாவுக்கு உடம்பு தேறினதும். நீ இங்க வந்துடலாம்'' என்று சொல்லி இருந்தார்.

'நான் இப்போ யார் பேச்சைக் கேட்க?' என்று ஹரிணி குழம்பிப் போனாள்.

'மாமா அப்படி என்ன தப்புப் பண்ணிட்டார்? வினய் சொல்லுற மாதிரி மாப்பிள்ளைன்னு உரிமையா கூப்பிட்டுப் பேச மாட்டார் தான். ஆனா பார்த்து சிரிக்கிறார் தானே? வினு தான் அந்தக் கோபத்தை பிடிச்சு தொங்கிக்கிட்டு அவரை முறைச்சு பார்க்கிறார். இதுக்கு ஒரு தீர்வு வர வேண்டாமா? எதிரெதிர் வீட்டிலே இருந்துட்டு வினய் தன் பிள்ளையை பார்க்காமல் எப்படி இருப்பார்? அத்தை வீட்டுக்கு வந்து தானே ஆகணும்' என நினைத்தவள் அபிராமியின் வீட்டிற்கே செல்வதென்று தீர்மானித்தாள்.

மருத்துவமனையில் இருந்து வினய் அவளைக் கூட்டி வந்தான். அவள் தங்கள் வீட்டை நோக்கி நடக்காமல் தனது அத்தை வீட்டை நோக்கி நடக்கவும் வினய் அவளைத் தீர்க்கமாகப் பார்த்தான். ஒன்றும் சொல்லாமல் தனது வீட்டை நோக்கி நடந்தான்.

ஹரிணிக்குத் தேவையான பொருட்களை ரேணுகாவின் வீட்டிலிருந்து மலர்விழி கொண்டு வந்து கொடுத்தாள். குழந்தைக்கென்று வாங்கிய தொட்டிலையும் அவள் தான் கொண்டு வந்தாள். ஹரிணிக்கு அது வித்தியாசமாகப்படவில்லை. ஆனால் மதியம் பத்திய



குழம்பையும் மலர் விழியே எடுத்து வரவும் ஹரிணிக்கு முதல் முறையாக சந்தேகம் வந்தது.

''ரேணும்மா எங்கே மலர்?''

''ஆன்ட்டி வீட்டிலே இருக்காங்க அண்ணி.''

''வினய் எங்கே இருக்கார்?''

''அவரும் வீட்டிலே தான் அண்ணி இருக்கார். நாளைக்கு தான் ஆபீஸ் போகணும் என்று சொன்னார்'' என்று கூறிவிட்டு மலர்விழியும் சென்று விட்டாள்.

ஹரிணி தன் கணவனை கைப்பேசியில் அழைத்துப் பார்த்தாள். அவளது அழைப்பை அவன் எடுக்கவில்லை.

'அவ்வளவு கோபமா? எவ்வளவு நேரம் என்று நானும் பார்க்கிறேன்' எனக் கறுவிக் கொண்டாள். ஆனால் இரு நாட்கள் கடந்தும் கூட அங்கே இருந்து யாருமே எட்டிப் பார்க்கவில்லை என்றதும் ஹரிணி நொந்து போனாள்.

ரேணுகா போனில் பேசினார். வினய் அதையும் செய்யவில்லை.

'அவரால் குழந்தையையும் என்னையும் வந்து பார்க்காமல் இருக்க முடியுமென்றால் என்னால் அவரைப் பார்க்காமல் இருக்க முடியாதா என்ன?' என்று வீம்புடன் இருக்க அவளால் முடியவில்லை.

இரண்டாவது நாள் இரவு ஹரிணி தன் அத்தை வீட்டு வாயிலில் நின்று கொண்டு வினய் தென்படுகிறானா என்று பார்த்தாள். சரியாக அந்த நேரம் வினய் அலுவலகத்தில் இருந்து தனது வீட்டை நோக்கிச் சென்று கொண்டு இருந்தான்.

''வினு'' என்று அவள் கூப்பிட்டவுடன் அவன் அதே இடத்தில் நின்றான். அவன் திரும்பிப் பார்ப்பான் என்று இவள் நினைக்க அவனோ திரும்பாமல் நின்றான்.

அவனின் அத்தனை புலன்களும் அவனை திரும்பிப் பார்க்கச் சொன்ன போதும் அவனது மூளை அவனை தடுத்தது.

'வேண்டாம் வினய். இப்போ நீ திரும்பிப் பார்த்தால் அடுத்ததாக அவள் அருகே செல்லத் தோன்றும். அப்புறம் பேசுவாய். நீ சுமுகமாகப் பழக ஆரம்பித்தால் அவள் தன் அத்தை வீட்டை விட்டு வர மாட்டாள். அதனால் மரியாதையாக உன் வீட்டை நோக்கி நட!' என்று உத்தரவிட்டது.

அவளிடம் இருந்து வேற எந்த அழைப்போ பேச்சோ இல்லை என்றதும் அவன் தனது நடையை தொடர்ந்தான்.

ஹரிணிக்கு அவன் தனது பிடிவாதத்தை விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்று தெளிவாகத் தெரிந்து போனது. சிங்கப்பூர் போகும் போது எப்படியும் பிரியத் தான் வேண்டும். பக்கத்து வீட்டில் இருந்து கொண்டு ஏன் பார்க்காமல் இருக்க வேண்டும் என நினைத்தவள் தங்களது வீட்டிற்குச் செல்லும் முடிவை எடுத்தாள்.

மூன்றாவது நாள் தன் தந்தையை அழைத்தவள். ''அப்பா நான் எங்க வீட்டுக்குப் போகட்டுமா? இங்க எனக்கு அன் ஈஸியா இருக்குப்பா'' என்று மட்டும் கூறினாள்.

வேறு எதையும் அவரிடம் தெரிவிக்க அவளுக்கு மனம் வரவில்லை. அவரும் சம்மதம் தெரிவித்ததும்



ரேணுகாவிற்கு தகவல் தெரிவித்தாள். நல்ல நேரத்தில் வந்து அவர் அழைத்துச் சென்றார்.

''நீங்களாச்சும் மாப்பிள்ளைகிட்ட எடுத்துச் சொல்லி இருக்கலாமே அக்கா'' என்று அபிராமி வருத்தப்பட,

''நான் முன்னாடியே சொல்லி இருக்கேனே அபிராமி. எங்க குடும்பத்தை பொறுத்த வரைக்கும் அவன் எடுக்கிறது தான் முடிவு. நானும் மனோஜும் அதுக்கு கட்டுப்படுவோம்'' என்று ரேணுகா கூறவும் அபிராமி வேறொன்றும் கேட்கவில்லை.

அன்று மாலை அலுவலகத்தில் இருந்து வந்த வினய் வரவேற்பறையில் இருந்த தொட்டிலைக் கண்டவுடன், ''அப்பாவைப் பார்க்க வந்துட்டீங்களாடா குட்டி?'' என உற்சாகமாகக் கேட்டுக் கொண்டே தொட்டிலை நெருங்கினான்.

''அப்பா கை கழுவிட்டு வந்து உங்களை தூக்குறேன்'' என்றவன் தனது அறைக்கு விரைந்தான்.

சொன்னபடியே கை காலை சுத்தம் செய்து வந்தவன் குழந்தையை தூக்கி வைத்துக் கொஞ்ச ஆரம்பித்தான். ஹரிணி அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஹரிணியை பார்த்தவன் தங்களுக்கு இடையே சண்டை எதுவுமே நடக்காததை போல். ''ஹாய் ஹரிணி! ஹவ் டூ யூ ஃபீல் நவ்?'' என்று கேட்டான்.

''ஏன் வினு ரெண்டு நாளா என்னைப் பார்க்க வரலை? போனிலே கூடப் பேசலை?'' என்று ஹரிணி கேட்டாள்.

"நான் சொன்னதையும் மீறி நான் வேண்டாம் என்று நீ தானே போன?" என்று அவன் கேட்க, ஹரிணிக்கு ஆயாசமாக வந்தது.

'இவன் தான் பிடிச்ச முயலுக்கு மூன்றே கால் என்று தான் சொல்லிக்கிட்டு இருப்பான். இவன்கிட்ட பேசி ஒரு பிரயோஜனமும் இல்லை' என்று நினைத்தாள்.

அபிராமியின் வீட்டிற்கு மனோ அடிக்கடி செல்வான். ரேணுகா அபிராமியின் வற்புறுத்தலுக்காக எப்போதாவது போவார். வினய் எட்டிக் கூடப் பார்க்க மாட்டான்.

அதே போல் அபிராமி ரேணுகாவின் வீட்டில் தான் பகல் முழுவதும் இருப்பார். பாண்டியன் எட்டியும் பார்க்க மாட்டார். ஆனால் குழந்தையைக் கொஞ்சுவதற்கு பாண்டியன் ரொம்பவே ஆசைப்பட்டார்.

அதனால் வினய் இல்லாத நேரம் குழந்தையை தூக்கிக் கொண்டு ஹரிணி செல்வாள். அவரும் ஆசை தீரக் கொஞ்சுவார்.

குழந்தைக்கு தருண் என்று பெயர் சூட்டினார்கள். ஒரு மாதம் முடிந்த போது சிவராமனும் சாதனாவும் ஹரிணியை அழைத்துச் செல்ல வந்தார்கள். வினய் தன் மகனின் பாஸ்போர்ட்டை தட்கல் மூலம் வாங்கி வைத்திருந்தான்.

அதனால் ஹரிணி தன் மகனைத் தூக்கிக் கொண்டு தன் தாயைப் பார்க்க சிங்கப்பூர் பயணப்பட்டாள். ஹரிணியின் தாய்க்கு தன் பேரனைக் கண்டு அளவிட முடியாத சந்தோஷம்.



"டெலிவரி சமயத்திலே என்னால் உன் கூட இருக்க முடியாமல் இப்படி நோய் வந்து படுத்துட்டேனே!" என்று புலம்பிக் கொண்டே இருந்தார்.

ஹரிணி அவரிடம், "அம்மா உங்களுக்கு நோய் வந்தது கூட நல்லதுக்கு தான்மா!" என்றாள்.

புரியாது விழித்தவரிடம், "நீங்க என் பக்கத்திலே இல்லைங்கிற குறையே தெரியாத அளவுக்கு வினய் வீட்டிலே இருக்கிற எல்லோருமே என்னை ரொம்ப நல்லா பார்த்துக்கிட்டாங்க. அவங்க எல்லோரையும் பத்தியும் நான் நல்லாப் புரிஞ்சுக்கணும்னுதான் உங்களுக்கு ஜான்டிஸ் வந்துச்சுன்னு நினைக்கிறேன்" என்றாள்.

அவளது கருத்தை அவளது தாயும் ஆதரித்தார். மகளையும் பேரனையும் கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொண்டார். ஹரிணி இரு மாதங்கள் தாய் வீட்டில் சீராடினாள். அதன் பின்பு சென்னைக்குத் திரும்பினாள்.



## 13

ஹரிணி சிங்கப்பூரில் இருந்து சென்னை திரும்பிய அன்று...

அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பிய மனோஜ் தங்களது அடுக்கு மாடி குடியிருப்பு வளாகத்தில் உள்ள

பூங்காவில் ஓய்வாக அமர்ந்தான். அங்கே விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தைகளை ஒரு புன்முறுவலுடனே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்.

சில குழந்தைகள் அவனை பார்த்து கை அசைத்தனர். மனோஜும் பதிலுக்கு கை அசைத்தான். அப்பொழுது அவனருகே மலர்விழி வந்து அமர்ந்தாள்.

"ஹேய் சின்னு! என்ன இந்த நேரம் வந்து இருக்கே?" என்று மனோஜ் கேட்டதும் மலர்விழி அவனை முறைத்தாள்.

"நைட் நேரம்... இருட்டப் போகுதேன்னு அக்கறையா கேட்டேன். என்னமோ ஏன் வந்தேன்னு கேட்ட மாதிரி இல்ல முறைக்கிறே!" என்று மனோஜ் அலுத்துக் கொண்டான்.

அவள் பதிலொன்றும் சொல்லாமல் அமைதியாக இருந்தாள். அவனது கவனம் மீண்டும் குழந்தைகளிடம் சென்றது.

இரு நிமிடங்களுக்கு மேலாகியும் அவள் பேசாமல் அமர்ந்திருப்பது அப்பொழுது தான் அவனது கவனத்தில் பதிந்தது. என்னவென்று அவள் புறம் திரும்பிப் பார்த்தவன் குழம்பினான். அவள் சோகமே உருவாய் அமர்ந்து இருந்தாள்.

"ஹேய் சின்னு! என்ன டல்லா இருக்கே? நீ வேலை பார்க்கிற ஹாஸ்பிட்டலில் ஏதாச்சும் பிரச்சனையா?"

"ப்ச்சு, அதெல்லாம் இல்லை."

"அப்புறம் எதுக்கு முகத்தை தொங்கப் போட்டுக்கிட்டு இருக்கே?"



"பிரச்சனை ஹாஸ்பிட்டல்ல மட்டும் தான் வரணுமா என்ன? வீட்டிலே வரக் கூடாதா?" என்று அவள் கேட்டதும் அவன் சிரிக்க ஆரம்பித்தான்.

"உன் வீட்டிலே உனக்கு யாரால பிரச்சனை வரப் போகுது சொல்லு? உன்னால அவங்க ரெண்டு பேருக்கும் பிரச்சனை வராமல் இருந்தால் போதாதா?"

ப்ச்சு என்று மீண்டும் சலித்துக் கொண்டவள் அமைதியாக இருக்கவும், "என்ன பிரச்சனை சின்னு?" என்று அவன் மீண்டும் அழுத்திக் கேட்டான்.

"எங்கப்பா எனக்குக் கல்யாணம் பண்ணப் போறாராம்" என்று கூறினாள்.

"ஹேய் கங்கிராட்ஸ்!" என்று அவள் கைபிடித்துக் குலுக்கியவன், "யாராச்சும் இதுக்கு போய் வருத்தப்படுவாங்களா? சந்தோஷமா சிரிக்கிறதை விட்டுட்டு...." என்று அறிவுரை கூறவும் திரும்பவும் அவனை முறைத்தாள்.

"நானும் நீ வந்ததில் இருந்து பார்த்துக்கிட்டே இருக்கேன். சும்மா சும்மா என்னை எதுக்கு முறைக்கிறே? உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு உன்கிட்ட மாட்டிக்கிட்டு முழிக்கப் போற அந்த அப்பாவி யாரோ? ஐயோ பாவம் அப்படின்னு நான் பரிதாபப்பட்டால் நீ கோபப்படுறதிலே ஒரு நியாயம் இருக்கு" என்று அவன் கூறிக் கொண்டு இருக்கும் போதே ரேணுகா அங்கே வந்தார்.

"வா மலர் எப்போ வந்தே? ஏன் உன் முகம் வாடி இருக்கு? ஏதாச்சும் சண்டை போட்டீங்களா?" என்று

மலர்விழியிடம் கேள்வி கேட்க ஆரம்பித்தவர் மனோஜிடம் வந்து முடித்தார்.

''அம்மா என் மேல ரொம்ப நல்ல அபிப்ராயம் வைச்சு இருக்கீங்கம்மா'' என்று மனோஜ் தாயை கிண்டல் அடித்த போதும் மலர்விழி சற்று முன்பு தன்னிடம் கூறிய விஷயத்தை எடுத்துரைத்தாள்.

''சூப்பர் நியூஸ் மலர். இதுக்கா சோகமா இருக்கே?'' என்று ரேணுகா அதட்டல் போடவும்,

''இதையே தான்மா நானும் கேட்டுக்கிட்டு இருந்தேன். இனிமே மிச்சத்தை நீங்களே கேளுங்க'' என்று கூறியவன், குழந்தைகளிடம் தன் கவனத்தைத் திருப்பினான். ரேணுகா மலர்விழியின் பக்கத்தில் சென்று அமர்ந்தார்.

''ஏன் மலர் உனக்குக் கல்யாணத்திலே இஷ்டம் இல்லையா?''

''அப்படி இல்லை ஆண்ட்டி...'' என்று மலர்வழி இழுத்தாள்.

''மேலே படிச்சதுக்கு அப்புறம் கல்யாணம் பண்ணிக்கணும் என்று நினைக்கிறியா?'' என்று ரேணுகா கேட்டதும் மனோஜ் குறுக்கிட்டான்.

''அம்மா இவ பி.ஜி. சீட் வாங்கி, அதை படிச்சு முடிச்சு அதுக்கு அப்புறம் கல்யாணம் பண்ணனும் என்றால் நேரா அறுபதாம் கல்யாணம் தான் பண்ணனும். இது தான் சரியான வயசு. ஒழுங்கா கல்யாணம் பண்ணச் சொல்லி அட்வைஸ் பண்ணுங்க'' என்றான்.



''நான் ஒண்ணும் அவ்வளவு மக்கு இல்ல!'' என்று மலர்விழி அவனுடன் ஒரு சண்டைக்குத் தயாராக.

''அதை விடு மலர்'' என்று அவளை அடக்கிய ரேணுகா. ''உன் மனசிலே என்ன நினைக்கிறே? அதைச் சொல்லு'' என்று அவளது தயக்கத்திற்கான காரணத்தைக் கேட்டார்.

''என்னோட வயசு கல்யாணத்துக்குச் சரியான வயசுன்னு சொல்லுறீங்க. ஆனா ஒரு ஆணுக்கு ஒரு கல்யாண வயசில்லை தானே?'' என்று அவள் கேட்டதும் தாய் மகன் இருவருமே குழப்பத்துடன் அவளை பார்த்தனர்.

''என் வயசிலே இருக்கிறவருக்கு இப்பவே கல்யாணம் பண்ணி வைங்கன்னு நான் போய் எப்படி அவங்க வீட்டிலே கேட்க முடியும்?'' என்று அவள் கேட்டதும், அவள் சொல்ல வருவது அவர்களுக்குப் புரிய ஆரம்பித்தது.

''அடிப்பாவி! நீ லவ் பண்ணுறியா?! என்கிட்ட சொல்லவே இல்லை. யாரை லவ் பண்ணுறே? அந்த நார்த் இண்டியன்... அவன் பேர் என்ன? அபிலாஷா? இல்லை சூரஜா?'' என்று தனக்குத் தெரிந்த பெயர்களைச் சொல்லி அவன் கேட்க,

''இது மாதிரி பேசி என்னைக் கடுப்பேத்தினே... பப்ளிக் ப்ளேஸ்ன்னு கூடப் பார்க்க மாட்டேன். ஓங்கி முதுகிலே ஒரு அடி போட்டு விடுவேன்'' என்று அவள் மிரட்டவும்,

''அப்போ நீயே பேரைச் சொல்லு. இல்லை பேரைச் சொல்ல வெட்கமா இருந்தால் போட்டோ காட்டு'' என்று அவன் கூறினான்.

அதில் அவள் மேலும் கடுப்பாகி, ''உனக்கு போட்டோ தானே வேணும். இரு எடுத்துத் தரேன்'' என்றவள் தனது அலைபேசியை எடுக்கவும்.

அதில் வைத்திருக்கிறாள் போல என நினைத்து தாயும் மகனும் அவளையே பார்த்திருந்தனர். அவளோ அலை பேசியை கையில் எடுத்து அதில் உள்ள கேமராவை இயக்கி மனோஜை புகைப்படம் எடுத்தாள்.

அவள் என்ன செய்கிறாள் என்று அவர்கள் யோசித்துக் கொண்டிருக்கும் போதே அந்த அலைபேசியை அவ னிடம் நீட்டி,

''நல்லா பார்த்துக்கோ. இவரை தான் நான் லவ் பண்ணுறேன். இவரைப் பத்தின டீடெய்ல்ஸ் நான் சொல்ல வேண்டியது இல்லை. உனக்கே தெரியும். உனக்குத் தெரியாததை இவங்ககிட்டே கேட்டுத் தெரிஞ் சுக்கோ'' என்று ரேணுகாவை சுட்டிக் காட்டி கூறினாள்.

அனிச்சை செயலாய் மனோஜின் கை அவள் புறம் நீண்டு விட்டதால் வேறு வழியின்றி அவளின் அலை பேசியை வாங்கிக் கொண்டான்.

அவனுக்கு அவள் சொன்ன செய்தி அதிர்ச்சியை அளித்தது. அவன் இதுவரை அவளை அந்த மாதிரி எண்ணிப் பார்த்தது இல்லை.

அவளிடமிருந்தும் அப்படி ஒரு பார்வையோ விருப் பமோ இதுவரை வெளிப்பட்டதே இல்லை என்பதால் அந்த செய்தியை அவன் எதிர்பார்க்கவில்லை. அதனால் அதிர்ந்து போய் பேச்சற்று அமர்ந்திருந்தான்.



மனோஜின் நிலையில் தான் ரேணுகாவும் இருந்தார். மலர்விழியை தனது குடும்பத்தில் ஒருத்தியாய் கருதி வந்தாரே தவிர இது மாதிரியான சிந்தனை அவருக்கு வரவே இல்லை.

அவளது ஏழ்மை நிலை அதற்கு கண்டிப்பாக காரணம் இல்லை. மலருக்கும் மனோஜுக்கும் ஒரு வயது தான் வித்தியாசம். பெண்ணிற்கு இருபத்திரெண்டு அல்லது இருபத்தி மூன்று வயதில் திருமணம் செய்து விடு வார்கள் என்பதால் அவர் மலரின் திருமணம் பற்றி யோசித்துப் பார்த்தது உண்டு.

'மாப்பிள்ளை டாக்டராக இருப்பானா இல்லை இஞ்சினியராக இருப்பானா... நாம அவனுக்கு எந்த விதத்தில் உதவி செய்ய வேண்டும்?' என்று ரீதியில் சிந்தித்துப் பார்த்திருக்கார்.

மலரே சொன்னது போல் மனோஜுக்கு இது திருமண வயது இல்லை என்பதால் அவர் மகனின் திருமணத்தைப் பற்றி எண்ணிப் பார்த்ததே இல்லை. வருங்காலத்தில் அவனது குறையை பொருட்படுத்தாத மருமகள் அமைய வேண்டும் என்பது மட்டுமே மனோஜின் திருமணம் பற்றிய அவரது சிந்தனையாக இருக்கும்.

'ஒரு வேளை மலரைப் பெண் கேட்கப் போனால்... ரத்தினமும் அவர் மனைவியும் இதை மனதில் வைத்து தான் இத்தனை நாளும் என் பொண்ணுக்கு உதவி செஞ்சீங்களா? காலில்லாத உங்க பையனுக்கு கட்டி வைக்க தான் அவளை இத்தனை நாளா பணம் செலவு செய்து பார்த்துக்கிட்டீங்களான்னு கேட்டு விடுவார் களோ' என்று அஞ்சினார்.

அதனால் அவரால் மலர்விழியின் கோரிக்கையை ஆனந்தத்துடன் வரவேற்க முடியவில்லை. இரு நிமிடங்கள் அங்கே அமைதி நிலவியது. அந்த அமைதியை மலரே கலைத்தாள்.

''என்ன ஆன்ட்டி என்னை உங்க மருமகளா ஏத்துக்க மாட்டீங்களா?''

''இல்ல மலர்...'' என்று ஆரம்பித்தவர் என்ன சொல்வது என்று தடுமாறினார்.

''உனக்கு நல்ல பையனா பார்த்து நானே கல்யாணம் பண்ணி வைக்கிறேன்'' என்று அவர் கூறியதும் மலருக்கு கோபம் வந்தது.

''நல்ல பையன்னா... என்ன அர்த்தம் ஆன்ட்டி? மனோ நல்லவனில்லையா?''

''நான் அப்படிச் சொல்ல வரலை மலர்.''

''வேற எப்படிச் சொல்ல வரீங்க?'' என்று அவள் கடுப்புடன் கேட்கவும்,

மகனையும் வைத்துக் கொண்டு மகனது குறையைப் பற்றி எப்படி எடுத்துச் சொல்ல முடியும் என்று அவர் தடுமாறினார்.

''இல்ல மலர்... எல்லா விதத்திலும் உனக்குச் சிறப்பான மாப்பிள்ளையா?'' என்று அவர் தொடங்கவும்,

தனது கையை காட்டி அவரை பேச்சை நிறுத்துமாறு கூறிய மலர், ''அப்படின்னா அவனுக்கு கால் இல்லாதது உங்களுக்குக் குறையா தெரியுதா? ஒரு வேளை வாய்ப்பு கிடைச்சா நீங்க அவனை விட்டுட்டு போய் இருப்பீங்களோ?'' என்று கேட்டாள்.

'அதாவது வேறு வழி இல்லாமல் தான் உன் பிள்ளையை நீ பார்த்துக் கொண்டு இருக்கிறாயா? சந்தர்ப்பம் அமைந்தால் அவனை அம்போவென்று விட்டுவிட்டு ஓடிவிடுவாயா?' என்று அவள் கேட்டது புரிந்த வினாடி ரேணுகா மனதில் அடிவாங்கினார்.



''மலர் என்ன பேச்சுப் பேசுறே!'' என்று மனோஜ் அதட்டல் போட்டான்.

ரேணுகா விருட்டென்று எழுந்து அங்கிருந்து தனது வீடு நோக்கி நடந்தார்.

மலர்விழியை முறைத்துக் கொண்டிருந்த மனோஜ் தாய் அகன்றதும் மலரின் கைப்பேசியை அந்த பெஞ்சில் வைத்துவிட்டு ரேணுகாவின் பின் சென்றான். தன் கைப்பேசியை எடுத்துக் கொண்டு மலர்விழியும் அவர்களின் பின்னே சென்றாள்.

ரேணுகா வீட்டை அடைந்து கதவை திறந்து உள்ளே நுழையும் பொழுது வினய் தன் மனைவியைப் பார்த்து,

''என் பேச்சை மதிக்கிறதா இருந்தா நான் சொல்லுற படி கேளு. இல்லையா நீ சிங்கப்பூருக்கு போயிடு'' என்று கத்திக் கொண்டு இருந்தான்.

ஏற்கனவே மலர்விழி இரு பெரும் அதிர்ச்சிகளை ரேணுகாவிற்கு கொடுத்து இருந்தாள். இரண்டாவது அதிர்ச்சியினால் கோபம் தலைக்கேறிய ரேணுகா பொது இடத்தில் வைத்து மலர்விழியை ஒன்றும் சொல்ல முடியாமல் வீட்டிற்குள் நுழைந்தால்...

அங்கே அவர் பெற்ற மகன் மருமகளை தாய் வீட்டுக்குச் சென்று விடு என்று சொல்லிக் கொண்டு இருக்கிறான் என்றதும், என்ன செய்கிறோம் என்று சிறிதும் யோசிக்காமல் வேகமாகச் சென்று பெரிய மகனின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார்.

''அப்படியே உங்கப்பன் புத்தி உனக்கும் வருதாடா?'' என்று ரேணுகா கேட்டதும் வினய் மனதில் அடிவாங்கினான்.

தாய் அறைந்தது கூட வினய்க்கு வலிக்கவில்லை. ஆனால் அவர் கேட்ட கேள்வி அவனது உயிர் வரை சென்று தாக்கியது.

'நீயாம்மா என்னைப் பார்த்து இப்படி ஒரு கேள்வி கேட்ட?!' என்பது போல் ஒரு பார்வை பார்த்தவன் விருட்டென்று வீட்டை விட்டு வெளியேறினான்.

அண்ணன் அறை வாங்கியதுமே மனோஜ் ஸ்தம்பித்து நின்று விட்டான். அவனுக்கு ரேணுகா கேட்ட கேள்வி மூளையை சென்று அடையவில்லை. கோபமாய் வெளியே செல்லும் அண்ணனை தடுக்கக் கூடத் தோன்றாமல் அவன் சிலை போல் நின்று கொண்டு இருக்க ரேணுகாவும் ஹரிணியும் தத்தம் அறைகளுக்குள் சென்று விட்டனர்.

மலர்விழிக்கு ரேணுகாவின் கேள்வி தெள்ளத் தெளிவாகக் காதில் விழுந்தது. அவர்கள் குடும்ப விஷயத்தில் தான் தலையிட வேண்டாம் என்று தீர்மானித்தவள் மனோஜின் வீட்டை விட்டு வெளியேறினாள்.

'சே! என் லவ் சொல்ல நல்ல நேரம் பார்த்தேன். இருந்திருந்து இன்னைக்கு தானா சொல்லணும்!' அதுவும் ஆன்ட்டியை பக்கத்திலே வச்சுக்கிட்டு நான் சொல்லியே இருக்கக் கூடாது. ஊர் உலகத்திலே எவளும் இந்த மாதிரி தன் லவ்வை சொல்லி இருக்க மாட்டாள். நீ ரொம்ப பெரிய ஆளு தான் மலர்!' என்று தன்னைத் தானே கிண்டல் செய்து கொண்டே தன் வீட்டை நோக்கிச் சென்றாள்.



வினய் கோபமாகச் சென்றதை நினைத்துப் பார்த்த மலர்விழிக்கு வருத்தமாக இருந்தது.

'எல்லாம் என்னால வந்தது. என் மேல இருக்கிற கோபத்தை தான் ஆன்ட்டி அண்ணன் மேல காட்டிட்டாங்க. நீயாம்மா இப்படி சொன்னேன்னு அண்ணா பார்த்தாரே ஒரு பார்வை.... அண்ணா ரொம்பப் பாவம்!' என்று அவனுக்காகப் பரிதாபப்பட்டாள்.



## 14

அறைக்குள் சென்ற ரேணுகா பல வருடங்களுக்கு முன்பு தன் வாழ்வில் நடந்ததை நினைத்துப் பார்க்க ஆரம்பித்தார்.

* * *

திருமணம் முடிந்து ரேணுகா மதுரையில் குடியிருந்தாள்.

''டேய் பேராண்டி இங்க வாடா!'' என்று கோசலை அழைக்க,

''பாட்டி உங்களுக்கு எத்தனை தடவை சொல்லி இருக்கேன். என்னை என் பேர் சொல்லிக் கூப்பிடுங்கன்னு!'' என்று ஆறு வயது வினய் தன் தந்தை வழிப் பாட்டியிடம் மல்லுக்கு நின்றான்.

''எனக்கு உம் பேரு வாயில வர மாட்டேங்குதே ராசா. இந்தக் காலத்துக்கு எத்த மாதிரி ஏதோ ஒரு பேர உங்கப்பன் வச்சுப்புட்டான். எனக்கு கூப்பிடத் தெரியலையே.''

"அப்படின்னா உங்களுக்கு தம்பி பேரையும் கூப் பிடத் தெரியாதா?"

"அவன் இப்ப தானே பொறந்திருக்கான். என்ன பேரு வச்சிருக்கீக?"

"மனோஜ் பாட்டி. நான் தான் செலக்ட் பண்ணி னேன். நல்லா இருக்கா?"

"மனோசா? சரியா சொல்லிட்டேனா?"

'மனோச் இல்ல.. மனோஜ்" என்று அவன் தன் பாட்டிக்கு பாடம் எடுக்க,

"அடப் போடா! நான் சின்ன ராசான்னு கூப்பிட் டுட்டு போறேன்" என்றவர்,

"உங்கம்மா உள்ள என்ன வேல செய்யுறா?" என்று கேட்டார்.

"தம்பியை பார்த்துக்கிட்டு இருக்காங்க."

"அவன பாத்துக்கிட்டு இருந்தா வேல ஆகிடுமா? ரவைக்கு (ராத்திரிக்கு) சாப்பிட என்ன செய்யப் போறாளாம்?" என்று கேட்டவுடன் வினய் உள்ளே ஓடிச் சென்றான்.

"இதுக்குதேன் அம்மா இருக்கிற பொண்ணை கட்டணுங்கிறது. தாயில்லாத பொண்ணை புள்ளைக்கு கட்டி வச்சா மாமியாக்காரி நாந்தேன் பிரசவம் பார்த்து விட வேண்டி இருக்கு. நானெல்லாம் அந்தக் காலத்திலே புள்ள பொறந்த மூணாம் நாளே வேலய பார்க்க ஆரம்பிச்சுட்டேன். என் சமத்து இவளுக்கு இல்ல. புள்ள பொறந்து மூணு மாசம் ஆச்சு. இன்னும் ஒவ்வொரு வேல செய்யுறதுக்கும் நான் சொல்லிக்கிட்டே இருக்க



வேண்டி இருக்கு. எல்லாம் நான் வாங்கி வந்த வரம்" என்று தனக்குத் தானே சப்தமாகப் புலம்பினார்.

ரேணுகா அவரது புலம்பலைக் கேட்டும் தன் காதில் எதுவும் விழாத தினுசில் சமையலறையில் புகுந்து கொண்டு இரவு உணவை தயாரிக்க ஆரம்பித்தாள்.

அவர் கடைசியாகக் கூறிய 'நான் வாங்கி வந்த வரம்!' என்பதிலேயே அவள் மனம் உழன்றது.

'நான் என்ன வரம் வாங்கி வந்தேன்? இவர்களிடம் சதா சொல்லடி பட்டு நொந்து போக வேண்டும் என்றா வரம் வாங்கி வந்தேன்?' என நினைத்துக் கொண்டாள்.

ரேணுகா வசதியான வீட்டில் பிறந்தவள். ஆனால் அவளது கணவன் ஈஸ்வரன் வசதி இல்லாத குடும் பத்தை சேர்ந்தவன். ரேணுகாவின் தந்தை அந்த வசதிக் குறைவை பொருட்படுத்தவில்லை.

"மாப்பிள்ளை பார்க்கிறதுக்கு ரொம்ப நல்லா இருக் கார். நல்ல வேலையிலே இருக்கார். அம்மா மட்டும் தான். நாத்தனார் கொழுந்தன் என்று எந்தப் பிக்கல் பிடுங் கலும் இல்லை" என்று ஊரில் உள்ள எல்லாத் தகப்பனை போல அவளது தந்தையும் சந்தோஷப்பட்ட போது.

ரேணுகா அவரை பார்த்து, "ஏன்பா மாப்பிள்ளை கூடப் பொறந்தவங்களை பிக்கல் பிடுங்கல என்று எல்லோரும் சொல்லுறாங்க? நிறைய சொந்தங்கள் இருக்கிறது நல்லது தானேப்பா?" என்று கேட்டாள்.

மகளது கேள்வியில் இருந்த உண்மையை உணர்ந்து, "சாரிம்மா, எல்லோரும் சொல்லுறது மாதிரி சொல்லிட் டேன்" என்று மன்னிப்பு கேட்டார்.

அப்படி அனைவரும் வேண்டும் என நினைக்கும் சாதுவான குணம் கொண்ட ரேணுகாவிற்கு சதா சொற்களால் குத்திக் கொண்டே இருக்கும் மாமியார்.

கோசலை ரேணுகா செய்யும் எந்த வேலையிலும் திருப்தி அடைய மாட்டார். அவரும் எந்த வேலையும் செய்ய மாட்டார். காபியை முதற் கொண்டு அவர் இருக்கும் இடம் தேடி கொண்டு போய் கொடுக்க வேண்டும்.

ஏதோ ரேணுகாவின் பிரசவத்திற்காக அவர் மலையையே புரட்டியது போல் பேசினாரே... அது அத்தனையும் பொய். ரேணுகா மருத்துவமனையில் இருந்த மூன்று நாட்கள் மட்டுமே வேலை செய்யாமல் இருந்தாள்.

அப்பொழுதும் கூட கோசலை ஒரு துரும்பையும் அசைக்கவில்லை. சென்னையில் வேலை செய்து கொண்டிருந்த ரேணுகாவின் தந்தை மகளது பிரசவ சமயத்தில் வந்திருந்து அனைவருக்கும் மூன்று வேளையும் கடையில் சாப்பாடு வாங்கிக் கொடுத்தார்.

மகளுக்கான பத்தியச் சாப்பாட்டைக் கூட மதுரையில் உள்ள உறவினர் ஒருவரிடம் சொல்லி ஏற்பாடு செய்து கொண்டார்.

ஈஸ்வரன், "நான் சாப்பாடு வாங்கிக்கிறேன் மாமா" என்று சொன்ன போது,

"நீயேண்டா தம்பி வாங்கணும்? அவரு மக செய்ய வேண்டிய வேலையை அவரு செய்யுறாரு. அவரே வாங்கித் தரட்டும்" என்று கோசலை கூறிவிட்டார்.



கோசலையை எப்போதும் எதிர்த்துப் பேசாத ஈஸ்வரன் அன்றும் அமைதியாக இருந்த கதை தான் நடந்தது. இந்த லட்சணத்தில் இவர் வாங்கி வந்த வரம் என்று புலம்புகிறார்.

ரேணுகா சமையலறையில் சமைத்துக் கொண்டிருக்கும் போது ஈஸ்வரன் உள்ளே நுழைந்தான்.

"வா தம்பி. எப்பவும் வெள்ளன வந்துடுவ... இன்னைக்கு ஏன் இம்பூட்டு நேரமாச்சு?" என்று கோசலை மகனை விசாரிக்க அவன் தன் தலையை குனிந்து கொண்டு தாயின் முன் அமர்ந்தான்.

"என்னய்யா களப்பா இருக்கா? புருஷங்காரன் களச்சுப் போயி வாரானே, அவனுக்கு காபிய கொண்டாந்து குடுப்போம்ன்னு உன் பொண்டாட்டிக்கு தோணுதா பாருடா தம்பி?" என்று அவர் திட்டிக் கொண்டிருக்கும் போதே ரேணுகா காபியை கொண்டு வந்து ஈஸ்வரனிடம் கொடுத்தாள்.

ஈஸ்வரன் அந்தக் காபியை பருகாமல் அப்படியே வைத்து விட்டு அமைதியாக இருக்க...

"என்ன தம்பி விசயம்? என்ன நடந்து போச்சுன்னு இம்பூட்டு கவலயா இருக்க?" என்று கோசலை விசாரித்தார்.

"எனக்கு வேலை போயிடுச்சும்மா" என்று ஈஸ்வரன் கூறியதும், சமையலறை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரேணுகா அதிர்ந்து போய் திரும்பினாள்.

"என்னது வேல போச்சா? என்னய்யா தம்பி சொல்லுற? நல்லா சம்பாதிச்சுக்கிட்டு இருந்தியே... யாரு கண்ணு பட்டுச்சோ?" என்று ஆரம்பித்தவர்.

"இல்லய்யா தம்பி. யாரு கண்ணும் படலை. எல்லாம் அந்தத் தூக்கிரியால வந்தது" என்றார்.

'யாரைச் சொல்கிறார்?' என்று ரேணுகா புரியாது விழிக்க கோசலை தன் புலம்பலை தொடர்ந்தார்.

"அவன் பொறந்தன்னைக்கே என் காலுல அடிபட்டுச்சு. நா அன்னைக்கே சொன்னேன். இவன் ராசி இல்லாதவன்னு. நீ தான் கேட்கலை. இப்பப் பாரு. நான் சொன்னது தான் நடந்திருக்கு. பொறந்து மூணு மாசம் கூட ஆகல. அதுக்குள்ள உன்ன மூலையில் உட்கார வச்சிட்டது பீடை" என்று கோசலை திட்டவும்.

ரேணுகாவின் பெற்ற வயிறு சுருட்டி இழுத்தது.

'என் பிள்ளையவா சொல்லுறாங்க?! என் மனோஜையா துக்கிரி, பீடைன்னு திட்டுறாங்க?! அந்தப் பச்சை மண்ணையா?!' என்று அதிர்ந்து போய் சிலையாய் நின்றாள்.

கணவன் தன் தாயின் பேச்சுக்கு மறுப்பு சொல்லுவான் என்று ரேணுகா எதிர்பார்க்க... அவனோ அமைதியாய் நின்றிருந்தான்.

'அதானே பார்த்தேன். என்னைக்கு பேசினார்? இன்னைக்கு மட்டும் பேசுறதுக்கு. இந்த வீட்டில் என்னையும் என் பிள்ளைகளையும் அவங்க அம்மா என்ன சொன்னாலும் எதிர்த்து என்னைக்கு பேசி இருக்கார்?' என்று நொந்து கொண்டே இரவுச் சமையலை முடித்தாள்.

இரவு உணவை முடித்து விட்டு ஈஸ்வரன் தங்கள் அறைக்குள் நுழைந்த பின்பே ரேணுகாவால் அவனிடம் பேச முடிந்தது.



கணவனிடம் எதனால் அவனுக்கு வேலை போனது என்று கேட்டு அறிந்து கொண்டாள். கம்பெனியை இழுத்து மூடிவிட்டார்கள் என்று தெரிந்ததும்.

"அப்போ எல்லோருக்கும் தானே வேலை போயிடுச்சு? உங்களுக்கு மட்டும் இல்லையே? அப்படின்னா எல்லோர் வீட்டிலும் வேலை போனதுக்கு அவங்கவங்க பிள்ளைங்க தான் காரணம் என்று குத்தம் சொல்லுறாங்களா என்ன?" என்று ரேணுகா கேட்க,

"ரேணு அம்மா சொல்லுறதை எல்லாம் பெருசா எடுத்துக்காதேன்னு உனக்கு எத்தனை தடவை சொல்லி இருக்கேன்" என்று ஈஸ்வரன் கடிந்து கொண்டார்.

"இத்தனை நாளும் என்னை சொன்னாங்க. பொறுத்துப் போனேன். ஆனா இன்னைக்கு..." என்றவளுக்கு அழுகையில் உதடு பிதுங்கியது.

"ப்ச்சு... கொஞ்ச நேரம் மனுஷனை நிம்மதியா இருக்க விடு" என்று கத்திவிட்டு அவன் அறையை விட்டு வெளியேறினான்.

வரப் போகும் நாட்களை நினைக்கும் போது ரேணுகாவிற்கு பயமாக இருந்தது. ரேணுகா மனோஜை கையில் தூக்கிக் கொண்டு கண்ணீர் வடித்தாள்.

தனக்காக தன் தாய் அழுகிறாள் என்று அறியாத மனோஜ் தன் கொலுசணிந்த கால்களை ஆட்டிக் கொண்டு தாயை பார்த்துச் சிரித்தான்.

பத்து நாட்கள் கடந்தும் கம்பெனி திறப்பதற்கான அறிகுறியும் தெரியவில்லை. புதிய வேலை எதுவும் கிடைக்கவில்லை என்றதும் ஈஸ்வரன் சோர்ந்து போனான்.

கோசலை மனோஜையும் ரேணுகாவையும் வார்த்தைகளால் வதைத்து எடுத்தார்.

''ஏம்மா பாட்டி மானோஜை திட்டுறாங்க?'' என்று சிறுவனான வினய் ரேணுகாவிடம் வந்து கேட்கும் அளவிற்கு கோசலையின் வசை மொழிகள் இருந்தன.

''அப்பாக்கு வேலை போயிடுச்சு வினு கண்ணா. அதுக்கு மனோஜ் காரணம் என்று பாட்டி சொல்லுறாங்க.''

''மனோஜ் அப்பா ஆபீசுக்கு போனானா? அவனுக்கு தான் நடக்கத் தெரியாதே. பேசவும் தெரியாது தானேம்மா. அப்புறம் எப்படி?'' என்று வினய் சந்தேகம் கேட்க.

'உன் அளவுக்கு உன் பாட்டிக்கு அறிவு வளரலைடா!' என்று ரேணுகா உள்ளுக்குள் கூறிக் கொண்டாள்.

அன்று மாலை வீட்டிற்கு வந்த ஈஸ்வரன், ''அம்மா ஒரு இன்டர்வியூக்காக நான் மெட்ராஸ் போக வேண்டி இருக்கு'' என்று கூறவும்.

''போயிட்டு வாய்யா தம்பி. உனக்கு சீக்கிரமா வேல கிடைக்கணும். நம்ம குலசாமியை நான் கும்பிட்டுக் கிறேன்'' என்றார்.

அறைக்குள் வந்த ஈஸ்வரிடம். ''என்னங்க நானும் உங்ககூட மெட்ராஸுக்கு வரேன்'' என்று ரேணுகா கூறினாள்.

''நீ எதுக்கு ரேணு?''

''அங்க என் பேரிலே பேங்கிலே இருக்கிற பணத்தை எடுத்துட்டு வந்தால் இப்போ நமக்கு உபயோகமா இருக்குமே. அதுக்கு தான்.''



''இரு. அம்மாகிட்டே கேட்டுட்டு வரேன்'' என்று கூறி வெளியேறினான்.

விஷயத்தைக் கேட்ட கோசலை பணம் வரப் போகிறது என்றதும் உடனே சம்மதித்தார்.

''தம்பி நா மட்டும் இங்கன இருந்து என்ன செய்யப் போறேன்? நானும் உங்க கூட வாரேன்'' என்றார்.

வீட்டில் இருந்தால் அனைத்து வேலைகளையும் அவரே செய்ய வேண்டுமே எனப் பயந்தே அவரும் உடன் வருவதாகக் கூறுகிறார் என்பது ரேணுகாவிற்கு நன்றாகப் புரிந்தது.



# 15

அவர்கள் அனைவரும் மெட்ராஸுக்கு சென்று ரேணுகாவின் வீட்டில் இறங்கினர். அனைவரையும் வரவேற்ற ரேணுகாவின் தந்தை.

''மன்னிச்சுக்கோங்க சம்பந்தியம்மா. வேலை விஷயமா நான் வெளியூர் போக வேண்டி இருக்கு. நீங்க இருந்து உங்க வேலைகளை பாருங்க. நான் வேலையை முடிச்சிட்டு சீக்கிரமா வரேன்'' என்று கூறி விடை பெற்றார்.

ஈஸ்வரன் குளித்து கிளம்பி தனது வேலைக்கான நேர்காணலுக்கு சென்று வந்தான்.

மாலையில் வீடு திரும்பிய ஈஸ்வரன், "நல்லாப் பண்ணி இருக்கேன். ஆனா ஏகப்பட்ட பேர் வந்திருந் தாங்க. அதனால வேலை கிடைக்குமான்னு தெரியலை" என்று கூறினான்.

மறுநாள் வங்கியில் இருந்து பணம் எடுப்பதற்காக ரேணுகா மனோஜை தூக்கிக் கொண்டு ஈஸ்வரனுடன் கிளம்பினாள்.

'மூணு மாச பிள்ளையை எதுக்கு வெயிலிலே தூக்கிக்கிட்டு அலையுறே? நான் பார்த்துக்கிறேன்' என்று கோசலை சொல்லவில்லை.

ஒரு வேளை அவர் அப்படிச் சொல்லி இருந்தாலும் ரேணுகாவால் மனோஜை அவர் வசம் ஒப்படைத்து விட்டுச் செல்வது என்பது முடியாத காரியம்.

ரேணுகாவின் தந்தையின் இரு சக்கர வாகனத்தை எடுத்துக் கொண்டு ஈஸ்வரனும் ரேணுகாவும் மனோ ஜூடன் கிளம்பினர்.

"வினய் அம்மா சீக்கிரம் வந்துடுறேன். பாட்டியை டிஸ்டர்ப் பண்ணாதே" என்று சொல்லிவிட்டு ரேணுகா புறப்பட்டாள்.

அவர்கள் தெருவைக் கடந்து பிரதான சாலைக்குள் நுழைந்த உடனே ஈஸ்வரனின் வண்டி எதிரே வந்த வாகனத்துடன் மோதியது. மூவருமே தூக்கி எறியப் பட்டனர்.

ரேணுகா கண் விழித்துப் பார்த்த போது "இந்த பேஷண்ட் கண்ணு முழிச்சிட்டாங்க" என்ற குரல் கேட்டது.



ரேணுகாவை டாக்டர் வந்து பரிசோதித்துப் பார்த்து விட்டு, "இனி பயப்பட ஒண்ணும் இல்லை. லேசான காயங்கள் தான். சீக்கிரமா அதெல்லாம் சரியாகிடும்" என்றார்.

"டாக்டர் என் ஹஸ்பண்ட் எங்கே? என் குழந்தை எங்கே? இது எந்த ஹாஸ்பிட்டல்?" என்று அவள் கேள்விகளை அடுக்க அருகில் இருந்த நர்ஸ் பதில் அளித்தாள்.

"அம்மா இது கவர்மெண்ட் ஆஸ்பத்திரி. உங்க புள்ளையை பத்தியோ உங்க புருஷனை பத்தியோ எனக்கு எதுவும் தெரியாது. ஒரு வயசான அம்மா தான் ரெண்டு நாளா அப்பப்போ வந்து உங்களை எட்டிப் பார்த்துட்டு போறாங்க."

"ரெண்டு நாளாவா?! நான் ரெண்டு நாளாவா மயக்கத்திலே இருந்தேன்?! அந்த வயதான அம்மா என் மாமியார் சிஸ்டர். அவங்க இப்போ எங்கே?"

"இங்க தான் எங்கேயாச்சும் சுத்திக்கிட்டு இருப்பாங்க. பார்த்தால் சொல்லுறேன்" என்று கூறிவிட்டு அந்த நர்ஸ் நகர்ந்தாள்.

'இவருக்கு என்ன ஆச்சுன்னு தெரியலை. என் மனோ குட்டி.... அவனுக்கு கண்டிப்பா அடிபட்டிருக்காது. நான் தான் அவனை என்னோட சேர்த்து பிடிச்சிருந்தேனே.

வினய்... அவன் என்ன செய்யுறான்னு தெரியலையே. பிள்ளை சாப்பிட்டானா இல்லையான்னு தெரியலை. அத்தைக்கு அவங்க சாப்பாட்டையே பார்த்துக்க தெரியாது. இதுல அவனை எப்படி பார்த்தாங்கன்னு

அப்பா... அவர் வந்துட்டால் பாதி பிரச்சனை சரியாகிடும். ஆபீஸ் டூரில் இருந்து திரும்பி வந்துட்டாரா? வீட்டுக்கு போன் பண்ணி பார்ப்போம்' என நினைத்தவள் அங்குள்ளவர்களிடம் கேட்டு தொலைபேசி இருக்கும் இடத்திற்கு விந்தி விந்தி நடந்து சென்று தன் வீட்டிற்கு போன் பண்ணினாள்.

அவளது நல்ல வேளையாக அவளது தந்தையே தொலைபேசியை எடுத்தார். அவர் அரை மணி நேரத்திற்கு முன்பு தான் வீடு திரும்பி இருந்தார். அவள் விவரங்கள் அனைத்தையும் தெரிவித்ததும் அவர் அலறி அடித்துக் கொண்டு மருத்துவமனைக்கு கிளம்பினார்.

தொலைபேசியில் பேசிவிட்டு அவள் மீண்டும் தான் இருந்த படுக்கையை நோக்கிச் செல்ல, ''அம்மா!'' என்று குரல் தேவகானமாகக் கேட்டது.

''வினு... வினுக்கண்ணா!'' என்று கூறிக் கொண்டே அவள் திரும்ப, கோசலையுடன் அங்கே வந்த வினய் ஓடி வந்து தாயை கட்டிக் கொண்டான்.

''நீ எப்ப முழிச்ச? அதுக்குள்ள எங்க கிளம்பிட்ட?'' என்று காசோலை கேட்க.

''அப்பாக்கு போன் பண்ண வந்தேன் அத்தை. அவரும் மனோஜும் எங்க அத்தை?'' என்று வினவினாள்.

''அவனும் உன்ன மாதிரி இதே ஆஸ்பத்திரியிலே தான் படுத்து இருக்கான்'' என்றவர் அவளை மகன் படுத்திருந்த படுக்கைக்கு அழைத்துச் சென்றார்.



இவளைப் பார்த்த உடனே ஈஸ்வரன், ''ரேணு, கண்ணு முழிச்சிட்டியா? உனக்கு இப்போ எப்படி இருக்கு?'' என்று விசாரித்தான்.

''பாத்தா தெரியலையா?! நல்லாத்தேன் இருக்கா. எந்திச்ச உடனே ஊர் சுத்த கிளம்பிட்டா'' என்று கோசலை நொடிக்க.

மாமியாரின் திட்டுக்களை கண்டு கொள்ளாமல், ''மனோஜ் எங்கேங்க?'' என்று அவள் ஈஸ்வரனிடம் விசாரித்தாள்.

''அடிபட்டு கிடக்கிற புருஷங்காரன் எப்படி இருக்கான்? என்ன எதுன்னு விசாரிக்க துப்பில்லை. புள்ளையைப் பத்திக் கேட்க வந்துட்டா!'' என்று கோசலை நொடித்தார்.

கணவன் தன்னிடம் பேசும் அளவிற்கு தெளிந்த நிலையில் இருந்ததால் ரேணுகா அவனைப் பற்றி விசாரிக்காமல் தனது மூன்று மாதக் குழந்தையைப் பற்றி விசாரித்தாள்.

இருக்கும் உறவுகள் எல்லாம் இங்கிருக்க... தன் பிள்ளையை மட்டும் காணோம் என்றதும் அவள் முதலில் அவனைப் பற்றி விசாரித்தாள்.

கோசலை தன்னை இடித்துரைக்கவும், ''நீங்க எப்படிங்க இருக்கீங்க? உங்களுக்கு எங்கே அடிபட்டுச்சு?'' என்று கணவனிடம் விசாரித்தாள். அவன் தன்னைப் பற்றிய விவரங்களை கூறி முடித்ததும்.

''மனோஜ் எங்கே? அவனை யார் பார்த்துக்கிட்டு இருக்காங்க?'' என்று தயங்கித் தயங்கி விசாரித்தாள்.

''நா அன்னைக்கே சொன்னேன் இல்ல. அவன் ராசி இல்லாதவன்னு. உங்க ரெண்டு பேரையும் படுக்கையிலே தள்ளிட்டான். துக்கிரிப் பயல்'' என்று கோசலை திட்டினார்.

''என் புள்ளையை அப்படியெல்லாம் சொல்லாதீங்க அத்தை.''

''புள்ளையா? யாரு அவனா? அவன் பொணமாகிட்டான். அவன புதைச்ச இடத்தில புல்லு முளச்சிருக்கும்'' என்று சற்றும் வருத்தமே இல்லாமல் கோசலை கூற,

''என்ன அத்...தை சொல்...லு...றீங்க?'' என்று ரேணுகா குரல் நடுங்கக் கேட்டாள்.

''அன்னைக்கு நடந்த ஆக்ஸிடென்டில அவன் செத்துப் போயிட்டான்'' என்று கோசலை கூறியதும் ரேணுகா மயங்கிச் சரிந்தாள்.

சிறிது நேரத்தில் ரேணுகாவின் தந்தை வந்து விட அவர் அனைத்தையும் பார்த்துக் கொண்டார்.

மயக்கம் தெளிந்து எழுந்த ரேணுகா, ''நீங்க பார்த்தீங்களாங்க?'' என்று ஈஸ்வரனை கேட்க அவன் இல்லை என்று உதட்டை பிதுக்கினான்.

''எங்க கண்ணிலே கூடக் காட்டாமல் ஏன் அத்தை அப்படிச் செஞ்சீங்க?'' என்று ரேணுகா புலம்ப,

''நீ என்ன நட்டமா உட்கார்ந்தா இருந்த?' என்று வெடுக்கென்று கேட்டார்.

''எனக்காச்சும் சொல்லி விட்டு இருக்கலாமே சம்பந்தி'' என்று ரேணுகாவின் தந்தை வருத்தப்பட,



''நீங்க எங்க போனீங்கன்னு எனக்கு தெரியுமா? இல்ல உங்க போன் நம்பர்தேன் தெரியுமா? நா என்ன படிச்சா இருக்கேன்? அம்பூட்டு விவரமா சொல்லி அனுப்ப'' என்று கூறிவிட்டார்.

ரேணுகா அழுது அழுது கரைந்தார். அவளைத் தேற்ற வகை தெரியாமல் அவளது தந்தை திண்டாடினார்.

மருத்துவர்கள் ரேணுகாவை அன்றே அழைத்துச் செல்லலாம் என்றும் ஈஸ்வரனை மட்டும் மறுநாள் அழைத்துச் செல்லலாம் என்று கூறினார்கள். அதனால் ரேணுகாவின் தந்தை ஈஸ்வரனை தவிர்த்து மீதம் உள்ளவர்களை அழைத்துக் கொண்டு தன் வீடு வந்து சேர்ந்தார்.

ரேணுகா விடிய விடிய தூங்காமல் அழுது கொண்டே இருந்தாள். காலையில் அவளது தந்தை எழுந்து வந்து பார்த்த போது அவள் விட்டத்தை வெறித்துக் கொண்டு கண்களில் கண்ணீர் வற்றிப் போனவளாக அமர்ந்திருந்தாள்.

''ரேணும்மா மனசை தேத்திக்கோ. நீ இப்படி இருந்தால் வினய் பயப்படப் போறான். அவனுக்காகவாவது உன்னை தேத்திக்கோம்மா'' என்று அவர் அவளை தேற்றவும் எழுந்து சென்றாள்.

அந்த துக்கத்திலும் ரேணுகா தான் சமையல் செய்யும்படி ஆனது.

''நான் கடையிலே வாங்குறேன் ரேணு. நீ ஏன் கஷ்டப் படுறே?'' என்று அவள் தந்தை கேட்க,

''அவருக்கு கடை சாப்பாடு ஒத்துக்காமல் போயிடுச் சுன்னா... வினய்க்கும் மூணு நாளா வெளிச் சாப்பாடு

தானேப்பா. அதனால நானே சமைக்கிறேன்'' என்று கூறிவிட்டு வேலையை தொடர்ந்தாள்.

வீட்டில் உள்ளவர்களை சாப்பிட வைத்தவள் கணவனுக்கு டிபன் கேரியரில் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு மருத்துவமனைக்குக் கிளம்பினாள்.

''நீங்க வீட்டிலே இருங்க அத்தை. நானும் எங்க அப்பாவும் போய் அவரை கூட்டிட்டு வந்துடுறோம்'' என்றதும் கோசலை சம்மதித்தார்.

வினய் மற்றும் தந்தையுடன் ஆட்டோவில் மருத்துவமனை நோக்கிச் சென்றாள். ஒரு சிக்னலில் ஆட்டோ நின்ற பொழுது ஒரு பிச்சைக்காரி,

''அம்மா காலில்லாத குழந்தைம்மா. ஆசுபத்திரிக்கு போகக் கூட காசு இல்லம்மா. பிச்சை போடுங்கம்மா'' என்று பிச்சை எடுத்துக் கொண்டு இருந்தாள்.

அந்தக் குழந்தையின் முழங்காலுக்கு கீழ் இரு கால்களிலும் கட்டு போடப்பட்டிருந்தது. ரேணுகாவிற்குள் இருந்த தாய்மை உணர்வு பீறிட்டு எழ அவள் தன் கைப்பையை துழாவி காசு எடுத்துக் கொடுத்தாள்.

அந்தப் பிச்சைக்காரி, ''நீங்க நல்லா இருக்கணும் தாயி'' என்று கூறி குனிந்து ரேணுகா கொடுத்த காசை வாங்கிக் கொண்டாள்.

அப்பொழுது அந்தக் குழந்தையின் முகத்தை பார்த்த ரேணுகா அதிர்ந்து போனாள். அவளை முந்திக் கொண்டு வினய், ''அம்மா! நம்ம மனோஜ்!'' என்றான்.

''என் பிள்ளை...'' என்று ரேணுகா கூவ, அந்தப் பிச்சைக்காரி அங்கிருந்து நழுவப் பார்த்தாள்.



ரேணுகா ஆவேசத்துடன் அந்தப் பிச்சைக்காரியை மடக்கிப் பிடிக்க, ''என்னம்மா ராங் காட்டுற?'' என்று அவள் தன் குரலை உயர்த்தித் திட்டினாள்.

''இது என் பிள்ளை, மரியாதையா கொடுத்திடு'' என்று ரேணுகா மிரட்டினாள்.

''நீ என்ன பைத்தியமா? என் புள்ளைய போய் உன் புள்ளைன்னு சொல்லுற?'' என்று அந்தப் பிச்சைக்காரி வாதாடினாள்.

அதற்குள் அவர்களை சுற்றி கூட்டம் கூடியது. ரேணுகா, ''என் பிள்ளை!'' என்ற அழுது தீர்க்க,

வினய் ''மனோ! மனோ!'' என்று கதற,

ரேணுகாவின் தந்தை அந்தப் பிச்சைக்காரியிடம், ''அப்படின்னா வா போலீஸ் ஸ்டேஷன் போவோம். அவங்க சொல்லட்டும் இது யார் பிள்ளைன்னு'' என்றார்.

கூடி இருந்த கூட்டமும் அதையே ஆமோதிக்க அவள் விட்டால் போதும் என்று பிள்ளையை கொடுத்து விட்டு ஓட்டம் பிடித்தாள்.

இந்த ஒரு பிள்ளையை தக்க வைப்பதற்காக காவல் நிலையம் சென்றால் அவளிடம் மாட்டி இருக்கும் மீதமுள்ள பிள்ளைகளையும் அல்லவா இழக்க நேரிடும் என எண்ணியே அவள் ஓடிப் போனாள்.

ஓடியவளை பற்றிக் கவலைப்படாத ரேணுகா தன் பிள்ளையை மார்போடு அணைத்துக் கொண்டாள்.

''அப்பா பிள்ளைக்கு ஜுரம் நெருப்பா கொதிக்குதுப்பா'' என்று அவள் அலறவும், அவர் பக்கத்தில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்.

"செத்துட்டான்னு சொன்னாங்களே? கால் ரெண்டும் போயிடுச்சா? ஐயோ! என் பிள்ளைக்கு இப்படியா ஆகணும்!" என்று புலம்பினாள்.

மருத்துவமனையில் மருத்துவர்கள் மனோஜை பரிசோதித்து விட்டு தேவையான மருத்துவம் செய்ய ஆரம்பித்தார்கள்.

"கால் ரெண்டும்... எப்படிப்பா?" என்று அவள் திக்கித் திணற.

"பின்னாடி வந்த வண்டி ஏதாச்சும் அவன் கால் மேல ஏறி இருக்கலாம்மா" என்று அவள் தந்தை கூறினார்.

மனோஜை பரிசோதித்துவிட்டு வெளியே வந்த மருத்துவர். "என்னம்மா புண்ணுக்கு மருந்து போடாமல் இவ்வளவு அஜாக்கிரதையா இருந்திருக்கீங்க" என்று கடிந்து கொண்டார்.

ரேணுகாவின் தந்தை நடந்ததை விளக்கியதும் அந்த மருத்துவர் அவர்களை பரிதாபமாகப் பார்த்துவிட்டு அகன்றார்.

"ரேணு நீ இங்க இருந்து பார்த்துக்கோ. நான் போய் மாப்பிள்ளையை டிஸ்சார்ஜ் பண்ணி கூட்டிட்டு வரேன்" என்று கூறி அவள் தந்தை வெளியேறினார்.

மனோஜ் பிழைத்து வந்ததற்காக ரேணுகா ஊரில் உள்ள தெய்வங்களுக்கு எல்லாம் மனதுக்கு நன்றி சொல்ல ஆரம்பித்தாள்.

'எங்க அத்தை சும்மாவே என் பிள்ளையை கரிச்சு கொட்டுவாங்க. இப்போ ரெண்டு காலும் இல்லைன்னா...



நொண்டிப் பயல்ன்னு கிண்டல் பண்ணுவாங்களே. ஏன் இப்படி ஒரு நிலைமையை என் குழந்தைக்கு கொடுத்தீங்க?' என்று அந்த தெய்வங்களை எல்லாம் திட்டவும் செய்தாள்.

மதியத்துக்கு மேல் ஈஸ்வரனை அழைத்துக் கொண்டு அவளது தந்தை வந்தார்.

"என்னங்க நம்ம மனோஜ் உயிரோடு இருக்கான்!" என்று அவள் அவன் சட்டையை பிடித்துக் கொண்டு அழுதாள். அவன் தீவிர யோசனையில் இருந்தான்.

அன்று மாலை மனோஜின் ஜுரம் குறைந்தது.

"உங்களுக்கு வீடு பக்கம் தானே! அதனால நீங்க இப்போ வீட்டுக்கு கூட்டிட்டு போங்க. ஆனா காலில் இருக்கும் புண்ணு சரியாகும் வரைக்கும் டெய்லி இங்க கூட்டிட்டு வரணும்" என்று கூறிய மருத்துவர் அவர்களை அனுப்பி வைத்தார்.



## 16

அவர்கள் வீட்டை சென்று அடைந்ததும் ரேணுகா மனோஜ் உயிரோடு இருக்கும் செய்தியை மாமியாரிடம் சொல்ல விரைந்தாள்.

"இந்தத் துக்கிரியை எங்க இருந்து புடிச்ச? நாந்தான் நம்ம குடும்பத்துக்கு வேணாம்னு தூக்கி எறிஞ்சேன்ல.

மறுபடி எதுக்கு தூக்கிட்டு வார?'' என்று கோசலை ஒரு குண்டை தூக்கிப் போட்டார்.

ரேணுகாவிற்கு தன் காதுகளை நம்ப முடியவில்லை அவளது தந்தை சம்பந்தியம்மா என்ன சொல்ல வருகிறார் என்பது போல் விழித்தார். ஈஸ்வரன் நான் இதை எதிர்பார்த்தேன் என்பது போல் நின்றான்.

''என்ன சொல்லுறீங்க அத்தை?'' என்று ரேணுகா பதற.

''நான் தான் ஒரு பிச்சைக்காரிகிட்ட தூக்கிக் கொடுத்தேன்'' என்று கோசலை அலட்டாமல் கூறினார்.

''ஏன் அப்படிச் செஞ்சீங்க?'' என்று ரேணுகா ஆங்காரமாகக் கேட்டாள்.

கடந்த ஏழு வருடங்களாக மாமியாரை எதிர்த்து ஒரு வார்த்தை பேசி அறியாத ரேணுகா தன் குழந்தைக்கு தன் மாமியாரால் ஒரு ஆபத்து என்றதும் அவரை எதிர்க்கத் துணிந்தாள்.

''இது பொறந்ததில் இருந்து ஒரு நல்ல விஷயமாச்சும் நடந்திருக்கா?''

''என் பிள்ளையால என்ன கெட்ட விஷயம் நடந்துச்சு? உங்க காலிலே அடிபட்டதைச் சொல்லுறீங்களா? ரோட்டிலே நடந்து போகும் போது கல் எத்திக் கொடுத்து ரத்தம் வருவதெல்லாம் ஒரு விஷயமா? நீங்க ரோட்டை பார்த்து நடக்கணும். பிராக்கு பார்த்துக்கிட்டே நடந்தால் அப்படித்தான் நடக்கும்.

அப்புறம் உங்க பிள்ளைக்கு வேலை போச்சுன்னு சொன்னீங்க... அது கம்பெனி முதலாளி செஞ்ச தப்பு. முடிஞ்சா அவரை போய் கேளுங்க.



அப்புறம் அந்த ஆக்ஸிடெண்ட். அது உங்க பிள்ளை செஞ்ச தப்பு. ராங் சைடிலே திரும்பினார். ஆக தப்பெல்லாம் யார் யாரோ செய்ய... பழி என் பிள்ளை மேலயா?

உங்க வாதப்படியே என் பிள்ளை தப்பே செஞ்சிருந்தாலும் என் பிள்ளையை பிச்சைக்காரிகிட்ட தூக்கிக் கொடுக்க நீங்க யாரு? அவனைப் பெத்தவங்க நாங்க உயிரோட தானே இருக்கோம்?'' என்று அவள் கத்தினாள்.

இதுநாள் வரை தன்னை எதிர்த்து ஒரு சொல் சொல்லாதவள் இன்று அடுக்கடுக்காய் குற்றம் சாட்டவும் கோசலை சிறிது நேரம் வாயடைத்துப் போனார்.

''இப்ப முடிவா என்னங்கிறே?''

''முடிவா? என்ன முடிவு?''

''நான் இவன் செத்துட்டதா என் சொந்தக்கார பையன் ஒருத்தன் கிட்ட சொல்லிட்டேன். அவன் போய் ஊர் பூராவும் சொல்லி இருப்பான்.''

''அதுக்கு இப்போ என்ன பண்ணனும் என்று நினைக்கிறீங்க?''

''இவன இங்கனவே கடாசிட்டு ஊருக்கு போவோம் வா.''

''நான் மாட்டேன்னு சொன்னா...''

''நீயும் இங்கனவே இருந்துக்கோ'' என்று கோசலை கூறவும் ரேணுகாவின் தகப்பன் அதிர்ந்தார்.

''அம்மா கொஞ்ச நேரம் பேசாமல் இரும்மா'' என்று ஈஸ்வரன் தாயை அங்கே இருந்து நகர்த்தி ஒரு அறைக்குள் கூட்டிச் சென்றான்.

முதல் நாள் பிள்ளை இறந்து விட்டான் என்று நினைத்த ரேணுகா அழுது கரைந்தாள் என்றால்... இன்றோ தன்னுடைய எதிர்காலத்தை நினைத்து கவலைப்பட்டாள்.

ஆனால் எந்தக் காரணத்திற்காகவும் தன் பிள்ளையை விட்டுக் கொடுப்பதில்லை என்ற ஒன்றில் மட்டும் அவள் உறுதியாக இருந்தாள்.

மறுநாள் எழுந்து அவள் சமைக்கவில்லை. அவளது தந்தை அனைவருக்கும் சாப்பாடு வாங்கி வந்தார்.

ஈஸ்வரன் அவள் அருகில் வந்து, ''ரேணு என்ன முடிவு பண்ணினே?'' என்றான்.

''நீங்க என்ன முடிவுக்கு வந்து இருக்கீங்க?''

''நாம ஏதாச்சும் ஒரு ஆசிரமத்திலே மனோஜை விட்டுட்டு...'' என்று தொடங்கியவனை இடைமறித்து,

''பெத்த பிள்ளையை அநாதையா விட்டுட்டு உங்க அம்மாக்கு பிள்ளையா கடைசிவரைக்கும் வாழப் போறீங்களா?'' என நறுக்கென்று கேட்டாள்.

''அதுக்காக அம்மா சொந்தக்காரங்க முன்னாடி தலை குனியணுமா?''

''ஏன் தலை குனியணும்? ஆக்ஸிடென்ட்டிலே புள்ளை செத்துட்டதா நினைச்சேன். ஆனா பொழைச்சுக் கிச்சு. நான் படிக்காதவ தானே... தப்பா புரிஞ்சுக்



கிட்டேன் என்று உங்க அம்மாவை உங்க சொந்தக் காரங்ககிட்ட சொல்லச் சொல்லுங்க. எல்லாம் சரியாப் போயிடும்.''

''அது சரியா வராது ரேணு...'' என்று சொன்னவன் சிறு அமைதிக்கு பின்,

''ரெண்டு காலும் இல்லாத பிள்ளையை கடைசி வரைக்கும் எப்படிக் காப்பாத்துறது?'' என்று கேட்டான்.

''அவனுக்கு தாங்க ரெண்டு காலும் இல்லை. ஆனா நமக்கு ரெண்டு கையும் காலும் நல்லா தானே இருக்கு?'' என்று ரேணுகா கேட்டதற்கு அவன் பதில் ஒன்றும் சொல்லவில்லை.

''அப்போ உங்களுக்கே மனோஜை கூட வச்சுக்கிற திலே இஷ்டம் இல்லை. அப்படித் தானே?!'' என்று அவனைப் பார்த்து அவள் நேரடியாகக் கேட்க,

''அப்படி இல்லை ரேணு...'' என்று இழுத்தவனிடம்,

''உங்க அம்மா மேல சத்தியமா உண்மையைச் சொல் லுங்க. உங்க மனசிலே என்ன இருக்கு?'' என்று கேட்டாள்.

''ஆமாடி! எனக்கும் இவனை பார்த்தா பிடிக்கலை போதுமா?'' என்று அவன் கத்த,

''உண்மையை ஒத்துக்கிட்டதுக்கு ரொம்ப தாங்க்ஸ்'' என்று கிண்டலாக உரைத்தாள்.

அவளது கிண்டலில் மேலும் ஆத்திரம் அடைந் தவனாக, ''உன் முடிவு என்ன?'' என்று கேட்கவும்,

''முப்பது வருஷமா தொப்புள் கொடி உறவை நீங்க அறுக்காமல் இருப்பீங்களாம். ஆனா மூணே மாசத்திலே

நான் அறுத்துடுவேன்னு நீங்க எப்படி எதிர்பார்க்கிறீங்க?'' என்று கேட்டாள்.

''நீ என்ன சொல்ல வரே?''

'இது கூடவா உனக்குப் புரியலை?' என்பது போல் கணவனை ஏற இறங்கப் பார்வையிட்டாள்.

''என்... பிள்ளை... என்... கூட... தான்... இருப்பான்'' என்று ஒவ்வொரு வார்த்தைக்கும் போதுமான அழுத்தமும் இடைவெளியும் விட்டுக் கூறினாள்.

''அப்படின்னா இங்கேயே இருக்கப் போறியா?''

''நான் ஏன் இங்கேயே இருக்கணும்?''

''நேத்து அம்மா சொன்னது உன் காதிலே சரியா விழலையா? இவனை விட்டுட்டு வரதா இருந்தா மட்டும் தான் நீ எங்க கூட மதுரைக்கு வரணும் என்று சொன்னாங்க தானே!''

''ஓ! அவங்க அப்படிச் சொன்னதும் நீங்க அவங்களை அந்த இடத்திலே இருந்து கூட்டிட்டு போனீங்களா... நான் கூட உங்க அம்மாவோட பேச்சு தப்புன்னு சொல்லிப் புரிய வைக்கப் போனீங்கன்னு நினைச்சேன். அது அப்படி இல்லையா?! எனக்கு யோசிக்க டைம் கொடுத்தீங்களா?'' என்று அவள் இளக்காரமாகக் கேட்கவும்.

''சே!'' என்று மொழிந்து விட்டு அந்த அறையை விட்டு வெளியேறினான்.

பிள்ளையா புருஷனா என்று தன் வாழ்க்கையில் முடிவெடுக்க வேண்டிய சோதனையான கட்டம்



வந்துவிட்டது ரேணுகாவிற்கு நன்றாகப் புரிந்தது. அவள் தன் பிள்ளை தான் என்ற முடிவை எந்தவித தயக்கமும் இல்லாமல் எடுத்தாள்.

படிக்காத என் மாமியார் தான் தப்புத் தப்பா யோசிக்கிறாங்கன்னா.. இவரும் ஏன் இப்படி யோசிக்கிறார் என நினைத்தாள். 'படிப்பிற்கும் பாசத்துக்கும் என்ன ரேணுகா சம்பந்தம்? ஆறாவது அறிவு இல்லாத மிருகம் கூட தன் குட்டிகளை பாசமா பார்த்துக்கும்' என்று அவளது மனசாட்சி எடுத்துக் கூறியது.

அந்த மிருகங்களுக்கு இருக்கும் அறிவு கூடவா இந்த மனுஷ ஜென்மங்களுக்கு இல்லை என்று அவர்களை மனதிற்குள் திட்டித் தீர்த்தாள்.

சிறிது நேரத்தில் அவள் அறையை விட்டு வெளியேறி வரவேற்பு அறைக்கு வர கோசலை அங்கே அமர்ந்திருந்தார்.

''என்ன முடிவெடுத்த?'' என்று கோசலை ரேணுகாவைப் பார்த்துக் கேட்டார்.

''ஏன் உங்க புள்ள உங்ககிட்ட சொல்லலையா?''

''சபையில வச்சு தெளிவா பேசிடணும் இல்ல. அதனால நீயே சொல்லு.''

''என் பிள்ளை என் கூட தான் இருப்பான்.''

''அப்போ புருஷங்காரன் வேணாமா?''

''புருஷன்?'' என்று கேலியாகக் கூறியவள். ''ஒரு நல்ல தகப்பனா இருக்க முடியாத... நியாய அநியாயம் தெரியாத ஒரு மனுஷன் தான் எனக்கு புருஷன்னா....'' என்று இடைவெளி விட்டவள்.

"அப்படியாப்பட்ட புருஷன் எனக்கு வேண்டாம்" என்று அழுத்தத்துடன் கூறினாள்.

"என்ன ஒரு திண்ணக்கம்?" என்று கோசலை கத்தவும்.

"இதுக்குப் பேர் திண்ணக்கம் இல்லை. தாய்மை. பெத்த பிள்ளையை யாருக்காகவும் எதுக்காகவும் விட்டுக் கொடுக்கக் கூடாதுங்கிற தாய்மை உணர்வு" என்று அவள் பெருமையாகக் கூறினாள்.

"அப்ப நீ இவன வச்சுக்க. நாங்க பெரியவனை கூட்டிட்டு போறோம். என் புள்ளைக்கு தானே இவனுங்க ரெண்டு பேரையும் பெத்த. ஒண்ணை நீ வச்சுக்க. இன்னொண்ணை நாங்க கூட்டிட்டு போறோம்" என்று கோசலை அடுத்த குண்டை போட ரேணுகா செய்வதறியாது திகைத்தாள்.

'ஆண்டவா! இது என்ன சோதனை மேல் சோதனை? புருஷனா பிள்ளையான்னு வரும் போது பிள்ளை என்று என்னால தெளிவாக முடிவெடுக்க முடிஞ்சது. ஆனால் இப்போ என் பிள்ளைகளிலேயே நான் ஒண்ணை விட்டுக் கொடுக்கணும் என்றால் நான் என்ன செய்வேன்!' என்று கலங்கிப் போனாள்.

கலங்கிய கண்களுடன் அவள் மெதுவாக கண் திறந்து பார்க்க கோசலையும் ஈஸ்வரும் வெற்றிப் புன்னகையுடன் நின்றிருந்தனர்.

பெரிய மகனை காட்டி அவர்கள் தன்னை மிரட்டி அடிபணிய வைக்க நினைக்கிறார்கள் என்று அவளுக்குப் புரிந்து விட்டது.

"அவன் உங்க கூட வரச் சம்மதிச்சால் நீங்க கூட்டிட்டு போங்க" என்று மனதை கல்லாக்கிக் கொண்டு கூறினாள்.

நடப்பதை எல்லாம் என்னவென்று புரியாத மனோ பாவத்துடன் பார்த்துக் கொண்டிருந்த வினய் முன் சென்று, "வா ராசா! நாம மருதைக்கு போவோம்" என்று காசோலை கூறவும்.

"பாட்டி மருதை இல்ல. மதுரை" என்று வினய் வழக்கம் போல் தன் பாட்டிக்கு பாடம் எடுத்தான்.

"அந்த எழவு எடுத்த பேரு என் வாயில் அப்படித் தான் வருதுடா. நீ உங்கப்பன் கூட வருவ தானே?"

"அப்பா கூடவா? அப்போ அம்மா?"

"உங்க அம்மா அவங்கூட இங்கனவே இருக்கப் போறாளாம்" என்று கோசலை மனோஜை சுட்டிக் காட்டிக் கூறவும்.

"நானும் அம்மா கூடவே இருக்கேன். நீங்க மனோஜை திட்டிக்கிட்டே இருப்பீங்க. அதனால நான் உங்க கூட வர மாட்டேன்" என்று வினய் திட்டவட்டமாக கூறினான்.

தாயின் அருகே ஓடிச் சென்று அவளை கட்டிக் கொண்டான். மகனைத் தன்னோடு அணைத்த ரேணுகா ஆனந்தப்பட்டாள்.

"புள்ளையை எப்படி கெடுத்து வச்சிருக்கா பாருடா!" என்று கோசலை அங்கலாய்க்க.

'நீங்க தான் உங்க பிள்ளையை கெடுத்து வச்சு இருக்கீங்க. நான் என் பிள்ளையை நல்லபடியாத் தான்

வளர்த்து இருக்கேன்' என்று ரேணுகா மனதில் நினைத்துக் கொண்டாள்.

''எனக்கு ஒரு சந்தேகம். என் பிள்ளை செத்துப் போச்சுன்னு உங்க சொந்தக்காரங்ககிட்ட சொல்லிட்டேன். அத மாத்த முடியாதுன்னு சொன்னீங்களே! இப்போ நாங்க எங்கேன்னு கேட்டால் அவங்ககிட்ட என்ன பதில் சொல்வீங்க?'' என்று ரேணுகா மாமியாரைப் பார்த்துக் கேட்டாள்.

உயிரோடு இருக்கும் போதே மனோஜை இறந்ததா தன்னிடமே அவர் பொய் சொன்னதால் தன் சொந்தக்காரப் பையனிடம் அந்தச் செய்தியை தெரிவித்ததாகச் சொன்னதும் பொய் தான் என்று ரேணுகா உறுதியாக நம்பினாள்.

இருப்பினும் அவர் தன் வாயால் உண்மையை ஒத்துக் கொள்ள வைப்பதற்காக அப்படி ஒரு கேள்வியை கேட்டாள்.

'இதுக்கெல்லாம் அசரும் ஆளா நான்!' என்பது போல் ஒரு பார்வை பார்த்த கோசலை. ''புள்ள செத்துப் போனதிலே என் மருமக பயித்தியமாகிட்டா. அதனால அவ அப்பங்காரன் வீட்டிலயே விட்டுட்டு வந்துட்டோம்னு சொல்லுவேன்'' என்றார்.

ரேணுகா ஈஸ்வரனை உற்று நோக்கினாள். 'இவ்வளவு பேச்சு போய் கொண்டு இருக்கிறதே! உனக்கும் இதற்கும் துளி கூட சம்பந்தமில்லையா?' என்ற கேளாமல் கேட்டது அவள் பார்வை.



ஈஸ்வரன் அதற்கும் அமைதியையே பதிலாக்க... கோசலை மகனை இழுத்துக் கொண்டு அறைக்குள் சென்று மறைந்தார்.

''என்னம்மா இதெல்லாம்!'' என்ற ரேணுகாவின் தந்தை தன் மகளிடம் மெதுவாகக் கேட்டார்.

யாரிடமும் அதிர்ந்து பேசத் தெரியாத தன் தந்தை எந்த அளவிற்கு அதிர்ந்து போய் இருப்பார் என்று ரேணுகாவிற்கு புரிந்தது.

''இனிமே நான் உங்க கூடவே இருந்துடுறேன்ப்பா. அவங்க கூடப் போன்னு சொல்லிடாதீங்க. தயவு செய்து அவங்களுக்கு மத்தியிலே வாழுற துர்பாக்கியத்தை இன்னொரு முறை எனக்கு தந்துடாதீங்கப்பா'' என்று அழுதாள்.

காலையில் ஈஸ்வரன் ரேணுகாவிடம் கோபமாகப் பேசிவிட்டுச் சென்ற பின் ரேணுகாவின் தந்தை அவனையும் கோசலையையும் சந்தித்து அவர்களது காலில் விழாத குறையாக கெஞ்சிக் கேட்டது ரேணுகாவிற்குத் தெரியவில்லை.

'நாக்கிலே நரம்பு இல்லாமல், நெஞ்சிலே பாசம் இல்லாமல், ஒரு வரைமுறை இல்லாமல் பேசும் இவர்களிடமா கெஞ்சினோம்!' என்று அவர் நொந்து போனார்.

தாயும் மகனும் வெளியே செல்வதும் அறைக்குள் சென்று கூடிக் கூடிப் பேசுவதுமாக இருந்தார்கள்.



# 17

மாலையில் மீண்டும் பேச்சு வார்த்தையை கோசலை தொடங்கி வைத்தார்.

''அப்போ உங்க முடிவுல எந்த மாத்தமும் இல்ல தானே?''

''இல்ல. என் பிள்ளை என்னோட தான் இருப்பான்'' என்று ரேணுகா கூறியதும்.

''அப்ப இந்த விடுதலைப் பத்திரத்திலே உனக்கும் என் புள்ளைக்கும் எந்த சம்பந்தமும் இல்லைன்னு எழுதி கையெழுத்துப் போடு'' என்றார்.

தயக்கம் சிறிதுமின்றி அவர் கேட்டது போல் எழுதிக் கொடுத்தாள்.

''ஒரு பவுனிலே நாங்க தாலி செஞ்சு போட்டோம். அதுக்கு ஈடான தங்கத்தையும் என் புள்ள உனக்கு செஞ்சு போட்ட மோதிரத்தையும் திருப்பிக் கொடு'' என்றதும்.

கையிலே போட்டிருந்த மோதிரத்தை கழட்டிக் கொடுத்தவள், ''தாலிக்கு ஈடான தங்கம் எதுக்கு? தாலியையே வச்சுக்கோங்க'' என்று கூறி அதை கழட்டி கற்சிலை போல் நின்று கொண்டிருந்த ஈஸ்வரனின் கையில் கொடுத்தாள்.



''என்ன ஒரு ஆணவம் உனக்கு!'' என்று கோசலை எகிற,

''புருஷனே இல்லைன்னு ஆச்சு. அதுக்கு அப்புறம் அவன் கட்டின தாலி மட்டும் எதுக்கு?'' என்று ரேணுகா கேட்க.

அவள் தந்தை, ''என்னம்மா ரேணு. அவசரப்பட்டு கழட்டிட்ட!'' என்று பதறினார்.

''விடுதலைப் பத்திரம் என்றால் என்னன்னு இவங்களுக்கு தெரியுமாப்பா? அது இந்த மெட்ராஸிலே எங்க கிடைக்கும் என்று தெரியுமா? இதை எல்லாத்தையும் பக்காவா அவங்க செய்யுறாங்கன்னா இவரோட உதவி இல்லாமலாப்பா நடக்குது?'' என்று கேட்டு விரக்தியாக முறுவலித்தவள்,

''அதுக்கு அப்புறம் இது என் கழுத்திலே தொங்குறதிலே அர்த்தமே இல்லைப்பா'' என்று முடித்தாள்.

''பொம்பளை உனக்கே இம்பூட்டு தகிரியம் இருந்தா எம் புள்ளைக்கு எம்பூட்டு இருக்காது'' என்று கத்திய கோசலை மகனை அழைத்துக் கொண்டு வெளியேறினார்.

திரும்பிக் கூடப் பார்க்காமல் தாயின் பின்னால் சென்று கொண்டிருந்த அந்த உத்தம புத்திரனை அன்றோடு ரேணுகா தன் வாழ்க்கையில் இருந்தும் நினைவுகளிலும் இருந்தும் அடியோடு ஒதுக்கினாள்.

பிள்ளை வரம் கேட்டு ஒரு சிலர் தவமிருக்கிறார்கள். ஆனால் கோசலையோ கிடைத்த பிள்ளையை தூக்கி

எறிகிறார். அதற்கு காரணம் அவரது அறியாமையா? ராசியின் மீது அவர் வைத்த மூட நம்பிக்கையா? பேரனின் கால்கள் துண்டிக்கப்பட்டதால் வருங் காலத்தில் ஏற்படப் போகும் பிரச்சனைகளில் இருந்து ஒதுங்க நினைக்கும் மனோபாவமா? தான் நினைத்ததை நடத்தியே ஆக வேண்டும் என்று அகங்காரமா? இவற்றில் எது என்பது அவரை படைத்த ஆண்டவ னுக்கே வெளிச்சம்.

ஈஸ்வரனை பொறுத்த வரையில் அவனுக்கு அவனது தாயின் வாக்கே வேத வாக்கு. அது மட்டுமின்றி தாயின் குணநலன்கள் அவனிடமும் இருக்கும் தானே?! அதனால் தான் அவனது தாயை போலவே காலில்லாத பிள்ளையை சுமக்க வேண்டிய பொறுப்பில் இருந்து அவன் விலக நினைத்தான்.

ரேணுகா பன்னிரெண்டாம் வகுப்பு மட்டுமே படித்திருந்தாள். ஒரு பெண்ணிற்கு கல்வியும், நல்ல வேலையும் எந்த அளவிற்கு முக்கியம் என்று அவளுக்கு நன்றாகப் புரிந்தது.

தன் தந்தைக்கு அதிக சொத்து இருந்ததால் ரேணுகா விற்கு வேலைக்கு சென்று சம்பாதிக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போனது. ரேணுகா தன் இரு குழந்தைகளையும் கவனித்துக் கொள்ளும் வேலையை மட்டும் பார்த்துக் கொண்டாள்.

அவர்கள் வீடு இருந்த ஏரியாவில் அங்கொன்றும் இங்கொன்றுமாக தான் வீடுகள் இருக்கும். அதனால் அக்கம் பக்கத்தினர் என்று யாரும் பெரிதாக இல்லை.



அதனால் ரேணுகாவின் கணவர் பிரிந்து சென்றார் என்ற செய்தி யாருக்கும் தெரியாமல் போனது. ரேணுகா ஒரு விதவை என்று ரேணுகாவினால் பரப்பப்பட்ட கதையை அதன் பின் குடியேறியவர்கள் நம்பினார்கள்.

ரேணுகாவின் வீட்டை ஒட்டி குடியிருந்த ரத்தினத் திற்கும் அவன் மனைவிக்கும் மட்டும் விஷயம் தெரியும். ரேணுகாவின் மேல் பரிதாபப்பட்டு அவர்கள் எதையும் வெளியே சொன்னதில்லை.

மனோஜுக்கு மூன்று வயதான போது அவனை பள்ளியில் சேர்க்க ஏற்பாடு செய்தனர். ஆனால் அவன் ஒரேடியாக அழுது அடம்பிடித்து பள்ளி செல்ல மறுத்து விட்டான்.

சக்கர நாற்காலியில் அமர்ந்து இருக்கும் பிள்ளை தனியாக எப்படி சமாளிப்பான் என்று நினைத்த ரேணு காவின் தந்தை, "அவனை அடுத்த வருஷம் ஸ்கூலில் சேர்ப்போம். இந்த வருஷம் நீ சும்மா வீட்டிலே வச்சு சொல்லிக் கொடு" என்றார்.

மனோஜின் நான்காவது வயதில்... சிறுமி ஒருத்தி தயங்கி தயங்கி இவர்கள் வீட்டு கேட்டை தள்ளி கொண்டு நுழைந்தாள். யார் இது என்று ரேணுகா பார்த்துக் கொண்டிருக்கும் போதே பக்கத்து வீட்டு ரத்தினம்.

"என் மக மலர்விழி தான்மா. இத்தனை நாள் என் பொண்டாட்டி வேலைக்கு போகணும்னு ஊரிலே விட்டு வச்சிருந்தேன். ஆனா இப்போ ஸ்கூலிலே சேர்க்கணும் இல்ல. அதான் கூட்டியாந்துட்டேன்" என்றான்.

"நீங்க போங்க. நான் பார்த்துக்கிறேன்" என்று ரேணுகா கூறவும் ரத்தினம் சென்று விட்டான்.

"நீ வா" என்று அந்தக் குழந்தையை ரேணுகா அழைக்கவும் அவள் தயங்கித் தயங்கி நடந்து வந்தாள்.

பாவாடை சட்டை அணிந்து படிய வாரிய தலையுடனும் மருண்ட பார்வையுடனும் வந்து கொண்டிருந்தவளை பத்து வயதான வினய் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டு இருந்தான்.

வினய் அருகே வந்தவள், "அண்ணா நானும் உன் கூட விளையாட வரட்டுமா?" என்று கேட்டாள்.

அவள் அண்ணா என்று அழைத்ததும் அவனுக்கு அவள் இன்னொரு மனோஜ் ஆகத் தெரிய...

"வா விளையாடலாம். இவன் என் தம்பி மனோ. நாம மூணு பேரும் விளையாடுவோம். ஆமா உன் பேர் என்ன?" என்று வினய் கேட்டான்.

"சின்னு!" என்று அவள் பதில் கூறவும்.

'அவங்கப்பா மலர்விழின்னு சொன்னார். இவ சின்னுங்கிறாள். சின்னு என்பது செல்லப் பேர் போல!' என்று ரேணுகா எண்ணிக் கொண்டார்.

"சின்னுவா? நைஸ் நேம்" என்றான் வினய்.

அவன் சொல்வது புரியாவிட்டாலும் தலையை ஆட்டிக் கொண்டாள்.

"நாம ஓடிப் பிடிச்சு விளையாடுவோமா?" என்று அவள் கேட்க.

"இல்லை. அது வேண்டாம். என் தம்பியால ஓட முடியாது" என்று வினய் கூறினான்.



"நான் அவனை இடுப்பிலே தூக்கி வச்சுக்கிறேன் அண்ணா."

"உன்னால முடியாது" என்று வினய் மறுக்க.

"எங்க பக்கத்து வீட்டு பாப்பாவை நான் இடுப்பிலே வச்சுக்கிட்டு தான் எப்பவுமே விளையாடுவேன்" என்றாள்.

ரேணுகாவிற்கு அந்த சிறுமியின் உள்ளத்தில் இருக்கும் பாசம் புரிந்தது. அவரது மனம் நெகிழ்ந்தது.

"இல்லம்மா. உன்னால அவனை தூக்கி வச்சுக்க முடியாது. அவன் உன்னை விட ஒரு வயசு பெரியவன்" என்று ரேணுகா மறுத்ததும்.

"அப்ப உட்கார்ந்து விளையாடுவோம்" என்று மலர்விழி சட்டென ஒரு வழி கண்டுபிடித்தாள்.

இத்தனை பேச்சுக்களும் மனோஜின் முன்னிலையில் தான் நடந்தது. எனினும் அவன் வாய் திறந்து எதுவும் பேசாமல் வேடிக்கை தான் பார்த்தான்.

அந்த மே மாதம் முழுவதும் அவள் தினமும் அவர்களுடன் விளையாடினாள். முதலில் பேச மறுத்த மனோஜ் இரு தினங்களுக்கு பின் சகஜமாக அவளுடன் பேச ஆரம்பித்தான். அதற்கு காரணம் மலர்விழி தான். மனோஜ் பேசாமல் அமைதியாக இருந்தாலும் அவள் அவனிடம் சகஜமாகப் பேசிக் கொண்டே இருந்தாள்.

வினய் படிக்கும் பள்ளியில் தான் ரத்தினம் காவலாளியாக பணியாற்றிக் கொண்டு இருந்தார். அதனால் அவரது மகள் அந்தப் பள்ளியில் சேர்ந்து படிக்க பள்ளி நிர்வாகம் ஒத்துக் கொண்டிருந்தது.

அதனால் மலர்விழி பள்ளி செல்லத் தயாரானாள். ஆனால் கடந்த ஆண்டை போல இந்த வருடமும் மனோஜ் அன்னையை விட்டுச் செல்லத் தயங்கினான். அவனை மலர்விழி தேற்றினாள்.

"மனோ நாம ரெண்டு பேரும் ஒரே கிளாஸிலே இருப்போம். நீ பயப்படாதே. நான் உன்னை பாத்துக் கிறேன். நாம அங்கயும் ஒண்ணா விளையாடுவோம்" எனச் சொல்லி அழைத்துச் சென்றாள்.

பள்ளி நிர்வாகத்தினரிடம் பேசி அவர்கள் இருவரும் ஒரே வகுப்பில் இருக்குமாறு ரேணுகா பார்த்துக் கொண்டாள்.

வினய் காலையில் மனோவின் சக்கர நாற்காலியை தள்ளிக் கொண்டு அவன் வகுப்பறையில் கொண்டு போய் விடுவான். பள்ளி முடிந்ததும் வெளியே கூட்டி வருவான். இடைப்பட்ட நேரங்களில் மனோவை மலர்விழி பார்த்துக் கொண்டாள். ரத்தினமும் தன்னால் முடிந்த மட்டும் அவனை பார்த்துக் கொண்டார்.

மலர்விழி அந்தக் குடும்ப உறுப்பினரானாள். அவளுக்கு தேவையான துணிமணிகளை ரேணுகாவே எடுத்துத் தந்தாள். மனோவிற்கும் அவளுக்கும் சேர்த்தே பாடங்களை கற்றுக் கொடுத்தாள்.

மகளது வாழ்க்கை நசிந்ததைக் காணப் பொறுக்காத ரேணுகாவின் தந்தை வெகு சீக்கிரத்திலேயே மரணம் அடைந்தார்.

மரணம் அடைந்ததின் மூலம் தன் பங்கிற்கு ரேணுகாவிற்கு மனக் கஷ்டத்தை அளித்த அவளது



தந்தை பணக் கஷ்டத்தை மட்டும் தரவில்லை. பேரன்களின் எதிர்காலப் படிப்பிற்கும் மகளின் எதிர்காலத்திற்கும் தேவையான பணத்தினை சேர்த்து வைத்து விட்டே சென்றிருந்தார். ஊரில் உள்ள தங்களது நிலங்களையும் சொத்துக்களையும் விற்று மகள் பேரில் முதலீடு செய்துவிட்டே இறந்திருந்தார்.

அவரது சேமிப்பின் மூலம் ஆடம்பர வாழ்க்கை வாழ முடியாது. அதே சமயம் அடுத்தவர் கையை எதிர் பார்க்கும் நிலையும் ஏற்படாது. ரேணுகாவும் எப் பொழுதும் சிக்கனமாகவே செலவு செய்வாள். அவளது மகன்களும் விலை உயர்ந்த பொருட்களுக்கு ஆசைப் பட்டதில்லை. அதனால் அவர்களது வாழ்க்கைச் சக்கரம் எந்தவொரு சிக்கலுமின்றி சுழன்றது.

ரேணுகாவின் தந்தை இறக்கும் போது வினய் பதினொன்றாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். அன்றில் இருந்து குடும்பத்தின் தலைமகனாய் எல்லாப் பொறுப்புகளையும் வினய் ஏற்றுக் கொண்டான்.

ஈஸ்வரனை பற்றி உண்மையை மனோஜிடம் ரேணுகா கூறியதில்லை. வினய் பெரியவன் ஆனதும் அன்று நடந்ததை விவரமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டான். ரத்தினத்தின் மூலமாக மலர்விழியும் ஈஸ்வரன் பற்றிய உண்மைகளை தெரிந்து கொண்டாள்.

அதனால் தான் மலர்விழி ரேணுகாவை பார்த்து... சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் ஈஸ்வரனை போல் நீயும் மனோஜை விட்டு விட்டு ஓடி இருப்பாயோ என்று ஒரு கேள்வி கேட்டதும் ரேணுகாவால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

தன் கடந்த கால வாழ்வில் நடந்ததை ரேணுகா நினைத்துப் பார்த்தார்.



# 18

கோபமாகச் சென்ற வினய்யும் தன் அறையில் முடங்கி இருந்த ஹரிணியும் அன்று காலையில் இருந்தது நடந்ததை பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

சிங்கப்பூரில் இருந்து கணவனை காணும் ஆவலோடு சென்னைக்கு வந்து இறங்கியவள் கணவன் விமான நிலையத்திற்கு வரவில்லை என்றதும் வருத்தம் அடைந்தாள். அவன் வீட்டிலும் இல்லை என்றதும் அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது.

''சீக்கிரம் வந்துறேன்டா ஹனி'' என்று அவன் போனில் கூறவும் வேறு வழியின்றி அவனின் வரவிற்காக காத்திருக்க ஆரம்பித்தாள்.

அவன் வருவதற்கு முன்பு பாண்டியன் அலுவலகத்தில் இருந்து வந்தார். அபிராமி மூலம் தருணை தூக்கி வரச் சொன்னார். ஹரிணியும் தன் குழந்தையுடன் அங்கு சென்றாள். அபிராமி கோவிலுக்குச் செல்வதாகக் கூறி விட்டு கிளம்பினார்.



''தாத்தா பாரு! தாத்தா பாரு!'' என்று குழந்தையிடம் கொஞ்சிக் கொண்டிருந்த தன் மாமாவை பார்த்து ஹரிணி புன்னகையுடன் அமர்ந்திருந்தாள்.

அவருக்கு குழந்தை இல்லாத காரணத்தினால் அவருக்கு இப்படி ஒரு பேறு இல்லாமல் போய்விட்டதே என்று மனம் வருந்தினாள்.

வினய் அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பினான். மனைவியையும் குழந்தையையும் காண்பதற்காக ஆவலோடு வந்தவன் அவர்களை காணோம் என்றதும் குழம்பினான். அவர்களை அபிராமி வந்து அழைத்துச் சென்றதாகக் கூறிய ரேணுகா மகனுக்கும் மருமகளுக்கும் தனிமை கொடுக்கும் பொருட்டு கீழே சென்றார்.

'ப்ச்சு. இந்நேரம் எதுக்கு இவ அங்க போய் உட்கார்ந்து இருக்காள்? நான் வருவேன்னு தெரியுமில்ல... இவளுக்கு அங்க போறதுக்கு நேரம் காலம் கிடையாதா?' என்று திட்டிக் கொண்டே அலைபேசியில் அழைப்பு விடுத்தான்.

அது தங்களது அறையில் இருந்து குரல் எழுப்பவும் வேறு வழியின்றி அபிராமியின் வீட்டை நோக்கி நடந்தான். அவர்கள் வீட்டுக் கதவு திறந்தே இருந்தது.

பாண்டியன் தருணை மடியில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தது தெரிந்தது. அவரது முகத்தில் தெரிந்த மலர்ச்சியைக் கண்ட வினய் கொதித்துப் போனான்.

தன் கோபத்தை கட்டுப்படுத்த சில நொடிகள் அமைதியாக நின்று பார்த்தான். அது பெருகிக் கொண்டே போனதே தவிர கட்டுக்குள் அடங்க மறுத்தது.

வீட்டிற்குள் நுழைந்தவன் குழந்தையை அவரிடம் இருந்து பறித்துக் கொண்டு வெளியேறினான்.

பாண்டியன் அதிர்ந்து விழித்தார். 'இது என்ன அநாகரிகமான செயல்!' என்று ஹரிணி ஆவேசமுற்றாள். அவன் பின்னால் அவள் ஓடினாள்.

தங்களது வீட்டிற்குள் நுழைந்தவள், ''உங்க மனசிலே என்ன வினய் நினைச்சுக்கிட்டு இருக்கீங்க? ஐ நெவர் எக்ஸ்பெக்ட் திஸ் ஃப்ரம் யூ. ஷேம் ஆன் யூ.' என்று முகம் சுளித்தாள்.

அவன் அவளுக்கு பதில் சொல்லாமல் தன் குழந்தையை தொட்டிலில் படுக்க வைத்துக் கொண்டு இருந்தான்.

''அப்படியென்ன கோபம் உங்களுக்கு? நீங்க என்ன படிக்காத முட்டாளா? வயசிலே பெரியவங்ககிட்ட எப்படி நடந்துக்கணும் என்று உங்களுக்குத் தெரியாதா?'' என்று அவள் மீண்டும் கத்த,

''ஆமா. நான் முட்டாள் தான். கோபக்காரன் தான். எனக்கு அவரைப் பிடிக்கலை. அவர் என் பிள்ளையை கொஞ்சுறது சுத்தமாப் பிடிக்கலை. இனிமேல் அவர் என் குழந்தையை தொடக் கூடாது.''

''எங்க மாமா என் பிள்ளையை தொடுவார்'' என்று அவளும் விறைத்துக் கொண்டு நின்றாள்.

''அப்படி உங்க மாமா கையிலே பிள்ளையை நீ கொடுக்கிறதா இருந்தா உங்க மாமா கண்ணிலே படாத தூரத்துக்கு உன்னையும் தருணையும் கூட்டிட்டுப் போயிடுவேன்.''



''அப்படி என்ன வீம்பு?''

''இது வீம்பு இல்ல... தன் மானம்! சுயமரியாதை! இப்படி என்ன வேணா சொல்லலாம்.''

''எதுக்கு இப்படி என்னைக்கோ நடந்ததை பிடிச்சு தொங்கிக்கிட்டு இருக்கீங்க? அவருக்கு குழந்தைங்க இல்லாததால சின்னக் குழந்தையை பார்த்த உடனே ஆசையா தூக்கிக் கொஞ்சுறார். அது உங்களுக்கு பொறுக்கலையா?'' என்று கேட்டதும்.

''இப்ப நீ என்ன சொன்ன? அவருக்கு குழந்தை இல்லையா? எவன் சொன்னது? அந்த ஆளுக்கு ரெண்டு பசங்க இருக்காங்க'' என்று கொதிப்புடன் மொழிந்தான்.

''என்ன உளறுறீங்க?''

''யாரு? நான் உளறுறேனா?'' என்று எகத்தாளமாகக் கேட்டவன்.

''இப்போ சொல்லுறேன். நல்லா கேளு. இந்த பூமியிலே நான் பொறக்கக் காரணமா இருந்தவரே அந்த ஆளு தான். அவரோட முழுப் பேரு ஈஸ்வர பாண்டியன்'' என்றதும் ஹரிணி அவன் சொன்னதை நம்ப முடியாமல் பார்த்தாள்.

''அவர் என் பிள்ளையை கொஞ்சக் கூடாது. என் பேச்சை மதிக்கிறதா இருந்தா நான் சொல்லுறபடி கேளு. இல்லையா நீ சிங்கப்பூருக்கு போயிடு...'' என்று கூறிக் கொண்டு இருக்கும் போதே ரேணுகா வந்து மகனை அறைந்தார்.

அதனால் 'உன் பின்னோடு நான் வருகிறேன்' என்ற வார்த்தைகளை அவனால் கூற முடியாமல் போனது.

வினய் வீட்டை விட்டு வெளியேறியதும் ஹரிணி தன் அறைக்குள் சென்று அடைந்து கொண்டாள்.

'எங்க மாமா, தான் வினுவோட அப்பான்னா... அப்போ எங்க அத்தை ரெண்டாவது மனைவியா? ஏமாத்திக் கல்யாணம் பண்ணிக்கிட்டாரா?' என்ற கேள்விகள் எழும் பொழுதே.

'தன் அப்பாவை பழி வாங்க நினைச்சு தான் வினய் என்னைக் கல்யாணம் பண்ணினாரா? என் குடும்பத் துக்குள் நுழைஞ்சு அவரை பழி வாங்க திட்டம் வச்சிருக் காரா?' என்ற கேள்விகளும் அவள் மனதில் முளைத்து அவளை வருத்தியது. அவளது காதலை ஆட்டம் காண வைத்தது.

வெளியே சென்ற வினய் வீடு திரும்பவில்லை.

மனோஜ் விடாமல் தன் அண்ணனின் அலைபேசிக்கு முயற்சித்துக் கொண்டே இருந்தான். அது அணைத்து வைக்கப்பட்டுள்ளது என்றே திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டு இருந்தது.

நேரம் செல்லச் செல்ல அவனுக்கு பதட்டமாக இருந்தது. ரேணுகா மகனை அறைந்தவுடன் சென்று அறைக்குள் அடைந்தவர் தான்... அதன் பின்னே வெளியே எட்டிப் பார்க்கவில்லை.

ஹரிணி ஐந்து நிமிடத்திற்கு ஒரு முறை அறையில் இருந்து வெளியே எட்டிப் பார்ப்பாள். போன் வந்துச்சா என்று மனோஜிடம் கேட்பாள். கணவனும் வரவில்லை.



அவனிடம் இருந்து எந்த அழைப்பும் வரவில்லை என்றதும் மீண்டும் அறைக்குள் சென்று விடுவாள்.

இட்லியும் சாம்பாரும் செய்து வைத்து விட்டு தான் ரேணுகா கீழே உள்ள குழந்தைகள் விளையாடும் இடத்திற்கு வந்தார். ஆனால் அந்த உணவு சீந்துவாரின்றி அப்படியே இருந்தது.

இரவு பத்து நாற்பதுக்கு வினய் வீட்டிற்கு திரும்பி னான்.

''அண்ணா எங்கண்ணா போயிட்ட? போனை வேற ஸ்விட்ச் ஆஃப் பண்ணி வச்சுட்ட...'' என்று மனோஜ் தழுதழுப்பான குரலில் கேட்கவும்.

தம்பி மிகவும் பயந்து போய் இருக்கிறான் என்பதை புரிந்து கொண்ட வினய்.

''சாரிடா'' என்று மனோஜிடம் மன்னிப்புக் கோரி விட்டு, ''நீ சாப்பிட்டியா?'' என்று கேட்டான்.

''இல்லண்ணா. இன்னும் யாருமே சாப்பிடலை'' என்று மனோஜ் கூறியதும், அவனை சாப்பாட்டு மேஜை யில் அமரச் செய்து உணவை பரிமாறினான்.

''நீயும் உட்கார்ந்து சாப்பிடுண்ணா'' என்று மனோஜ் கூறவும்.

''இல்ல நீ சாப்பிடு. நான் போய் அண்ணியை கூட் டிட்டு வரேன்.''

''என்னண்ணா பிரச்சனை? அம்மா ஏன் உன்னை அடிச்சாங்க?''

"பெருசா ஒண்ணுமில்லைடா. நீ கவலைப்படாதே. நான் பார்த்துக்கிறேன்" என்று வினய் சொன்னதைக் கேட்ட மனோஜ் அதற்கு மேல் கேள்வி எழுப்பவில்லை.

அவனை பொறுத்தவரை அவன் அண்ணன் எந்தத் தப்பும் செய்ய மாட்டான். 'அண்ணியும் அம்மாவும் அண்ணனை தப்பாப் புரிஞ்சுக்கிட்டு பிரச்சனை பண்ணிட்டாங்க போல' என்று நினைத்துக் கொண்டான்.

அண்ணனும் அண்ணியும் சாப்பிட்டுக் கொள்வார்கள் என நினைத்த மனோஜும் சாப்பிட ஆரம்பித்தான். வினய் தன் அறை நோக்கிச் சென்றான்.

அறைக்குள் நுழைந்த வினய் படுக்கையில் அமர்ந் திருந்த மனைவியை பார்த்துக் கொண்டே தனது சட்டையை கழட்டி ஹேங்கரில் மாட்ட ஆரம்பித்தான்.

ஹரிணி கணவனைக் கண்டதும் வெகு நேரமாக கேட்க நினைத்த கேள்வியை கேட்டு விடலாம் என்று தீர்மானித்தாள்.

என்ன தான் கோபமாக இருந்தாலும் தம்பியை சாப் பிட வைத்தது போல் தனது மனைவியை சாப்பிட வைப் பதும் தன் கடமை என்று உணர்ந்த வினய், 'சாப்பிட வா ஹனி?' என்று கூப்பிட வாய் திறந்த நொடி... அவளது கேள்வி முந்திக் கொண்டு வந்து அவன் வாயை அடைத்தது.

"உங்க அப்பாவை பழி வாங்கத் தான் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்களா?" என்று ஹரிணி கசப்பான குரலில் கேட்டதும், வினய் தன் கண்களை மூடிக் கொண்டு சில நொடிகள் அமைதி காத்தான்.

அவன் அவளுக்கு முதுகு காட்டி நின்றிருந்ததால் அவனது முக பாவனை அவளுக்குத் தெரியாமல் போயிற்று. நேருக்கு நேர் அவனது முகத்தைப் பார்த்துக் கொண்டே அவள் அந்தக் கேள்வியைக் கேட்டிருந்தால் கணவனது கசங்கிய முகமே அவளுக்கான பதிலை தெரிவித்து இருக்கும்.

ஆனால் அவன் திரும்பிக் கொண்டு இருந்ததால் அவன் மனதில் மீண்டும் ஒரு முறை அடிவாங்கி நிற்பது அவளுக்குத் தெரியாமல் போயிற்று.

மனைவியின் புறம் திரும்பியவனோ, "அப்படியும் இருக்கலாம்" என்று சொல்லிவிட்டு பால்கனி கதவை திறந்து கொண்டு அங்கிருந்த நாற்காலியில் சென்று அமர்ந்தான்.

'கடவுளே! எனக்கு ஏன் இந்த சோதனை? என் வாழ்க்கையோட சம்பந்தப்பட்ட ரெண்டு பெண்களுமே ஏன் என்னை புரிஞ்சுக்காமல் பேசுறாங்க?' என நொந்து போய் அமர்ந்திருந்தான்.

அன்று இரவு முழுவதும் அவன் அங்கே இருந்து நகரவே இல்லை. உட்கார்ந்த வாக்கிலேயே உறங்கி விட்டான்.

காலையில் முதலில் கண்விழித்த ஹரிணி படுக்கை யில் கணவன் இல்லை என்றதும், 'சீக்கிரமா எழுந் துட்டாரா?!' என நினைத்துக் கொண்டே குளியலறைக் குள் சென்றாள்.

காபி போட்டுக் குடிக்கலாம் என நினைத்து அவள் வெளியே செல்ல கதவை திறக்க நினைத்து அதன்

பிடியில் கை வைத்து திருப்ப... அவளால் அதை திறக்க முடியவில்லை என்றதும் தான் மேலே போட்டு இருந்த தாழ்பாளை கவனித்தாள்.

'பூட்டி இருக்கா? அப்படின்னா வினய் எங்கே?' என நினைத்தவள் அறையை சுற்றிலும் பார்வையை ஓட்டினாள். பால்கனி கதவை திறந்து பார்த்தவள் அங்கே நாற்காலியில் சாய்ந்த வாக்கில் தூங்கிக் கொண்டிருந்த கணவனை கண்டதும் வேதனைப்பட்டாள்.

'ராத்திரி முழுசும் இங்கேயா தூங்கினார்? ரூமுக் குள்ளே வரவே இல்லையா? அது கூடத் தெரியாமலே நானும் தூங்கிட்டேனா?' என நினைத்தவளுக்கு அவனை எழுப்பவும் மனது வரவில்லை.

அவளது மனதில் கனன்று கொண்டிருந்த கோபம் அவனை எழுப்பவிடவில்லை என்றும் சொல்லலாம்.

சப்தம் செய்யாது அறையை விட்டு வெளியேறி னாள். ரேணுகா சமையலறையில் சமைத்துக் கொண் டிருந்தார்.

''நேத்து நைட் சாப்பிடலையா ஹரிணி?'' என்று அவளிடம் கேட்ட ரேணுகா அவள் பதில் அளிக்கும் முன்.

''நமக்கு கோபம் என்றால் நாம பட்டினி கிடக்கலாம். ஆனா அந்தப் பிஞ்சுக் குழந்தை என்ன தப்பு பண் ணுச்சு?'' என்று கேட்டதும்,

''சாரி ரேணும்மா'' என்று மிக மெதுவாக முணு முணுத்தாள்.



''முதல்ல சாப்பிடு. எந்த வேலையா இருந்தாலும் அப்புறமா பார்க்கலாம். உனக்காகத் தான் இவ்வளவு சீக்கிரமா சமைச்சுக்கிட்டு இருக்கேன்'' என்று சொன் னவர் அவளை வற்புறுத்தி சாப்பிட வைத்தார்.

அவள் சாப்பிட்டு முடிக்கும் தருவாயில் வினய் அங்கே வந்தான்.

'அப்பாடா! அம்மா சாப்பிட வச்சுட்டாங்களா' என நினைத்துக் கொண்டே செய்தித்தாளை எடுத்துக் கொண்டு தனது அறைக்குள் சென்று மறைந்து விட் டான்.

அவன் அலுவலகம் செல்லத் தயாரான போது மனோஜும் தயாராகி வந்தான்.

''என்னண்ணா ரெடியா? வா சாப்பிட்டுட்டு போக லாம்'' என்று மனோஜ் அழைத்தான்.

வினய் ஒன்றும் சொல்லாமல் அமைதியாக இருந்தான். மனோஜ் அவனை அப்படியே விடுவதாக இல்லை.

''ராத்திரி உன் பேச்சைக் கேட்டு நான் சாப்பிட்டேன். ஆனா நீ தான் சாப்பிடலை. இப்போ நீ சாப்பிட்டா தான் நான் சாப்பிடுவேன். அதனால மரியாதையா வா'' என்று அண்ணனை இழுத்துக் கொண்டு சாப்பாட்டு மேஜை யின் முன் சென்று அமர்ந்தான்.

யார் சாப்பாடு வைக்கப் போகிறீர்கள் என்பது போல் மனோஜ் தன் தாயையும் அண்ணியையும் ஏறிட்டுப் பார்த்தான். ரேணுகா அசைவதாக இல்லை என்பதை அறிந்த ஹரிணி பரிமாறுவதற்கு அவர்கள் அருகே வந்தாள்.

வந்தவள் ஒரு தட்டை எடுத்து மனோஜின் முன்னே வைத்து உணவை பரிமாறினாள். அவனுக்கு மட்டும் பரிமாறிவிட்டு அவள் சோபாவில் சென்று அமர்ந்ததும் வினய்க்கு கோபம் தலைக்கேறியது.

ஆனால் வார்த்தைகளை சிதறவிடக் கூடாது என்று அமைதி காத்தான். 'எழுந்து போய்விடலாமா இல்லை தம்பிக்காக நாமளே பரிமாறிக் கொண்டு சாப்பிடலாமா?' என அவன் எண்ணிக் கொண்டு அமர்ந்திருக்க மனோஜ் நாற்காலியில் இருந்து எழுந்து.

''வாண்ணா. நாம கிளம்பலாம். போற வழியிலே சரவண பவனியே சாப்பிட்டுக்கலாம்'' என்றான்.

தம்பியே சொன்னதுக்கு அப்புறம் அவமானப்பட்டு இங்க சாப்பிடணுமா என நினைத்த வினய் தனது லேப்டாப் பையை தூக்கிக் கொண்டு கிளம்பினான்.

மனோஜ் ஹரிணியிடம், ''போயிட்டு வரேன் அண்ணி'' என்று கூறிவிட்டு வெளியேற ஆரம்பித்தான்.

அவர்கள் இருவரும் சாப்பிடாமல் எழுந்தவுடன் திகைத்துப் போய் நின்றிருந்த ஹரிணி அவன் தன் தாயிடம் சொல்லாமல் கிளம்புவது கண்டு, ''மனோ நீங்க ரேணும்மாகிட்ட சொல்லலையா?'' என்று கேட்டாள்.

நியாயமாகப் பார்த்தால் ஏன் சாப்பிடவில்லை என்ற கேள்வியை தான் அவள் முதலில் கேட்டு இருக்க வேண்டும். வெளியே சென்று சாப்பிடத் தானே போகிறார்கள். பட்டினி கிடக்கப் போவதில்லையே என நினைத்து அவள் அந்தக் கேள்வியை கேட்காது தனது திகைப்பிற்கான காரணத்தை மட்டும் கேட்டாள்.

ஹரிணி அப்படி ஒரு கேள்வியை கேட்டதும் மனோஜ் அவள் புறம் திரும்பி, ''எங்க அண்ணனுக்கு நீங்க சாப்பாடு வைக்க மாட்டேன்னு சொன்னதுக்காக உங்க கிட்ட கூட நான் சொல்லிட்டு போகக் கூடாது தான். ஆனா ஹஸ்பண்ட் அண்ட் வைஃப் சண்டைக்குள்ள நான் வரக்கூடாதுன்னு தான் அதை ஒதுக்கி வச்சுட்டு உங்ககிட்ட மட்டும் சொல்லிட்டுப் போறேன்.

அம்மாவுக்கும் பிள்ளைக்கும் நடுவிலே நடக்கிற சண்டைக்குள்ளே நான் தாராளமா நுழையலாம். அங்க நான் மூணாம் மனுஷன் இல்லையே. நானும் அவங்க பையன் தானே? உங்க ரேணும்மாவுக்கு எப்ப எங்க அண்ணன்கிட்ட மன்னிப்பு கேட்கத் தோணுதோ அப்ப தான் நானும் அவங்க கூடப் பேசுவேன்'' என்று சொன்னவன் தன் அண்ணனுடன் வெளியேறினான்.

வினய் தன் தம்பியின் பேச்சைக் கேட்டு புன்னகைத்துக் கொண்டான். அவர்களது சகோதர பாசத்தை பார்த்து ஹரிணிக்கு வழக்கம் போல் பிரமிப்பு உண்டாகியது.

அவர்கள் இருவரும் அலுவலகம் சென்றதும் ஹரிணி தன் மாமியாரிடம் சென்று, ''நீங்க சொன்னதை நான் கேட்டேன் இல்ல... இப்போ நான் சொல்வதை நீங்க கேளுங்க. நேத்து நைட் சமைச்சது தான் வீணாப் போச்சு. இதையும் வேஸ்ட் பண்ணக் கூடாது. சாப்பிடுங்க'' என்று ரேணுகாவை வற்புறுத்தி சாப்பிட வைத்தாள்.



# 19

அன்று மாலை ஹரிணி தங்கள் அறையிலுள்ள அலமாரியின் கீழ் டிராயரில் உள்ள வேண்டாத பேப்பர்களை கிழித்து போடுவதற்காக தரையில் அமர்ந்து அதை ஒவ்வொன்றாகப் படித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் படுக்கைக்கு பின்னால் கீழே தரையில் அமர்ந்து இருந்தாள்.

அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பிய வினய் தனது அறைக்குள் நுழைந்து கதவை மூடிவிட்டு தனது சட்டையை கழட்ட ஆரம்பித்தான். அவனது பார்வைக்கு கட்டிலின் பின்னே அமர்ந்திருந்த ஹரிணி தென்படவில்லை.

'ங்கா' என்ற குரல் கேட்டவுடன் படுக்கையில் இருந்த தனது மகனை கண்டவன் ஒரு புன்னகையுடனே கட்டிலில் ஏறி மகன் அருகே படுத்தான்.

"குட்டி முழிச்சுக்கிட்டு இருக்கீங்களா? தூங்கலையா? அப்பா வரும் நேரம் சரியா முழிச்சுக்கிட்டீங்களா? அப்பாவை மிஸ் பண்ணீங்களா? அப்பா உங்களை ரொம்ப மிஸ் பண்ணினேன். அதான் உங்களைப் பார்க்க ஓடி வந்துட்டேன்" என்று கூறிக் கொண்டே தன் மகனின் கையில் முத்தமிட்டான்.



தந்தையின் பேச்சு புரியாத போதிலும் அவனை பார்த்து தன் பொக்கை வாயை காட்டிச் சிரித்து ங்கா என குட்டி தருண் மிழற்றினான்.

அவனது தலையை வருடிக் கொடுத்துக் கொண்டே, "சீக்கிரமா வளருடா குட்டி. நீயும் சித்தப்பா மாதிரி எனக்கு தானே சப்போர்ட் பண்ணுவ? இந்த வீட்டில இருக்கிற ரெண்டு லேடிஸூம் என் மேல ரொம்ப நம்பிக்கை வச்சிருக்காங்கடா. நீ சீக்கிரமா வளர்ந்து வந்து அவங்களை நிக்க வச்சு கேள்வி கேளு.

உன் அம்மா எப்படிடா என்னை பார்த்து அப்படி ஒரு கேள்வி கேட்டாள்? ஏன் நான் அவகிட்ட மயங்கி போற அளவுக்கு அவகிட்ட எந்த ஒரு நல்ல விஷயமும் இல்லையா?

அவளை லவ் பண்ணின போதே இந்த ஆளு அவளோட அபிராமி அத்தையை கல்யாணம் பண்ணின விஷயம் எனக்கு தெரிஞ்சதுடா. அப்பக்கூட அவசியம் உங்கம்மாவை கல்யாணம் பண்ணிக்கணுமா? அந்த ஆளை என் வாழ்க்கையிலே சேர்க்கணுமான்னுதான் நான் யோசிச்சேன்.

ஆனா என்னால உங்க அம்மாவை எந்தக் காரணத்துக்காகவும் விடமுடியாதுன்னு தோணுச்சு. நான் அவளை அந்த அளவுக்கு லவ் பண்ணினேன்டா. இப்பவும் லவ் பண்ணுறேன்.

கல்யாணம் ஆகி இத்தனை மாசமாகியும் என்னை அவ புரிஞ்சுக்கவே இல்லைடா! இவளை திட்டி என்ன பிரயோஜனம். என்னை பெத்தவங்களே என்னை இன்னும் சரியாப் புரிஞ்சுக்கலை.

உன்னையும் உங்க அம்மாவையும் நான் விட்டுட்டு போயிடுவேன்னு உங்க பாட்டி சொல்லுறாங்கடா! உங்க ரெண்டு பேரையும் விட்டுட்டு நான் எங்கடா போவேன்? நான் செத்தால் தான்டா அது நடக்கும்'' என்று அவன் புலம்பியதை கேட்டுக் கொண்டிருந்த ஹரிணியின் கண்களில் கண்ணீர் கரை புரண்டு ஓடியது. மனைவி அங்கு இருப்பதை அறியாதவனாய் வினய் புலம்ப ஆரம்பித்தான்.

''நான் என்ன அவ்வளவு கேடு கெட்டவனாடா? அந்த ஆள் மாதிரி இரக்கம் இல்லாதவனா? போயும் போயும் அந்த ஆள் கூட என்னை கம்பேர் பண்ணிட் டாங்களே!

அந்த ஆள் எங்கம்மாவை ஒதுக்கி வச்சுட்டு இன்னொரு பொண்ணு வாழ்க்கையையும் கெடுத்துட்டு கொஞ்சம் கூட வருத்தமே இல்லாமல் அலையுறான். நான் என்ன அப்படிப்பட்டவனா?

உன் அம்மாவை பிரிஞ்சால் எனக்கு எதுடா வாழ்க்கை?'' என்று அவன் புலம்புவதை அதற்கு மேல் கேட்க முடியாதவளாய் ஹரிணி தரையில் இருந்து எழுந்து படுக்கையில் கணவனின் அருகே அவன் முதுகுப்புறமாய் படுத்து அவனை அணைத்துக் கொண்டாள்.

'இவ இங்க தான் இருக்காளா?' என நினைத்த வினய் அமைதி காத்தான்.

''சாரி வினு. நீங்க என்னை எனக்காக கல்யாணம் பண்ணலையோன்னு திடீர்ன்னு ஒரு சந்தேகம் வந்து என்



மூளையை மழுங்கடிச்சிடுச்சு. அது உண்மையா இருக்குமோங்கிற பயம் என்னை ஆட்டி படைச்சது. பிகாஸ் ஐ லவ் யூ சோ மச்'' என்று கூறிக் கொண்டு அவனது கன்னத்தில் ஒரு முத்தம் பதித்தாள்.

அவன் திரும்பிப் படுத்து அவளை இறுக்கி தன் னோடு அணைத்துக் கொண்டான். இருவரும் அமைதியாக இருந்தனர்.

''என்ன வினு தூங்கிட்டீங்களா?'' என்று ஹரிணி கேட்டதும்,

''ரெண்டு மாசம் கழிச்சு எனக்கு சான்ஸ் கிடைச் சிருக்கு. இப்ப போய் தூங்குவேனாடா?'' என்று கேட் டவன் அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்துக் கொண்டான்.

அவன் சொல்லியே அதே இரண்டு மாத இடை வெளிக்கு பின் கிடைத்த அணைப்பினால் அவளும் சிலிர்த்துப் போய் அவனுடன் ஒன்றினாள்.

சில பல முத்தங்களுக்கு பின் எழுந்து அமர்ந்தவன் அவளை தன் மேல் சாய்த்து கொண்டு பேச ஆரம் பித்தான்.

''ட்ரஸ்ட் மீ ஹனி. உன்னோட குணம் பிடிச்சு போய் தான் நான் உன்னை லவ் பண்ணிக் கல்யாணம் பண்ணினேன். நீ சொல்லுற மாதிரி எனக்கு அவரை பழி வாங்குற எண்ணம் அடிமனசிலே இருந்தாலும் எப்பவும் அவரை விட்டுத் தூரமா இருக்கிறதைதான் நான் விரும்பு றேன். அதுக்கு காரணம் மனோஜ்.''

''மனோஜா? என்ன சொல்லுறீங்க? எனக்குப் புரியலை.''

''அவனுக்கு அவரை பத்தின உண்மை எதுவும் தெரியாது.''

''என்ன சொல்லுறீங்க வினு?'' என்று அவள் நம்ப முடியாத குரலில் கேட்க.

''ஆமா. அவனுக்கு தெரியாது. அம்மாவுக்கும் சின்னு வீட்டை சேர்ந்தவங்களுக்கும் தெரியும். சின்னுவுக்கு இவர் தான் எங்க அப்பா என்பது வரை தெரியும்.''

''அவளுக்கு மட்டும் எப்படித் தெரிஞ்சது?''

''சின்ன வயசிலே அவங்க அம்மா அப்பா பேசுறதை கேட்டு அவர் சாகலைன்னு தெரிஞ்சுக்கிட்டாள். இப்போ நான் இவரை முறைச்சிக்கிட்டே இருக்கவும் என்கிட்ட வந்து நேரடியாகக் கேட்டு தெரிஞ்சுக்கிட்டாள்'' என்றவன் தனது முன் கதையை சுருக்கமாகக் கூறினான்.

''அவர் மனோஜை ஒதுக்கி வச்சதால தான் அவன் லைஃபிலே பெரிய ஆளா வரணும் என்று நான் ஆசைப் படுறேன். எப்படியும் வந்துடுவான்'' என்று நம்பிக்கை யாகச் சொல்ல.

ஹரிணி அவனிடம் தயங்கிய குரலில், ''நான் கேட்கிறேன்னு தப்பா நினைச்சுக்காதீங்க, மனோஜ் இஞ்சினியரா இருக்கார். நல்லா சம்பாதிக்கிறார். இதை விட உங்களுக்கு என்ன வேணும்?'' என்று கேட்டாள்.

''இல்ல ஹனி. அவன் யாருமே எட்ட முடியாத உயரத்தை எட்டணும். இவனையா வேண்டாம்ன்னு சொன்னோம் என்று அந்த ஆளு வருத்தப்படணும்'' என்று ஆவேசமாகப் பேசினான்.



புரிகிறது என்பது போல் தலையாட்டியவள் சில நிமிடங்கள் அமைதியாக இருந்தாள்.

''கேட்க மறந்துட்டேன்... ரேணும்மா எப்படி எதுவுமே நடக்காத மாதிரி இருக்காங்க?'' என்று கேட்டாள்.

''நம்ம கல்யாணத்தை பத்தி உங்க அப்பா பேச வந்தப்போ தான் இவர் இந்த ஃப்ளாட்டிலே இருக்கிற விஷயம் எனக்கு தெரிய வந்துச்சு. நான் அன்னைக்கு எங்க அம்மாக்கு போன் பண்ணி 'ஏன்மா இவர் நம்ம பக்கத்து வீட்டிலே குடியிருக்கார் என்ற விஷயத்தை என்கிட்ட சொல்லலைன்னு கேட்டேன். அதுக்கு அவங்க 'எனக்கும் அவருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அதுக்கு அப்புறம் அவர் எங்க குடி இருந்தால் எனக் கென்ன?' அப்படின்னு சொல்லிட்டாங்க. எங்கம்மா அவரை அடியோட தன் மனசிலே இருந்து விலக்கிட் டாங்க. என்னால தான் என் கோபத்தை அடக்க முடியுற தில்லை.''

''அவரை எப்படி உங்களுக்கு அடையாளம் தெரிஞ்சது வினு?''

''அவரோட போட்டோ ஒண்ணு என் கையிலே கிடைச்சது. அவர் முகத்தை மறந்திடக் கூடாதுன்னு நான் அதை கிழிச்சுப் போடாமல் வச்சிருந்தேன். அதனால ஏர்போர்ட்டிலே பார்த்த உடனே எனக்கு அடையாளம் தெரிஞ்சிடுச்சு.''

''நீங்க தான் அவரோட பிள்ளைன்னு அவர் எப்போ தெரிஞ்சுக்கிட்டார்?''

''அவர் அம்மாவை எப்போ பார்த்தாரோ? அது எனக்கு தெரியாது. ஆனா உன்னை பொண்ணு பார்க்கிற

நிகழ்ச்சியிலே தான் நான் யார்ன்னு அவருக்கு புரிஞ்சிருக்கும். அதனால தான் அவர் காதுபடவே எங்கம்மா ஒரு விதவைன்னு சொன்னேன். அப்பக்கூட மனுஷன் கலங்கலையே!'' என்று வெறுப்பாய் உமிழ்ந்த வினய்.

''அதுக்கு பின்னாடி பல தடவை என்கிட்ட வந்து என்னை அப்பான்னு கூப்பிடுன்னு கெஞ்சினார். நான் தான் மசியலை'' என்றான்.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த இருவரும் தருணை தூக்கிக் கொண்டு வெளியே வந்தனர். மனோஜ் வரவேற்பறை சோபாவில் அமர்ந்து தொலைக் காட்சியை பார்த்துக் கொண்டிருந்தான்.

தன் அண்ணன் கையில் இருந்த தருணை பார்த்த மனோஜ், ''தருண் குட்டி சித்தப்பாகிட்ட வாங்க'' என்று கூப்பிடவும்,

வினய் குழந்தையை தூக்கிக் கொண்டு அவன் அருகில் சென்றான். அவர்கள் இருவரும் குழந்தையுடன் விளையாடிக் கொண்டிருந்த போது மலர்விழி அங்கே வந்தாள்.

''வா சின்னு'' என்று வினய் அவளை வரவேற்றான்.

மனோஜ் அவளை பார்த்து முறைத்ததை லட்சியம் செய்யாத மலர் வினய் அருகே சென்று அமர்ந்தாள்.

''காபி குடிச்சியா? ஹரிணியை கொண்டு வரச் சொல்லவா?''

''எனக்கு காபி வேண்டாம் அண்ணா. நான் எங்க வீட்டிலேயே குடிச்சுட்டேன்'' என்று கூறினாள்.



''அண்ணா!'' என்று அழைத்தவள் சற்று தயங்கி, ''சாரிண்ணா'' என்று அவனிடம் மன்னிப்பை வேண்டினாள்.

அவள் புறம் திரும்பி அமர்ந்த வினய், ''எதுக்கு சாரி கேட்கிறே? என்ன தப்பு செஞ்ச?'' என்று வினவினான்.

''நேத்து நடந்த குழப்பத்துக்கெல்லாம் நான் தான் காரணம்'' என்றதும் ஒன்றும் புரியாதவனாய் வினய் தன் புருவம் உயர்த்தி அவளை நோக்கினான்.

''எங்க வீட்டிலே எனக்கு கல்யாணத்துக்கு மாப்பிள்ளை பார்க்கிறாங்க.''

அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம் என்று புரியாத போதும் அவள் சொன்ன விஷயத்தைக் கேட்டு மகிழ்ந்த வினய், ''சூப்பர் நியூஸ் சின்னு'' என்றான்.

''நான் மனோவை கல்யாணம் பண்ணிக்கிறேன்னு நேத்து மனோகிட்டயும் ஆன்ட்டிகிட்டவும் சொன்னேன்'' என்று அவள் கூறியதும்,

''இன்ட்ரஸ்டிங், இது அதைவிட சூப்பர் நியூஸ் சின்னு'' என்று வினய் ஆர்ப்பரித்தான்.

ஹரிணியால் தன் காதல் கேட்டதை நம்பவே முடியவில்லை. அவளுக்கு அது ஆனந்த அதிர்ச்சியாக இருந்தது.

''ரத்தினம் அங்கிள் என்ன சொன்னார்?'' என்று வினய் விசாரிக்கவும்.

''நேத்து நைட் அவர்கிட்டே பேசினேன். எங்க அம்மா அப்பா ரெண்டு பேருக்குமே சம்மதம். சம்மதம் என்று

சொல்லுறதை விட சந்தோஷம் என்று தான் சொல்லணும். அவங்க முகத்திலே அவ்வளவு பிரகாசம்'' என்று அவள் வருத்தத்தோடு உரைக்கவும்.

''சந்தோஷத்தை எப்படி சின்னு சந்தோஷமே இல்லாமல் சொல்லுறே?'' என்று வினய் கிண்டல் பண்ணினான்.

''நான் சொன்னது நேத்து நைட் நடந்தது. ஈவினிங் இங்க என்ன நடந்துச்சுன்னா... நான் விஷயத்தை சொன்ன உடனே இந்த மனோ வாய்க்குள்ளே ஈ போறது கூடத் தெரியாதவனாய் முழிச்சிக்கிட்டு இருந்தான்'' என்றதும் மனோ தன்னால் முடிந்த மட்டும் மலரை முறைத்தான்.

மலர்விழி அவன் புறம் திரும்பவே இல்லை. ஹரிணி வந்த சிரிப்பை வாய்க்குள் அடைத்தாள். வினய் பெரிதாகப் புன்னகைத்தான். மலர்விழி தன் பேச்சைத் தொடர்ந்தாள்.

''ஆன்ட்டி என்ன தெரியுமா சொன்னாங்க?'' என்று கேட்டவள், ''உனக்கு ஏத்த பையனா... இல்லை... என்னமோ சொன்னாங்களே...'' என யோசித்தவள்.

''ஹான். எல்லா விதத்திலும் உனக்கு சிறப்பான மாப்பிள்ளையா பார்த்து கட்டி வைக்கிறேன்னு சொன்னாங்க'' என்றாள்.

''ம்ம்ம் அப்புறம்.'' என்று வினய் அவளை மேலும் கூறுமாறு ஊக்கினான்.

''அதுக்கு நான்... அப்படின்னா உங்களுக்கு சந்தர்ப்பம் அமைஞ்சிருந்தால் மனோவை விட்டுட்டு போய்



இருப்பீங்களான்னு கேட்டேன்'' என்று தயங்கிக் கொண்டே மெல்லிய குரலில் கூறவும்,

வினய் அவளது காதைப் பிடித்துத் திருக்கிக் கொண்டே, ''வாயிலேயே ரெண்டு போடணும். எங்க போய் இப்படிப் பேசக் கத்துக்கிட்டே?'' என்று அதட்டினான்.

''சாரிண்ணா. என்னமோ அவங்க அப்படி பேசினதும் சட்டுன்னு கோபம் வந்துடுச்சு.''

''கோபம் வந்தா சின்னவங்க பெரியவங்க கூடவா தெரியாமல் போயிடும்'' என்று கண்டித்தவன் அவளது காதில் இருந்து தன் கையை எடுத்தான்.

அவள் தன் காதை தேய்த்து விட்டுக் கொண்டே, ''தெரியாமல் பேசிட்டேன். ப்ளீஸ் இந்த ஒரு தடவை மன்னிச்சிடுங்க'' என்று கெஞ்சிக் கேட்டாள்.

செய்த தப்பை மூடி மறைக்காமல் தன்னிடம் வந்து உண்மையை கூறி உணர்ந்து மன்னிப்பு கேட்பவளிடம் இதற்கு மேல் என்ன சொல்ல என நினைத்து அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

தன் முகத்தையே கேள்வியாய் பார்த்துக் கொண்டிருந்த மலர்விழியைப் பார்த்து என்ன என்பது போல் அவன் புருவம் உயர்த்திக் கேட்க,

''உங்க முடிவு என்னன்னு சொல்லலையே'' என்றாள்.

''மனோ நான் உனக்கு யாருடா?'' என்று வினய் தம்பியை பார்த்துக் கேள்வி எழுப்பினான்.

''நீ தான் எனக்கு அம்மா, அப்பா, அண்ணன், பிரண்ட். நீ தான் அண்ணா எனக்கு எல்லாமும்.''

''நான் சொல்லுற பொண்ணு கழுத்திலே தாலி கட்டு வியா?''

''கண்டிப்பா!'' என்று மனோஜ் அழுத்தம் திருத்தமாகச் சொன்னவுடன்.

''அப்படின்னா இந்த சின்னு தான் உன் வருங்கால மனைவி'' என்று அறிவித்தான்.

''என்ன போதுமா?'' என்று வினய் மலர்விழியை பார்த்துக் கேட்க.

''ஆன்ட்டி...'' என்று அவள் இழுத்தாள்.

''உங்க அம்மா அப்பாகிட்ட இங்கிருந்து போன பின்னால தானே பேசி சம்மதம் வாங்கி இருக்கே. ஒரு வேளை உங்க அம்மாவும் அப்பாவும் இதுக்காக தான் என் பொண்ணுகிட்டே பாசமா பழகினீங்களான்னு கேட்டு விடுவாங்களோன்னு அம்மா நினைச்சிருப்பாங்க. அதான் அப்படி சொல்லி இருப்பாங்க'' என்றவன் ரேணுகாவிடம் செல்லுமாறு கண்ஜாடை காட்டினான்.

பெரிய மகன் தன் மனதில் உள்ளதை அப்படியே சொன்னதும் ரேணுகாவின் கண்களில் கண்ணீர் நிறைந்தது. அவர் பூஜை அறைக்குள் சென்று கடவுள் முன் நின்று நன்றி செலுத்த ஆரம்பித்தார்.

மலர்விழி எழுந்து பூஜை அறைக்குள் சென்றவள் ரேணுகாவின் பாதம் பணிந்து, ''தெரியாமல் பேசிட்டேன். சாரி அத்தை. அதுக்காகவெல்லாம் என்னை வெறுத்துடக் கூடாது. என்னை மன்னிச்சு ஏத்துக்கணும்'' என்று கெஞ்சலில் ஆரம்பித்து கட்டளையில் முடித்தாள்.



மலர்விழியின் தோரணையை பார்த்த வினய் அது சரி என்பது போல் தலையாட்டிக் கொண்டான்.

மலர்விழியை தூக்கிவிட்ட ரேணுகா அவளது நெற்றியில் குங்குமம் இட்டு தன் சம்மதத்தை தெரிவித்தார். வினய் புன்னகைத்துக் கொண்டான். மனோஜ் அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

ஹரிணியின் முகம் பிரகாசமாகியது. அவள் வீட்டில் உள்ள இனிப்பை எடுத்து வந்து அனைவருக்கும் கொடுத்தாள்.

ஹரிணி மனோஜின் அருகே சென்று, ''ஏன் மனோ உங்களுக்கு மலரைக் கல்யாணம் பண்ணிக்க விருப்பமா இல்லையான்னு உங்க அண்ணன் கேட்கவே இல்லை. அவர் முடிவை உங்க மேல திணிச்சிட்டாரா?'' என்று கேட்டாள்.

''நீங்க என் அண்ணனை இன்னும் சரியாப் புரிஞ்சுக் கலை அண்ணி, தப்பான எந்த ஒரு விஷயத்தையும் அவனால செய்ய... ஹூம் யோசிக்கக் கூட முடியாது. ம்ம்ம்... எங்க அம்மாவுக்கே இது தெரியாமல் தானே அவனை நேத்து கை நீட்டி அறைஞ்சாங்க'' என்றதும்,

'கிடைக்கிற கேப்பிலே எல்லாம் அண்ணனும் தம்பியும் ரேணும்மாவை வாருவாங்க போலவே!' என ஹரிணி எண்ணினாள்.

''அப்படின்னா உங்களுக்கு மலரைக் கல்யாணம் பண்ணிக்க பரிபூரண சம்மதமா?'' என்று ஹரிணி மீண்டும் கேட்டதும் சில நொடிகள் அமைதியாக இருந்த மனோஜ் அதன் பின் பேச ஆரம்பித்தான்.

''என்னோட கல்யாணத்தை பத்தி நான் நினைச்சு கூட பார்த்ததில்லை. அதே மாதிரி சின்னுவை வேற மாதிரியும் நான் நினைச்சுப் பார்த்ததே இல்லை.

ஆனா உலகத்திலே உனக்கு பிடிச்ச மூணு பேரை சொல்லுன்னு சொன்னால் எங்க அம்மா அண்ணனுக்கு அப்புறமா நான் சின்னு பேரை தான் சொல்லுவேன். அவளை எனக்கு ரொம்பப் பிடிக்கும். அவ என் மனசுக்கு ரொம்ப நெருக்கமானவள்.

நமக்கு ரொம்பப் பிடிச்சவங்களுக்கு எல்லாமே நல்லதா நடக்கணும் என்று நாம ஆசைப்படுவோம் இல்லையா. அதே மாதிரி அவளோட கல்யாண வாழ்க்கையும் ரொம்ப நல்லபடியா இருக்கணும் என்று நான் எப்பவும் ஆசைப்பட்டிருக்கேன்.

அதனால தான் அவ தன்னோட ஆசையை சொன்ன போது கூட என்னை விட ஆரோக்கியமான ஒருத்தன் அவளுக்கு கணவனா அமையலாமே அப்படின்னு நினைச்சேன்'' என்று அவன் கூறியதை அனைவரும் கேட்டுக் கொண்டிருந்தனர்.

மலர்விழி மனதுக்குள் நிம்மதியாக உணர்ந்தாள்.

'அப்பாடா ஒரு வழியாய் வாய் திறந்து தன் மனசிலே என்ன இருக்குன்னு சொல்லிட்டான்' என்று மலர்விழி நினைத்துக் கொண்டாள்.

''மனோ நீங்க டிவியிலே அந்தப் போட்டிக்காக பாட ஆரம்பிச்சதுக்கு அப்புறமா வீட்டிலே பாடுறதே இல்லை'' என்று ஹரிணி குறைபட,



''என்ன அண்ணி இப்படிச் சொல்லுறீங்க? ஒவ்வொரு வாரமும் டிவியிலே பாடப் போறப் பாட்டை அண்ணன்கிட்டே பாடிக் காட்டிக்கிட்டு தானே இருக்கேன்'' என்று மனோஜ் கூறினான்.

''அது வேற மனோ. இப்போ எல்லோரும் சந்தோஷமா இருக்கோமில்ல. எங்களுக்காக ஒரு பாட்டுப் பாடுங்க'' என்று ஹரிணி வலியுறுத்தவும்.

''அவ சொல்லுறதும் சரிடா, ஒரு பாட்டுப் பாடு'' என்று வினய் கேட்டான்.

''என்ன பாட்டுண்ணா?'' என்று மனோஜ் கேட்டான்.

''உனக்கு என்ன பாடணும் என்று தோணுதோ பாடு'' என்று வினய் கூறியதும் மனோஜ் பாட ஆரம்பித்தான்.

சிவ சக்த்யா யுக்தோ யதி பவதி சக்தஹ ப்ரபவிதும்

நசே தேவம் தேவோ நகலு குசலஹ ச்பந்திதுமபி ஆஆஆ

அதச்த்வாம் ஆராத்யாம் ஹரி ஹர விரிஞ்சாதிபிரபி

ப்ரணந்தும் ஸ்தோதும் வா கத மக்ருத புன்யஹ ப்ரபவதி ஆஆஆ

ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ

ஜகத் காரணி நீ பரிபூரணி நீ

ஒரு மான் மழுவும் சிறுபூந்திரையும்

சடை வார்குழலும் பிடை வாகனமும்

கொண்ட நாயகனின் குளிர் தேகத்திலே

நின்ற நாயகியே இட பாகத்திலே

ஜகன் மோகினி நீ சிம்ம வாஹினி நீ

மனோஜ் கண்மூடி உருகிப் பாடிக் கொண்டிருந்தான். அவனது அந்த தெய்வீகக் குரலில் வசியம் செய்யப் பட்டவர்களாய் அனைவரும் மெய் சிலிர்க்கக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

மனோஜின் மடியில் இருந்த தருண் கூட தனது சித்தப்பாவின் பாட்டை அமைதியாகக் கேட்டுக் கொண் டிருந்தான். அவன் பாடி முடித்து சில நொடிகள் கடந்தும் யாரும் கண் திறக்கவில்லை. அப்படியே உருகிப் போய் அமர்ந்திருந்தனர்.

வினய் முதலில் கண் திறந்து, "ரொம்ப ஆத்மார்த் தமா இருந்துச்சுடா" என்றான்.

"அண்ணா நம்ம தருண் குட்டிக்கு மியூசிக்கிலே இன்ட்ரஸ்ட் இருக்குண்ணா. அவனுக்கு நாம முறைப்படி சங்கீதம் கத்துத் தரணும். எப்படி கொட்ட கொட்ட முழிச்சுக் கேட்டுக்கிட்டு இருக்கான் பாரு" என்று மனோஜ் கூறவும்.

"நீ சொல்லுற மாதிரியே அவனுக்கு சங்கீதம் கத்துக் கொடுத்துட்டா போச்சு" என்று வினய் கூறினான்.

"தாங்க்ஸ் மனோ. மூகாம்பிகையை நேரிலே போய் தரிசனம் பண்ணின மாதிரியே இருந்துச்சு" என்று ஹரிணி பாராட்டினாள்.

"வா சின்னு. உன்னை வீட்டிலே கொண்டு போய் விட்டுட்டு வரேன்" என்று கூறி வினய் கிளம்பவும்.

"எங்க அம்மா அப்பா சம்மதிச்சுட்டாங்கன்னு நான் சொன்னது உண்மையா பொய்யான்னு தானே தெரிஞ் சுக்க தானே வரீங்க. என் மேல என்ன ஒரு நம்பிக்கை!" என்று அவள் அலுத்துக் கொண்டாள்.



அவளது யூகம் சரி தான் என்பது போல் வினய் அவளது கருத்தை மறுத்து ஒன்றும் கூறாது. "ஹேய் வாயாடி! பேசாமல் வா. கிளம்பலாம்" என்றான்.

"வரேன் அத்தை" என்று அவள் ரேணுகாவிடம் விடைபெறவும்.

"ஹேய் சின்னு! ஆன்ட்டி அத்தையா மாறிட்டாங் களா? அப்படின்னா நான் இனிமேல் அண்ணன் இல்லையா? மச்சானா?" என்று வினய் கிண்டலாகக் கேட்டான்.

மலர்விழி தீவிரமான முகபாவத்துடன், "அண்ணன் என்கிற உறவு பிறப்பால மட்டும் வரதில்லை. நாம வைக்கிற பாசத்தாலும் வரும். நான் உங்களை பாசமா தான் அண்ணன் என்று இத்தனை வருஷமும் கூப்பிட்டு கிட்டு இருக்கேன். அதை என்னிக்குமே நான் மாத்த மாட்டேன். ஆன்ட்டின்னு கூப்பிட்டால் அந்நியமாத் தெரிஞ்சது. அதனால தான் அத்தைன்னு மாத்திக்கிட் டேன்" என்றதும்.

மலர்ந்த முகத்துடன் அவளது தலையில் தன் வலது கையை வைத்து அழுத்திய வினய் புரிந்தது என்பது போல் தலை அசைத்தான்.

"வா சின்னு போகலாம்" என்றவன் தனது தலையில் மெல்ல தட்டி, "சாரி, இனிமேல் சின்னுன்னு கூப்பிடக் கூடாதில்ல" என்றான்.

''ஏன்? ஏன் அப்படிக் கூப்பிடக்கூடாது?'' என்று தனது ஆட்சேபத்தை மலர்விழி வேகமாக தெரிவிக்க,

''அது இனிமே மனோக்கு மட்டுமே உள்ள ஸ்பெஷல் பேர் இல்லையா?'' என்று வினய் கேட்டான்.

''அப்படியெல்லாம் ஒண்ணும் கிடையாது. எதிர் காலத்திலே உங்க தம்பிக்கு என் மேல அம்பூட்டு லவ் வந்தா புதுசா ஒரு பேரை அவர் கண்டுபிடிக்கட்டும். நீங்க என்னை எப்பவும் போல சின்னுன்னே கூப்பிடுங்க'' என்று அறிவித்தாள்.

''எனக்கு உங்க மூணு பேரையும் பார்த்தால் பொறாமையா இருக்கு'' என்று ஹரிணி கூறவும்,

''அச்சோ! எதுக்கு அண்ணி? நீங்க தான் அண்ணி இந்தக் கூட்டத்தோட முக்கியமான உறுப்பினர். என்னேமா நீங்க தனி ஆள் மாதிரி எங்களைப் பார்த்துப் பொறாமைப்படுறதா சொல்லுறீங்க'' என்று மலர்விழி கிண்டல் பண்ண,

''அதுக்கில்லை மலர். நானும் சின்ன வயசில இருந்தே உங்க கூட சேர்ந்து வளர்ந்து இருக்கலாமேன்னு ஏக்கமா இருக்கு'' என்று கூறி ஹரிணி புன்னகைத்தாள்.

''ஹரிணியைப் பார்த்துப் புன்னகைத்த வினய், ''கிளம்புறோம்'' என்று கூறிவிட்டு மலர்விழியோடு வெளியேறினான்.

அவர்கள் காரில் சென்று கொண்டிருக்கும் போது வழியில் கிருஷ்ணா ஸ்வீட்ஸை பார்த்து வண்டியை அங்கே நிறுத்தினான்.



அப்பொழுது அங்கே வந்த மலர்விழியின் தோழி ஒருத்தி, ''ஹாய் மலர்! இங்கே என்ன பண்ணுறே?'' என்று கேட்டாள்.

''ஸ்வீட் கடையில எல்லோரும் என்ன பண்ணு வாங்களோ... அதைத் தான் நானும் பண்ணுறேன்'' என்று மலர்விழி கிண்டலாக உரைத்தாள்.

''இல்ல மலர். நைட் நேரத்திலே நீ புக்கும் கையுமா வீட்டிலே உட்கார்ந்து படிச்சுக்கிட்டு தானே இருப்பே... இப்படி வெளியே வர மாட்டியேன்னு கேட்டேன்.''

''ம்ம்ம்... வரப் போகும் பி.ஜி. என்ட்ரன்ஸ் எக்ஸாமிலே பாஸாகி எப்படியும் பி.ஜி சீட் வாங்கிடணும். அதான் தினமும் ரொம்ப தீவிரமா படிச்சுக்கிட்டு இருக்கேன். சீட் கிடைக்குமோ கிடைக்காதோ'' என்று மலர் எதிர் காலத்தைப் பற்றிய பயத்துடன் கூறவும்,

''நீ ஹார்ட் வொர்க் பண்ணுறது வீண் போகாது மலர். உனக்கு சீட் கண்டிப்பா கிடைக்கும்'' என்று அவளது தோழி வாழ்த்துக் கூறிக் கொண்டு இருக்கும் போது மைசூர் பாவை வாங்கிக் கொண்டு வினய் அவர்கள் அருகே வந்தான்.

''இவர் எங்க வினய் அண்ணா'' என்று மலர் அறிமுகப்படுத்த,

''இவர் தம்பியை தானே...'' என்று தொடங்கிய மலரின் தோழி முடிக்காமல் நிறுத்த,

''எல்லோர்கிட்டவும் சொல்லிட்டியா?'' என்று வினய் மலரை பார்த்துக் கேட்டான்.

''இல்லண்ணா... இவகிட்ட மட்டும் தான்'' என்று மலர்விழி தயங்கி இழுத்தாள்.

''மலரை மாதிரி ஒருத்தியை மனைவியா அடைய உங்க தம்பி உண்மையிலே கொடுத்து வச்சவர். அவளோட தியாகம்...'' என்று தொடங்கிய மலரின் தோழியை வினய் இடைமறித்தான்.

''தப்பா நினைச்சுக்காதீங்க. என் தம்பியை கல்யாணம் பண்ணுறதினாலே மலர் கண்டிப்பா தியாகி கிடையாது. இன்னும் சொல்லப் போனா... இவளைத் தவிர வேற யார் அவனைக் கல்யாணம் பண்ணுறதா இருந்தாலும் அவங்க கண்டிப்பா தியாகம் செஞ்சவங்களா ஆவாங்க.

''இந்த உலகத்தில் என் தம்பியோட குறையை துளிக் கூட குறையா பார்க்காத மூணே ஜீவன்கள் தான் இருக்கோம். அதுல மலரும் ஒருத்தி. அதனால அவ எந்த தியாகமும் செய்யலை'' என்று வினய் சொல்லவும் மலர்விழியின் முகம் பிரகாசமாகியது.

மலரின் பிரகாசமான முகத்தையும் வினய் கூறிய நம்பிக்கையான விளக்கத்தையும் கேட்ட மலரின் தோழி அவளை வாழ்த்தி விடைபெற்றாள்.



## 20

ரத்தினத்தின் வீட்டின் முன்பு வினய் வண்டியை நிறுத்தினான். கார் சப்தம் கேட்டு வெளியே வந்து பார்த்த ரத்தினம் அவனை வரவேற்றார்.



''எப்படி இருக்கீங்க அங்கிள்?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்த நாற்காலியில் அமர்ந்த வினய் சுற்றி வளைக்காமல் நேரடியாக விஷயத்திற்கு வந்தான்.

''சின்னு என் தம்பியை கல்யாணம் பண்ண ஆசைப்படுறதா உங்ககிட்ட சொன்னாளா?'' என அவன் கேட்க,

''அவ சொன்னா தம்பி. ஆனா நீங்க என்ன நினைக்கிறீங்க?'' என்று அவர் திருப்பிக் கேட்டார்.

''இதிலே நாங்க நினைக்கிறதை விட உங்க ரெண்டு பேரோட சம்மதம் தான் எங்களுக்கு முக்கியம்'' என்று அவன் அழுத்திக் கூறினான்.

மலரின் தந்தையை முந்திக் கொண்டு மலரின் தாய் பேச ஆரம்பித்தார்.

''ஒரு பொண்ணைக் கட்டிக் கொடுக்கும் போது பொண்ணு வீட்டுக்காரங்க மாப்பிள்ளையை பத்தி மட்டுமில்லாமல அவரோட குடும்பத்தையும் சேர்த்து தான் விசாரிப்பாங்க. அப்படிப் பார்த்தா உங்களை விட நல்ல சம்பந்தம் எங்களுக்கு எங்கே கிடைக்கும்? உங்க எல்லோரையும் நாங்க பல வருஷமா பார்த்துக்கிட்டு வரோம்.

''ஒரு வேளை மனோ தம்பியோட குறை அவருக்கு பொறக்கப் போற குழந்தைக்கும் வரும் என்றால் நாங்க பயப்படலாம். அதுக்கு பேரு என்ன மலர்?'' என்று அவர் கேட்க,

''ஜெனிட்டிக்கல் ப்ராப்ளம்... மரபணு பிரச்சனை'' என்று அவள் விளக்கம் கூறியவுடன்,

''அப்படி இருந்தா நாங்களும் கொஞ்சம் யோசிக்க இருப்போம் தம்பி. ஆனா நம்ம மனோ தம்பிக்கு நடந்தது விபத்து. அது நமக்கெல்லாம் கூட எப்ப வேணா நடக்கலாம் இல்லையா?'' என்று தெளிவாக எடுத்துரைக்கவும் வினய் முகம் மலர்ந்தான்.

''ரொம்ப சந்தோஷம் ஆன்ட்டி. இந்தாங்க ஸ்வீட்'' என்று அந்த இனிப்பை அவரிடம் கொடுத்தான்.

''எங்க அம்மா சம்மதம் சொல்லலைன்னா ஸ்வீட்டை அப்படியே உங்க வீட்டுக்கு கொண்டு போயிடலாம்னு பார்த்தீங்களாண்ணா?'' என்று மலர் கிண்டல் செய்தாள்.

அதைக் கேட்டு அனைவரும் புன்னகைத்தனர். வினய் தன் மனதில் உள்ளதைக் கூற ஆரம்பித்தான்.

''எங்க எல்லோருக்கும் இந்தக் கல்யாணத்திலே பரிபூரண சம்மதம். ஆனா மனோக்கு இப்போ தான் இருபத்தி நாலு வயசாகுது. இப்போ கல்யாணம் பண்ண வேண்டாம். இன்னும் மூணு வருஷம் கழிச்சு பண்ணுவோம். அதுக்குள்ள சின்னுவும் மேல் படிப்பை முடிச்சுக்கட்டும்'' என்று அவன் கூறவும் ரத்தினமும் அவர் குடும்பமும் மனப்பூர்வமாக ஒத்துக் கொண்டனர்.

அதே நேரம் அங்கே ஹரிணி மனோவுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

''மனோ நான் ஒண்ணு கேட்டா தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே?'' என்று பீடிகையுடன் ஹரிணி தொடங்கவும்.



''என்ன அண்ணி காமெடி பண்ணுறீங்க. எனக்கு எல்லாமே எங்க அண்ணனுக்கு அப்புறமாதான். நீங்க என்னோட அண்ணி. அப்புறம் எப்படி நான் உங்களை தப்பா நினைப்பேன்?'' என்று அவன் வினவவும்,

''என் கேள்வியே அதான் மனோ. நீங்க பாட்டுக்கு உங்க அம்மாவை விட்டுட்டு உங்க அண்ணன் தான் எல்லாமும் என்று சொல்லிக்கிட்டு இருக்கீங்களே... அவங்க தப்பா நினைச்சுக்க மாட்டாங்களா? உங்க கல்யாண விஷயத்திலே கூட அவங்க அபிப்ராயத்தை நீங்க கேட்கலையே...'' என்று அவள் இழுத்தாள்.

''ஓ! இது தான் உங்க சந்தேகமா? எங்க அண்ணன் எதையும் யோசிக்காமல் செய்ய மாட்டான். இது நாள் வரைக்கும் அவனோட முடிவுக்கு நானும் எங்க அம்மாவும் எதிராப் பேசினதில்லை.

எங்க அம்மாவைக் காட்டிலும் எங்க அண்ணன் தான் எனக்கு எல்லாமும் அப்படின்னு நானா சொல்லலை. எங்க அம்மா எனக்கு சின்ன வயசிலே அப்படி தான் சொல்லிக் கொடுத்தாங்க. அதனால எங்கம்மா வருத்தப் பட மாட்டாங்க.

எங்க அண்ணன் தன்னோட வாழ்க்கைக்குன்னு தனியா எதையும் செஞ்சது கிடையாது. அவன் என்ன செஞ்சாலும் என்னையும் எங்க அம்மாவையும் மனசிலே வச்சுத் தான் செய்வான்.

எங்க அண்ணன் பிளஸ் டூ முடிச்சு கிண்டி காலேஜில தான் இஞ்சினியரிங் படிச்சான். ஆனா அவனுக்கு ஐ.ஐ.டி யிலே படிக்க சீட் கிடைச்சது. வேற ஸ்டேட்டிலே இருக்கிற

காலேஜுக்கு சீட் கிடைச்சது. எங்க ரெண்டு பேரையும் தனியா விட்டுட்டு போகணும் என்று சீட் கிடைச்ச விஷயத்தையே எங்க கிட்ட சொல்லாமல் மறைச்சுட்டான்.

அவன் அந்த எக்ஸாமுக்கு படிச்சது கூட எங்களுக்கு தெரியாது. சென்னையிலே கிடைச்சா சொல்லலாம் என்று இருந்து இருக்கான். சென்னையிலே கிடைக்காமல் நார்த் இண்டியாவிலே கிடைச்சதும் சொல்லாமல் மறைச்சுட்டான்.

எனக்காக அவன் அந்த நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விட்டான். எனக்கு எது நல்லதுன்னு பார்த்துப் பார்த்துச் செய்யுறதிலே எனக்கு அம்மாவும் அப்பாவுமா இருக்கான். தன் மனசிலே உள்ளதை எப்பவும் என்னோட ஷேர் பண்ணுறதால எனக்கு ஒரு பிரண்டா இருக்கான். மொத்தத்திலே அவன் தான் எனக்கு எல்லாமும்'' என்று விளக்கினான்.

ரேணுகாவை மீறிக் கொண்டு தன் கணவன் முடிவுகளை எடுப்பதினால் பிரச்சனை எதுவும் வருமோ என ஹரிணி பயந்தாள். ஆனால் மனோஜின் பேச்சைக் கேட்டதற்கு பின்பு தன் பயம் தேவையற்றது என நிம்மதியடைந்தாள்.

மறுநாள் காலையில் அண்ணனும் தம்பியும் அலுவலகம் கிளம்பிச் சென்ற பின் ரேணுகா ஹரிணியிடம் வந்து தயக்கத்துடன்,

''உனக்கும் வினய்க்கும் என்னம்மா பிரச்சனை? ஏன் அவன் உன்னை அது மாதிரி சொன்னான்? என்கிட்ட சொல்லலாம் என்றால் சொல்லு'' என்றார்.



ஹரிணி அன்று நடந்ததை விவரித்தாள். தன்னுடைய மகன் தவறு செய்யவில்லை என்பதை அறிந்த ரேணுகா நிம்மதி அடைந்தார்.

மருமகளுக்கு விஷயம் தெரிந்துவிட்டது என்பதால் தன்னுடைய முன் கதையை ரேணுகா விவரித்தார்.

தன்னுடைய மாமியார் ஒதுக்கப்பட்டவர் என்றால் தன்னுடைய அத்தை ஏமாற்றப்பட்டவர்... இன்னமும் ஏமாற்றப்படுகிறவர் என்பதை புரிந்து கொண்ட ஹரிணி அவர்களுக்காக பரிதாபப்பட்டாள்.

அன்று மதியம் மலர்விழியை பார்த்த பொழுது ஹரிணி அவளிடம், ''மலர் நேத்து மனோ சாமி பாட்டு பாடினதிலே உனக்கு ஏமாற்றம் தானே?'' என்று கிண்டல் பண்ணினாள்.

ஹாஹா என்று வாய்விட்டுச் சிரித்தவள், ''கல்யாணம் பேசி முடிச்சவுடனே அந்த அமுல் பேபி என்னைப் பார்த்து காதல் பாட்டு பாடுவான்னு நான் கண்டிப்பா எதிர்பார்க்கலை அண்ணி. ஏன்னா அவனுக்கு இதுநாள் வரைக்கும் கல்யாணம் பத்தின நினைப்பே இல்லையே. ஆனா எனக்கு அவன் மேல ஆசை இருந்ததால அவன் ஏதாச்சும் லவ் சாங் பாடி இருக்கலாமேன்னு கொஞ்சமே கொஞ்சம் தோணுச்சு'' என்று மலர்விழி உண்மையை ஒத்துக் கொண்டாள்.

''நேத்து பாடலைன்னா என்ன... இனிமே போட்டியிலே அவர் பாடப் போற லவ் சாங்கெல்லாம் உன்னை நினைச்சுத்தான் பாடுவார். கவலைப்படாதே மலர்'' என்று ஹரிணி கிண்டல் பண்ணவும்,

''அப்படி எல்லாம் அவனைப் பத்தி தப்புக் கணக்குப் போடக் கூடாது அண்ணி. பொறுத்திருந்து பார்ப்போம். இன்னும் மூணு வருஷம் டைம் இருக்கு. அதுக்குள்ள அவன் மாறினாப் போதும்'' என்று மலர்விழி மனோஜை கிண்டல் பண்ண இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

அன்று மாலை வினய் அலுவலகம் விட்டு எப்பொழுது வருவான் என்று ரேணுகா காத்திருந்தார். இரு நாட்களாக மகனிடம் பேசாதது அவரது மனதுக்குக் கஷ்டமாக இருந்தது.

மகன் தவறேதும் செய்யவில்லை என்றதும் அவனிடம் மன்னிப்புக் கேட்பதற்காக காத்துக் கொண்டிருந்தார். மனோஜ் தான் முதலில் வந்தான். அவன் தன் தாயிடம் பேசவில்லை.

'நீ பேசலைன்னா போடா. உங்க அண்ணன் இப்ப என்கிட்ட பேசுவான். உடனே நீ ஓடி வந்து ஒட்டிக்குவ!' என்று மனதில் நினைத்துக் கொண்ட ரேணுகா இளைய மகனை சிறிதும் கண்டு கொள்ளவில்லை.

அவர் வாசலையும் கடிகாரத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு நேரத்தை கடத்திக் கொண்டிருந்தார். ஹரிணிக்கு அவரது மனநிலை தெளிவாகப் புரிந்தது.

அரை மணி நேரம் கழித்து வினய் வந்தான். வந்தவன் நேராக தனது அறைக்குள் சென்று மறைந்தான்.

ஹரிணி தங்கள் அறைக்குள் சென்று பார்க்கும் போது அவன் குளியலறைக்குள் புகுந்துவிட்டிருந்தான். ஹரிணி அவனுக்காகக் காத்திருந்தாள்.



முகத்தை துடைத்துக் கொண்டே வந்த வினய், ''என்ன ஹனி என்கிட்டே ஏதாவது சொல்லணுமா? எதுக்கு இப்படி குறுக்கும் நெடுக்கும் நடந்துக்கிட்டு இருக்க?'' என்று வினவினான்.

''நான் காத்திருக்கலை. ரேணும்மா தான் உங்களுக்காக ரொம்ப நேரமா காத்திருக்காங்க.''

''அம்மாவா? என்ன விஷயம்?''

''நமக்குள்ள என்ன சண்டைன்னு காலையிலே விசாரிச்சாங்க. அதான் உங்ககிட்ட பேசணும் என்று காத்திருக்காங்க.''

''ஓ! நான் பார்த்துக்கிறேன். தருண் குட்டி என்ன செய்யுறான்?'' என்று அவன் கேட்க,

''உங்க பிள்ளையை அப்புறமா கொஞ்சலாம். முதல்ல உங்க அம்மாவை போய் பாருங்க'' என்று கணவனைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டாள்.

அவன் வரவேற்பறைக்கு சென்று அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான். ஏற்கனவே ரேணுகா அங்கே அமர்ந்து தொலைக்காட்சியை பார்ப்பதாக பாவ்லா காட்டிக் கொண்டிருந்தார்.

வினய் அருகே வந்து அமரவும் ரேணுகா அவனையும் தொலைக்காட்சியையும் மாறி மாறிப் பார்த்தார்.

இதுவரை தாய்க்கும் பிள்ளைக்கும் இடையே சண்டையே வந்ததில்லை என்று சொல்வதற்கில்லை. ஆனால் இது மாதிரி இரண்டு நாட்கள் பேசாமல் இருந்ததும், கை நீட்டி அடித்ததும், அதிகப்படியான வார்த்தைகளை

விட்டதும இதுவே முதல் முறை என்பதால் ரேணுகாவிற்கு என்ன சொல்லி மகனிடம் மன்னிப்பை வேண்டுவது என்று புரியாமல் விழித்துக் கொண்டிருந் தார்.

தாயின் தயக்கத்தைச் சரியாகப் புரிந்து கொண்ட வினய் சோபாவில் இருந்து எழுந்து சென்று தாயின் அருகே தரையில் அமர்ந்து அவரது மடியில் தன் முகத்தை சாய்த்துக் கொண்டான்.

மகனது அந்த செயலால் ரேணுகா சந்தோஷம் அடைந்தார். நமக்குள்ளே எதற்கு மன்னிப்பு என்று அவன் சொல்லாமல் சொல்வது அந்த தாய்க்குப் புரிந்தது.

அவரது கண்களில் இருந்த வழிந்த கண்ணீர் மகனது கன்னத்தில் பட்டு தெறித்தது. அவரது விரல்கள் மகனது முடியை கோதிக் கொடுத்தன.

தாயின் கண்ணீரும் தொடுகையும் இரு நாட்களாக அவர்களுக்கு இடையே ஏற்பட்டிருந்த விரிசலை சரி செய்யப் போதுமானதாக இருந்தது.

இருப்பினும் ரேணுகா, ''சாரிடா வினய்'' என்று கண்ணீர் மல்க மன்னிப்புக் கேட்டார்.

''ப்ச்சு விடுங்கம்மா'' என்ற சொல்லோடு வினய் அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தான்.

மனோஜ் தாயின் அருகே சோபாவில் அமர்ந்து அவரது தோளில் சாய்ந்து கொண்டான். அவனது கைகள் தாயின் கண்ணீரை துடைத்துவிட்டன. நடந்ததையெல் லாம் பார்த்துக் கொண்டிருந்த ஹரிணி புன்னகைத் தாள்.



சில நிமிடங்களில் அவர்கள் மூவரும் சகஜமாக பேசிக் கொள்ள ஆரம்பித்தனர்.

''அம்மா சின்னு வீட்டுக்கு போய் அங்கிள் ஆன்ட்டி கிட்ட நீங்களும் ஒரு தடவை பேசிடுங்க'' என்று வினய் கூறவும்,

''சரிடா. நாளைக்கு போய் பேசுறேன்'' என்று ரேணுகா ஒத்துக் கொண்டார்.

''உன்கிட்ட என்னடா சொன்னாங்க?'' என்று கேட்டு அன்று மலர்விழியின் வீட்டில் நடந்ததை அறிந்து கொண்டார்.

பாண்டியன் பற்றிய உண்மையை அறிந்த ஹரிணி தருணை பாண்டியன் முன்னால் கொண்டு போவதை தவிர்த்தாள். அவள் அவரிடம் சகஜமாக பேசவும் இல்லை. அவளது நடவடிக்கைகளில் இருந்தே அவ ளுக்கு உண்மை தெரிந்துவிட்டது என்பதை பாண்டியன் புரிந்து கொண்டார்.



## 21

தருண் பிறந்து ஆறு மாதங்கள் ஆன போது... அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பிய ஹரிணி கணவனுக்காக காத்திருந்தாள். வினய் அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பவும் அவனை ஹரிணி உற் சாகத்துடன் வரவேற்றாள்.

''வாங்க வாங்க. உங்களுக்கு ஒரு சந்தோஷமான நியூஸ் வச்சிருக்கேன்'' என்று முகம் கொள்ளா பூரிப்புடன் அவள் கூறவும்,

''அதுக்குள்ளவா? இவ்வளவு சீக்கிரமாவா?'' என்று அவன் கிண்டல் பண்ணினான்.

அதற்குள்ளாக மீண்டும் அவள் கருவுற்று இருக்கிறாளா அவன் என்று கேலி செய்வது அவளுக்கு புரியவில்லை. அவளது ஒரே தங்கை சாதனாவிற்கு திருமணம் முடிவாகி இருப்பதை கணவனுக்கு தெரிவிக்கவே அவள் ஆவலுடன் காத்துக் கொண்டு இருந்தாள்.

அதனால் கணவன் அதுக்குள்ளவா? இவ்வளவு சீக்கிரமா என்று கேட்ட கேள்வியை தனது தங்கையின் திருமணத்திற்கு அதற்குள் என்ன அவசரம் என்று கேட்பதாக நினைத்துக் கொண்டாள்.

''சரியான வயசு தானேங்க?!'' என்று அவள் அப்பாவியாக கேட்க, விஷயம் வேறு ஏதோ என்று மட்டும் தெரிந்து கொண்ட வினய்,

''இது சரியான வயசுங்கிறே? உனக்கே ஓ.கேன்னா எனக்கும் ஓ.கேடா ஹனி'' என்று விஷமச் சிரிப்புடன் மேலும் கிண்டல் பண்ணினான்.

கணவனின் பதிலால் அவளது முகம் குழப்பத்தை பூசிக் கொண்டது.

''நீங்களும் நானும் எதுக்கு ஓ.கே சொல்லணும்?''

''பின்ன வேற யாரு ஓகே சொல்லணும்? லேடி டாக்டரா?''



''டாக்டரா? என்னங்க சொல்லுறீங்க?''

''உன் ஹெல்த் மேல அவங்களுக்கு அக்கறை இருக்கும் தானே?''

''ஷப்பா... எனக்கு சுத்தமா ஒண்ணும் புரியலை. ஆனா நீங்க புரியற மாதிரி பேசினா ஒரு பிரளயமும் வந்துடாது?'' என்று ஹரிணி சொன்னவுடன்,

''ஹையோ! நீ தானா ஹனி? பேசியது நீ தானா? அகராதி தேடின என் ஆத்துக்காரி தானா? பிரளயமும்... அட! அட!'' என்று அவன் சிலாகிக்கவும்,

''ப்ச்சு. பேச்சை மாத்தாதீங்க. நீங்க என்ன சொன்னீங்க? அதை முதல்ல சொல்லுங்க!'' என்று அவள் வற்புறுத்தினாள்.

''நீ சந்தோஷமான நியூஸ்ன்னு சொன்னியா? நான் இதுவோன்னு உன்னைக் கிண்டல் பண்ணினேன்'' என்றவன் அவளது வயிற்றை தடவிக் காட்டினான்.

அவனை முறைத்துக் கொண்டே, ''நான் சாதனா கல்யாணத்தைப் பத்தி பேச வந்தால்...'' என்றவள் சில செல்ல அடிகளை பரிசளித்தாள்.

அவளது தந்தை அவளிடம் கூறிய தகவலை அவனிடம் தெரிவித்தாள்.

''அப்பா உங்க போனுக்கு டிரை பண்ணதா சொன்னார். நானும் டிரை பண்ணிப் பார்த்தேன். ஸ்விட்ச் ஆஃப் என்று வந்துச்சு.''

''சார்ஜ் சுத்தமா இறங்கிடுச்சு'' என்றான்.

அவர்கள் அறையில் இருந்து வெளியே வந்த போது மலர்விழி வந்தாள். அவளிடம் பேசிக் கொண்டிருந்தனர்.

அன்று அலுவலகத்தில் இருந்து திரும்பிய மனோஜ் மிகவும் உற்சாகமாக வந்தான்.

''அண்ணா!'' என்று அவன் கூவிக் கொண்டே வரவும்,

''என்னடா விஷயம்? உன் முகத்திலே சந்தோஷம் தாண்டவம் ஆடுது'' என்று கேட்ட வினய் தம்பியை தன் அருகே அமர வைத்தான்.

சுற்றிலும் பார்வையை ஓட்டிய மனோஜ்... ரேணுகா ஹரிணி மலர்விழி என அனைவரும் அமர்ந்திருப்பதை பார்த்துவிட்டு, 'எல்லோரும் இங்க தான் இருக்கீங்களா?'' என்று கேட்டுவிட்டு,

''உங்களுக்கெல்லாம் ஒரு ஹாப்பி நியூஸ். என்னோட பாட்டு போட்டியோட ஃபைனல்ஸ் நடக்கப் போற டேட்டை சொல்லிட்டாங்க'' என்றான்.

''ஹேய்! சூப்பர்! சூப்பர்!'' என்று அனைவரும் உற்சாகமாகக் கூறினர்.

''எந்த மாசம்? என்ன தேதி?'' என்று ரேணுகா கேட்டதும் மனோஜ் தேதியை அறிவித்தான்.

அவன் கூறிய தேதியை கேட்ட மலர்விழி, ''அப்பாடா! என்னோட என்ட்ரன்ஸ் எக்ஸாம் அதுக்கு முன்னாடியே முடிஞ்சிடும்'' என்று உற்சாகமாகக் கூறினாள்.

அவளைப் பார்த்து முறுவலித்த மனோஜ் அண்ணனின் முகத்தைத் திரும்பிப் பார்க்க அங்கே குழப்பம் நிலவுவதை கண்டு புருவம் சுருக்கினான்.

''என்னண்ணா விஷயம்? ஏதாச்சும் பிரச்சனையா?'' என்று கேட்ட மனோஜ் வினய் பதில் கூறாமல் அமைதியாக இருக்கவும் தன் அண்ணியை நிமிர்ந்து பார்க்க... அவளும் செய்வதறியாது திகைத்து போய் விழிப்பதை பார்த்து திகைத்தான்.

''என்ன விஷயம் வினய்?'' என்று ரேணுகா பெரிய மகனை பிடித்து உலுக்க,

''ஒண்ணுமில்லைம்மா'' என்று கூறியவனை,

''எதுவா இருந்தாலும் மறைக்காமல் சொல்லு. ஏன் ரெண்டு பேரும் இப்படி முழிச்சுக்கிட்டு நிக்குறீங்க?'' என்று ரேணுகா அழுத்திக் கேட்கவும்,

''அதே நாளிலே தான் ஹரிணி தங்கச்சி சாதனாக்கு சிங்கப்பூரிலே வச்சு நிச்சயதார்த்தம் பண்ண முடிவு பண்ணி இருக்கிறதா இப்ப தான் ஹரிணி சொல்லிக்கிட்டு இருந்தாள். அதான்...'' என்று வினய் இழுக்க அனைவரும் உற்சாகம் இழந்தவர்களாய் பேச்சிழந்து அமர்ந்திருந்தனர்.

வீட்டிற்கு மூத்த மாப்பிள்ளையாய் அவன் அந்த நிச்சயதார்த்தத்தில் கண்டிப்பாக பங்கேற்றே ஆக வேண்டும் என்பதால் என்ன செய்வது என்று அனைவரும் கலங்கிப் போய் அமர்ந்திருந்தனர்.

தன் அண்ணன் அருகில் இல்லாமல் போட்டியில் தன்னால் பங்கேற்க முடியாது என்பது மனோஜிற்குத் தெளிவாகப் புரிந்தது. ஆனால் அதை வாய் விட்டு அவனால் சொல்ல முடியவில்லை. காரணம் ஹரிணி.

தன் அண்ணியின் வீட்டில் நடக்கும் விசேஷத்திற்கு தன் அண்ணன் சென்றால் தான் ஹரிணிக்கு சந்தோஷம்.

வினய் அந்த விழாவிற்குப் போகவில்லை என்றால் அனைவரும் கேட்கப் போகும் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஹரிணி ஆளாவாள் என்பது தெரிந்திதால் அவன் வாய் மூடி அமைதியாக இருந்தான்.

அதே எண்ணம் தான் மலர்விழிக்கும் ரேணுகா விற்கும். அதனால் அனைவரும் மௌனமாக இருந்தனர்.

ஹரிணிக்கோ தன் ஒரே தங்கையின் நிச்சயத்திற்கு கணவனுடன் செல்ல வேண்டும் என்ற ஆசை இருந்த அதே நேரத்தில் கணவனின் ஒரே தம்பி வெற்றி பெறப் போகும் அந்தத் தருணத்தில் அவன் மனோஜுடன் இருக்க வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்து இருந்தாள்.

மனோஜ் ஜெயிக்க வேண்டும் என்பது தன் கண வனின் பல வருடத்து ஆசை... கனவு என்று தெரிந்ததி னால் அவளால் தன் கணவனிடம் கண்டிப்பாக நீங்கள் என்னுடன் சிங்கப்பூர் வந்தே ஆக வேண்டும் என்று சொல்ல முடியாமல் மௌனித்தாள்.

அங்கு நிலவிய மௌனத்தை முதலில் கலைத்தான் வினய்.

''ஒண்ணும் பிரச்சனையில்லை மனோ. உன்னோட பாட்டு போட்டி ராத்திரியில் தானே நடக்கும். சாதனா வோட நிச்சயதார்த்தம் காலையிலே நடக்கப் போகுது. நிச்சயம் முடிஞ்ச உடனே கிளம்பினால் சாயங்காலம் வந்து சேர்ந்துடுவேன். அந்த நாட்டுக்கும் நம்ம நாட்டுக்கும் இடையே இரண்டரை மணி நேரம் வித்தியாசம் இருக்கிறதால ஒரு பிரச்சனையும் இல்லை'' என்று வினய் விளக்கவும் அனைவரின் முகங்களும் பிரகாசமாகின.

'உடனே அங்கிருந்து கிளம்ப முடியுமா அண்ணா?'' என்று மனோஜ் சந்தேகம் கேட்க,

''இது நிச்சயதார்த்தம் தானேடா. அதனால கிளம்ப முடியும் என்று தான் நினைக்கிறேன். கல்யாணம் என்றால் கிளம்ப முடியாது'' என்று தம்பியிடம் கூறி யவன் மனைவியின் புறம் திரும்பி,

''ஹரிணி நீ என்ன நினைக்கிறே?'' என்று கேட்டான்.

''கிளம்பிடலாங்க. ஒண்ணும் பிரச்சனை இருக்கா துன்னுதான் நானும் நினைக்கிறேன்'' என்று கூறினாள்.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது ஹரிணியின் தந்தை போனில் அழைத்து தனது சம்பந்திக்கும் மாப்பிள்ளைக்கும் தனது இளைய மகளின் நிச்சயதார்த்தம் குறித்துப் பேசினார்.

ஹரிணி அவரிடம் இங்குள்ள நிலைமையை எடுத்து விளக்கி தாங்கள் எடுத்துள்ள முடிவையும் அவருக்குத் தெரியப்படுத்தினாள்.

''உடனே கிளம்ப முடியும் தானேப்பா?'' என்று கேட்டாள்.

''எனக்கு மாப்பிள்ளை நிலைமை புரியுதும்மா. இங்க ஃபங்ஷன் காலையிலே ஒன்பதில் இருந்து பத்து வரை தான். ஒரு வேளை இந்தியாவிலே நடந்தால் சொந்தம் பந்தம் என்று கூட்டம் எக்கச்சக்கமா இருக்கும். ஆனா

இது வெளிநாட்டிலே நடக்கப் போறதால கூட்டம் கம்மியா தான் இருக்கும். எப்படியும் பதினொன்றை மணிக்கே வந்தவங்க போயிடுவாங்க. அதனால நீங்க தாராளமா சீக்கிரமே கிளம்பிப் போயிடலாம்'' என்று சிவராமன் கூறினார்.

அவர் பேசி முடித்து வைத்தவுடன், ''சீக்கிரமா டிக்கெட் போட்டுவிடுவோம்'' என்று கூறிய வினய் தனது மடிகணினியை எடுத்து இயக்க ஆரம்பித்தான்.

''வினய் எனக்கும் சேர்த்து டிக்கெட் போடு. சம்பந் திங்கிறதால நானும் வரேன். அதான் போட்டி ஆரம் பிக்கிறதுக்கு முன்னாடியே வந்துடுவோம் என்று சொல் லுறியே. அதனால நானும் நிச்சயதார்த்தத்துக்கு வரேன்'' என்று பெரிய மகனிடம் கூறிய ரேணுகா,

''என்ன மனோ நான் போயிட்டு வரட்டுமா? உனக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்லையே?'' என்று இளைய மகனிடம் கேட்டார்.

''இல்லம்மா... அண்ணி வீட்டிலே நடக்கிற முதல் விசேஷம். அதனால நீங்களும் போயிட்டு வாங்க'' என்றதும் வினய் விமான டிக்கெட் எடுக்கும் வேலையை பார்க்க ஆரம்பித்தான்.

ப்ச்சு என்று உச் கொட்டியவனிடம் என்னவென்று ரேணுகா விசாரிக்க, ''மதியம் எந்த ஃப்ளைட்டுமே கிளம் பலைம்மா. ஒண்ணு காலையிலே இருக்கு. இல் லைன்னா சாயங்காலத்துக்கு மேல தான் இருக்கு'' என்று அவன் புலம்பவும் அனைவரும் மீண்டும் கவலைக் குள்ளானார்கள்.

அவர்கள் அனைவரையும் நிமிர்ந்து பார்த்த வினய், ''ஹேய்! எதுக்கு எல்லோரும் இப்ப சோகமா போஸ் கொடுத்துக்கிட்டு இருக்கீங்க. சிங்கப்பூரில் இருந்து தானே ஃப்ளைட் இல்லை. அந்த டைமிலே மலேசி யாவில் இருந்து சென்னைக்கு ஏதாச்சும் ஃப்ளைட் இருக்கான்னு பார்க்கிறேன்'' என்று கூறியவன் அதை ஆராய்ச்சி பண்ண ஆரம்பித்தான்.

''மலேசியா வழியா வந்தா சுத்து ரூட் தானே வினய்?'' என்று ரேணுகா சந்தேகம் கேட்க,

''சுத்த வேண்டி இருக்கும் தான். ஆனா நம்மகிட்ட வேற ஆப்ஷன் இல்லையேம்மா'' என்றான்.

''யாஹூ!'' என்று கத்தியவன், ''மலேசியாவில் இருந்து ஏர் ஏசியா ஃப்ளைட் அந்த ஊர் டைம்க்கு சாயங்காலம் நாலு மணிக்கு கிளம்பி நம்ம ஊர் டைம் சாயங்காலம் அஞ்சே காலுக்கு வருது. அதே மாதிரி அந்த ஃபிளைட்டை பிடிக்கிற மாதிரி சிங்கப்பூரில் இருந்து மலேசியா போறதுக்கும் அந்த டைம்க்கு ஃபிளைட் இருக்கு. அதனால பிரச்சனை ஒண்ணும் இல்லை'' என்றவன் எடுக்கும் பணியை தொடங்கினான்.

''ஹரிணி நீயும் எங்களோடவே கிளம்பி வரப் போறியா? இல்லை ரெண்டு மூணு நாள் கழிச்சு உங்க அபிராமி அத்தை வரும் போது அவங்களோட வந்துடு றியா?'' என்று கேட்டான்.

''இல்லைங்க. எனக்கு மட்டும் மனோ பாடுறதையும் ஜெயிக்கறதையும் பார்க்கணும் என்ற ஆசை இருக் காதா? நானும் உங்களோடவே வந்துடுறேன்'' என்றாள்.

"உங்க அம்மா அப்பா ஏதாச்சும் தப்பா நினைச்சுக்க மாட்டாங்களா?"

"நீங்களே சொன்ன மாதிரி இது நிச்சயதார்த்தம் தானே! கல்யாண சமயம் நிறைய நாள் இருப்போம்" என்று அவள் கூறியதும் மூவருக்குமான டிக்கெட்டு களை எடுத்து முடித்தான்.

மறுநாள் ஹரிணி தாங்கள் பயணச் சீட்டு வாங்கியது குறித்து தன் அத்தை அபிராமியிடம் தெரிவித்தாள்.

"என்னது சாதனாவோட நிச்சயத்தன்னைக்கு மனோ வோட ஃபைனல்ஸ் நடக்கப் போகுதா? நீங்களெல்லாம் திரும்பி வர டிக்கெட் போட்டுட்டீங்களா? உங்க யாருக்குமே என்னை கேட்கணும் என்று தோணலையா ஹரிணி? என்னை ஆசையா அம்மான்னு கூப்பிடுற பிள்ளை... அவனுக்கு ஒரு நல்லது நடக்கப் போகுது... அதை பார்க்க நான் இல்லாமலா?" என்று அங்கலாய்த்த அபிராமி,

தன் கணவனிடம் திரும்பி, "என்னங்க நாமளும் சீக்கிரமா வந்துடுவோம். டிக்கெட் போடுங்க" என்றார்.

அபிராமியின் முடிவு பாண்டியனுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவர் முகம் சுளித்தவாறு, "நாம ஏன் உடனே கிளம்பணும் அபிராமி? ரெண்டு நாள் கழிச்சு வரலாம்" என்றார்.

"ஏன் கிளம்பணுமா? ஹரிணி சொன்னது உங்க காதிலே விழலையா? மனோ ஃபைனல்ஸிலே பாடப் போறானாம்."



"பாட தானே போறான். அவன் பாடுறதை டிவியிலே பாரு. இல்லைன்னா யூ ட்யூபிலே பாரு. இது ஒரு பிரச்சனையா?"

"பாடுறதை எப்போ வேணா கேட்கலாங்க. அவன் ஜெயிக்கிறதை பக்கத்திலே இருந்து பார்க்க வேண் டாமா?"

"அவன் தான் ஜெயிக்கப் போறான்னு எப்படி அவ் வளவு உறுதியா சொல்லுறே?"

"அபசகுனமா பேசாதீங்க. அவன் பாடி நீங்க கேட்டு இருக்கீங்க தானே? அவன் தான் கண்டிப்பா ஜெயிப் பான்."

"சாரி ஒரு வேளை அதிர்ஷ்டவசமா அவனே ஜெயிக்கிறானே வச்சுக்கிட்டாலும் அவன் கூட நீ ஏன் இருக்கணும் என்று நினைக்கிறே? அவன் வீட்டை சேர்ந்தவங்க அவன் கூட இருப்பாங்க தானே? நாம உன் அண்ணன் பொண்ணு கூட இருப்போம்."

"என்னங்க இப்படிப் பேசுறீங்க? அந்த புள்ளை என்னை அம்மான்னு எவ்வளவு பாசமா கூப்பிடுறான்."

"அம்மான்னு அவன் கூப்பிட்டா அவனுக்கு நீ அம்மாவாகிடுவியா என்ன?"

"ஏங்க அப்போல இருந்து தப்புத் தப்பா பேசுறீங்க?"

"எனக்குப் பிடிக்கலை அபிராமி. அவன் உன்னை அம்மான்னு கூப்பிடுறது சுத்தமாப் பிடிக்கலை" என்று தன் வெறுப்பை பாண்டியன் உமிழ ஹரிணி அவரை குரோதத்துடன் முறைத்தாள்.

ஹரிணியின் நெருப்பு கக்கும் பார்வையை கண்ட பாண்டியன் அவள் புறம் திரும்பாது மனைவியிடம், ''நாம உன் அண்ணன் பொண்ணு விசேஷத்திலே அவங்க கூட இருக்கிறது தான் நியாயம். அதனால நாம ரெண்டு நாள் கழிச்சு சிங்கப்பூரில் இருந்து கிளம்பு வோம்'' என்று கூறினார்.

''நீங்க பொறுமையா கிளம்பி வாங்க. நான் சீக்கிரமா கிளம்பி வரத் தான் போறேன். மாப்பிள்ளைகிட்ட சொல்லி எனக்கும் ஒரு டிக்கெட் போடத் தான் போறேன்'' என்று சொன்ன அபிராமி அதே மாதிரி டிக்கெட்டை எடுக்கவும் செய்தார்.



## 22

ஒன்றரை மாதம் கழித்து நிச்சயதார்த்த விழா நல்லபடியாக நடந்தது. வினய் வீட்டின் மூத்த மாப்பிள்ளையாய் அல்லாமல் அந்த வீட்டின் மூத்த மகனாய் நின்று காரியங்களை கவனித்துக் கொண்டான்.

வந்திருந்த அனைவருமே சிவராமனிடம், ''கல் யாணம் இந்தியாவிலே நடக்கப் போகுது. பொண்ணு வீட்டுக்காரங்களும் மாப்பிள்ளை வீட்டுக்காரங்களும் சிங்கப்பூரிலே இருக்கோம். கல்யாணத்தை எப்படி நடத்தப் போறோமோன்னு புலம்புனீங்க. உங்க மூத்த மாப்பிள்ளை இருக்கிறப்ப உங்களுக்கு எதுக்கு அப்படி



ஒரு கவலை? எல்லாத்தையும் அவர் பார்த்துக்குவார்'' என்று சொல்லிவிட்டுச் சென்றனர்.

அருகிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த பாண்டியன் பெருமையாக உணர்ந்தார். வினய் பார்க்காத போது அவனை வாஞ்சையுடன் பார்வையிட்டார்.

தன்னை அவன் அப்பா என்று ஒரு முறை அழைக்க மாட்டானா என்று அவர் ஏங்கினார். பலமுறை அவ னிடம் கேட்டுப் பார்த்ததும் அவன் அவரின் கோரிக் கையை காதில் வாங்கிக் கொள்வதாக இல்லை.

ஒரே ஒரு முறை மட்டும், ''ஏன் நான் ஒருத்தன் தான் அப்படி கூப்பிடணுமா? இன்னொருத்தன் இருக்கானே! அவனை அப்படி கூப்பிடச் சொல்ல வேண்டியது தானே?'' என்று இடக்காகக் கூறினான்.

பாண்டியனால் மனோஜை தன் மகனாக இன்னமும் ஏற்க முடியவில்லை. தன் வாழ்க்கை தலைகீழாக மாறியதற்கு காரணம் மனோஜ் தான் என்று நினைத்தார்.

இதைத் தான் பழி ஓரிடம் பாவம் ஓரிடம் என்பார்கள். தப்பு செய்தது என்னவோ அவர். ஆனால் நடந்த அனைத்து தவறுகளுக்கும் மனோஜ் தான் காரணம்... ரேணுகாவின் பிடிவாதமே காரணம் என்று இன்னமும் நினைக்கிறார். நம்புகிறார்.

நிச்சய விழாவில் அனைத்தும் நன்றாக நடந்து கொண்டிருந்தது வினய் மாடிப்படியில் இருந்து கீழே உருண்டு விழும்வரை.

அவன் படியில் இருந்து கால்தவறி விழுந்த போது தன்னை நிலைநிறுத்திக் கொள்ள தனது இடது கையை

ஊன்றினான். அவனது மொத்த உடல் எடையையும் அவனது இடது கை தாங்கிப் பிடித்ததால் அவனது முழங்கை எலும்பு உடைந்தது.

அவன் கீழே விழுந்த போது மிக நெருங்கிய உறவினர்கள் மட்டுமே எஞ்சி இருந்தனர். "அச்சோ வினய்!" என்று கூச்சலுடன் அனைவரும் அவனருகே விரைந்தனர்.

அவனை கைப்பிடித்து தூக்க முயற்சித்தனர். அவனது இடது கையை ஒருவர் பற்றியதும் தன்னையும் மீறி வினய் வலியால் அலறினான்.

"அச்சோ! என்னாச்சு பிராக்சர் ஆகிடுச்சா?"

"ஹாஸ்பிட்டலுக்கு போவோம். காரை எடுங்க."

"வேற எங்கேயாச்சும் அடிபட்டிருக்கா? தலையிலே அடி ஏதும் இருக்கான்னு பாருங்க" என்று ஆளுக்கொன்றாய் கூற,

அவர்கள் அனைவரையும் பார்த்த வினய், "எனக்கு ஒண்ணும் இல்லை. தலை தரையிலே படவே இல்லை. இடது கை மட்டும் தான் வலிக்குது. ஒருவேளை பிராக்சரா இருக்கலாம். பெருசா ஒண்ணும் இல்லை. நான் சென்னையிலே போய் பார்த்துக்கிறேன். இப்போ எனக்கு ஃப்ளைட்டுக்கு டைம் ஆச்சு" என்றான்.

"டாக்டர்கிட்ட காட்டாமலே கிளம்பப் போறீங்களா? போற வழியிலே காண்பிச்சுட்டு போகலாமே மாப்பிள்ளை!" என்று ஹரிணியின் தந்தை ஆட்சேபணை தெரிவித்தார்.

ஆனால் வினய் அவரது கருத்தை ஏற்க மறுத்துவிட்டான்.



"இல்லை மாமா. நான் சமாளிச்சுடுவேன். டைம் இல்லை. நாங்க கிளம்பறோம்" என்று கூறிவிட்டான்.

ரேணுகாவிற்கும் ஹரிணிக்கும் என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவனது பேச்சிற்கு கட்டுப்பட்டு அவனுடன் கிளம்பினார்கள்.

தன்னைச் சுற்றி உள்ள உறவுகளை சமாதானம் செய்யவே வினய் தனக்கு எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கலாம் என்று பொய் உரைத்தான். அவன் தன் கை எலும்பு உடைந்திருக்கக் கூடும் என உறுதியாக நம்பினான். அவனது வலியின் வீரியம் அவனை அவ்வாறு எண்ண வைத்தது.

பாண்டியன் தவித்துப் போனார். வினய்க்கு அடிபட்டதும் அவர் அவனுடனே இந்தியா செல்ல விரும்பினார். ஆனால் அவரது டிக்கெட் அன்று இரவு செல்லும் விமானத்தில் தான் எடுக்கப்பட்டிருந்தது.

அபிராமி ஹரிணியுடனே கிளம்ப முடிவு செய்துவிட்டதால் அவரும் சிங்கப்பூரில் இரு நாட்கள் தங்கும் முடிவை மாற்றிக் கொண்டிருந்தார். ஆனால் அபிராமியோடு சேர்ந்து கிளம்ப அவருக்கு மனமில்லை. அதனால் அன்று இரவு செல்லும் விமானத்திற்கு டிக்கெட் வாங்கி இருந்தார்.

"அன்னைக்கே அபிராமி கூட சேர்ந்து டிக்கெட் எடுத்து இருக்கலாமோ? இப்ப என்ன பண்ணுறது? வேற ஏதாச்சும் ஃப்ளைட்டிலே இடம் கிடைக்குதான்னு பார்ப்போம்" என நினைத்து அவர் அதற்கான வேலைகளில் ஈடுபட்டார்.

சிங்கப்பூரில் இருந்து மலேசியாவிற்கு செல்லும் விமானத்தில் ஹரிணி வினய் அருகே அமர்ந்திருந்தாள். அபிராமியும் ரேணுகாவும் ஒன்றாக அமர்ந்து கொண்டார்கள். மலேசியா சென்று இறங்கியவுடன் வினய் மலர்விழிக்கு போன் செய்தான்.

''சின்னு...'' என்று அவன் தொடங்கியதுமே,

''ஹாய் அண்ணா! கரெக்ட் டைம்க்கு மலேசியா வந்துட்டீங்களா? அடுத்த ஃப்ளைட்டுக்கு போர்டிங் பாஸ் வாங்கிட்டீங்க தானே?'' என்று அவள் கேள்விகளை அடுக்க ஆரம்பித்தாள்.

அருகிலிருந்த மூன்று பெண்களுக்கும் காதில் விழாத தூரத்தில் இருந்தாலும் தன் குரலை தணித்துக் கொண்டு வினய் அவளுடன் பேச ஆரம்பித்தான்.

''சின்னு உன் பக்கத்திலே மனோ இருக்கானா?'' என்று கேட்டான்.

அவனது கேள்வியும் அவனது குரலுமே ஏதோ தப்பு நடந்து இருக்கு என்று மலர்விழிக்கு புரிந்து போயிற்று.

''இல்லைண்ணா. அவன் பக்கத்திலே இல்லை. சொல்லுங்க. ஏதாவது பிரச்சனையா?'' என்று விசாரித்தாள்.

''ஒரு சின்ன பிரச்சனை. எனக்கு அடிபட்டிருச்சு சின்னு.''

''அடிபட்டிருச்சா? ஏதாச்சும் ஆக்ஸிடெண்ட்டா அண்ணா? எப்படி ஆச்சு? ஹாஸ்பிட்டல் போனீங்களா?'' என்று அவள் பதற,



''நான் சொல்லுறதை குறுக்க பேசாமல் கேளு. ஆக்ஸிடெண்ட் இல்லை. படியிலே இருந்து கீழே விழுந்துட்டேன். இடது கையிலே செம வலி. அநேகமா எலும்பு உடைஞ்சிருக்கும் என்று நினைக்கிறேன். இவங்ககிட்ட எல்லாம் பிராக்சரா இருக்கும். சென்னையிலே போய் பார்த்துக்கலாம் என்று சொல்லி கூட்டிட்டு வந்துட்டேன். ஆனா நேரம் ஆக ஆக வலி அதிகமா இருக்கு. ஏதாச்சும் பெயின் கில்லர் போட்டுக்கட்டுமா? அதை கேட்கத்தான் உனக்கு போன் பண்ணினேன்'' என்று அவன் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே,

''யாருகிட்ட சின்னு பேசிக்கிட்டு இருக்க?'' என்று கேட்டுக் கொண்டே மனோஜ் அவளருகில் வந்தான்.

சட்டென்று வாயில் பொய் வராமல், ''வினய் அண்ணா'' என்ற உண்மையே மலர்விழியின் வாயில் இருந்து வெளியே வந்தது.

''அண்ணனா?'' என்று உற்சாகமாகக் கேட்டவன் அவளது கையில் இருந்த கைப்பேசியை பறித்து.

''அண்ணா மலேசியா வந்துட்டியா? சிங்கப்பூரில் இருந்து கிளம்பும் முன்னாடி போன் பண்ணுவேன்னு பார்த்தேன். லேட் ஆகிடுச்சு? அதான் போன் பண்ணலையா?'' என்று அவன் பங்கிற்கு மனோஜ் கேள்விகளை அடுக்கினான்.

தன் குரலில் முயன்று உற்சாகத்தை வரவழைத்துக் கொண்ட வினய், ''ஆமாடா மனோ! மலேசியா வந்துட்டேன். நல்லா ப்ராக்டீஸ் பண்ணிக்கிட்டு இருக்கியா? ஆல் தி பெஸ்ட். ஃப்ளைட்டுக்கு டைம் ஆச்சு. இன்னும்

கொஞ்ச நேரத்திலே உன் பக்கத்திலே இருப்பேன். பை. போனை வைக்கிறேன்'' என்று கூறி வைத்துவிட்டான்.

இதற்கு மேல் மலர்விழியிடம் பேச முடியாது. சென்னை விமான நிலையத்தில் இருந்து பேசிக் கொள்ளலாம் என நினைத்த வினய் அந்த அழைப்பைத் துண்டித்தான்.

''அச்சோ! பாதிப் பேச்சிலே வச்சுட்டாரே! இப்ப என்ன செய்யுறது? ஆண்டவா! எங்க அண்ணனை நீ தான் காப்பாத்தணும்'' என்று மலர்விழி இறைவனை பிரார்த்திக்க ஆரம்பித்தாள்.

அண்ணன் ஏன் எனக்கு பேசாமல் மலர்விழிக்கு போன் செய்தார் என்றெல்லாம் மனோஜ் எண்ணிப் பார்க்கவில்லை. எங்களுக்கு விஷயம் சொல்வதற்கு போன் செய்து இருக்கிறான் என்ற அளவிலேயே அவன் அதை எடுத்துக் கொண்டான்.

மலேசிய விமானத்தில் ஏறும் பொழுதே தருண் தன் அப்பாவிடம் செல்ல வேண்டும் என்று அடம்பிடிக்க ஆரம்பித்துவிட்டான். பெண்கள் மூவருக்கும் ஒன்றாக அமர இடம் கிடைத்திருந்தது. வினய் அவர்களுக்கு எதிரே உள்ள இருக்கையில் அமர்ந்திருந்தான்.

அப்பாவிடம் செல்ல வேண்டும் என்று அடம்பிடித்த தருணை அடக்க வழியில்லாமல் ஹரிணி அவனது முதுகில் ஒரு அடிபோட்டாள்.

வினய் வலியால் அவஸ்தைபடும் பொழுது ஏழு மாதக் குழந்தையை அடக்கிப் பிடிக்க முடியாது என நினைத்தே அவள் தன் மகனை தன்னோடு வைத்துக் கொள்ள வேண்டும் என நினைத்தாள்.



ஆனால் குழந்தைக்கு இதெல்லாம் தெரியுமா என்ன? ஏற்கனவே சிணுங்கிக் கொண்டிருந்த தருண் ஹரிணி கொடுத்த அடியால் பெருங் குரலில் அழுது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தான்.

''ஷ்! ஏன் அவனை அடிச்சே? நான் பார்த்துக்கிறேன். அவனை கொண்டா இப்படி!'' என்று கூறிய வினய் மகனை மனைவியின் கைகளில் இருந்து வாங்கிக் கொண்டான்.

அப்பாவிடம் வந்த உடனே அவனது அழுகை நின்றாலும் விசும்பல் நிற்கவில்லை. தந்தையின் மார்பில் நன்றாக முகத்தை புதைத்துக் கொண்டான்.

''தருண் குட்டி எதுக்கு அழறீங்க? சமத்துக் குட்டி இல்லையா? அழக்கூடாதுடா. தருணுக்கு தூக்கம் வருதா? அப்பா மேல சாய்ந்து தூங்குங்க'' என்று கூறிய வினய் மகனை முதுகில் லேசாக தட்டிக் கொடுக்க ஆரம்பித்தான்.

அரை மணி நேரத்திலேயே தருண் நன்றாக உறங்கிவிட்டான். தூங்கும் மகனை ஹரிணியிடம் ஒப்படைத்துவிடலாம் என நினைத்த வினய் அவள் புறம் பார்வையை திருப்ப அவளோ உறங்கிக் கொண்டிருந்தாள்.

கடந்த இரு நாட்களாக அவள் சரியாகத் தூங்கவில்லை. அவளது தங்கை இரவு ஒரு மணி வரை கதை பேசிக் கொண்டிருந்தாள். அதற்கு மேல் தருணும் தன் பங்கிற்கு அவளைச் சரியாக உறங்கவிடவில்லை. விழாவில் வேலை செய்தது, தொடர் பயணம் என அனைத்தும் ஹரிணியை உறங்க வைத்திருந்தது.

வினய்க்கு அடிபட்டதினால் அவளது மனதில் கவலை சூழ்ந்திருந்த போதும் இரு நாட்களாக தூங்காததால் அவள் அசந்து தூங்கினாள்.

வினய்க்கு அவளது தூக்கத்தை கலைக்க மனமில்லை. ஆனால் வலி அதிகமாகிக் கொண்டே போனதால் மகனை அவனால் சரியாக பிடித்துக் கொள்ள முடியவில்லை.

வினய் அபிராமியையும் ரேணுகாவையும் பார்க்க... அவர்களும் கண் மூடி இருந்தனர்.

'ரெண்டு பேரும் தூங்கறாங்களா இல்லை சும்மா கண்ணை மூடி உட்கார்ந்திருக்காங்களான்னு தெரியலையே!' என அவன் நினைத்துக் கொண்டிருக்கும் போது சரியாக ரேணுகா கண்விழித்தார்.

''தருண் தூங்கிட்டானா வினய்? நான் வச்சுக்கிறேன்'' என்று கூறி தன் இருக்கையில் இருந்து எழுந்து பேரனை வாங்கிக் கொண்டார்.

அந்த நான்கு மணி நேர பிரயாணத்தில் வினய் மிகுந்த அவஸ்தைக்குள்ளானான். கையின் வலி அதிகரித்துக் கொண்டே போனது. தருணை கீழே விழாமல் பிடித்துக் கொள்வதற்காக அவன் தனது இரு கைகளையும் பயன்படுத்தியதால் இடது கை மொத்தமும் வீங்க ஆரம்பித்துவிட்டது.

அவன் அணிந்திருந்தது அரை கை வைத்த டி-ஷர்ட் என்பதால் அவனது வீக்கம் வெளியே நன்றாகத் தெரிந்தது.

'அடடா! புல் ஹேண்ட் ஷர்ட் போட்டிருந்தால் இப்படி வெளியே தெரியாதே? இப்போ எல்லோரும்



பார்த்துட்டு என்ன சொல்லுவாங்கன்னு தெரியலையே? எப்படி இவங்களைச் சமாளிக்கிறது?' என நினைத்து குழம்பிப் போனான்.

விமானம் தரை இறங்கி அவர்கள் விமானத்தில் இருந்த வெளியேறி பெட்டியை எடுக்கக் காத்திருக்கும் போது ரேணுகா மகனது கையை பார்த்துவிட்டார்.

''ஐயோ! என்னதிது? என்னடா வினய் இப்படி வீங்கி இருக்கு?'' என்று அவர் அலறவும், ஹரிணியும் அபிராமியும் அவன் அருகில் வந்து அவனது கையை பார்வையிட்டனர்.

ரேணுகாவைப் போலவே அபிராமியும் பதறிப் போனவராய், ''இவ்வளவு தூரம் வீங்கிப் போயிருக்குன்னா ரொம்ப வலிக்குமே மாப்பிள்ளை? ஏன் எங்ககிட்டே சொல்லாமல் மறைச்சிட்டீங்க?'' என்றார்.

''வினய் ஹாஸ்பிட்டலுக்கு போகலாம் வா'' என்று ரேணுகா கண்டிப்பான குரலில் கூறினார்.

''போட்டிக்கு டைம் ஆச்சும்மா. ஹாஸ்பிட்டலுக்கு போனால் நேரம் ஆகிடும்'' என்றான்.

''அதுக்காக எவ்வளவு நேரம்டா நீ வலியோட போராடுவ?'' என்று அதட்டிய ரேணுகா,

''நீ ஏன் ஹரிணி சும்மா இருக்க? அவன்கிட்ட சொல்லு!'' என்று மருமகளை பார்த்துக் கூறினார்.

ஹரிணியோ கணவன் புறம் திரும்பவே இல்லை. எங்கே அவனை பார்த்தால் ஹாஸ்பிட்டலுக்கு போயிட்டு அப்புறமா போட்டி நடக்கும் இடத்துக்கு போகலாம் எனதான் நினைத்ததை தன் கண்கள் காட்டிக் கொடுத்து

விடுமோ என பயந்து அவனுக்கு எதிர்புறமாக தனது முகத்தை திருப்பிக் கொண்டாள்.

''நான் சொல்றதை கேட்க மாட்டியாடா?'' என்று ரேணுகா புலம்பிக் கொண்டே வர அவர்கள் பெட்டிகளை எடுத்துக் கொண்டு விமான நிலையத்தை விட்டு வெளியேறினர்.

'வினய் தம்பி! இந்தப் பக்கமா வாங்க'' என்று பழகிய குரல் கேட்டு வினய் திரும்பிப் பார்க்க அங்கே ரத்தினம் நின்று கொண்டிருந்தார்.

''அங்கிள் நீங்களா? இங்கே யாரைப் பார்க்க வந்தீங்க?'' என்று வினய் கேட்க,

''உங்களை கூட்டிட்டு போக தான் தம்பி உங்க காரை எடுத்துக்கிட்டு வந்தேன். மலர் போகச் சொன்னாள். அவளோட பிரண்ட்ஸ் ரெண்டு பேரை அனுப்பி இருக்காள்'' என்று அவர் அருகில் நின்று கொண்டிருந்த அந்த இரு இளைஞர்களை அவனுக்கு அறிமுகப் படுத்தினார்.

அந்த இரு இளம் மருத்துவர்களும் அவனின் கையை பார்வையிட்டனர்.

''நீங்க மலர்கிட்டே சொன்ன மாதிரி எலும்பு உடைஞ்சு போயிருக்க சான்ஸ் அதிகம். சர்ஜரி பண்ணனும் என்று தான் நினைக்கிறேன். பெயின் கில்லர் கேட்டீங்கன்னு மலர் சொன்னாள். எக்ஸ் ரே எடுத்துப் பார்த்துட்டு உடனே ட்ரீட்மென்ட் ஆரம்பிக்கிறது பெட்டர்'' என்று அவர்கள் அபிப்ராயம் தெரிவித்தனர்.



''எலும்பு உடைஞ்சிடுச்சா? உனக்கு அப்பவே தோணுச்சாடா? அப்புறம் ஏன்டா அங்கிருந்து கிளம்பி வந்தே? மரியாதையா ஹாஸ்பிட்டலுக்கு வா'' என்று ரேணுகா கோபமாக இரைந்தார்.

அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த ஹரிணியோ மௌனமாக வேறு புறம் பார்த்துக் கொண்டு நின்றாள். அவள் தனது கையை வைத்து முகத்தை துடைப்பதை பார்க்கும் பொழுதே அவள் அழுகிறாள் என்பது வினய்க்கு புரிந்தது.

ஆனால் அந்த நிலையிலும் மனோவின் போட்டிக்கு நீங்க போக வேண்டாம் என்று அவள் சொல்லாமல் இருந்தது வினய்க்கு சந்தோஷமாக இருந்தது.

'கணவனின் ஆசையே முக்கியம் என நினைத்து ஹரிணி அமைதி காத்து தன் கடமையை சரி வர நிறைவேற்றிவிட்டாள்.

இப்போது நான் என்ன செய்ய வேண்டும்? நானும் ஒரு நல்ல கணவனாக நடந்து கொள்ள வேண்டுமே! இப்பொழுது நான் மனோஜ்க்கு மட்டும் சொந்தமானவன் இல்லை. ஹரிணியின் கணவன், தருணின் தகப்பன்.

எனக்காக கண்ணீர் சிந்தும் என் ஹரிணியின் கண்ணீர் துடைப்பது தான் என் முதல் கடமை!' என நினைத்த வினய் மலர்விழியின் நண்பர்களைப் பார்த்து,

''ஹாஸ்பிட்டலுக்கு போகலாம். எந்த ஹாஸ்பிட்டலுக்கு மலர் போகச் சொன்னாள்?'' என்று கேட்டான்.

அவன் கேட்டதும் அந்த மருத்துவன், "மலர் லைனிலே இருக்காள். அவகிட்டே பேசுங்க" என்று கூறி வினய் முன் தனது கைப்பேசியை நீட்டினான்.

வினய் காதில் வைத்து, "சின்னு!" என்றதும்,

"அண்ணா என் பிரண்டு விஷயம் சொன்னான். நீங்க இங்க வர வேண்டாம். நான் மனோவை எப்படியாச்சும் சமாளிச்சுக்கிறேன். நீங்க ஹாஸ்பிட்டலுக்கு போங்க" என்றாள்.

"ஹாஸ்பிட்டலுக்கு போறதா முடிவு பண்ணிட்டேன் சின்னு. எந்த ஹாஸ்பிட்டலுக்கு போகட்டும்? உனக்கு யாராச்சும் தெரியுமா? இல்ல அப்பல்லோவுக்கு போகட்டுமா?" என்று கேட்டான்.

"அண்ணா எங்க ப்ரோபஸர் ஒருத்தர் நம்ம ஏரியாவிலே தான் க்ளினிக் வச்சு இருக்கார். ரொம்ப ஃபேமஸ். கைராசிக்காரர் என்று பேர் வாங்கினவர். நீங்க கூட பார்த்து இருப்பீங்களே!" என்று அவள் அந்த மருத்துவமனை பெயரைச் சொன்னதும்,

"ஓ! அந்த க்ளினிக்கா? எனக்கு தெரியும் சின்னு" என்றான்.

"நான் அவரை நேரிலே போய் பார்த்து பேசி வச்சுட்டேன். நீங்க என் பிரண்ட்ஸோட கிளம்பிப் போங்க. அவங்க பார்த்துப்பாங்க" என்றதும் சரி எனக் கூறி அழைப்பை துண்டித்தான்.

"நம்ம போன் எதையும் ஸ்விட்ச் ஆன் பண்ண வேண்டாம். கொஞ்ச நேரம் கழிச்சு ஆன் பண்ணி ஃப்ளைட் லேட் என்று மனோக்கு சொல்லிக்கலாம்"



என வினய் கூற அனைவரும் அதற்கு ஒப்புக் கொண்டனர்.



## 23

அவர்கள் அனைவரும் இரு கார்களில் மருத்துவ மனைக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

தங்களது காரில் ஹரிணி ஏறியதும் ரத்தினம் அவளிடம், "பின்னாடி சீட்டிலே ஒரு பை இருக்கு பாரும்மா. அதிலே தருண் குட்டிக்கு இட்லி இருக்கும்மா. மலர் கொடுத்து அனுப்பினாள். வெந்நீரும் இருக்கு. பால் கலக்கணும் என்றால் கலந்துக்க சொன்னாம்மா" என்றார்.

மலர்விழியின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பார்த்து ஹரிணி சந்தோஷமாக உணர்ந்தாள்.

வினய் அவளருகே அமர்ந்ததும், "தாங்க்ஸ் வினு" என்று மெதுவாக முணுமுணுத்தாள்.

"ஹனி நான் மனோவுக்கு அண்ணனா இருக்கலாம். அதுக்காக உன்னோட ஹஸ்பண்ட் என்பதை மறந்திட மாட்டேன். நீயும் எனக்கு ரொம்ப ரொம்ப முக்கியம்" என்று மெதுவான குரலில் கூறினான்.

அவள் அவனைப் பார்த்து முறுவலித்துவிட்டு அவனது கைகளை மெதுவாக தடவியவாறே, "ரொம்ப வலிக்குதா?" என்று கேட்டாள்.

"ரொம்ம்ம்ப..." என்று அவன் அழுத்திக் கூறியதில் இருந்து அவனது வலியின் வீரியத்தை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

மருத்துவமனை சென்று அவர்கள் வைத்தியம் பார்க்க ஆரம்பித்தனர்.

மனோஜ் தனது கைப்பேசியை எடுத்துப் பார்ப்பதும் வினய் எண்ணிற்கு அழைத்துப் பார்ப்பதுமாக நேரத்தை கடத்திக் கொண்டிருந்தான்.

போட்டி ஆரம்பிக்க இன்னும் பதினைந்து நிமிடங்களே பாக்கி என்ற நிலையில் அவன் நேராக மலர்விழியின் முன் சென்று அவளது கண்களை உற்று நோக்கியவாறே, "அண்ணனுக்கு என்னாச்சு சின்னு?" என்று கேட்டான்.

"அண்ணனுக்கு என்ன ஆகணும்? என்ன கேட்கிறே மனோ?" என்று அவள் திருப்பிக் கேட்க,

"ரொம்ப ஸ்மார்ட்டா ஆன்ஸர் பண்ணுறதா நினைப்பா சின்னு உனக்கு? அண்ணன் ஏன் இன்னும் வந்து சேரலை? அவன்கிட்ட இருந்து போனும் வரலை" என்று கடுகடுத்தான்.

"இதென்ன கேள்வி மனோ? ஃப்ளைட் இன்னும் வந்து சேர்ந்து இருக்காது."

"நான் நெட்டிலே செக் பண்ணிட்டேன் சின்னு. ஃப்ளைட் லேன்ட் ஆகிடுச்சு. நீ வேற அப்பப்போ தனியா போய் பேசிக்கிட்டு இருக்கே. உண்மையை சொல்லு. வினு எங்கே? அவனுக்கு என்ன ஆச்சு?" என்று கறார் குரலில் கேட்டும் மலர்விழி உண்மையை மறைக்கவே பார்த்தாள்.



"என் கண்ணைப் பார்த்துப் பேசு சின்னு. முதல்ல உன் செல்போனை என்கிட்ட தா" என்று கேட்டு வாங்கி அதில் பதிவாகி இருந்த அழைப்புகளை பார்வையிட ஆரம்பித்தான்.

அதில் அவனது குடும்பத்தை சேர்ந்த யாருடைய எண்ணுமே பதிவாகவில்லை என்றதும் குழம்பிப் போனான்.

அதிக அழைப்புகள் அவளது தந்தையின் எண்ணிற்கு சென்று இருக்கிறது என்பதை கண்டவன் அவரது அலைபேசி எண்ணிற்கு அழைப்பு விடுத்தான்.

தன் கைப்பேசியில் இருந்து அவனால் எதையும் கண்டு கொள்ள முடியாது என்று தெனாவட்டாக மலர்விழி நின்று கொண்டிருந்தாள்.

ஆனால் அவன் யாரையோ அழைத்து கைப்பேசியை காதில் வைக்கவும் 'ஐயோ! யாரை கூப்பிடுறான்னு தெரியலையே!' என மனதிற்குள் புலம்பியவாறு அவனையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்.

அந்தப் பக்கம் அழைப்பை ஏற்ற ரத்தினம் பேசுவது யார் என்று தெரிந்து கொள்ளாமலேயே, "மலர், வினய் தம்பிக்கு ஆபரேஷன் பண்ண அவரை கூட்டிட்டு போயிட்டாங்க. இப்போ நீ யார்கிட்ட பேசணும்? நான் யார்கிட்ட போனை கொடுக்கணும்?" என்று கேட்டார்.

"ஆபரேஷனா? அண்ணனுக்கு என்ன ஆச்சு அங்கிள்?" என்று அவன் கேட்டதும் ரத்தினத்திற்கு வியர்க்க ஆரம்பித்தது. அவர் படக்கென்று அலைபேசியை துண்டித்தார்.

"இப்பவாச்சும் உண்மையை சொல்லு சின்னு? என்ன நடந்தது?" என்று மனோஜ் கோபமாக இரையவும் மலர்விழி நடந்ததை தெரிவித்தாள்.

"எலும்பு உடைஞ்சிடுச்சா? அங்கேயே ஏன் ஹாஸ்பிட்டலுக்கு போகலை? எனக்காகவா ஃபிளைட் ஏறி வந்தான்? இன்னும் எனக்காக என்ன பண்ணப் போறான்? அவனுக்கு தான் தம்பி பாசம் கண்ணை மறைச்சதுன்னா எங்க அம்மா எப்படி விட்டாங்க? அட்லீஸ்ட் அண்ணி யாச்சும் அவனை தடுத்து நிறுத்தி இருக்கலாம் தானே!" என்று புலம்பியவன்,

"சரி வா கிளம்பலாம்" என்றான்.

"கிளம்புறதா? எங்க கிளம்பணும் மனோ?" என மலர்விழி கேட்டதும்,

"என்ன சின்னு புரியாத மாதிரி கேட்கிறே? ஹாஸ்பிட்டலுக்கு போகலாம் வா" என்றான்.

"ஹாஸ்பிட்டலுக்கா? போட்டி இன்னும் கொஞ்ச நேரத்துல ஆரம்பிச்சிடும் மனோ."

"போட்டியா? எங்க அண்ணனுக்கு ஆபரேஷன்னு தெரிஞ்ச பிறகு நான் போட்டியிலே பாடுவேன் என்று நீ எப்படி எதிர்பாக்கிறே சின்னு?"

"இது ஃபைனல்ஸ் மனோ" என்று மலர்விழி வலியுறுத்த,

"சோ வாட்? நான் பாடி ஜெயிச்சா தான் உனக்கு சந்தோஷமா? சாதாரண மனோவை உனக்குப் பிடிக்காதா?" என்று அவளைக் குற்றம் சாட்டினான்.

"எதாச்சும் உளறாதே மனோ" என்று அவள் கடுப்புடன் மொழியவும்,



"அப்படின்னா வா போகலாம்" என்றான்.

"ஒரு நிமிஷம் இரு" என்றவள் தனது தந்தைக்கு அழைத்தாள்.

"யார்கிட்ட பேசப் போறே?" என்று மனோஜ் கடுப்புடன் கேட்க,

"அண்ணிகிட்ட பேசப் போறேன். உனக்கு விஷயம் தெரிஞ்சுடுச்சுன்னா உன் கூடப் பேசணும் என்று அண்ணி சொன்னாங்க. அவங்ககிட்ட பேசு" என்றவள்,

அந்தப் பக்கம் அழைப்பு ஏற்கப்பட்டதும், "அப்பா போனை அண்ணிகிட்ட கொடுங்க" என்றாள்.

அழைப்பை ஏற்ற ஹரிணி, "நான் தான் மலர் பேசுறேன். மனோக்கு விஷயம் தெரிஞ்சிடுச்சுன்னு உங்க அப்பா சொன்னார்" என்றாள்.

"ஆமா அண்ணி. அவன் போட்டியிலே பாட மாட்டானாம்.

"நீ போனை மனோகிட்ட கொடு" என்று ஹரிணி கூறியதும் மலர்விழி கைப்பேசியை மனோஜிடம் நீட்டினாள்.

"ஹலோ அண்ணி! நீங்களாச்சும் அவனைத் திட்டி அங்கேயே ட்ரீட்மென்ட் எடுக்க வச்சிருக்கலாம் இல்ல!" என்று மனோஜ் வருத்தத்துடன் தழுதழுத்தான்.

"மனோ அழாதீங்க. குரல் கெட்டுப் போயிடும். அப்புறமா நல்லா பாட முடியாது."

"என்ன அண்ணி நீங்களும் சின்னு மாதிரியே பேசுறீங்க."

''இதை நானும் மலரும் மட்டும் சொல்லலை. உங்க அண்ணனும் இதையே தான் சொல்லி இருக்கார். உங்க செல்லுக்கு ஒரு எம்.எம்.எஸ் அனுப்பி வச்சிருக்கேன். அதை திறந்து பாருங்க. நல்லா பாடுங்க. நான் இங்க ஹாஸ்பிட்டலில் இருக்கும் டிவியிலே நீங்க பாடுறதை பார்ப்பேன். ஆல் தி பெஸ்ட்'' என்று சொல்லி அழைப்பை துண்டித்தாள்.

அவள் கூறியபடி அவனது கைப்பேசியில் வந்திருந்த அந்த வீடியோவை திறந்து பார்த்தான். திரையில் வினய் தோன்றினான்.

''ஹாய் மனோ! என்னடா போட்டியிலே பாட மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கிறியா? நீ இன்னைக்கு போட்டியிலே கண்டிப்பா கலந்துக்கிறே! இது என்னோட ஆசை, கட்டளை, எப்படி வேணா எடுத்துக்கோ. நான் ஆபரேஷன் முடிஞ்சு கண் முழிச்சு பார்க்கும் போது நீ ஜெயிச்ச செய்தியை நான் கேட்கணும். உன் அண்ணனுக்காக இதை நீ செய்ய மாட்டியாடா? எது பத்தியும் யோசிக்காமல் நல்லா பாடு. ஆல் தி பெஸ்ட்!'' என்று கூறி இருந்தான்.

அண்ணனின் பேச்சை மனோஜால் தட்ட முடியவில்லை. அதே சமயம் இருக்கும் மனநிலையில போட்டியில் எப்படி பாடுவது என்றும் தெரியவில்லை.

அவனது பரிதவிப்பை பார்த்த மலர்விழி அவனிடம், ''மனோ கண்ணை மூடி கொஞ்ச நேரம் தியானம் பண்ணு. மனசை ஒருமுகப்படுத்து'' என்றாள்.

அவனும் அவ்வாறே செய்ய ஆரம்பித்தான். முதல் பாடல் கர்நாடக சங்கீதப் பாடல். அதை மிக நன்றாகவே பாடினான். கடவுளை நினைத்து உருகிக் கரைந்து பாடினான்.

பாடி முடிந்து ஐந்து நிமிடங்கள் கழிந்த பின்பே அவனால் மேடையின் பின்புறம் செல்ல முடிந்தது.

''ரொம்ப சூப்பரா பாடின மனோ'' என்று மலர்விழி உற்சாகமாகப் பாராட்டினாள்.

''அண்ணிக்கு போன் பண்ணு'' என்று அவன் கூறவும் அவனது அலைபேசி சிணுங்கவும் சரியாக இருந்தது.

''அண்ணி தான் கூப்பிடுறாங்க'' என்று மலரிடம் கூறியவன்,

''சொல்லுங்க அண்ணி. அண்ணனுக்கு ஆபரேஷன் முடிஞ்சிடுச்சா?'' என்று கேட்டான்.

''இன்னும் இல்லை மனோ. சூப்பரா பாடினீங்க. இதே மாதிரி அடுத்த பாட்டையும் பாடினீங்கன்னா கண்டிப்பா நீங்க தான் வின்னர்'' என்று ஹரிணி அவனை உற்சாகப்படுத்தினாள்.

''அண்ணி...'' என்று இழுத்து நிறுத்தியவன், ''என்னால அடுத்த பாட்டை பாட முடியும் என்று தோணலை அண்ணி'' என்றான்.

''ஏன் மனோ அப்படிச் சொல்லுறீங்க?'' என்று அதிர்ச்சியுடன ஹரிணி வினவ,

''முதல் பாட்டு பக்தி பாட்டா இருந்துச்சு. அதனால எப்படியோ சமாளிச்சு பாடிட்டேன். ஆனா அடுத்த பாட்டு சந்தோஷமான பாட்டு. அதை என்னால கண்டிப்பா பாட முடியாது அண்ணி. நான் பேசாமல்

ஹாஸ்பிட்டலுக்கு வந்துடுறேன். என்னால இங்க இருக்க முடியலை'' என்றான்.

தன் கணவனின் இடத்தில் இருந்து மனோஜிற்கு அறிவுரை கூறும் பொறுப்பு தனக்கு வந்துவிட்டதை ஹரிணி உணர்ந்து கொண்டாள். சில நொடிகள் அமைதியாக இருந்தவள் தனது கருத்தை அழுத்தமாகக் கூற ஆரம்பித்தாள்.

''மனோ நீங்க இதை வெறும் போட்டியா பார்க்கறீங்க. அதனால் தான் வாய்ப்பைத் தவற விட்டுட்டு பாதியி லேயே வரத் துடிக்கிறீங்க. ஆனா உங்க அண்ணன் இதை உங்களோட வாழ்க்கையா பார்த்தார். அதனால தான் தன்னோட வலியையும் பொருட்படுத்தாது உங்க கூட இருக்கிறதுக்காக சிங்கப்பூரில் இருந்து கிளம்பி வந்தார். இன்னைக்கு நீங்க ஜெயிச்சு உங்களுக்குன்னு ஒரு பேரையும் புகழையும் சம்பாதிக்கணுங்கிறது உங்க அண்ணனோட ஆசை மட்டுமில்ல... அவரோட லட் சியமே அது தான்.

நீங்களே கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க. அவர் ஐ.ஐ.டி வாய்ப்பை எல்லாம் தவறவிட்டது எதுக்காக? உங்களுக் காக... உங்களோட எதிர்காலம் நல்லா இருக்கணுங் கிறதுக்காக. இப்போ அப்படி ஒரு வாய்ப்பு அமைஞ் சிருக்கு. அதை நீங்க நழுவ விடலாமா?

நீங்க இங்க வந்து செய்யுறதுக்கு ஒண்ணுமில்ல. நானே சும்மா தான் இருக்கேன். உங்க புரோகிராமை தான் டிவியிலே பார்த்துக்கிட்டு நின்னுக்கிட்டு இருக்கேன். பாடி முடிச்சு பரிசோட வாங்க மனோ.



ஒரு வேளை நீங்க பாடாமல் போனால்... கை வீக் கத்தை மறைச்சுட்டு போட்டி நடக்கிற இடத்துக்கு போயி ருக்கணுமோ... அப்படி போகாமல் நாம ஆபரேஷன் பண்ணப் போனது தான் தப்போன்னு உங்க அண்ணன் வாழ்க்கை முழுசும் புலம்புவார்.

அப்படி ஒரு உறுத்தலை உங்க அண்ணனுக்கு கொடுத்துடாதீங்க. ஆபரேஷன் முடிஞ்சு வந்த பின்னால அவர் முகத்திலே நான் சிரிப்பை தான் பார்க்க விரும்பு றேன் மனோ. குற்ற உணர்ச்சியை இல்லை!

உங்க அண்ணனுக்காக... உங்களுக்காக தன் வாழ்க் கையை பறிகொடுத்த உங்க அம்மாவுக்காக... நீங்க ஜெயிக்கணும் மனோ'' என்று கூறினாள்.

உணர்ச்சி வசப்பட்டதால் ஹரிணி ரேணுகாவின் வாழ்க்கை பறிபோனதாக உளறினாள். ஆனால் மனோஜ் ஹாணியை விட உணர்ச்சி வசப்பட்டிருந்ததால் அதை கவனிக்கத் தவறினான்.

இதுநாள் வரை வினய் தனக்காக எதையெல்லாம் இழந்திருக்கிறான் என்று நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''சரிங்கண்ணி. நான் இதுல ஜெயிக்கிறதுலதான் எங்க அண்ணாவோட சந்தோஷமே அடங்கி இருக் குன்னா... நான் கண்டிப்பா ஜெயிச்சுட்டு வரேன்'' என்று உறுதியுடன் கூறினான்.

''தட்ஸ் த ஸ்பிரிட் மனோ. இது நாள் வரைக்கும் உங்களோட கால்களை பத்தி நீங்க யார்கிட்டவும் எதுவும் சொன்னதில்லை. மத்தவங்களோட அனுதாபம்

தேவையில்ல லன்னு நினைச்சீங்க இல்ல... அதே மாதிரி உங்க அண்ணனுக்கு அடிபட்டிருக்கு. ஹாஸ்பிட்டலில் இருக்கார் என்று வெளியே சொல்லாதீங்க. உங்க முகத்திலும் எதையும் காண்பிச்சுக்காமல் முகத்தை சந்தோஷமா வச்சுக்கிட்டு பாடுங்க. ஆல் தி பெஸ்ட்."

"தாங்க்ஸ் அண்ணி."

"உங்க அம்மாகிட்ட பேசுறீங்களா மனோ? நான் போனை அவங்ககிட்ட கொடுக்கிறேன்" என்றாள்.

"இவ்வளவு நேரமும் எங்க அம்மாகிட்ட தானே பேசிக்கிட்டு இருந்தேன்" என்று அவன் உணர்ந்து கூற,

அந்தப் பக்கம் ஹரிணி அவனது பதிலால் திகைத்துப் போய் நின்றிருந்தாள்.

"உண்மையை தான் அண்ணி சொல்லுறேன். எங்க அண்ணனை நான் எப்பவுமே என்னோட அப்பாவா பார்த்து இருக்கேன். இன்னைக்கு அவனோட இடத்திலே இருந்து நீங்க என்னை வழி நடத்தும் போது நீங்க எனக்கு ஒரு அம்மாவா தெரியுறீங்க" என்றான்.

"மனோ... ரொம்ப தாங்க்ஸ் மனோ" என்று ஹரிணி தழுதழுத்தாள்.

"இருங்க. ரேணும்மா உங்ககிட்ட பேசணுமாம்..." என்று கூறி கைப்பேசியை தன் மாமியாரிடம் கொடுத்தாள்.

"மனோ..." என்றதுக்கு மேல் ரேணுகாவால் எதுவுமே பேச முடியலை.

'அண்ணன் ரொம்ப அவஸ்தைப்பட்டானா? ரொம்ப வலிச்சதுன்னு சொன்னானாம்மா?"



"சொல்லலையேடா... எதையுமே சொல்லலை. அங்கேயே எலும்பு உடைஞ்சிருக்கும் என்று அவனுக்கு தோணியிருக்கு. அப்படி இருந்தும் ஹாஸ்பிட்டலுக்கு கூடப் போகாமல் கிளம்பி இருக்கான்" என்று ரேணுகா புலம்ப,

"ரேணும்மா. இப்ப எதுக்கு அதை எல்லாம் பேசுறீங்க?" என்ற ஹரிணி அதட்டினாள்.

"அவன் மட்டுமா... ஹரிணி கூட போட்டிக்கு போக வேண்டாம். ஹாஸ்பிட்டலுக்கு போவோம் என்று ஒரு வார்த்தை சொல்ல மாட்டேனுட்டா மனோ. இவங்க ரெண்டு பேருக்காவது நீ ஜெயிச்சே ஆகணும் மனோ" என்றவர் கைப்பேசியை மருமகளிடம் கொடுத்துவிட்டு நகர்ந்தார்.

"மனோ ரேணும்மா போயிட்டாங்க. நீங்க பாடி முடிச்சதுக்கு அப்புறமா போன் பண்ணுங்க. பை" என்று கூறி அலைபேசியை துண்டித்தாள்.

அண்ணனுக்கும் அண்ணிக்கும் தன் மேல் உள்ள அக்கறையில் மெய் சிலிர்த்து நின்றிருந்த மனோ தான் அடுத்து செய்ய வேண்டியதைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தான்.

வெற்றி ஒன்றையே இலக்காகக் கொண்டு அவன் தனது அடுத்த பாடலைப் பாடத் தயாரானான்.

மலர் கொடுத்தனுப்பி இருந்த இட்லியை தருணுக்கு முதலில் ஊட்டிய ஹரிணி சிறிது இடைவெளி விட்டு பாலைக் கரைத்துப் புகட்டவும் அவன் நிம்மதியாக உறங்க ஆரம்பித்துவிட்டான்.

அதனால் அவனைப் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு இல்லாமல் ரேணுகாவும் ஹரிணியும் நிம்மதியாக அறைக்கும் ஆபரேஷன் தியேட்டருக்குமாக மாறி மாறி நடைபோட்டனர்.



# 24

முகத்தில் எந்த சலனமும் இன்றி வரவழைத்த உற்சாகத்துடன் மனோஜ் இரண்டாவது பாடலை பாடி முடித்த போது மக்களின் கைதட்டலால் அரங்கமே அதிர்ந்தது. விசில்கள் பறந்தன. அந்த ஆரவாரத்தை நேரில் கண்ட மலர்விழியின் கண்களில் கண்ணீர் ஊற்றாகப் பெருக ஆரம்பித்தது.

இனி உலகம் அவனை அனுதாபமாய் பார்க்காமல் பிரம்மிப்புடன் திரும்பிப் பார்க்கும் என்று நினைத்த பொழுது அவளது மனதில் நிம்மதி உணர்வு பரவியது.

மேடையை விட்டு பின்புறம் வந்த மனோ மலர்விழியை இறுக அணைத்துக் கொண்டு, "நான் நல்லா பாடினேனா சின்னு? ஜெயிச்சிடுவேனா? அண்ணன் சந்தோஷப்படுவானா?" என்று கேட்டான்.

அவன் தன்னை முதன் முதலாக அணைத்த உணர்வின்றி ஒரு குழந்தையை சமாதானப்படுத்தும் தாயாய் மாறிய மலர், "நீ கண்டிப்பா ஜெயிப்ப மனோ.



மக்களோட கைத்தட்டலை கேட்ட இல்ல... வினய் அண்ணா இந்த வீடியோவை பார்த்து ரொம்ப சந்தோஷப்படுவார்" என்று கூறிக் கொண்டே அவனது முதுகை வருடிக் கொடுத்தாள்.

அவளிடமிருந்து விலகியவன், "அண்ணிக்கு போன் போடு" என்றான்.

மலர்விழி ஹரிணியை அழைக்க...

"என்ன மலர் பாட்டு முடிஞ்சிடுச்சா? இன்னும் டிவியிலே மனோவோட பாட்டு வரலை. விளம்பரம் தான் ஓடிக்கிட்டு இருக்கு. எப்படி பாடினார்? மக்களோட ரெஸ்பான்ஸ் என்ன?" என்று மூச்சுவிடாமல் அவள் கேள்விகளை அடுக்க,

"அண்ணி ரிலாக்ஸ் ஆகுங்க. மனோ பாடி முடிச்சாச்சு. மக்கள் கைதட்டல் ஓசையிலே இடி இடிச்ச எஃபெக்ட் டுன்னா பார்த்துக்கோங்க" என்றவள் மனோவிடம் கைப்பேசியை நீட்டினாள்.

"அண்ணி..." என்றதுக்கு மேல் அவனால் ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை.

"ரொம்ப சந்தோஷம் மனோ. இது போதும்" என்று கூறிய ஹரிணி,

"ஆபரேஷன் நல்லபடியா முடிஞ்சிருச்சு மனோ. இன்னும் அவரை பார்க்கவிடலை. அவருக்கும் மயக்கம் தெளியணும். நீங்க வரும் போது தான் என்னாலயும் அவரைப் பார்க்க முடியும் என்று நினைக்கிறேன்."

"ஓ! இப்பவும் அண்ணன்கிட்ட பேச முடியாதா? எனக்கு எப்படா அங்க வருவோம் என்று இருக்கு அண்ணி."

''இன்னும் கொஞ்ச நேரம் தானே மனோ'' என்று சமாதானப்படுத்தியவள்,

''மனோ உங்க பாட்டு ஆரம்பிக்கப் போகுது. பாட்டை பார்த்ததுக்கு அப்புறம் உங்ககிட்ட பேசுறேன்'' என்று கூறி அழைப்பை துண்டித்தாள்.

மனோவின் பாட்டையும் அதற்கு கிடைத்த ஆரவார மான வரவேற்பையும் பார்த்த ஹரிணியும் ரேணுகாவும் சந்தோஷத்தில் வாயடைத்துப் போனார்கள். அபிராமியும் ஆனந்தப்பட்டார்.

''ரேணும்மா கண்டிப்பா நம்ம மனோ ஜெயிப்பார்'' என்று ஹரிணி கூறவும் ரேணுகாவும் தலையாட்டி ஆமோதித்தார்.

சிறிது நேரம் கழித்து பாண்டியன் வேக வேகமாக வந்தார்.

'இவர் எப்படி இப்போ வந்தார்? இவருக்கு நைட் தானே ஃபிளைட். இந்த ஹாஸ்பிட்டலில் நாங்க இருக்கும் விஷயம் இவருக்கு எப்படி தெரிஞ்சது? அப்பா சொல்லி இருப்பாரோ?' என்று குழம்பிய ஹரிணி அவரிடம் ஒன்றும் கேட்க வேண்டாம் எனத் தீர்மானித்தாள்.

''என்னாச்சு ஹரிணி? ஆபரேஷன் நல்லபடியா முடிஞ்சிடுச்சா? வினய் கண் முழிச்சு பார்த்தானா?'' என்று அவர் கேள்விகளாக அடுக்க ஹரிணி அவரை அமைதியாகப் பார்த்த வண்ணம் நின்றாள்.

'பெரிய மகனுக்கு கையிலே அடிபட்டதும் நெஞ்சம் துடிக்குதோ? சதை ஆடுதோ? இதே சதை அன்னைக்கு மனோவுக்கு அடிபட்ட போது ஏன் ஆடலை?''



அன்னைக்கும் மனோவுக்காக இவர் கவலைப் படலை. இப்பவும் மனோவோட வெற்றியில் பங் கெடுத்துக் கொள்வோம் என்று இவருக்கு தோணலை.

அன்னைக்கு அத்தை கூப்பிட்டப்போ வர மாட்டேன்னு சொன்ன மனுஷன் இன்னைக்கு பதறி அடிச்சிட்டு வந்து நிக்கிறாரா? என்று ஹரிணி மனதுக்குள் அவரை திட்டிக் கொண்டு வெளியே கை கட்டி அமைதியாக நின்றாள்.

ரேணுகா என்றுமே அவரை ஒரு பொருட்டாக மதித்ததில்லை. பாண்டியனும் ரேணுகாவிடம் இதுவரை பேச முற்பட்டதில்லை. அதனால் ஹரிணி பதில் அளிக்கவில்லை என்றதும் அபிராமி எங்கே என்று கண்களால் தேடினார்.

அவரை நோக்கி வந்து கொண்டிருந்த அபிராமியிடம், ''எங்கே போன அபிராமி?'' என்று கேட்டார்.

''பாத்ரூம் போனேங்க. ஆமா நீங்க எப்படி இங்கே வந்தீங்க? வரப் போறதா என்கிட்டே சொல்லவே இல்லை'' என்று அபிராமி கேட்க ஹரிணி அவரை முந்திக் கொண்டு பதிலளித்தாள்.

''வீட்டு மாப்பிள்ளைக்கு அடிபட்டதும் மாமாக்கு கையும் காலும் ஓடி இருக்காது அத்தை'' என்று அந்த மாப்பிள்ளை என்ற வார்த்தையை அவள் அழுத்திக் கூற பாண்டியன் மௌனமாக கண் மூடி நின்றார்.

அதையெல்லாம் கவனிக்காத அபிராமி, ''மாப்பிள் ளைக்கு அடிபட்டிருச்சுன்ன உடனே அண்ணன் உங்களை அனுப்பி வச்சுட்டாரா? நாளைக்கு தான்

அவரால கிளம்ப முடியும் என்று சொல்லிக்கிட்டு இருந்தார். நீங்களாச்சும் முன்னாடி போங்கன்னு சொல்லிட்டாரா?'' என்று கேள்வி கேட்டு தனக்கு தானே பதிலும் அளித்துக் கொண்டார்.

அபிராமி கேட்ட கேள்விகளுக்கு பதில் கூற வேண்டிய தேவையில்லை என நினைத்த பாண்டியன், 'வினய்க்கு இப்போ எப்படி இருக்கு?'' என்று கேட்டார்.

''ஆபரேஷன் நல்லபடியா முடிஞ்சதுங்க. இன்னும் அவருக்கு மயக்கம் தெளியலை. அதனால இன்னும் யாருமே பார்க்கலை'' என்றார்.

''ரொம்ப பேர் இங்க தங்க முடியாது அத்தை. அதனால நீங்க வேணா வீட்டுக்கு கிளம்புங்க'' என்று ஹரிணி கூறவும்,

''இல்லை. இப்போ கிளம்ப வேண்டாம். வினய் கண்ணு முழிச்சதும் பார்த்துட்டு அதுக்கு அப்புறமா கிளம்பலாம் அபிராமி'' என்று பாண்டியன் வேகமாக பதில் அளித்தார்.

''எல்லோரையும் பார்க்க விடமாட்டாங்க அத்தை. இன்னும் கொஞ்ச நேரத்திலே மனோவும் மலரும் வந்துடுவாங்க. வீட்டு மனுசங்கன்னு நாங்களே நாலு பேர் இருக்கோம். நாங்களே அவரை பார்க்க முடியுமோ என்னவோ. நாளைக்கு ரூமுக்கு மாத்தினதுக்கு அப்புறமா வந்து நீங்க பாருங்க அத்தை'' என்று ஹரிணி கூறியதும் அபிராமிக்கு அவள் கூறியது சரி என்றே தோன்றியது.

அன்று அபிராமியிடம், ''மனோ ஜெயிக்கிறதை பார்க்க அவங்க வீட்டு மனுஷங்க பக்கத்தில இருப்பாங்க. நாம எதுக்கு?'' என்று பாண்டியன் கேட்ட கேள்வியை ஹரிணி அப்படியே இன்று திருப்பிப் படித்தாள்.



அதை உணராத பாண்டியன், 'அந்த மலர்விழி வீட்டு மனுஷி. நான் அந்நியனா?' என்று மனதுக்குள் வெகுண்டார். ஆனால் அவரால் வெளியே ஒன்றும் கூற முடியவில்லை.

''வீட்டுக்குப் போகலாம் வாங்க. நாம நாளைக்கு காலையிலே சாப்பாடு எடுத்துக்கிட்டு வரலாம்'' என்று கூறிக் கொண்டே அபிராமி பாண்டியனைக் கூட்டிச் சென்றுவிட்டார்.

'இவர் வீட்டில் இருந்து சாப்பாடா? இதுக்கு ஏதாச்சும் வழி பண்ணணுமே!' என்று யோசித்த ஹரிணி, 'ரத்தினம் அங்கிளை வச்சு காலையிலே ஹோட்டலிலே சாப்பாடு வாங்கிக்கலாம்' என்று திட்டமிட்டாள்.

அபிராமியும் பாண்டியனும் சென்றதும் மீண்டும் அவளும் ரேணுகாவும் தொலைக்காட்சியின் முன் சென்று நின்றனர்.

அதில் வெற்றியாளனாக மனோஜின் பெயரை கேட்டவுடன் அளவில்லா மகிழ்ச்சி அடைந்தனர்.

''இதுமட்டும் ஹாஸ்பிட்டலா இல்லாம இருந்திருந்தா கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணி இருக்கலாமில்ல ரேணும்மா'' என்று ஹரிணி ஆர்ப்பரித்தாள்.

மனோஜிடம் இருந்து அழைப்பு வரவும், ''மனோ தான் ரேணும்மா'' என்றவள், ''கங்கிராட்ஸ் மனோ. நாங்க டிவியிலே பார்த்துட்டோம். இருங்க உங்க அம்மாகிட்ட கொடுக்கிறேன்'' என்று ரேணுகாவிடம் கொடுத்தாள்.

"ரொம்ப சந்தோஷம்டா மனோ. எப்ப வரே?"

"இதோ கிளம்பிட்டேன்மா. பிரண்டோட காரிலே நானும் சின்னுவும் கிளம்பிட்டோம். அவ அப்பாகிட்ட தகவல் சொல்லிடுறீங்களா?" என்றான்.

"சரிடா. நேரிலே வா. அதுக்குள்ள அண்ணனும் கண்ணு முழிச்சிடுவான்" என்றார்.

ரேணுகாவிடம் கேட்டு விபரம் அறிந்து கொண்ட ஹரிணி, "அங்கிள் கீழ நின்னுட்டு இருந்தார். நான் போய் பார்த்து மனோ ஜெயிச்சதையும் இதையும் சொல்லிட்டு வரேன்" என்று கூறி வெளியேறினாள்.

விபரம் அறிந்த ரத்தினத்திற்கு அளவில்லாத மகிழ்ச்சி.

"இது வினய் தம்பியோட நீண்ட நாள் கனவும்மா. ரொம்ப சந்தோஷமா இருக்கு. வினய் மாதிரி ஒரு பாசமான பிள்ளையை நான் பார்த்ததில்லைம்மா. நீ எந்த ஜென்மத்திலே செஞ்ச புண்ணியமோ உனக்கு இப்படி ஒரு புருஷன் அமைஞ்சிருக்கார். நீங்க ரெண்டு பேரும் நல்லா இருக்கணும்மா" என்று கண் கலங்கினார்.

மனோஜும் மலரும் மருத்துவமனைக்கு வந்து சேர்ந்த சில நிமிடங்களிலே வினய் கண் விழித்து விட்டான் என்றும் அவனை போய் பார்க்கலாம் என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

"நார்மலா நாங்க நிறைய பேரை உள்ளே விட மாட்டோம். சீஃப் டாக்டர் மலருக்கு தெரிஞ்சவங்க என்பதால் விடுறோம். ஒவ்வொருத்தரா போங்க. ரொம்ப பேசாதீங்க. பக்கத்திலே உள்ள பேஷண்ட்ஸுக்கு



தொந்தரவா இல்லாம பார்த்துக்கோங்க" என்றதும் அவர்கள் தலையாட்டி சம்மதம் தெரிவித்தனர்.

ஹரிணியை முதலில் போகச் சொல்லலாம் என ரேணுகா நினைக்க...

ஹரிணியோ, "மனோ நீங்க முதல்ல போங்க. நானோ ரேணும்மாவோ போனாலும் அவர் உங்களை பத்தி தான் கேட்பார். அதனால நீங்களே முதல்ல போயிட்டு வாங்க" என்று அனுப்பி வைத்தாள்.

அதன்படி மனோ உள்ளே சென்று தன் அண்ணனை பார்த்தான். மருந்தினால் உண்டான மயக்கத்திலும் வலியிலும் வினய் சோர்ந்து போய் படுத்திருந்தான். அவனது இடது கையில் கட்டுப் போட்டு கழுத்தில் கட்டி தொங்கவிட்டு இருந்தனர்.

இது மாதிரி ஒரு நிலையில் தன் அண்ணனை என்றுமே பார்த்திராத மனோஜுக்கு கண்கள் கலங்கியது. மனோஜ் வினய் அருகே சென்று அவனது வலக் கரத்தைப் பற்றவும் கண் விழித்த வினய் மனோஜை பார்த்தவுடன் கண்கள் பிரகாசமுற, "ஜெயிச்சுட்டே தானேடா?" என்று கேட்டான்.

"ஜெயிச்சுட்டேண்ணா!" என்று மனோஜ் கூறியதும், "அது போதும்டா!" என்றவன் கண்களை மூடிக் கொண்டான்.

மனோஜ் அடுத்துக் கேட்ட கேள்விகளுக்கு வினய் பதில் அளிக்கவில்லை என்றதும் மனோஜ் அருகே இருந்த மருத்துவரை அழைத்துக் கேட்க அவர் வந்து பரிசோதித்துவிட்டு,

''பயப்பட ஒண்ணும் இல்லை. அவர் தூங்க ஆரம்பிச்சுட்டார். காலையிலே வந்து பாருங்க'' என்றார்.

மனோஜ் வெளியே வந்து தகவல் கூறவும் அனைவரும் அமைதியாக சில நொடிகள் உள்ளே சென்று பார்த்துவிட்டு வந்தனர்.

''என்ன சின்னு அண்ணன் ஒண்ணுமே பேசாமல் தூங்கிட்டான்'' என்று மனோஜ் புலம்ப,

''ரெண்டு நாளா சரியா தூங்கி இருக்க மாட்டார். தொடர்ந்து டிராவல் பண்ணி இருக்கார். வலி ஒரு பக்கம்... இப்போ போட்ட ஊசிகளோட தாக்கம் ஒரு பக்கம். தூங்காமல் என்ன செய்வார்? நல்லா தூங்கி எழட்டும். அப்போ தான் தெம்பா இருப்பார்'' என்றாள்.

''நானும் ஹரிணியும் இங்கே இருக்கோம். நீ வீட்டுக்கு போயிட்டு காலையிலே வா மனோ'' என்று ரேணுகா கூறவும்,

''இல்லைம்மா. நீங்களும் அண்ணியும் இங்க இருங்க. நான் பக்கத்திலே உள்ள ஹோட்டலில் ரூம் போட்டு அங்கே தங்கிக்கிறேன். சின்னுவும் அங்கிளும் நம்ம காரிலே வீட்டுக்கு கிளம்பட்டும்'' என்றான்.

''நீ சொல்றதும் சரி தான்டா மனோ'' என்று ரேணுகா அவனது கருத்தை ஆதரிக்கவும், அதன்படியே செய்வது என்று தீர்மானம் ஆயிற்று.

ஹரிணி மனோஜை பார்ப்பதும் மலரை பார்ப்பதுமாக கண்ணாலே கபடி ஆட மலர்விழி மனோஜை முன்னே நடக்கவிட்டு பின் தங்கினாள்.

''என்ன அண்ணி? என்கிட்டே ஏதாச்சும் சொல்லணுமா?'' என்று மெதுவான குரலில் கேட்க,



''மலர் எங்க அத்தை நாளைக்கு காலையிலே சாப்பாடு கொண்டு வரேன்னு சொன்னாங்க...'' என்று ஹரிணி கூறிக்கொண்டு இருக்கும் போதே,

''அவங்களுக்கு முன்னாடி நான் சாப்பாடு கொண்டு வந்துடுறேன் அண்ணி'' என்று மலர்விழி கூறினாள்.

''யெஸ். நான் சொல்ல வந்ததும் அதே தான் மலர்'' என்று ஹரிணி புன்னகைக்கவும் மலர்விழி அங்கிருந்து சென்றாள்.

காலையில் கண் விழித்த ஹரிணி பல் துலக்கி முடிக்கவும் வினய் அழைப்பதாக செவிலி ஒருவர் வந்து தெரிவித்தார்.

''ரேணும்மா...'' என்று ஹரிணி ஆரம்பிக்கவும்,

''தருண் தூங்கிக்கிட்டு இருக்கான்மா. நான் தருணை பார்த்துக்கிறேன். நீ போய் அவனைப் பாரு'' என்று அனுப்பி வைத்தார்.

மனைவியை கண்ட வினய் புன்னகைத்தான்.

''எப்படி வினு இருக்கீங்க?'' என்று மெல்லிய குரலில் அவள் வினவ,

''சுத்தி யாரும் இல்லைன்னா உன்னை கிஸ் அடிக்கிற மூடோட இருக்கேன் ஹனி'' என அவன் மெதுவான குரலில் பதில் அளிக்கவும்,

''லொள்ளை பாரு'' என்று ஹரிணி கூறினாள்.

''ஹேய்! உன்னை தானே கிஸ் அடிக்கணும் என்று சொன்னேன். வேற யாரையும் கிஸ் அடிக்கணும் என்றா சொன்னேன்? இதிலே லொள்ளு எங்கே இருந்து வந்தது?'' என்று விளக்கம் கேட்டான்.

"உங்களுக்கு அந்த ஆசை வேற இருக்கா?"

"சே! சே! எனக்கு ஹனி கொடுக்க என் ஹனி இருக்கும் போது மத்தவங்களோட சர்க்கரை தண்ணி எனக்கு எதுக்கு?" என்று கேட்டு கண் சிமிட்டி அவளை வெட்கப்பட வைத்தான்.

வினய் இயல்பாக பேசியதில் இருந்தே அவனது உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் இருப்பது ஹரிணிக்கு புரிந்தது.

"ஹனி நேத்து மனோ ஜெயிச்சுட்டானா? அவன் என்கிட்டே வந்து ஜெயிச்சுட்டேன் என்று சொன்ன மாதிரி எனக்கு தோணுது. அது நிஜமா? கனவா?"

"நீங்க ரொம்ப நாளா கனவு கண்டீங்க. அதை அவர் நிஜமாக்கிட்டார் வினு. அவர் நேத்து ஜெயிச்சுட்டார்" என்றதும், அவனது முகம் பிரகாசமானது.

"நீ டிவியிலே பார்த்தியா ஹனி? அம்மா என்ன சொன்னாங்க?"

"ரேணும்மாவும் நானும் பார்த்தோம். அவங்களுக்கும் ரொம்ப சந்தோஷம் வினு" என்றதும் கண் மூடி சில நொடிகள் அமைதியாக இருந்தான்.

'திரும்பவும் தூங்கிட்டாரா?' என நினைத்த ஹரிணி அவனது நெற்றியில் கை வைத்ததும் கண் விழித்தவன், "தருண் எங்கே?" என்று கேட்டான்.

"இன்னும் தூங்குறான். அவனுக்கும் ரெண்டு நாள் அலைச்சல் டயர்டா இருக்கு போல. நேத்திலிருந்து நல்ல தூக்கம். உங்களுக்கு காலையிலே சாப்பாடு கொடுக்கலாம் என்று சொன்னாங்க. பசிக்குதா?"



"இல்ல ஹனி. இன்னும் கொஞ்ச நேரம் ஆகட்டும். சாப்பாடு யார் செய்யப் போறாங்க?"

"எங்க அத்தை கொண்டு வரப் போறதா சொன்னாங்க. அது சரி வராதுன்னு நான் மலர்கிட்ட சாப்பாடு பத்தி பேசினேன். அவளே காலையிலே சாப்பாடு கொண்டு வந்துடுறேன்னு சொன்னாள்."

"ஓ.கே." என்றான்.

"மேடம் நீங்க கொஞ்சம் வெளியே இருக்கீங்களா. நாங்க செக் பண்ணணும்" என்று ஒரு நர்ஸ் வந்து ஹரிணி வெளியேறினாள்.

அவள் தனது அறைக்கு வந்த போது மலர்விழி சாப்பாட்டுடன் வந்திருந்தாள்.

"என்ன மலர் தூங்கவே இல்லையா?" என்று ஹரிணி ஆச்சரியமாகக் கேட்க,

"நல்லாக் கேளு. நீ வரதுக்கு முன்னாடி நானும் இதே கேள்வியை தான் கேட்டுக்கிட்டு இருந்தேன். எல்லோருக்குமே சாப்பாடு கொண்டு வந்து இருக்காள். வினய்க்கும் தருணுக்கும் மட்டும் வீட்டு சாப்பாடு கொடுத்தால் போதாதா?" என்று ரேணுகா அங்கலாய்க்க,

"ரேணும்மா சொல்லுறது சரி. ஏன் மலர் அம்மாவை கஷ்டப்படுத்தினே?" என்று ஹரிணி கேட்டாள்.

"அண்ணி இதெல்லாம் நல்லா இல்ல சொல்லிட்டேன். நானே காலையிலே எழுந்து சமைச்சு எடுத்திட்டு வந்து இருக்கேன். நீங்க என்னடான்னா எங்க அம்மா சமைச்சதா சொல்லுறீங்க" என்று சிறு பிள்ளை குரலில் அவள் குற்றம் சாட்ட,

''காலையிலேயே எழுந்து சமைச்சது எங்களுக்காகவா? இல்லை மனோவுக்காகவா?'' என்று மென் குரலில் கண் சிமிட்டியபடி ஹரிணி கேட்க,

''அண்டிப்பா அந்த அமுல் பேபிக்கு இல்லண்ணி'' என்று ரேணுகாவிற்கு கேட்காதவாறு மென்குரலில் கூறியவள் அதன்பின் சப்தமாக,

'நான் தருண் குட்டிக்காக தான் வேகமாக ஓடி வந்தேன். அது மட்டுமில்லை. உங்க அத்தை சமைக்கிறதுக்கு முன்னாடி சாப்பாடு வந்துடுச்சுன்னு சொல்லிட்டா அவங்க சங்கடப்பட வேண்டி இருக்காதேன்னு தோணுச்சு'' என்றாள்.

''ரொம்ப கரெக்ட்டா சொன்னே. இரு. அத்தைக்கு ஒரு போன் போடுறேன்'' என்றவள் அபிராமியை அழைத்து மலர் சாப்பாடு கொண்டு வந்ததால் அவர் கொண்டு வரத் தேவையில்லை என்று கூறினாள்.

அவரும் குளித்து முடித்து சிறிது நேரம் கழித்து மருத்துவமனைக்கு வருவதாக வாக்களித்தார்.

''என் மலர் அவரை எப்போ ரூமுக்கு ஷிப்ட் பண்ணுவாங்க?''

''அண்ணன் நல்லா இருந்தா சீக்கிரமா அனுப்பிடுவாங்க அண்ணி. நான் சீஃப் டாக்டர்கிட்ட பேசுறேன்'' என்று மலர்விழி சொல்லிக் கொண்டு இருக்கும் போதே மனோஜ் வந்தான்.

''என்னடா நீயும் தூங்கவே இல்லையா?'' என்று ரேணுகா கேட்க,



''நீங்க எல்லோரும் முழிச்சு தானே இருக்கீங்க. அப்புறமா என்னை பார்த்து மட்டும் எதுக்கு இந்த கேள்வி கேட்கறீங்க?'' என்று கிண்டல் பண்ணியவன்,

''அண்ணன் தெளிவாப் பேசுறான். இப்ப தான் நிம்மதியா இருக்கு'' என்றான்.

''இப்போ போய் பார்த்தியா?'' என்று ரேணுகா கேட்க,

''அவனை பார்க்காமல் உங்களை வந்து பார்த்து எனக்கு என்ன ஆகப் போகுது?'' என்று அவன் மீண்டும் கிண்டல் பண்ண,

''எல்லாம் என் நேரம்டா'' என்று ரேணுகா அலுத்துக் கொண்டார்.

''சின்னு சாப்பாடு எடுத்துட்டு வரேன்னு சொல்லிட்டு இங்க வந்து என்ன செய்யுறே? வீட்டிலே இருந்து ஆன்ட்டிக்கு ஹெல்ப் பண்ணலாம் இல்ல'' என்று அவன் கூறியதும் மலர்விழி அவனை முறைத்தாள்.

என்னவென்று அவன் புரியாமல் விழிக்க ஹரிணி அவனுக்கு விளக்கினாள்.

''அப்போ சாப்பாடு ரெடியா? பிளேட் இருக்கா? எனக்கு சாப்பாடு வை. செம பசி'' என்றவன் கை கழுவ சென்றான்.

நான் சொன்னது தானே நடக்குது என்பது போல் ஜாடை காட்டிய ஹரிணி அங்கிருந்து வெளியேறினாள். ரேணுகாவும் மகனை பார்த்து வருவதாகக் கூறிச் சென்றார்.



# 25

மலர்விழி மனோஜுக்கு சாப்பாடு பரிமாறி அவன் சாப்பிட்டு முடிக்கும் வரை மனோஜ் தான் பேசிக்கொண்டே இருந்தான். அதுவும் தன் அண்ணனின் உடல் நிலையை பற்றியே ஆயிரம் கேள்விகளை எழுப்பிக் கொண்டிருந்தான்.

பத்து நிமிடங்கள் கழித்து ஹரிணி உள்ளே வரும் போது அவர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்ட ஹரிணி, 'அடப்பாவிங்களா! இதையா இவ்வளவு நேரமும் பேசுனீங்க?' என்பது போல் பார்த்தாள்.

அவன் சாப்பிட்டு முடித்து கை கழுவிவிட்டு வெளியே சென்று அமர்ந்தான்.

''ஏன் மலர் வினுவோட ஹெல்த் பத்தியா இவ்வளவு நேரமும் பேசுனீங்க?'' என்று ஹரிணி கிசுகிசுப்பாய் வினவ,

''நான் தான் சொன்னேனே அண்ணி. அவன் ஒரு அமுல் பேபின்னு'' என்று சிரித்துக் கொண்டே மலர் கூற,

''மனோ அமுல் பேபி இல்ல மலர். சரியான அண்ணன் பேபி'' என்று கூறிய ஹரிணி தன் தலையில் அடித்துக் கொண்டாள்.



அன்றே வினய் அறைக்கு மாற்றப்பட்டான். அவனுக்கு கையில் தான் அடி என்பதால் அவன் எழுந்து நடமாட ஆரம்பித்தவுடன் அவனை அறைக்கு மாற்றிவிட்டார்கள்.

அறைக்கு வந்த வினய், ''நல்லவேளை வேகமாக ரூமுக்கு போகச் சொல்லிட்டாங்க. இன்னும் ஒரு நாள் முழுசும் அங்க இருக்கச் சொன்னாங்கன்னா செம போரா இருந்திருக்கும். அதுவும் என்னை சுத்தி பேஷண்ட்ஸ், மருந்து, ஊசின்னு... ஐயோ!'' என்று உடலை சிலிர்த்துக் கொண்டான்.

''தருண் குட்டி அப்பாகிட்ட வாங்க!'' என்று மகனை பார்த்து வினய் கூற,

''நோ!!!'' என்று பல குரல்கள் ஒன்றாக ஒலித்தன.

''அண்ணா இன்னும் கொஞ்ச நாளைக்கு நீ பிள்ளையை தூக்க வேண்டாம். உன்னால பேலன்ஸ் பண்ண முடியாமல் பிள்ளையை கீழே போட்டுவிட்டாய்'' என்று மனோஜும்,

''அவன் உன் கையிலே உதைச்சிடுவான்டா'' என்று ரேணுகாவும் கூறினர்.

இதையே தான் நாங்களும் சொல்ல வந்தோம் என்பது போல் ஹரிணியும் மலரும் நின்றிருந்தனர். தன் தலையை ஆட்டி வினய் தன் சம்மதத்தை தெரிவித்தான்.

வினய் படுக்கையில் அமர்ந்து கொண்டு, ''டேய் மனோ! உன்னோட புரோக்ராமை...'' என்று சொல்ல ஆரம்பித்தவனை இடைவெட்டிய மனோஜ்.

''உனக்கு காட்டுறதுக்காகத் தான் யூ ட்யூபை ஓபன் பண்ணிக்கிட்டு இருக்கேன்'' என்றான்.

அவன் அதை இயக்கி அந்த மடிகணினியை வினய்க்கு காட்ட....

''அம்மா மடியிலே வைடா!'' என்றவன் தாயின் மீது சாய்ந்து கொண்டு பார்க்க ஆரம்பித்தான். ரேணுகாவின் மற்றொரு புறம் மனோஜ் அமர்ந்து கொண்டான். அவர்கள் மூவரும் சேர்ந்து அந்த நிகழ்ச்சியை பார்க்க ஆரம்பித்தார்கள். அவர்கள் மூவரையும் முகத்தில் முறுவலுடன் ஹரிணியும் மலரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மனோஜ் பரிசு பெறுவதை கண்களில் திரண்ட நீருடனும் முகம் கொள்ளா பூரிப்புடனும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அறைக்கு வந்த நர்ஸ் ஒருவர் மனோவை பார்த்துவிட்டு, ''சார் நீங்க தானே நேத்து பாட்டுப் போட்டியிலே ஃபர்ஸ்ட்டா வந்த மனோஜ்? ரொம்ப சூப்பரா பாடுறீங்க சார். ஆமா இங்க எங்க வந்தீங்க?'' என்று கேட்டதும்,

''எங்க அண்ணன்'' என்று வினய்புறம் மனோஜ் கை காட்ட,

''உங்க அண்ணனா இவரு?'' என்று கேட்டுவிட்டு சில மருந்துகள் அடங்கிய தட்டு ஒன்றை அந்த அறையில் வைத்துவிட்டு நகர்ந்தான்.

வினய் கட்டிலில் இருந்து இறங்கி மனோஜை பார்த்து, [illegible] என்றான்.



''என்னண்ணா?'' என்று கேட்டுக் கொண்டே அருகே வந்தவனை இறுக அணைத்தான்.

''அண்ணா கை வலிக்கப் போகுது. பார்த்து... மெதுவா...'' என்று மனோஜ் பதற,

''அடப்போடா! கையாவது ஒண்ணாவது. இந்த நாளுக்காக தான்டா நான் பல வருஷமா காத்து இருந்தேன். இனிமேல் உன்னை யாரும் வினய் தம்பியான்னு கேட்க மாட்டாங்க. என்னைத் தான் மனோஜ் அண்ணான்னு கேட்பாங்க'' என்று சந்தோஷமாகக் கூற,

''அடப் போண்ணா!'' என்று மனோஜ் கூறிக் கொண்டு இருக்கும் போதே அபிராமியும் பாண்டியனும் உள்ளே வந்தார்கள்.

''காலையிலேயே அங்கிள் வந்தார் மாப்பிள்ளை. ஆனா ஐ.சி.யுவிலே உள்ள விடலைன்னு சொல்லி திரும்பிட்டார்'' என்று அபிராமி கூறினார்.

''வாங்க ஆன்ட்டி! வாங்க அங்கிள்!'' என்று வினய் வரவேற்க,

'இவன் ஒருத்தன் அங்கிள் அங்கிள் என்று சொல்லி என் உயிரை வாங்குவான். என்னைக்காச்சும் என்னோட கன்ட்ரோலை இழந்துட்டு அவன் சட்டையை கொத்தாப் பிடிச்சு நான் உனக்கு அங்கிளாடா? உன் அப்பாடான்னு கத்தப் போறேன்' என்று பாண்டியன் மனதுக்குள் கறுவிக் கொண்டு மகனது கண்களை உற்று நோக்கினார். அவன் சலனமே இல்லாமல் அவரைப் பார்த்தான்.

அப்படிக் கத்தினால் அவமானம் அவனுக்கல்ல அவருக்கு தான் என்று உணராமல் மனதுக்குள் மகனை திட்டிக் கொண்டிருந்தார்.

''எங்க அண்ணன் இன்னும் ரெண்டு நாள் கழிச்சு வரேன்னார்'' என்று அபிராமி கூறவும்,

''நான் தான் மாமாவை வர வேண்டாம் என்று சொன்னேன் இல்ல. ஏன் ஹரிணி நீ உங்க அப்பாகிட்ட பேசலையா?'' என்று ஹரிணியிடம் கேட்க,

''நான் எங்க அப்பாகிட்ட பேசினேன். நான் பேசினதால தான் அடிச்சுப் பிடிச்சு இன்னைக்கே கிளம்பாமல் இன்னும் ரெண்டு நாள் கழிச்சு அவர் மட்டும் வரதா முடிவு பண்ணி இருக்கார். அதை என்னால மாத்த முடியாதுங்க'' என்று சொன்னதும் வினய் அமைதியாக இருந்தான்.

அடுத்த நாள் மாலை மனோஜ் வீட்டிற்கு சென்று விட்டு மருத்துவமனைக்கு திரும்பினான். அறைக்குள் நுழைந்தவன் வினய் அங்கு இல்லாததைக் கண்டு,

''அண்ணன் எங்கேம்மா?'' என்று வினவினான்.

''ஏதோ செக் அப்புக்கு கூட்டிட்டு போயிருக்காங்கடா'' என்று ரேணுகா கூறவும்,

''செக் அப்புக்கு அண்ணன் போயிருக்கும் போது உனக்கு இங்க என்ன வேலை?'' என்று அந்த அறையில் இருந்த மலர்விழியை பார்த்து மனோஜ் கேட்க,

''நான் என்ன இந்த ஹாஸ்பிட்டலில் வேலையா செய்யுறேன்? சும்மா சும்மா அண்ணன் பின்னாடி நான் போனால் அதை அவங்க தொந்தரவா நினைக்க மாட்டாங்களா?'' என்று அவள் எதிர் கேள்வி கேட்டதும்,

''நல்லா வக்கணையா பேசக் கத்து வச்சிருக்காள்'' என்று முணுமுணுத்துக் கொண்டான்.



''எங்க அண்ணனுக்கு என்ன செய்யணும் என்று எனக்கு தெரியாது! பெருசா சொல்ல வந்துட்டான்'' என்று மலர்விழி முணுமுணுத்தாள்.

முதலில் மனோஜ் மலரை விரட்டியதையும் பின்பு முணுமுணுத்ததையும ஹரிணி பார்த்தாள். மனோஜை மாதிரியே மலரும் மெதுவான குரலில் தான் பேசினாள். ஆனால் அவள் ஹரிணியின் அருகில் இருந்ததால் அவளுக்கு மலர் கூறியது தெளிவாகக் கேட்டது. மலரின் கிண்டலைக் கேட்ட ஹரிணி புன்னகைத்துக் கொண்டாள்.

'அண்ணி சிரிக்கிறாங்க. என்னை பத்தி தான் ஏதோ சொல்லி இருக்காள். இரு. இன்னைக்கு உன்னை வம்புக்கு இழுத்து கொஞ்ச நேரம் டென்ஷன் பண்ணலை' என்று மனதுக்குள் கூறிக் கொண்டவன் ரேணுகாவிடம் சென்று,

''அம்மா நான் பாட ஆரம்பிச்சதில் இருந்து எனக்கு லேடிஸ் ஃபேன்ஸ் ஜாஸ்தி ஆகிட்டாங்கம்மா. அதுலயும் நேத்து பார்த்தீங்கன்னா எத்தனை பேர் என்னை சுத்திச் சுத்தி வந்தாங்க தெரியுமா? ரெண்டு பொண்ணுங்க என்னை லவ் பண்ண ரெடியா இருக்காங்கன்னா பார்த்துக்கோங்க'' என்று ஓரக் கண்ணால் மலர்விழியை பார்த்துக் கொண்டே கூறினான்.

''அந்த பொண்ணுங்க பார்க்கிறதுக்கு எப்படிடா இருந்தாங்க?'' என்று ரேணுகா அலட்டிக்காமல் கேட்க,

''சூப்பர் ஃபிகரும்மா. நானும் அதுல ஒரு பொண்ணை தான் லவ் பண்ணலாம் என்று இருக்கேன்'' என்றவன் திரும்பவும் மலர்விழியை பார்த்தான்.

''அத்தை அந்த ரெண்டு பொண்ணுங்களை நானும் பார்த்தேன். உண்மையிலே சூப்பரா இருந்தாங்க'' என்று ரேணுகாவை பார்த்துக் கூறிய மலர்விழி மனோஜிடம் திரும்பி,

''மனோ அதிலே ஒரு பொண்ணு உன் பக்கத்திலே நிற்கும் போது உன்னைவிட உயரமா தெரியுறாள். அதனால அவளை ரிஜெக்ட் பண்ணிடு. இல்லைன்னா கல்யாணத்துக்கு அப்புறமா நீ அவ கூட நடந்து போகும் போது,

நெட்டை குட்டை ரெண்டும் இணையாது

இந்த ஒட்டகம் தான் கட்டிக்கிட குட்ட வாத்தை புடிச்சாள்

என்று பாட்டை மாத்திப் பாடி கிண்டல் பண்ணு வாங்க. ஆனா அந்த இன்னொரு பொண்ணு உனக்கு ரொம்பப் பொருத்தமா இருப்பாள். அவளை லவ் பண்ணு'' என்று கூறினாள்.

'நானாச்சும் லவ்வுன்னு சொன்னேன். இவ கல்யாணம் வரைக்கும் போயிட்டாள். நாம இவளை வெறுப்பேத் தலாம் என்று நினைச்சா இவ நம்மை வெறுப்பேத்துறாள்' என நினைத்த மனோஜ் கடுப்பானான்.

''நீ ஒண்ணும் சொல்லத் தேவையில்லை. எனக்கே யாரை செலக்ட் பண்ணனும் என்று தெரியும்'' என்றான்.

''ஐயோ பாவம்! நான் பார்க்க வளர்ந்த பையனாச்சே! அவன் லவ்வுக்கு ஹெல்ப் பண்ணுவோமேன்னு நினைச்சு சொன்னேன். கேட்டா கேளு கேட்காட்டி போ!'' என்று மலர் விட்டேத்தியாக பதில் அளிக்க,



''பாருங்கம்மா உன் மருமகளை. நான் இன்னொரு பொண்ணை லவ் பண்ணப் போறேன்னு சொல்லுறேன். கொஞ்சமாச்சும் பதட்டப்படுறாளா? தெனாவட்டா எனக்கே அட்வைஸ் பண்ணுறாள்'' என்று அவன் ரேணுகாவிடம் பொருமினான்.

''ஏன்டா இந்த ரூமிலே அவ மட்டுமா இருக்காள்? நாங்க மூணு பேர் இருக்கோம். யாராச்சும் பதட்டப் பட்டோமா?'' என்று ரேணுகா கேட்கவும்,

''அட ஆமா! ஏன்மா உங்களுக்கு கூட பதட்டமா இல்லையா?'' என்று அவன் திருப்பிக் கேட்டான்.

''இந்த மலரை உன்னோட வருங்கால மனைவியா தீர்மானிச்சது யாரு? உன் அண்ணன் வினய். அவன் வார்த்தையை மீறி காரியம் செய்யுற துணிச்சல் உனக்கு இருக்கா? அப்புறம் ஏன்டா நாங்க பதறப் போறோம்?'' என்று கேட்டு ரேணுகா புன்னகைக்க,

'அடச்சே! இதுல இப்படி ஒரு பாயிண்ட் இருப்பதை யோசிக்கவே இல்லையே' என நினைத்து மனோஜ் திருதிருத்தான்.

மலரிடம் திரும்பி ஹரிணி புன்னகைத்தவாறே, ''மனோவுக்கு நீ சரியான பேரை தான் வச்சு இருக்க மலர்'' என்று கூறினாள்.

''எனக்கு நிக் நேம் வச்சிருக்காளா? என்ன பேர் அண்ணி?''

''நான் சொல்ல மாட்டேன். நீங்க அவகிட்டயே கேட்டுத் தெரிஞ்சுக்கோங்க'' என்று ஹரிணி நழுவினாள்.

''ஒண்ணு மட்டும் தெளிவா தெரியுது அண்ணி. எங்க வீட்டிலே பொண்ணுங்க ராஜ்ஜியம் கொடிகட்டிப் பறக்குது. நானும் எங்க அண்ணனும் உங்க தயவிலே தான் காலம் தள்ளணும் போல!'' என்று போலியாய் அலுத்துக் கொண்டவன்,

''டேய் தருண் குட்டி! நம்ம கட்சி ரொம்ப வீக்கா இருக்குடா. சீக்கிரமா வளர்ந்து இந்த சித்தப்பாவுக்கு சப்போர்ட் பண்ணுடா'' என்று அண்ணன் மகனை கொஞ்சினான்.

அப்போது வினய் அந்த அறைக்குள்ளே நுழைந்தான்.

''வாடா மனோ. எங்கடா போனே? உன்னை மதியத்தில் இருந்து ஆளையே காணோம்'' என்று கேட்டான்.

மனோஜ் ஒன்றும் சொல்லாமல் தன் அண்ணனை அணைத்துக் கொண்டான்.

''என்னடா? சந்தோஷமா கட்டிப்பிடிக்கிறியா? இல்ல வேற ஏதாச்சும் பிரச்சனையா?'' என்று வினய் குழம்பிப் போய் கேட்க, மனோஜ் அண்ணனிடம் இருந்து விலகி அவனது முகம் பார்த்து புன்னகைத்தான்.

''என்னடா இவ்வளவு சந்தோஷம்? அப்படி என்ன சந்தோஷமான விஷயம் வச்சிருக்க?''

''எனக்கு சினிமாவிலே பாட சான்ஸ் கிடைச்சிருக்குண்ணா'' என்று மனோஜ் மகிழ்ச்சியோடு அறிவித்தான்.

தன்னை மறந்து 'ஹேய்!' என்று கத்திய வினய் இருக்கும் இடம் மருத்துவமனை என மனதில் கொண்டு தன்னை அடக்கிக் கொண்டான்.



''சந்தோஷம்டா மனோ'' என்று தம்பியை இறுக அணைத்துக் கொண்டான்.

''அம்மா உங்களுக்கு சந்தோஷமா?'' என்று வினய் ரேணுகாவை பார்த்துக் கேட்க, வார்த்தை வராமல் தடுமாறிய ரேணுகா ஆமாம் என்பதாய் தலையாட்டி புன்னகைத்தார்.

''பார்த்தியா மலர்... இவ்வளவு நேரம் நம்மளை வம்பிழுத்துக்கிட்டு இருந்தாரே ஒழிய நம்மகிட்ட எல்லாம் விஷயம் சொல்லணும் என்று தோணுச்சா? அவங்க அண்ணனை பார்த்த உடனே விஷயம் வெளிய வருது. இதுல நம்ம ராஜ்ஜியம் நடக்கிறதா பில்டப் வேற!'' என்று ஹரிணி மனோவை கிண்டல் செய்ய,

''அச்சோ அண்ணி! அப்படி எல்லாம் கோபிச்சுக்கிட்டு கொடி பிடிக்கக் கூடாது. என் ஃபைனல்ஸ் நடந்த அந்த ஒரு நாள் போதும் அண்ணி. நீங்களும் என் அண்ணனும் வேற வேற இல்லைன்னு நான் நினைக்கிறதுக்கு. ஆனாலும் எதையுமே எங்க அண்ணன்கிட்ட முதல்ல சொல்லியே பழகிட்டேனா... அதான்'' என்று மனோஜ் ஒரு தீவிரத்துடன் பதில் அளிக்க,

''நான் சும்மா கிண்டல் பண்ணினேன் மனோ'' என்றவள் அவனது வலது கரம் பற்றி குலுக்கி, ''கங்கிராட்ஸ்!'' என்றாள்.

மனோஜ் தன் கையை மலர்விழியின் புறம் நீட்டினான். அவளும் அவனது கை பற்றி குலுக்கி, ''ஹார்ட்டி கங்கிராட்ஸ் மனோ'' என்றாள்.

''வாழ்த்தைக் கூட கேட்டு வாங்க வேண்டி இருக்குண்ணா. எனக்காக நீ பொண்ணு பார்க்க போன போது பொண்ணோட சுறுசுறுப்பு, புத்திசாலித்தனம்

இதெல்லாத்தையும் செக் பண்ணுனியா?'' என்று மனோஜ் கேட்டதும் வினய் புரியாமல் விழித்தான்.

''நான் ஏன் அப்படிக் கேட்கிறேன்னா... இந்தப் பொண்ணு கொஞ்சம் மந்தமா இருக்கு. சுறுசுறுப்பு பத்தலை. பொண்ணுக்கு பாடத் தெரியுமா? அட்லீஸ்ட் பாட்டை ரசிக்கத் தெரியுமா? அதையாச்சும் கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டியா?'' என்று மனோஜ் கேட்டான்.

'நீ வெளியே வாடா. உன்னை தனியா கவனிச்சுக் கிறேன்' என்று மலர்விழி முறைத்துக் கொண்டு நின்றாள்.

''இன்னைக்கு என்னாச்சு மனோ? மலரை இப்படிப் போட்டுத் தாக்குறீங்க? ஒருவேளை இப்ப தான் இவ உங்க ஃபியான்ஸிங்கிற நினைப்பு உங்களுக்கு வருதா?'' என்று ஹரிணி சிரித்துக் கொண்டே வினவ,

வினய் நடந்தது எதுவும் அறியாததால் விழித்தான். தம்பி கிண்டல் செய்கிறான் என்பது மட்டும் அவனுக்கு புரிந்தது. ரேணுகா பெரிய மகனிடம் சற்று முன் மனோ மலரை வம்பிழுத்த கதையை விளக்கினார்.

வினய் தன் தாயிடம் மெதுவான குரலில், ''ஹரிணி சொன்ன மாதிரி இப்போ தான் மலர் அவன் கண்ணுல படுறாள் போலம்மா'' என்று கூறிச் சிரித்தான்.



## 26

அடுத்த நாள் சிவராமன் பாண்டியனோடு மருத்துவ மனைக்கு வந்தார்.



மருத்துவமனையில் இருந்து வீடு சென்ற பின் தான் ஹரிணியின் தந்தை வருவார் என்று வினய் எதிர்பார்த் தான். ஆனால் அவன் மருத்துவமனையில் இருந்த போதே வந்து சேர்ந்தார்.

''வாங்க மாமா. ரெண்டு நாள் கழிச்சு வருவீங்கன்னு ஹரிணி சொன்னாள். நீங்க அதுக்கு முன்னாடியே வந்துட்டீங்க. வீணா எதுக்கு மாமா அலையுறீங்க? நான் தான் நல்லா இருக்கேன்!'' என்று வினய் கூறவும்,

''என் வீட்டிலே வச்சு உங்களுக்கு அடிபட்டது. உங்களை தனியா போக விட்டுட்டோமேன்னு நான் வருத்தப்பட்டேன். ஆனா என்னோட சூழ்நிலை... என்னால உடனே உங்க கூட கிளம்ப முடியலை. இன் னைக்கு டிக்கெட் கிடைச்சது. அதான் வந்துட்டேன்'' என்று சிவராமன் விளக்கினார்.

அப்போது ரேணுகா தன் தோளில் தூங்கும் தருணோடு அறைக்குள் நுழைந்தார்.

''வாங்க சம்பந்தி'' என்று சிவராமனை வரவேற்றார். சிவராமனும் சிரித்த முகமாய் தலை அசைத்து வைத்தார்.

''தருண் தூங்கிட்டானா? ஹரிணியை எங்கே காணோம்?'' என்று அவர் கேட்கவும்,

''இப்போ தான் திரும்பத் தூங்க ஆரம்பிச்சான். ஹரிணி குளிச்சிட்டு வரேன் என்று வீடு வரைக்கும் போயிருக்காள் சம்பந்தி'' என்று ரேணுகா கூறிக் கொண்டிருக்கும் போதே மலர்விழி உள்ளே நுழைந்தாள்.

''வாங்க அங்கிள்'' என்று ஹரிணியின் தந்தையை வரவேற்றவள் பாண்டியனை கண்டு கொள்ளாது அவரை தாண்டிச் சென்றாள்.

அவள் கொண்டு வந்திருந்த பையை ஒரு ஓரமாக வைத்து அதிலிருந்த உணவை தட்டில் பரிமாறி வினய் முன்னே நீட்டி,

''சாப்பிடுங்க அண்ணா. நான் தட்டை பிடிச்சுக் கிறேன்'' என்றாள்.

அவள் சாப்பாடு பரிமாறும் போதே சிவராமனுக்கு ஒரு போன் வந்தது. அதனால் அவர் அறைக்கு வெளியே சென்று பேசிக் கொண்டிருந்தார். ஆனால் அவரது கண் அறையவே நோட்டம் விட்டுக் கொண் டிருந்தது.

''தட்டை நான் பிடிச்சுக்கிறேன்'' என்று பாண்டியன் கூற,

''இல்ல உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்'' என்று கூறி மலர்விழி தட்டை அவரிடம் தர மறுத்தாள்.

பாண்டியன் அவளிடம் இருந்து தட்டை வலுக்கட் டாயமாக பறித்தார். மலர்விழி செய்வதறியாது திகைத்தாள். ரேணுகா தருணை வைத்துக் கொண்டிருந்த தால் அவரால் அந்த வேலையை செய்ய முடியாது என்று நினைத்தே அவர் ஓரமாய் அமர்ந்துவிட்டார்.

பாண்டியன் திடீரென... அதுவும் ஹரிணியின் தந்தையை வைத்துக் கொண்டு இப்படிச் செய்வார் என்று எதிர்பார்க்காததால் ரேணுகாவுமே திகைத்துப் போய் அமர்ந்திருந்தார்.

அவர் சற்றுத் தள்ளி அமர்ந்திருந்ததால் சிவராமனால் ரேணுகாவின் வெளிறிய முகத்தை பார்க்க முடிய



வில்லை. ஆனால் அறைக்குள் நடக்கும் நாடகத்த சிவராமன் பார்த்துக் கொண்டு இருந்தார்.

வினய் பாண்டியன் நீட்டிய தட்டில் இருந்த உணவை அள்ளாது அமைதியாக வேறுபுறம் திரும்பி அமர்ந் திருக்க,

''சாப்பிடு வினய்'' என்று அன்பொழுக பாண்டியன் கூறினார்.

அவன் அவரை அலட்சியம் செய்து, ''சின்னு உன் கிட்ட வேற தட்டு இருக்கா? அதுல சாப்பாடு போடு'' என்றான்.

''சரிண்ணா'' என்று கூறியவள் தான் கொண்டு வந்த கூடையை நோக்கிச் செல்லத் திரும்பவும், பாண்டியன் அந்த தட்டை அவனது படுக்கையில் வைத்தார்.

மலர்விழி அந்த தட்டை தூக்கி வினய் முன் நீட்டவும் வினய் உணவை அள்ளி சாப்பிட ஆரம்பித்தான்.

பாண்டியன் முகத்தில் அறை வாங்கிய உணர்வுடன் வெளியேறினார். சிவராமன் தனது கைப்பேசியை அணைத்துவிட்டு வினய் முன் வந்து நின்று அவனை முறைத்துப் பார்த்தார்.

அவருக்கு அவனைத் திட்ட வேண்டும் என்று தோன் றியது. ஆனால் அவர் திட்டாமல் தன்னைக் கட்டுப் படுத்துவதற்கு பல காரணங்கள் இருந்தன.

என்ன தான் வினய் வயதில் சிறியவன் என்றாலும் அவன் அவருடைய மாப்பிள்ளை என்பது ஒரு காரணம். ரேணுகாவும்... அதாவது சம்பந்தி அம்மாவும் அதே அறையில் இருப்பது இன்னொரு காரணம். மூன்றாம்

மனுஷியான மலர்விழியின் முன் வாதம் வேண்டாம் என்பதும் ஒரு காரணம்.

அதனால் அவனை முறைத்துப் பார்த்துவிட்டு ஒன்றுமே பேசாமல்... 'போய் வரேன்' என்று கூடக் கூறாமல் வெளியேறினார்.

"என்னடா வினய் இப்படி ஆகிடுச்சு? உன் மாமனார் என்ன நினைச்சுக்குவார்?" என்று ரேணுகா புலம்ப,

"விடுங்கம்மா பார்த்துக்கலாம். நல்லவேளை இங்க மனோ இல்லை" என்று வினய் கூறினான்.

"நானும் அதையே தான் அண்ணா நினைச்சேன்" என்று கூறி மலர்விழி பெருமூச்சு விட்டாள்.

சாப்பிட்டு முடித்தவுடன் தன் தாயிடம், "எப்படியும் மாமா வீட்டிலே போய் ஹரிணிகிட்டே நியாயம் கேட்பார். அதுக்கு முன்னாடி அவகிட்டே நடந்ததை நானே சொல்லிடுறேன்" என்றதும்,

"நீங்க பேசுங்கண்ணா. நாங்க வெளியே இருக்கோம்" என்று கூறி மலர்விழி வெளியேறினாள். தூங்கிவிட்ட தருணை இன்னொரு படுக்கையில் படுக்க வைத்த ரேணுகாவும் வெளியேற வினய் தன் மனைவிக்கு அழைப்பு விடுத்தான்.

"ஹலோ!" என்று மட்டும் வினய் கூற,

"சொல்லுங்க வினு. இன்னும் கொஞ்ச நேரத்திலே கிளம்பிடுவேன். ஏதாச்சும் வேணுமா? உங்களுக்காக காலையிலேயே ரேணும்மா சமைச்சு வச்சதை சூடு பண்ணி மலர்கிட்ட கொடுத்துவிட்டேன். மலர் வந்துட்டாளா? நல்லா சாப்பிட்டீங்களா?" என்று அவள் கேட்டுக் கொண்டே போக,



"ஐயம் சாரிடா ஹனி" என்று அவன் மெதுவாக கூறினான்.

"என்னாச்சு வினு? எனிதிங் ராங்?"

"ம்ம்ம்... உங்க அப்பா வந்தார்."

"அப்பாவா? இன்னைக்கேவா? அவர் வரதா ஏன் யாருமே என்கிட்ட சொல்லலை? சரி அதை விடுங்க. அவர் என்ன சொன்னார்? உங்களுக்குள்ள ஏதாச்சும் சண்டையா?"

"சண்டைன்னும் சொல்ல முடியாது. சண்டை இல்லைன்னும் சொல்ல முடியாது."

"என்ன வினு குழப்புறீங்க. தெளிவாச் சொல்லுங்க."

"உங்க அப்பா கூட உங்க மாமாவும் வந்திருந்தார்" என்றவன் நடந்ததை விளக்கினான்.

"உங்க அப்பா என்னை முறைச்சுப் பார்த்துட்டு விருட்டுன்னு கிளம்பிப் போயிட்டார். உன்கிட்ட வந்து ஏதாச்சும் கோபமா பேசுவார் என்று நினைக்கிறேன்."

"அவ்வளவு தானே வினு. நான் பார்த்துக்கிறேன். நீங்க ரெண்டு பேரும் உங்களுக்குள்ளே மோதிக்கலை இல்லையா... எனக்கு அது போதும்."

"சே! சே! உங்க அப்பாவை எப்படிடா நான் எதிர்த்துப் பேசுவேன்? மாமாவை நான் ஒண்ணும் சொல்லலை. அவரும் என்கிட்ட எதுவும் சொல்லலை. நீ தான் அவரை சமாளிக்கணும்."

"நான் பார்த்துக்கிறேன் வினு. நீங்க வருத்தப்படாதீங்க" என்று கூறி அழைப்பை துண்டித்தாள்.

இந்த பிரச்சனையே இன்றே... அதுவும் வீட்டிலேயே வைத்துப் பேசி முடித்துவிடலாம் என நினைத்த ஹரிணியும் மருத்துவமனைக்கு கூடச் சொல்லாமல் தந்தையை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். வினய் எதிர்பார்த்த மாதிரியே சிவராமன் நேராக ஹரிணியிடம் தான் வந்தார்.

''வாங்கப்பா உங்களுக்காக தான் காத்திருக்கேன்'' என்று ஹரிணி கூறியதுமே நடந்ததனைத்தும் அவள் காதுக்கு வந்து விட்டது என்பதை சிவராமன் புரிந்து கொண்டார்.

பாண்டியனுடன் அவளருகே வந்த சிவராமன், ''உன் ஹஸ்பண்ட் மனசிலே என்ன நினைச்சுக்கிட்டு இருக்கார்? இவர் யார் தெரியுமா?'' என்று பாண்டியனை சுட்டிக் காட்டி கேள்வி கேட்டார்.

''உங்களை விட இவர் யாருங்கிற விஷயம் எனக்கு நல்லாவே தெரியும்பா'' என்று ஹரிணி பாண்டியனை பார்த்துக் கொண்டே கூறவும் பாண்டியன் வெல வெலத்துப் போனார்.

'இவ எதையெல்லாம் உளறப் போறாள் என்று தெரியலையே! பிரச்சனை பண்ணாதீங்க மச்சான். பேசாமல் விடுங்கன்னு இவ அப்பாகிட்ட சொன்னேன். மனுஷன் கேட்க மாட்டேங்கிறாரே' என்று பாண்டியன் உள்ளுக்குள் புலம்பிக் கொண்டிருந்தார்.

''உனக்கு தெரிஞ்சா மட்டும் போதாது. உன் ஹஸ்பண்டுக்கும் சொல்லிக் கொடு. இவர் என் வீட்டு மாப்பிள்ளை'' என்று சிவராமன் கர்[illegible]



''உங்க தங்கச்சி கணவர் உங்க வீட்டு மாப்பிள்ளைனா என் ஹஸ்பண்டு உங்களுக்கு யாருப்பா?'' என்று ஹரிணி அலட்டாமல் திருப்பிக் கேட்க சிவராமன் சில நொடிகள் மௌனித்தார்.

''அவரும் என் மாப்பிள்ளை தான். அதுக்காக வயசிலே பெரியவரை இப்படி தான் அவமானப்படுத்தணுமா? உங்க மாமா அப்படி என்ன பெருசா குத்தம் செஞ்சிட்டாரு? யாரோ ஒரு பொண்ணு தட்டை தூக்கிட்டு நிக்குறாளே... நாம உதவி செய்வோம் என்று நினைச்சார். அது ஒரு தப்பா?''

''அவ யாரோ ஒரு பொண்ணு இல்லப்பா. மனோ கல்யாணம் பண்ணிக்கப் போற பொண்ணு.''

''சரிம்மா. வருங்காலத்திலே அவரோட தம்பி சம்சாரமா இருந்துட்டுப் போகட்டும்'' என்றவரை இடைமறித்து,

''வருங்காலத்தில் மட்டுமில்லைப்பா. என்னைக்குமே அவ அவரோட கூடப் பிறக்காத தங்கச்சி'' என்றாள்.

''எதுவா வேணா இருக்கட்டும்மா. நான் என்ன மாப்பிள்ளையையும் அந்தப் பொண்ணையும் தப்பாவா நினைக்கிறேன்? நீ இவ்வளவு விளக்கம் சொல்லிக்கிட்டு இருக்க. ஏன் அவர் உங்க மாமாவை அவமானப் படுத்துறார்ன்னு தானேம்மா கேட்கிறேன்.''

''முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்று நீங்க கேள்விப்பட்டதில்லையா அப்பா?''

''அப்படி என்னம்மா மன்னிக்க முடியாத பெரிய தப்பை என் மாப்பிள்ளை செஞ்சுட்டார்?''

''சில தவறுகளை அந்தக் கடவுளால் கூட மன்னிக்க முடியாதுப்பா. விஜய் கடவுள் இல்லை. சாதாரண ஆசா[illegible] நிறைஞ்ச மனுஷன்.''

அப்படின்னா உன் புருஷன் செஞ்சது சரின்னு சொல்லுறியா?''

''கண்டிப்பா. என் வினு என்னைக்குமே தப்பு பண்ண மாட்டார். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு. அதனால இவருக்கு ஆதரவா நான் வினய்கிட்ட சண்டை போடுவேன்னு எதிர்பார்க்காதீங்க'' என்று திட்டவட்டமாக கூறினாள்.

சிவராமன் தன் மகள் வாயில் இருந்து அப்படி ஒரு சொல்லை எதிர்பார்க்கவில்லை. நடந்ததை கேட்டு அவள் தங்களுக்கு ஆதரவாகப் பேசுவாள் என்று அவர் ஆணித்தரமாக நம்பியிருக்க... அவளோ தலைகீழாக மாற்றிப் பேசவும் ஒன்றும் புரியாது சில நொடிகள் திகைத்து நின்றார். வேறு ஒன்றும் பேசாமல் பாண்டியனுடன் வெளியேறினார்.

செல்லும் தன் தந்தையை தடுக்க வகையின்றி ஹரிணி கவலையாய் சில நிமிடங்கள் நின்று பார்த்து விட்டு மருத்துவமனைக்கு கிளம்பினாள். அவள் மருத்துவமனைக்கு வந்ததுமே ரேணுகாவும் மலர்விழியும் அவளது முகத்தை ஏறிட்டனர். அதில் தெரிந்த சோகத்தை கண்டு கவலைப்பட்டனர்.

வினய் தன் மனைவியின் கண்களை சந்திக்க முயற்சித்தான். ஆனால் அவள் அவன்புறம் திரும்பவே இல்லை. அவனைக் கண்டால் அழுது விடுவோமோ என பயந்தாள்.

''உங்க அப்பா ரொம்பத் திட்டினாராம்மா?'' என்று ரேணுகா கேட்க,

''திட்டலை ரேணும்மா. நான் அவருக்கு சப்போர்ட் பண்ணுவேன்னு எதிர்பார்த்தார். அது நடக்கலைன்னதும் பேசாமல் போயிட்டார்'' என்று அவள் மெல்லிய குரலில் கூற,

''சாரிம்மா'' என்றார் ரேணுகா.

''அச்சோ! நீங்க எதுக்கு என்கிட்ட சாரி கேட்கறீங்க. நான் தான் உங்களுக்கு தாங்க்ஸ் சொல்லணும். உண்மை வெளிப்பட்டா பாதிக்கப்படப் போறது மனோ மட்டும் இல்லை. எங்க அபிராமி அத்தையும் தானே? எங்க அப்பா உண்மை தெரியாததால கோபப்படுறார். அந்த கோபம் கொஞ்ச நாளிலே சரியாகிடும்'' என்று தன் மாமியாருக்கு சமாதானம் கூறினாள்.

''நான் வீடு வரைக்கும் போயிட்டு வரேன்மா'' என்று ரேணுகா கிளம்பவும் மலர்விழியும் வீட்டிற்கு செல்வதாகக் கூறி வெளியேறினாள்.

அவர்கள் இருவரும் சென்றதும் கதவை சாற்றிவிட்டு வந்த ஹரிணி மௌனமாக தன் கணவனின் வலது புஜத்தில் சாய்ந்து கொண்டு அமர்ந்தாள்.

''என்னடா? ஏதாச்சும் பிரச்சனையா? அம்மாவுக்காக பொய் சொன்னியா?''

''அப்படி எதுவும் இல்லை வினு. ஆனா அப்பா ஒண்ணும் பேசாமல் கோபமா போயிட்டார். இதுவரைக்கும் எங்க அப்பா என்கூட சண்டை போட்டது இல்லை. அதான் மனசுக்கு கஷ்டமா இருக்கு'' என்று கண் கலங்கினாள்.

''ஒரு நாள் மனோவுக்கு உண்மையை சொல்லத் தான் வேணும். அதனால இப்பக் கூட சொல்லிடலாம். என்ன ஒண்ணு... தன்னால தான் தன்னை பெத்தவங்க

பிரிஞ்சிட்டாங்கன்னு நினைச்சு ரொம்ப வருத்தப் படுவான். அவனுக்கு அப்படி ஒரு கஷ்டம் கொடுக்க வேண்டாமேன்னு பார்க்கிறேன். இன்னொரு பக்கம் அபிராமி ஆன்ட்டி... ஒரு தப்பும் செய்யாத அவங்க மனோவை விட பாதிக்கப்படுவாங்க. ம்ம்ம்...'' என்று பெருமூச்சுவிட்டவன்,

''நமக்குக் கல்யாணம் ஆனதில் இருந்து இந்த மனுசனால தான் நமக்குள்ள பிரச்சனையே வருது'' என்று புலம்பினான்.

அன்று மாலையே வினய் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்து சேர்ந்தான். அவர்களது அடுக்கு மாடி குடியிருப்பு வளாகத்தில் அமைந்துள்ள அரங்கத்தில் மனோஜின் வெற்றியை கொண்டாடும் வகையில் ஒரு தேநீர் விருந்திற்கு வினய் ஏற்பாடு செய்தான்.

தான் வெற்றி பெறும் போது தன்னுடைய குடும்ப உறுப்பினர்கள் யாருமே அருகில் இல்லாததால் மனோஜூமே அண்ணனின் ஏற்பாட்டிற்கு சம்மதித்தான்.

இல்லாவிட்டால் அண்ணனின் கை நன்றாக குணமான பின் இதை பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருப்பான். அண்ணன் அருகில் இருக்க அந்த பரிசை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று மனோஜ் ஆசைப்பட்டான்.

விழாவிற்கு தன்னுடைய நண்பர்களை மனோஜ் அழைத்தான். ரேணுகா அவர்களது குடியிருப்பு வளாகத்தில் குடியிருந்தோரை அழைத்தார்.

இவர்கள் அனைவரும் விழாவிற்கு தயாராகிக் கொண்டிருந்தனர். ஆனால் பாண்டியன் ஒருவர் மட்டுமே கடுப்பின் உச்சத்தில் இருந்தார்.

'ரெண்டு வருஷமா என் பிள்ளை என் கண் முன்னால இருந்தும் என்னால அவனை மகனேன்னு கொஞ்ச முடியலையேன்னு நானே வருத்தத்தில் இருக்கேன். என்னால அவனை அப்படிக் கொஞ்ச முடியாமல் போனதுக்கு யார் காரணமோ அவனுக்கு பாராட்டு விழா நடக்கப் போகுதாம். அதை நல்லா நடக்க விட்டு விடுவேனா?

உங்களுக்கு புள்ளை இல்லையாமே? நல்ல டாக்டரை பார்த்தீங்களா அப்படின்னு எத்தனை பேர் சமய சந்தர்ப்பம் பார்க்காமல் இதுவரைக்கும் துக்கம் விசாரிச்சு இருப்பாங்க. அதுமட்டுமா... என் புள்ளை கல்யாணத்திலே கூட வந்து இந்நேரம் உங்களுக்கும் புள்ளை பிறந்திருந்தால் அவனுக்கும் கல்யாண வயசு வந்து இருக்கும் இல்லன்னு எரியுற கொள்ளில எண்ணெய்யை விட்டுட்டு போனாங்க.

டேய்! நடக்கிறதே என் பிள்ளை கல்யாணம் தான் டான்னு அன்னைக்கு என்னால கத்த முடியலை. அதே நிலை இந்த ரெண்டு வருஷமா நீடிக்குது. இனிமேலும் என்னால பொறுக்க முடியாது.

வினய் என் பையன் என்று நான் வெளியே சொன்னா அபிராமிக்கு நான் ரெண்டு கல்யாணம் பண்ணினவன் என்று தெரிஞ்சிடும். அவ்வளவு தானே! தெரிஞ்சா தெரிஞ்சுட்டு போகுது.

தாலியை கழட்டி எறிஞ்சுட்டு போறதுக்கு அவ ஒண்ணும் அகம்பாவம் பிடிச்ச ரேணுகா கிடையாது. அதனால பெருசா எதுவும் மாறிடாது. அபிராமி அண்ணங்காரன் கொஞ்சம் சத்தம் போடுவான். ஆனா

நான் தான் அவன் சம்பந்தி என்கிற போது அவனும் அடங்கிப் போய் தானே ஆகணும்.

இன்னைக்கு வினய் என்னை அப்பான்னு ஒத்துக்கிட்டே ஆகணும். இதுவரைக்கும் எனக்கு பிள்ளை இல்லை என்று நினைச்சவங்க முன்னாடி போய் எனக்கு சிங்கம் மாதிரி ஒரு புள்ளை இருக்கான் பாருங்கடான்னு நான் கத்தணும்.

எனக்கு வாரிசு இல்லைன்னு எவன்டா சொன்னது? எனக்கு பேரனே இருக்கான்னு நான் பெருமையா காட்டணும்' என நினைத்தார்.

வினய் தன்னை அப்பாவாக ஏற்றுக் கொண்டு யாருமில்லாத போதாவது அப்பாவென அழைப்பான் என்று இரண்டு வருடங்களாக பாண்டியன் ரொம்பவே எதிர்பார்த்தார். ஆனால் அவன் ஒவ்வொரு முறையும் அவரை அவமானப்படுத்தி மறுத்த போதும் அவரது மனம் மீண்டும் மீண்டும் அவனையே சென்று சரணடையும்.

'இத்தனை நாள் கெஞ்சிக் கேட்டோம். வினய் ஒத்துக்கலை. இனி மிரட்டிக் கேட்க வேண்டியது தான். என்னவென்று மிரட்டலாம்? வினய் தான் அந்த வெத்துப் பயல் (மனோஜ்) மீது உயிரா இருக்கானே. அவனுக்கு என்னை பத்தின விஷயத்தை மறைச்சு வச்சிருக்கானே... நீ என்னை அப்பான்னு கூப்பிடலைன்னா அவன்கிட்ட உண்மையை சொல்லிடுவேன் என்று மிரட்டுவோமா?

மனோஜ்க்கு உண்மை தெரியாது தானே? இல்ல இது என் பிரமையா? என்கிட்டே கடுகடுன்னு பேசிக்கிட்டு இருக்கும் வினய் மனோஜ் வந்ததும் முகத்தை சாதாரணமா வைச்சுக்கிட்டு வேற விஷயம் பேச ஆரம்பிச்சுடுறான்.



அதுவுமில்லாமல் அந்த மனோஜ் என்னைப் பார்த்து முறைச்சது கிடையாது. சிரிச்சுக்கிட்டே தான் பேச வருவான். அதனால என்னைப் பத்தி மனோஜுக்கு ஒண்ணும் தெரியாது தான்.

அப்படின்னா உன் தம்பிகிட்ட உண்மையை சொல்லிடுவேன்னு மிரட்டினா... அந்த மிரட்டலுக்கு பயந்து யாருமில்லாத போதாவது வினய் என்னை அப்பான்னு கூப்பிடுவானா? ஆனா எனக்கு அதுமட்டும் போதாதே! அவன் என் பிள்ளை தான் என்று நான் ஊர் உலகத்துக்கு சொல்லணுமே! என்ன செய்யலாம் என்று சிந்தித்துக் கொண்டிருந்தார்.



## 27

விழா நடப்பதற்கு முதல் நாள் மாலை அவர்களது குடியிருப்பு வளாக பூங்காவில் சோகமே உருவாய் அமர்ந்திருந்த மலர்விழியை பார்த்து வினய் குழம்பிப் போனான்.

''என்ன சின்னு இவ்வளவு சோகம்? வீட்டிலேயே இருக்க போர் அடிக்குதுன்னு சில்ரன்ஸ் பார்க் பக்கம் எட்டிப் பார்க்கலாம் என்று நான் வந்தேன். நீ மேல வீட்டுக்கு வராமல் இங்க என்ன பண்ணுறே?'' என்று வினய் வினவினான்.

''அண்ணா... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அபி ஆன்ட்டியோட ஹஸ்பண்ட் என்கிட்ட வந்து பேசினார்.''

"ப்சு என்னவாம்?" என்று அசுவாரஸ்யமாய் வினய் கேட்க,

"நான் அவரை பார்த்து முகத்தை திருப்பிக்கிட்டு நடந்தேன். அதுக்கு அவர்... அந்த மனோ பயலை கல்யாணம் பண்ணப் போறதுக்கா இப்படி அலட்டிக்கிறேன்னு கிண்டல் பண்ணினார். பாராட்டு விழாவா நடத்துறீங்க... அது எப்படி நடக்குதுன்னு பார்க்கிறேன் என்று மிரட்டலாச் சொல்லிட்டுப் போயிட்டார்..." என்று கூறினாள்.

தனது வலது கையால் காற்றிலே குத்துவிட்ட வினய், "அந்த ஆள் அடங்கவே மாட்டாரா? ஏன்டா இந்த ஃபிளாட்டிலே குடியிருக்கோம் என்று இருக்கு. பேசாமல் பழையபடி தாத்தா வீட்டுக்கே போயிடலாம்ன்னு கூட யோசனையா இருக்கு. இவர் வீடு இங்க இருக்குன்னு தெரிஞ்சிருந்தா நான் இந்த வீட்டையே வாங்கி இருக்க மாட்டேன். என்கிட்ட மோதினா நான் திருப்பி கொடுத்துடுவேன். ஆனா மனோ தாங்கமாட்டான். அந்த ஆள் மட்டும ஏதாச்சும் தகராறு பண்ணட்டும்... அப்புறமா இருக்கு கச்சேரி" என்று வினய் கடும் கோபத்துடன் பேசினான்.

மலர்விழியைப் பார்க்க அவளது வீட்டிற்குக் கிளம்பி மாடியில் இருந்து வந்த மனோஜ் அவர்கள் இருவரும் பேசுவதை தூரத்தில் இருந்து பார்த்தான்.

'என்ன பிரச்சனை? சின்னு சோகமா இருக்காள். அண்ணன் கோபமா இருக்கான். இவ ஏதாச்சும் தப்பு பண்ணிட்டாளா? அதுக்கு தான் அண்ணன்கிட்ட வாங்கிக் கட்டிக்கிட்டு இருக்காளா? இதையே நான்



திட்டினா இவ்வளவு பொறுமையா காது கொடுத்துக் கேட்பாளா? உடனே பதிலுக்கு எகிறுவாள்.

அண்ணனோட அட்வைஸ் அல்வா சாப்பிடுற மாதிரி இருக்கும் போல. வாயை மூடி அமைதியா இருக்காள். அப்படின்னா இந்த மனோஜோட அட்வைஸ் மண்ணு மாதிரி இருக்கோ? அதான் எகிறுறாளோ?' என்று பிரச்சனையின் தீவிரத்தை உணராது மனதுக்குள் கிண்டல் பண்ணி சிரித்துக் கொண்டான்.

வினய் அந்த இடம் விட்டு நகர்ந்ததும் மனோஜ் மலரின் அருகே சென்று அமர்ந்தான்.

"என்ன சின்னு தப்பு பண்ணினே?" என்று எடுத்த உடனே அவன் பட்டென்று கேட்க,

"தப்பா? நானா? யார் சொன்னது? எங்க அம்மா ஏதாச்சும் உனக்கு போன் பண்ணினாங்களா?" என்று படபடப்பாய் கேட்டாள்.

"அப்போ ஆன்ட்டிகிட்ட ஏதோ தகராறு பண்ணி இருக்க?" என்று அவன் மடக்க,

"அதெல்லாம் ஒண்ணும் பண்ணலை" என்று அவள் வேகவேகமாகக் கூறினாள்.

"கீழே போறேன்னு சொல்லிட்டு வினய் வந்தான். ஆள் கண்ணிலே படலை. நீ பார்த்தியா?" என்று அடுத்த பேச்சிற்குத் தாவினான்.

"அண்ணனா? நான் பார்க்கலை மனோ."

"சின்னு நீ பி.ஜி.யிலே கண் டாக்டருக்கான கோர்ஸ் எடுத்துப் படி."

''என்னாச்சு மனோ? வந்ததில் இருந்து சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேசிக்கிட்டு இருக்க.''

''நான் சரியா தான் பேசுறேன். என் பேச்சை புரிஞ்சுக்கிற அளவுக்கு உனக்கு தான் அறிவு இல்லை.''

''அய்யா அறிவாளி! நீயே விளக்கமாச் சொல்லு.''

''கண் டாக்டரா ஆனேன்னு வச்சுக்க உனக்கு இப்பவே பேஷண்ட் ரெடியா இருக்காங்க. அது வேற யாரும் இல்லை. நீ தான். கண்ணுக்கு முன்னாடி உன் கூட உட்கார்ந்து பேசின எங்க அண்ணனைப் பார்க்கலைங் கிற பாரு... அதுக்காகச் சொன்னேன். அண்ணன் உன்கிட்ட கோபமாப் பேசினதை பார்த்தேன். அதான் என்ன தப்பு பண்ணின என்று கேட்டேன். இப்போ என் கேள்வியெல்லாம் சரியா... கோர்வையா இருக்கா?''

''அண்ணன் ஒண்ணும் என்னை திட்டலை.''

''அப்போ யாரை திட்டினான்? என்ன பிரச்சனை?'' என்று கேட்டதும் அவள் அமைதியாக இருந்தாள்.

''அப்போ என்கிட்ட சொல்ல மாட்டே? உனக்கு என்னை விட அண்ணன் தான் க்ளோஸ். அப்படித் தானே?''

''மனோ நீ என்கிட்ட இருந்து போட்டு வாங்க முயற்சி பண்ணுறேன்னு தெரியுது. நான் மசிய மாட்டேன். என்கிட்ட இருந்து உன்னால எதுவும் தெரிஞ்சிக்க முடியாது.''

'என்னை கரெக்ட்டா புரிஞ்சு வச்சு இருக்காளே' என்று நினைத்தவன், ''அப்போ நான் அண்ணன்கிட்டவே கேட்டுக்கிறேன்'' என்றான்.



உன்னால முடிஞ்சா போய் கேட்டுத் தெரிஞ்சுக்க என்பது போல் அவள் அமர்ந்திருந்தாள்.

'சொல்ல மாட்டாளே!' என மனதுக்குள் திட்டிக் கொண்டவன், ''இல்லை வேண்டாம். நான் அவன்கிட்ட எதுவும் கேட்கப் போறதில்லை. அவனே கூப்பிட்டுச் சொல்லட்டும். அதை விடு. இந்தா!'' என்று ஒரு பார்சலை எடுத்து நீட்டினான்.

''இது என்ன?'' என்று கேட்டவள் அந்த பையின் உள்ளே இருந்ததை உருவினாள். அது ஒரு சேலை.

''சேலையா? எனக்கா மனோ?'' என்று திகைப்புடன் அவள் கேட்க,

''உனக்கு எதுக்கு நான் சேலை வாங்கிக் கொடுக் கிறேன்? நம்ம பக்கத்து பிள்ளையார் கோவில் வாசலில் பூ வித்துக்கிட்டு இருக்கும் அஞ்சலைக்கு எடுத்தேன். போய் கொடுக்கலாம் என்று கிளம்பினேன். உன்னைப் பார்த்ததும் உன்னை விட்டுக் கொடுக்கச் சொல்லலா மேன்னு உன்கிட்டே தரேன்'' என்றதும் அவள் விருட் டென்று கோபத்துடன் சேலையை அள்ளிக் கொண்டு அங்கிருந்து கிளம்பினாள்.

இருபதடி நடந்தவள் அவனைத் திரும்பிப் பார்க்க அவன் அவளைப் பார்த்து சிரித்ததும், 'கொஞ்சமாச்சும் கவலைப்படுறானா பாரு!' என்று திட்டிக் கொண்டே சென்றாள்.

மனோஜ் சிரித்துக் கொண்டே தன் வீட்டிற்குள் நுழைந்தான்.

''என்ன மனோ மலர் வீட்டுக்கு போறேன்னு சொல் லிட்டு போனீங்க. அதுக்குள்ள திரும்பிட்டீங்க?'' என்று மாலினி கேட்டாள்.

"மலர் கீழ் தான் அண்ணி இருந்தாள். அதனால அவகிட்ட குடுத்துட்டு வந்துட்டேன்" என்று நடந்ததை அவன் கூறவும்,

"நீங்க அவ பின்னாடி போய் சமாதானம் பண்ணலையா மனோ?" என்று ஹரிணி கேட்கவும்,

"சமாதானமா? அட நீங்க வேற அண்ணி. நான் தான் அந்த அஞ்சலைன்னு நாளைக்கே அந்தப் புடவையை கட்டிக்கிட்டு வந்து நிற்பாள் பாருங்க!" என்று சற்றும் அலட்டாமல் கூறிவிட்டு தனது அறைக்குள் நுழைந்து கொண்டான்.

மறுநாள் விடிந்ததில் இருந்தே அனைவரும் பரபரப்பாக இருந்தனர். வினய் போன் மூலமாக செய்ய வேண்டிய ஏற்பாடுகளை கவனித்தான். கீழே சென்று அந்த பார்ட்டி ஹாலில் நடக்க வேண்டிய அலங்காரத்தை பார்வையிட்டான். ரேணுகாவுடன் மருத்துவமனைக்கு சென்று அன்றைய பரிசோதனையை மேற்கொண்டான்.

அவன் தங்கள் வீட்டிற்கு திரும்பும் போது சிவராமன் எதிர்பட்டார். அவனிடம் ஒன்றும் பேசாமல் முகம் திருப்பிக் கொண்டு சென்றார். வினய் தன்னால் ஒன்றும் செய்ய முடியவில்லையே என நினைத்து வருந்தினான்.

தன்னுடைய பிரச்சனையால் ஹரிணிக்கும் அவளது தந்தைக்கும் இடையே மனக்கசப்பு அதிகரித்து இடை வெளி வந்துவிடுமோ என பயந்தான்.

அந்த பயத்துடனே வீட்டிற்குள் நுழைந்தவன் ஹரிணியை கண்களால் தேடினான். அவள் அவர்களது அறையில் இருந்தாள். அவளை கைப்பிடித்து படுக்கைக்கு



அழைத்துச் சென்றவன் அவளை அமர வைத்து அவளது மடி மீது படுத்துக் கொண்டான்.

"ஹாஸ்பிட்டலுக்கு போயிட்டு வந்துட்டீங்களா? டாக்டர் என்ன சொன்னார்?" என்று விசாரித்தாள்.

அவள் கேட்ட கேள்விக்கு பதிலளித்துவிட்டு அமைதியாக படுத்து இருந்தவனிடம், "என்னாச்சு வினு?" என்று கேட்டாள்.

"என்னாச்சுன்னா? நீ என்ன கேட்கிறேன்னு எனக்கு புரியலை ஹனி."

"திடீர்ன்னு இப்படி மடியில வந்து அமைதியா படுத்து இருக்கீங்களே. அதான் என்னாச்சுன்னு கேட்கிறேன்."

"ஹலோ மேடம்! இது என்னோட இடம். போனாப் போகுதுன்னு உன் பையனுக்கு கொஞ்ச நாளைக்கு விட்டு கொடுத்திருக்கேன். உன் பிள்ளை வந்ததும் என்னை மறந்துட்ட பார்த்தியா?" என்று அவன் கிண்டலாக உரைக்கவும் அவனது தலைமுடியை கோதிக் கொடுக்க ஆரம்பித்தாள்.

"உங்களை நான் மறந்துட்டேனா? ஏன் சொல்ல மாட்டீங்க? நீங்க வேணா என்னை மறப்பீங்க. நானெல்லாம் மறக்க மாட்டேன்" என்று கிண்டலாக கூறிக் கொண்டே அவனது நெற்றியில் முத்தமிட்டாள்.

அவன் அவளது கிண்டலையோ முத்தத்தையோ உணராது படுத்து இருக்கவும், ஏதோ பிரச்சனை என்பதால் தான் அவன் தாய் மடி தேடும் குழந்தையாய் தன் மடியில் படுத்துக் கொண்டிருக்கிறான் என்பது ஹரிணிக்கு புரிந்தது. அவனாகவே பிரச்சனை

என்னவென்று கூறட்டும் என்று அமைதி காத்தாள். ஐந்து நிமிடங்கள் கடந்தும் அவன் மௌனமாகவே படுத்து இருக்கவும்,

''ஏதாச்சும் பிரச்சனையா வினு? ஏன் என்கிட்ட சொல்லத் தயங்கிட்டு இருக்கீங்க. சும்மா சொல்லுங்க'' என்றாள்.

''மாமா...'' என்றவன் அதற்கு மேல் சொல்லாமல் இழுக்க,

''எங்கப்பா உங்களை ஏதாச்சும் திட்டினாரா?'' என்று கேட்டாள்.

''இல்ல ஹனி. அப்படி இல்லை. ஆனா அவர் பேசாமல் முகம் திருப்பிக்கிட்டு போனது மனசுக்கு கஷ்டமா இருக்கு. எனக்கே அப்படி இருக்கும் போது உன் நிலைமையை யோசிச்சுப் பார்த்தேன். என்னால தானே உனக்கு பிரச்சனைன்னு...'' என்றவனை இடைமறித்து,

''ஏன் வினு, 'நீ', 'நான்' என்று பிரிச்சு பேசுறீங்க. எது வந்தாலும் நாம சேர்ந்து சமாளிக்கலாம் வினு. அப்பா இப்படி பண்ணுறது எனக்கும் மனசுக்கு கஷ்டமாதான் இருக்கு. அதுவும் உங்களை அவர் அவமதிக்கிறது எனக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு'' என்று கூறிக் கண்ணீர் விட்டாள்.

அவன் எழுந்து அமர்ந்து அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டு அவளை தன் மேல் சாய்த்துக் கொண்டு, 'அவமதிக்கிறார்ன்னு என் பெரிய வார்த்தை எல்லாம் சொல்லுற. நான் சொல்ல வந்த விஷயமே வேற. நேத்து மலர்கிட்ட உங்க மாமா என்ன சொல்லி



இருக்கார் தெரியுமா?'' என்றவன் அதுகுறித்து கூறினான்.

''ஏன் அப்படி மிரட்டி இருக்கார்?'' என்று அவள் புரியாமல் விழித்தாள்.

''ஹனி, நான் இன்னைக்கு...'' என்று இழுத்துவிட்டு, ''ஒரு வேளை விஷயம் என் கை மீறி போச்சுன்னா... அதாவது உங்க அத்தையை மனசுல வைச்சுக்காமல்... ஒரு வேளை உண்மையை சொல்ல வேண்டி வந்துட்டால்... நீ என்னை தப்பா நினைக்கக் கூடாது'' என்று தான் மனதில் நினைப்பதை கோர்வையாகச் சொல்ல முடியாவிட்டாலும் ஒருவாறு சொல்லி முடித்தான்.

''நான் உங்களை தப்பா நினைக்க மாட்டேன் வினு. இன்னும் எத்தனை நாளைக்கு நம்மால மறைக்க முடியும்? எப்படியும் ஒரு நாள் உண்மை தெரியத் தானே வேண்டும். எங்க அப்பாவும் இப்படியே விட்டுட மாட்டார். கண்டிப்பா சிங்கப்பூர் போகும் முன்னாடி இந்தப் பிரச்சனையை பேச வருவார்.

அவருக்கு தெரிஞ்சா உடனே எங்க மாமா சட்டையை பிடிச்ச நியாயம் கேட்காமல் இருக்க மாட்டார். அப்போ எப்படியும் அபி அத்தைக்கு விஷயம் தெரிஞ்சு போகும் தானே. அதனால இன்னைக்கு எதுவும் நடந்தால் நான் உங்களை ஒண்ணும் நினைச்சுக்க மாட்டேன் வினு. ஐயம் ஆல்வேஸ் வித் யூ'' என்றாள்.

''தாங்க்ஸ் டா'' என்றவன் அவளது கைகளை இறுகப் பற்றிக் கொண்டு சிறிது நேரம் அமர்ந்திருந்தான். பின் அவளை பார்த்து முறுவலித்துவிட்டு அறையைவிட்டு வெளியேறினான்.



# 28

அன்று மாலை முதலில் மலர்விழி தயாராகி வந்தாள்.

புதுப்புடவையில் நன்கு அலங்கரித்துக் கொண்டு வந்த நின்ற மலரைப் பார்த்த ரேணுகா, ''என் கண்ணே பட்டுவிடும் மலர்'' என்று பாராட்ட மலர் புன்னகைத்தாள்.

ஹரிணிக்கு இது தான் மனோஜ் வாங்கித் தந்த புடவையா என்று அறிய வேண்டி இருந்தது. மலர்விழி மனோஜின் அறையை பார்த்துக் கொண்டு இருக்க... அவன் சரியாக அந்த நேரம் தனது அறையை விட்டு வெளியே வந்தான்.

அவன் மலர்விழியை பார்க்கும் முன் தன் அண்ணியை தான் பார்த்தான். ஹரிணி காட்டிய கண் ஜாடையில் மலரைத் திரும்பிப் பார்த்தவன் வேகமாக தன் அண்ணியிடம் திரும்பி ஆமோதிப்பதாய் தலையாட்டி கண் சிமிட்டிச் சிரித்தான்.

பின் மலர்விழியிடம் திரும்பி, ''என்ன சின்னு நீ மட்டும் வந்து இருக்க? அங்கிளும் ஆன்ட்டியும் எங்கே?'' என்று கேட்டான்.

'புடவையை பத்தி ஏதாச்சும் சொல்லுறானா பாரு. டேய் மனோ! நானா வெட்கத்தை விட்டு உன்னை லவ்



பண்ணுறதா சொன்னேன் இல்ல... அதான் நீ தெனாவட்டா அலையுற!' என்று மலர்விழி உள்ளுக்குள் பொருமிக் கொண்டிருந்தாள்.

வினய் மலர்விழியை பார்த்து, ''சின்னு புதுப் புடவையா? சூப்பரா இருக்கு சின்னு! முகத்திலே தனி தேஜஸ் தெரியுதே! அது இந்தப் புடவையால வந்ததா இல்லை...'' என்று கேட்டுக் கொண்டிருக்கும் போதே ஹரிணி இடையிட்டு,

''இல்லைங்க. நீங்க சொன்ன தேஜஜுக்கு காரணம் அந்த புடவையை வாங்கிக் கொடுத்தவங்களால வந்தது. இல்லையா மலர்?'' என்று கேட்டாள்.

''அண்ணி நான் போட்டியிலே ஜெயிச்சா யாராச்சும் ஒரு ஏழைக்கு புடவை வாங்கித் தரலாம் என்று நினைச்சு நேத்து ஒரு புடவை வாங்கி வந்தேன். அது இதே கலர் இதே டிசைனில் தான் இருந்துச்சு'' என்று மனோஜ் கூறவும்,

''அந்த பூக்கார அஞ்சலைக்கு வாங்கினீங்களே மனோ, அதையா சொல்லுறீங்க?'' என்று ஹரிணி கேட்க மலர்விழி கடுப்பானாள்.

அவர்கள் இருவரும் மலரை ஏதோ கலாட்டா செய்கிறார்கள் எனப் புரிந்து கொண்ட வினய் அவர்கள் பேசியதை செவிமடுத்துக் கொண்டு இருந்தான்.

மலர்விழி வினய் முன் சென்று, ''அண்ணா எனக்கு ஏதாச்சும் புடவை வாங்கி வச்சு இருக்கீங்களா?'' என்று கேட்டாள்.

திடீரென எதற்கு இப்படிக் கேட்கிறாள் என்று புரியாது விழித்த வினய், ''இல்லையே சின்னு'' என்றதும்,

அவள் நேராக ரேணுகாவிடம் சென்று, ''அத்தை எனக்கு உங்க புடவை ஒண்ணை கொடுங்க. இந்த ப்ளவுஸுக்கு மேட்சா இல்லாட்டினாலும் பரவாயில்லை. நான் உங்க சேலையை கட்டிக்கிறேன்'' என்று கூறி கண்ணீர் சிந்தவும் ஹரிணி பதட்டமடைந்தாள்.

''என்ன நடக்குது இங்கே?'' என்று வினய் அதட்டல் போட, ஹரிணி மெல்லிய குரலில் நடந்ததை கூறினாள்.

வினய் தன் தம்பியின் புறம் திரும்பி, ''உன்கிட்ட நான் இதை எதிர்பார்க்கலை மனோ, அவளை சமாதானம் செய்!'' என்று கட்டளையிட்டான்.

''சாரிண்ணா நான் சும்மா கேலி பண்ணலாம் என்று...'' எனக் கூறியவன் மலர்புறம் திரும்பினான்.

அவர்கள் இருவரையும் தனித்து விட்டுவிட்டு அனைவரும் வெளியேறினர்.

''ஹேய் சின்னு! ஐயம் சாரிடா. நீ எதுக்கு இப்போ அழறே? நான் உன்னைக் கிண்டல் பண்ணதே இல்லையா என்ன? சாரிடா'' என்று அவன் மீண்டும் கேட்கவும்,

''உன்கிட்ட வந்து நான் முதல்ல லவ்வை சொன்னதால உனக்கு என்னைப் பார்த்தா இளக்காரமாப் போச்சு இல்ல. நான் ஏழைன்னு குத்திக் காட்டுறே இல்ல?'' என்று அவள் விசும்பலோடு கூற,

''அடிச்சுப்புடுவேன் சின்னு. நான் எப்போ உன்னைத் தரக் குறைவா நினைச்சேன்? நான் தான் அஞ்சலைன்னு சொல்லி நீ இந்தப் புடவையை கட்டிக்கிட்டு வந்து நிற்பேன்னு நேத்து நான் அண்ணிகிட்ட சொன்னேன்.



அதே போல நீ வரவும் கொஞ்சம் குஷியிலே என்ன பேசுறோம் என்று தெரியாமல் ஏதோ சொல்லிட்டேன்.

ஆனா நான் உன்னை ஏழைன்னு நினைக்கிறதா உனக்கு எப்படித் தோணுச்சு? இத்தனை வருஷம் என் கூட இருந்துட்டு என்னை நீ புரிஞ்சுக்கிட்டது அவ்வளவு தானா?

அப்புறம் என்ன சொன்ன... இளக்காரமா நினைக்கிறேன்னு தானே! நான் ஜெயிச்சதுக்காக யாருக்கும் எந்த கிஃப்ட்டும் வாங்கித் தரலை. உனக்கு மட்டும் தான் இந்தப் புடவையை வாங்கினேன். அதுவும் நானே போய் செலக்ட் பண்ணி வாங்கினேன். சினிமாவிலே சொல்லுறது மாதிரி கண்மணியேன்னு எனக்கு ரொமாண்டிக்கா பேசி அந்த சேலையை உன்கிட்ட தரத் தெரியலை.

நம்ம சின்னு தானேன்னு விளையாட்டுப் பேசினது தப்பாப் போச்சு. உன் மனசை சங்கடப்படுத்தணும் என்று நான் கனவிலேயும் நினைக்கலை'' என்று அவன் வருத்தத்துடன் கூறியதும் அவள் தன் கண்ணீரை துடைத்துக் கொண்டாள்.

''சாரி மனோ. நான் நேத்துல இருந்து கொஞ்சம் டென்ஷனா இருந்தேனா... நீ கிண்டல் பண்ணியதும் என் மனசு இல்லாததை எல்லாம் கற்பனை பண்ணிடுச்சு. நீ இன்னைக்கு சந்தோஷமா இருக்கணும் என்று காலையில் இருந்து கடவுள்கிட்ட வேண்டிக்கிட்டே இருந்துட்டு... கடைசியில் நானே உன்னை வருத்தப்பட வைச்சுட்டேன். சாரி மனோ'' என்றாள்.

''இப்பவாச்சும் சொல்லு சின்னு. என்ன பிரச்சனை? அண்ணனும் நேத்துல இருந்து அப்பப்போ வெறிச்சு ...க்கிட்டு அமைதியா உட்கார்ந்து இருக்கான்.''

''மனோ பிரச்சனை என்னன்னு உனக்குத் தெரியாமலே போகக் கூட சான்ஸ் இருக்கு. வீணா ஏன் அதை தெரிஞ்சுக்க நினைக்கிற? அண்ணன் உன்கிட்ட சொல்ல விரும்பாத ஒண்ணை நான் மட்டும் எப்படி சொல்ல முடியும்? என்னை புரிஞ்சுக்கோ மனோ'' என்றதும்,

''சரி போய் முகம் கழுவி கொஞ்சம் பவுடர் போட்டுக்கிட்டு வீட்டை பூட்டிட்டு வா. நான் கீழே போறேன்'' என்றவன் வெளியேறினான்.

லிஃப்ட் பக்கத்தில் வினய் தன் தம்பிக்காகக் காத்திருந்தான்.

''சாரிண்ணா. நான் சும்மா அவளை கலாட்டா பண்ணினேன். அவ தப்பா நினைச்சுக்கிட்டா'' என்று விளக்கம் சொல்ல,

''இட்ஸ் ஓகேடா மனோ. எனக்கு உன்னை தெரியும். ஆனா உன் கேலி கிண்டலில் அவளோட ஏழ்மை நிலை வந்துடக் கூடாது. அதிலே கவனமா இரு. அவ எங்கே?'' என்று கேட்டான்.

''முகத்தை கழுவிட்டு வரச் சொன்னேன். அவ அந்த உடனே நாம கீழே போகலாம்'' என்றதும் அண்ணனும் தம்பியும் பேசிக் கொண்டு அவளுக்காக காத்திருந்தனர்.

அவள் வீட்டை பூட்டிவிட்டு வந்ததும் அவர்கள் மூவரும் கீழே சென்றனர்.

மலரை பார்த்துவிட்டு அவள் அருகில் வந்த ஹரிணி, ''சாரி மலர். நானும் தெரியாம...'' என்றவளை முடிக்க விடாமல்,

''அண்ணி நீங்க எந்த தப்பும் பண்ணலை. உங்க மாமா மிரட்டினதிலே நான் கொஞ்சம் குழப்பத்தில் இருந்தேன். அதனால தான் உங்க ரெண்டு பேரோட இயல்பான கிண்டல் கூட என்னை நொடியிலே அழ வைச்சிடுச்சு'' என்று விளக்கினாள்.

''அப்புறம் ஒரே ரொமான்ஸா?'' என ஹரிணி கண் சிமிட்டிக் கேட்க,

''யாரு? அந்த அமுல் பேபியா? அட நீங்க வேற! என்னை திட்டினான். நேத்து ஒரு சாரி கொடுத்தான். இன்னைக்கு ரெண்டு சாரி கேட்டான். அம்புட்டு தான்'' என்று கூறிச் சிரித்தாள்.

அந்த சிரிப்பு ஹரிணியையும் தொற்றிக் கொண்டது. அவர்கள் இருவரும் சிரிப்பதை பார்த்த மனோஜ் நிம்மதி அடைந்தான்.

சிவராமன் அபிராமியுடனும் பாண்டியனுடனும் வந்து சேர்ந்தார். ரத்தினமும் அவர் மனைவியும் வந்து சேர்ந்தனர். அனைவரும் வந்ததும் மனோஜை பாடச் சொல்லி வற்புறுத்தினர்.

ஆராரிராரோ
நான் இங்கு பாட
தாயே நீ கண்ணுறங்கு
என்னோட மடி சாய்ந்து
வாழும் காலம் யாவுமே
தாயின் பாதம் சொர்க்கமே
வேதம் நான்கும் சொன்னதே
அதை நான் அறிவேனே

அம்மா என்னும் மந்திரமே
அகிலம் யாவும் ஆள்கிறதே

என்று மனோஜ் பாட ஆரம்பித்ததும் ரேணுகா புன்னகையுடன் பார்த்துக் கொண்டு இருந்தார். வினய் பெருமையுடன் தன் தம்பியை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

இவர்கள் இருவரும் பெருமைப்பட பாண்டியனோ கொதித்துக் கொண்டிருந்தார்.

'இவ பெரிய குந்தி தேவி! மந்திரம் சொல்லி பிள்ளை பெத்துட்டாள்! நான் இல்லாமல் இவளுக்கு எங்கே இருந்து பிள்ளைங்க வந்தாங்க? ரேணுகா பெருமையா சிரிச்சுக்கிட்டா இருக்கே? உனக்கு ஆப்பு வைக்கிறேன் பாரு!'' என்று கறுவிக் கொண்டு அமர்ந்திருந்தார். மனோஜ் பாட்டை பாடி முடித்ததும் பேச ஆரம்பித்தான்.

''என்னுடைய இந்த வெற்றியை நான் என் அப்பாவோட ஷேர் பண்ண விரும்புறேன்'' என்று மனோஜ் அறிவித்ததும் சிலர் குழம்பினர். சிலர் பயந்து தவித்தனர்.

''என்னடா இவனுக்கு அப்பா இல்லையேன்னு நீங்க நினைக்கலாம். எனக்கு அப்பாவா அம்மாவா அண்ணனா ஒரு பெஸ்ட் பிரெண்டா இருக்கிற என் அண்ணன் வினய் பத்தி தான் பேசிக்கிட்டு இருக்கேன். அவன் இல்லைன்னா இந்த மனோ இல்லை. இந்த வெற்றி என்னோடது இல்லை. அவனோடது'' என்றவன் மேல வா என்பது போல் தன் அண்ணனை பார்த்து சைகை செய்தான்.



அவனது பேச்சைக் கேட்ட ரேணுகா பெருமையில் பூரித்து நின்றிருந்தார். வினய் மேடையேற பாண்டியன் அவன் பின்னோடு மேடை ஏறினார். விஷயம் அறிந்தவர்கள் அதிர்ந்தார்கள். விஷயம் அறியாதவர்கள் குழம்பினார்கள்.

''நம்ம மாப்பிள்ளை எதுக்கும்மா மேடை ஏறி இருக்கார்?'' என்று சிவராமன் அபிராமியிடம் விசாரிக்க,

''அதாண்ணா எனக்கும் புரியலை. அவருக்கு மனோவை அவ்வளவா பிடிக்காது. வினய்க்கு இவரை பிடிக்காதுங்கிற விஷயம் தான் உங்களுக்கே தெரியுமே? இவர் எதுக்கு மேல போனார்?'' என்று அபிராமி குழம்பினார்.

ரேணுகாவும் ஹரிணியும் ஆண்டவனை துதிக்க ஆரம்பித்தனர். அவர்களோடு சேர்ந்து ரத்தினத்தின் குடும்பமும் ஆண்டவனையே சரணடைந்தது.

'அப்பான்னு சொன்னதும் இவர் மேல வந்துட் டாரோ?' என வினய் யோசிக்க ஆரம்பித்தான்.

பாண்டியன் வினய் அருகே சென்று, ''நான் தான் உன் அப்பான்னு ஒத்துக்கோ. இல்லைன்னா இவன்கிட்ட எல்லாத்தையும் போட்டு உடைச்சிடுவேன்'' என்று மிரட்டினார்.

''பப்ளிக்காவா?'' என்று வினய் நக்கல் பண்ண,

''நான் யாரைப் பத்தியும் கவலைப்படுறதா இல்லை. நீ என் பிள்ளைன்னு நான் இந்த உலகத்துக்கு சொல் லியே தீருவேன். நீ என்னை அப்பாவா ஏத்துக்கிட்டு தான் ஆகணும்'' என்று மிரட்டினார்.

"நோ! நெவர்!" என்று அழுத்தம் திருத்தமாக வினய் கூற பாண்டியன் கொதிப்படைந்தார்.

மேடை ஏறி மிரட்டினாலாவது வினய் பயந்து போய் தனது மிரட்டலுக்கு அடிபணிவான் என்று அவர் நினைத்திருக்க அவனோ சற்றும் அசைந்து கொடுக்கவில்லை என்றதும் கோபம் தலைக்கேற மனோஜ் புறம் திரும்பினார்.

"என்னமோ உன் அண்ணனை அப்படிப் புகழ்ந்தியே. ஆனா இவன் உன்கிட்ட இருந்து நிறைய விஷயம் மறைச்சு இருக்கான். நீ நினைக்கிற மாதிரி இவன் ஒண்ணும் உத்தமன் கிடையாது" என்றார்.

'இப்பவாச்சும் என்னை அப்பான்னு கூப்பிடுவியா?' என்பது போல் வினய் பக்கம் பார்வையை செலுத்த... அவனோ உன்னால முடிஞ்சதை பார்த்துக்கோ என்பது போல் தெனாவட்டாக நின்றான்.

இப்பக் கூட வழிக்கு வரமாட்டேங்கிறே இல்ல என்று வெகுண்ட பாண்டியன் மனோஜிடம், "உங்க அப்பா இறந்துட்டதா உங்க அண்ணன் சொன்னான் இல்ல. அது பொய். நான் சொல்லுறது உண்மையா பொய்யான்னு நீயே அவன்கிட்ட கேளு" என்றார்.

அபிராமி தன் அண்ணனிடம், "மனோ அப்பா உயிரோடு இருக்காரா? அது எப்படி இவருக்குத் தெரியும்?" என்று கேட்டார்.

வினய் பாண்டியன் மீது காட்டும் துவேசத்திற்கு பின்னே ரகசியம் எதுவும் ஒளிந்து இருக்குமோ என முதல் முறையாக சிவராமன் சிந்திக்க ஆரம்பித்தார்.



அங்கே மேடையில் பாண்டியன் மனோஜை மீண்டும் மீண்டும் உன் அண்ணனிடம் கேள் என்று தூண்டிக் கொண்டிருந்தார். மனோஜ் அசையாமல் நின்றிருக்க வினய் பேச ஆரம்பித்தான்.

"மிஸ்டர் பாண்டியன்! அவன் எந்தக் காலத்திலும் எனக்கு எதிரான கேள்வியை எழுப்ப மாட்டான். இப்போ என்ன? அவன் என்னைப் பார்த்து அப்படி ஒரு கேள்வி கேட்டால் நான் அதுக்கு என்ன பதில் சொல்லுவேன்னு நீங்க தெரிஞ்சுக்கணும். அவ்வளவு தானே? மனோ என்னைப் பார்த்து அப்படிக் கேட்டதா நினைச்சு நான் இப்போ பதில் சொல்லுறேன்" என்றவன் மனோஜிடம்,

"இவர் சொல்லுறது பாதி கரெக்ட். பாதி தப்பு மனோ" என்றான்.

'அப்பா உயிரோடு இருக்காரா? அண்ணன் என்ன சொல்ல வருகிறான்' என்று புரியாது மனோஜ் குழம்பினான். வினய் தன் பேச்சைத் தொடர்ந்தான்.

"அதாவது நாம பிறக்கக் காரணமா இருந்த ஈஸ் வருங்கிற தனி மனுஷன் உயிரோட தான் இருக்கார். ஆனா நம்மோட அப்பா ஈஸ்வர் செத்துப் போயிட்டார்" என்றான்.

பாண்டியனின் கேள்வியையும் வினய் அளித்த பதிலையும் கேட்ட சிவராமன் இது ஏதோ தீர்க்கப்படாத பழைய கணக்கு என்று புரிந்து கொண்டார்.

"என்ன சார் போதுமா?" என்று பாண்டியனை பார்த்து வினய் எகத்தாளமாக கேட்க பாண்டியன் உண்மையை போட்டு உடைக்க ஆரம்பித்தார்.

''நான் செத்தாடா போயிட்டேன்? என்னை அப்பான்னு கூப்பிடுன்னு உன்கிட்ட கெஞ்சிக்கிட்டு உன் பின்னாடி தானேடா லோ லோன்னு அலையுறேன்'' என்றதும் அபிராமியும் சிவராமனும் அதிர்ச்சி அடைந்தனர்.

மனோஜ் இவர் என் அப்பாவா என்று ஆச்சரியம் அடைந்தான். தன் தாயின் புறம் பார்வையை திருப்ப... கன்னங்களில் வழிந்தோடும் கண்ணீரைத் துடைக்க மறந்து ரேணுகா அமர்ந்திருந்தார்.

''இவனைத் தூக்கிப் போட்டுட்டு வான்னு சொன்னேன். உங்க அம்மா மறுத்துட்டாள். அப்போ நீ சின்ன பையன். உங்க அம்மா கூடவே இருந்துட்டே. இப்போ அவங்க ரெண்டு பேரையும் தூக்கிப் போட்டுட்டு வர வேண்டியது தானேடா?'' என்று எகிறினார்.

''வாரே வா! சபாஷ்!'' என்று கை தட்டிச் சிரித்த வினய்,

''ஆறு வயசுப் பையனா இருக்கறப்பவே உங்க கூட வராதா நானா நியாய அநியாயம் தெரிஞ்ச இந்த வயசிலே வருவேன்னு எதிர்பார்க்கிறீங்க? உங்களுக்கு மூளை எந்த வயசிலும் வேலை செய்யாதா?

இப்போ சொல்லுறேன் கேட்டுக்கோங்க. நீங்க செத்தா உங்களுக்கு நான் கொள்ளி கூட போட மாட்டேன். இத்தனை வருஷம் கழிச்சும் உங்களால செஞ்ச தப்பை நியாயப்படுத்த முடியுதுன்னா நீயெல்லாம் மனுஷனே கிடையாது'' என்று சட்டென்று ஒருமைக்கு தாவினான்.

''உன் அம்மா பேச்சைக் கேட்டுட்டு எங்க மூணு பேரையும் தவிக்கவிட்டு போன நீ இத்தனை வருஷத்திலே செஞ்ச தப்பை உணர்ந்திருந்தா நீ எங்க



அம்மாகிட்ட மன்னிப்பு கேட்டு இருப்பே. ஆனா இந்த நிமிஷம் வரைக்கும் அதைச் செய்யலை.

உனக்கு பொண்டாட்டி தேவை இல்லை. ஏன்னா அதுக்கு தான் அப்பாவி அபிராமி ஆன்ட்டி இருக்காங்களே! புள்ளை மட்டும் தான் தேவை. ஏன்னா உனக்கு வேற புள்ளை இல்லயே.

ஒருவேளை நீ மனோவை உன் பிள்ளையா ஏத்துக்கிட்டு அவனை மகனேன்னு கூப்பிட்டு இருந்தால் நான் உன்னை மன்னிச்சாலும் மன்னிச்சு இருப்பேன். ஆனா உனக்கு இப்பக் கூட அவன் மேல பாசம் வரலை. இன்னமும் ஒதுக்கி வைக்க தானே தோணுது. நீயெல்லாம் ஒரு அப்பாவா?

உன்னை மனுஷனாவே மதிக்காத நான் அப்பாவா எப்படி ஏத்துப்பேன்னு கனவு காணுறே?'' என்று சாட்டையடியாய் அவன் கேள்விகளை அள்ளி வீச பாண்டியன் அமைதியானார்.

அபிராமி அவர் அருகே வந்து, ''நான் உங்களுக்கு ரெண்டாவது மனைவியா? என்னைக் கல்யாணம் பண்ணும் போது உங்களுக்கு இருபத்தெட்டு வயசுன்னு சொன்னது பொய்யா?'' என்று கோபமாய் கேட்டவர்,

''உங்களுக்கு ஏதோ பிரச்சனை. அதனால தான் குழந்தை பிறக்காதுன்னு சொன்னாங்களே? ஆனா உங்களுக்கு ரெண்டு புள்ளைங்க இருக்காங்கன்னா... அது எப்படி?'' என்று கேட்டார்.

வீட்டில் வைத்துப் பேச வேண்டிய பேச்சுக்களெல்லாம் திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியின் விளைவாக சபையிலே அலசப்பட்டது.

"நான் செத்தாடா போயிட்டேன்? என்னை அப்பான்னு கூப்பிடுன்னு உன்கிட்ட கெஞ்சிக்கிட்டு உன் பின்னாடி தானேடா லோ லோன்னு அலையுறேன்" என்றதும் அபிராமியும் சிவராமனும் அதிர்ச்சி அடைந்தனர்.

மனோஜ் இவர் என் அப்பாவா என்று ஆச்சரியம் அடைந்தான். தன் தாயின் புறம் பார்வையை திருப்ப... கன்னங்களில் வழிந்தோடும் கண்ணீரைத் துடைக்க மறந்து ரேணுகா அமர்ந்திருந்தார்.

"இவனைத் தூக்கிப் போட்டுட்டு வான்னு சொன்னேன். உங்க அம்மா மறுத்துட்டாள். அப்போ நீ சின்ன பையன். உங்க அம்மா கூடவே இருந்துட்டே. இப்போ அவங்க ரெண்டு பேரையும் தூக்கிப் போட்டுட்டு வர வேண்டியது தானேடா?" என்று எகிறினார்.

"வாரே வா! சபாஷ்!" என்று கை தட்டிச் சிரித்த வினய்,

"ஆறு வயசுப் பையனா இருக்கறப்பவே உங்க கூட வராதா நானா நியாய அநியாயம் தெரிஞ்ச இந்த வயசிலே வருவேன்னு எதிர்பார்க்கிறீங்க? உங்களுக்கு மூளை எந்த வயசிலும் வேலை செய்யாதா?

இப்போ சொல்லுறேன் கேட்டுக்கோங்க. நீங்க செத்தா உங்களுக்கு நான் கொள்ளி கூட போட மாட்டேன். இத்தனை வருஷம் கழிச்சும் உங்களால செஞ்ச தப்பை நியாயப்படுத்த முடியுதுன்னா நீயெல்லாம் மனுஷனே கிடையாது" என்று சட்டென்று ஒருமைக்கு தாவினான்.

"உன் அம்மா பேச்சைக் கேட்டுட்டு எங்க மூணு பேரையும் தவிக்கவிட்டு போன நீ இத்தனை வருஷத்திலே செஞ்ச தப்பை உணர்ந்திருந்தா நீ ...



அம்மாகிட்ட மன்னிப்பு கேட்டு இருப்பே. ஆனா இந்த நிமிஷம் வரைக்கும் அதைச் செய்யலை.

உனக்கு பொண்டாட்டி தேவை இல்லை. ஏன்னா அதுக்கு தான் அப்பாவி அபிராமி ஆன்ட்டி இருக்காங்களே! புள்ளை மட்டும் தான் தேவை. ஏன்னா உனக்கு வேற புள்ளை இல்லயே.

ஒருவேளை நீ மனோவை உன் பிள்ளையா ஏத்துக்கிட்டு அவனை மகனேன்னு கூப்பிட்டு இருந்தால் நான் உன்னை மன்னிச்சாலும் மன்னிச்சு இருப்பேன். ஆனா உனக்கு இப்பக் கூட அவன் மேல பாசம் வரலை. இன்னமும் ஒதுக்கி வைக்க தானே தோணுது. நீயெல்லாம் ஒரு அப்பாவா?

உன்னை மனுஷனாவே மதிக்காத நான் அப்பாவா எப்படி ஏத்துப்பேன்னு கனவு காணுறே?" என்று சாட்டையடியாய் அவன் கேள்விகளை அள்ளி வீச பாண்டியன் அமைதியானார்.

அபிராமி அவர் அருகே வந்து, "நான் உங்களுக்கு ரெண்டாவது மனைவியா? என்னைக் கல்யாணம் பண்ணும் போது உங்களுக்கு இருபத்தெட்டு வயசுன்னு சொன்னது பொய்யா?" என்று கோபமாய் கேட்டவர்,

"உங்களுக்கு ஏதோ பிரச்சனை. அதனால தான் குழந்தை பிறக்காதுன்னு சொன்னாங்களே? ஆனா உங்களுக்கு ரெண்டு புள்ளைங்க இருக்காங்கன்னா... அது எப்படி?" என்று கேட்டார்.

வீட்டில் வைத்துப் பேச வேண்டிய பேச்சுக்களெல்லாம் திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியின் விளைவாக சபையிலே அலசப்பட்டது.

அபிராமியின் கேள்விக்கு பாண்டியன் பதில் அளிக்க வில்லை. ஆனால் ரேணுகா பதில் அளிக்க முன்வந்தார். அந்தக் கேள்வியில் அவரது தாய்மையும் கேள்விக்குறி ஆக்கப்பட்டதில் அவர் பதில் சொல்ல முன்வந்தார்.

சுற்றத்தாரின் முன்னிலையில் கேள்வி வந்துவிட்டது. அவர்கள் முன்னிலையிலே இதற்கு பதிலும் சொன்னால் தான் தன்னுடைய கௌரவம் காக்கப்படும் என அவர் நினைத்தார்.

அதனால் அவர் அபிராமியிடம் சென்று, ''அபிராமி என் வாழ்க்கையிலே நடந்த ஆக்ஸிடெண்ட் பத்தி அன்னைக்கு சொன்னேன் இல்ல. அதிலே மனோஜ் தன் கால்களை இழந்தான். இவர் தான் அப்பாவாகிற தகுதியை இழந்தார்'' என்றதும்,

அபிராமி, ''சீ!'' என்று பாண்டியனைப் பார்த்து வெறுப் பாய் உமிழ்ந்தார்.

''எவ்வளவு பித்தலாட்டம்? எல்லாம் தெரிஞ்சு என் வாழ்க்கையை வீணடிச்சு இருக்கீங்க. உங்க கூட இத் தனை வருஷம் வாழ்ந்ததை நினச்சா எனக்கு அரு வருப்பா இருக்கு'' என்றவர், ''அண்ணா!'' என்று சிவராமனை விளித்தார்.

''என்ன அபிராமி?'' என்று தங்கையிடம் கேள்வி கேட்ட சிவராமன் பாண்டியனைக் கோபத்துடன் முறைத்துக் கொண்டு நின்றார்.

''இந்த நொடியில் இருந்து இவருக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இவரை என் வாழ்க்கையிலே இருந்து வெளியேத்திடுங்க. இப்போ இருக்கிற வீடு நம்ம அப்பா பணத்திலே வாங்கினது. நல்லவேளை அது



என்னோட பேரிலே தான் இருக்கு. அதனால இவரை வீட்டை விட்டு வெளியேறச் சொல்லுங்க. இவர் வாங்கித் தந்த எதுவுமே எனக்கு வேண்டாம்'' என்று கோபத்துடன் கூறினார்.

அபிராமியிடம் இருந்து அப்படி ஒரு வெறுப்பை பாண்டியன் எதிர்பார்க்கவில்லை. அவர் அதிர்ந்து போய் செய்வதறியாது நின்றார்.

ஆரவாரமாக ஆரம்பித்த விழா பாதியிலே நிறுத்தப் பட்டது. அனைவரும் ஆளுக்கொன்றாய் தங்களுக்குள் கூடிப் பேசி கலைந்தனர்.

அபிராமி கூறியபடியே சிவராமன் பாண்டியனை தன் தங்கையின் வாழ்க்கையில் இருந்து அடியோடு விலக்கும் வேலையை மேற்கொண்டார். ஈஸ்வர பாண்டியனும் வெளியேறினார்.

சிவராமன் தன் மருமகளிடம் மன்னிப்பு கேட்டார்.

''சாரி மாப்பிள்ளை. விஷயம் என்னன்னு தெரியாமல் உங்களைத் தப்பா நினைச்சு கோவிச்சுக்கிட்டேன்'' என்றதும்,

''மாமா நீங்க விஷயம் தெரியாமல் தானே முறைச் சீங்க. இதுக்கு போய் எதுக்கு மன்னிப்பெல்லாம்... வேண்டாம் மாமா. என்னைத் திட்டுறதுக்கு உங்களுக்கு எல்லா உரிமையும் இருக்கு'' என்று சமாதானம் செய்தான்.

இருப்பதிலே மனோஜ் தான் அதிக மன உளைச்ச லுக்கு ஆளானான். அவனுக்கு தன்னால் தான் தன்னுடைய குடும்பம் பிரிந்தது என்பதில் மிகுந்த மனவருத்தம் உண்டானது.

தன்னால் வினய் எதையெல்லாம் இழந்திருக்கிறான் என நினைத்துப் பார்க்க ஆரம்பித்தான்.

ரேணுகா வினய் முன்பு வந்து, ''வினய் மனோவை போய் பாரு. என்னால அவனை சமாளிக்க முடியாது. நீ போய் பேசு. அவன் அப்போல இருந்து ஒண்ணும் பேசாமல் இருக்கான். எனக்கு பயமா இருக்கு'' என்றார்.

''நான் பார்த்துக்கிறேன்மா. நீங்க கவலைப்படாதீங்க'' என்றவன் தம்பி முன் சென்று அமர்ந்தான்.

''என்னடா மனோ எதுவும் சாப்பிடாமல் அமைதியா உட்கார்ந்து இருக்கியாம். ஏன்? என்ன ஆச்சு? வயிறு சரி இல்லையா?'' என்று ஒன்றுமே நடக்காது போல் கேள்வி கேட்டான்.

அவன் பதில் அளிக்காமல் அமைதியாக இருக்கவும், ''அண்ணன் மேல கோபமா இருக்கியா?'' என்று கேட்டதும் விருட்டென்று தலையை நிமிர்த்தி அண்ணனை பார்த்தான்.

''இப்போ என்ன ஆச்சுன்னு இப்படி தலையை தொங்கப் போட்டுக்கிட்டு உட்கார்ந்து இருக்கே?'' என்று வினய் அதட்டவும் மனோஜ் தன் மனதில் இருப்பதைக் கொட்ட ஆரம்பித்தான்.

''என்னால உனக்கு எப்பவுமே கஷ்டம் தானேண்ணா?'' என்று தொடங்கியவனை வினய் இடைமறிக்க முயல,

''நான் பேசி முடிச்சுடுறேன். அப்புறமா நீ பேசு'' என்று மனோஜ் தன் அண்ணனை தடுத்தான்.

அவன் மனதில் இருப்பது வெளியே வரட்டும என நினைத்த வினய் அதன்பின் அமைதி காத்தான்.



''சின்ன வயசிலே எல்லோரும் ஓடியாடி விளையாடு வாங்க. ரெண்டு காலும் இல்லாத என்னால விளையாட முடியாமல் போச்சு. அது விதி! ஆனா உன்னால ஓடியாடி விளையாட முடிஞ்சும் நீ ஏன் விளையாடல? அதுக்கு காரணம் நான் தானே?

வளர்ந்த பின்னால பிரண்ட்ஸோட சேர்ந்து என்னைக் காச்சும் ஊர் சுத்தி இருக்கியா? என்னால தியேட்டருக்கு போக முடியாதுன்னு நீயும் போனதில்லை.

என்னை தனியா விட்டுட்டு போகக் கூடாதுன்னு கிடைச்ச ஐ.ஐ.டி படிப்பை கூட வேண்டாம் என்று சொல்லி தூக்கிப் போட்டுட்ட... இதெல்லாம் பத்தாதுன்னு என்னால தான் நீ அப்போவோட வாழ முடியாமல் போயிருச்சுன்னு நினைக்கும் போது எனக்கு உறுத்தலா இருக்குண்ணா'' என்றவன் உடைந்து போய் அழ ஆரம்பித்தான்.

அவன் அழுவதைக் கண்ட ரேணுகா, ஹரிணி, மலர்விழி மற்றும் அபிராமிக்கும் கண்களில் நீர் வழிந்தது.

அழாமல் இருந்தது வினய் மட்டுமே. அவன் தன் தம்பியிடம், ''நீ முதல்ல சொன்ன எல்லாத்துக்கும் காரணம் நான் உன் மேல வச்சிருக்கிற பாசம்டா. ஆனா கடைசியா நீ கேட்ட பாரு ஒரு கேள்வி. அப்பா கூட வாழலைன்னு...'' என்றவன் இகழ்ச்சியாய் புன்னகைத்தான்.

''என்னால நம்ப முடியலைடா மனோ. உன்னால அவரை அப்பாவா ஏத்துக்கு முடியுதா? தான் பெத்த பிள்ளையை கடைசி வரைக்கும் காப்பாத்தணும் என்ற அடிப்படை அன்பு கூட இல்லாத ஒரு மனுஷனை உன்னால அப்பாவா ஏத்துக்க முடியுதா?

கல்யாணம் பண்ணும் போது இனிமேல் உன்னோட இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுத்துக்குவேன்னு உறுதிமொழி சொல்லிக் கல்யாணம் பண்ணின நம்ம அம்மாவை நடுவழியில் கழட்டி விட்டுட்டுப் போன மனுஷனை உன்னால அப்பாவா ஏத்துக்க முடியுதா?

நம்மளை விட்டுப் பிரிஞ்சு பின்னால தன் வயசைக் குறைச்சு, தனக்கு கல்யாணம் ஆனதை மறைச்சு, தன்னால ஒரு குழந்தைக்கு தகப்பன் ஆக முடியாதுங்கிற குறையை மறைச்சு அப்பாவி அபிராமி ஆன்ட்டியை ஏமாத்தினவரை ஒரு மனுஷனா உன்னால ஏத்துக்க முடியுதா?

அவர் கூட நான் வாழ முடியலைன்னாடா நீ ஃபீல் பண்ணுறே? அப்படிப்பட்ட மனுஷன் கூட வாழுற வாழ்க்கை நரக வாழ்க்கையா இருந்திருக்காதா?'' என்று கேட்டதும் மனோ என்ன சொல்வதென்று தெரியாமல் திருதிருத்தான்.

'அண்ணன் சொல்வது சரிதானே? அவர் கூட வாழ்வதற்கு பதிலா தனியே இருப்பது மேல் அல்லவா? அப்படின்னா நான் எதுக்கு வருத்தப்படணும்?' என்ற ரீதியில் யோசிக்க ஆரம்பித்தான்.

''சாரிண்ணா. நீ சொல்லுற கோணத்திலே நான் யோசிக்கலை. சரி. இனிமே நான் கில்ட்டியா ஃபீல் பண்ண மாட்டேன்''' என்றான்.

அபிராமி மனோவிடம் சென்று, ''மனோ வருத்தப் படாதே. உன்னை வேண்டாம்னு தூக்கிப் போட்ட உன் பாட்டி எப்படி செத்தாங்க தெரியுமா? ரோட்டிலே நடந்து போன போது லாரி அடிச்சிருக்கு. அடையாளம்



ஆள் இல்லாமல் அநாதை பொணமா போய் சேர்ந்தாங்க. அவங்க புள்ளை வேலை விஷயமா வெளியூர் போன போது இது நடந்திருக்கு. கடவுள் இருக்கான்டா மனோ!'' என்று ஆத்திரமாக மொழிந்தார்.

''அம்மா!'' என்று அபிராமியின் கைகளை பிடித்துக் கொண்டு அவன் கண்ணீர் விட,

''நீ என் பிள்ளைடா. உனக்கு அப்பா இல்லாம போனதால என்ன நஷ்டம் சொல்லு? உனக்கு ரெண்டு அம்மா இருக்கோம்டா. எதைப் பத்தியும் கவலைப் படாதே'' என்று தேற்றினார்.

இந்த விஷயம் யார் யாருக்கு எப்போது தெரியும் என்று விவாதிக்கப்பட்டது.

''நீங்க எப்படி இவர்கிட்ட ஏமாந்தீங்க?'' என்று சிவராமனிடம் ரேணுகா கேட்டார்.

''எங்க அப்பா ஒரு முறை பாம்பே போனப்போ அவருக்கு ஹார்ட் அட்டாக் வந்துடுச்சு. பாண்டியன் தான் பக்கத்தில் இருந்து பார்த்துக்கிட்டார். சொந்த பந்தம் அதிகம் இல்லைன்னு அவர் சொன்னதை எங்க அப்பா நம்பினார். இந்தக் காலம் மாதிரி அப்போ டிடெக்டிவ் வச்சு மாப்பிள்ளை வீட்டை விசாரிக்கிற முறை இல் லாமல் போச்சு'' என்று பெருமூச்சுவிட்ட சிவராமன்,

''பாண்டியன் நல்ல வேலையில் இருக்கார். பார்க்க ஆள் அம்சமா இருக்கார். உதவுற குணம் உடையவரா இருக்கார் என்று எங்கப்பா என் தங்கச்சியை கட்டி வச்சுட்டார்' என்று பெருமூச்செறிந்தார்.

நாட்கள் உருண்டோடின. பாண்டியனைப் பற்றி யாரும் பேசுவது கூட இல்லை.

புண்ணியம் ஆம் பாவம்போல் போனநாள் செய்தஅவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள் – எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை; எச்சமயத்தார் சொல்லும்
நீதொழிய நன்மை செயல்

என்கிறது அவ்வையாரின் நல்வழி பாடல் ஒன்று. நாம் செய்கின்ற பாவமும் புண்ணியமும் தான் நம்முடைய வாழ்நாட்களில் நாம் சேர்த்து வைக்கும் பொருட்கள் என்பதே இதன் பொருள்.

அதன்படி தன் வாழ்நாளில் பாவத்தை மட்டுமே சேர்த்து வைத்த பாண்டியன் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டார்.

ஒன்றுக்கு இரண்டாய் மனைவிகளும் பிள்ளைகளும் இருந்தும் அருகில் இருந்து கரிசனமாய் பார்த்துக் கொள்ள ஆளில்லாமல் அல்லல்பட்டார். தன் பிழையை நினைத்து நினைத்து கண்ணீர்விட்டார். காலங் கடந்த ஞானோதயத்தால் யாருக்கு என்ன பயன் உண்டாகும்?

அது அவர் வாங்கி வந்த வரம் அல்ல! அவரது நடத்தையால் அவர் சம்பாதித்து கொண்ட சாபம்!!



# 29

''இன்னும் ரெடி ஆகலையாடா வினய்? நேரமாச்சு பாரு. நீயே ஸ்லோவா இருந்தா எப்படிடா? சீக்கிரமா டிரஸ் மாத்து'' என்று ரேணுகா உத்தரவிட,



''அம்மா அந்த ஷெர்வானியை போட்டா வேர்த்து வழியும். வீட்டை விட்டு கிளம்பும் போது போட்டுக்கிறேன்'' என்றான்.

''ஹரிணி ரெடி ஆகிட்டாளான்னு பாரு.''

''அப்பவே பட்டுப் புடவை மாத்தப் போறதா சொன்னாள். ரெடி ஆகி இருப்பாள். நீங்க கேட்கிறதுக்கு முன்னாடியே சொல்லிடுறேன். தருண் மண்டபத்தில வந்து தான் டிரஸ் மாத்தப் போறானாம். அவன் அவனோட ரெண்டு பாட்டிகள் கூடவும் இருக்கான். என்னைக் கேள்வி கேட்கிறதை விட்டுட்டு நீங்க ரெடியாகுங்க'' என்று கூறிய வினய் தனது அறைக்குள் சென்று மறைந்தான்.

அவர்கள் அனைவரும் மனோஜ் மற்றும் மலர்விழியின் திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கு செல்வதற்கு தயாராகிக் கொண்டிருந்தார்கள்.

கடந்த மூன்றாண்டுகளில் என்னவெல்லாம் நடந்ததென்றால்...

மலர்விழிக்கு அவள் எதிர்பார்த்தபடியே மேற்படிப்பு படிக்க இடம் கிடைத்தது. இன்னும் இரு மாதங்களில் அவளது படிப்பு முடியும் தருவாயில் இருக்கிறது.

மனோஜ் திரை உலகில் பல பாடல்களை பாடி சாதனை படைத்தான்.

சிவராமன் தன் மகள் சாதனாவின் திருமணத்தை முடித்தும் தனது சிங்கப்பூர் வேலையை ராஜினாமா செய்துவிட்டு தன் மனைவியுடன் சென்னைக்கு குடி பெயர்ந்தார். தனது தங்கை அபிராமியுடன் சேர்ந்து ஒரே வீட்டில் தங்கிக் கொண்டார். சென்னையில வேலை பார்க்க ஆரம்பித்தார்.

ஹரிணி மீண்டும் கருவுற்றாள். தற்போது அவளுக்கு ஏழாம் மாதம் நடந்து கொண்டிருக்கிறது.

இவை தான் கடந்த மூன்றாண்டுகளில் நடந்தேறிய முக்கிய நிகழ்வுகள்.

அறைக்குள் வினய் நுழையும் பொழுது அவனது மகன் தருண் அவனை தள்ளிக் கொண்டு அறைக்குள் நுழைந்தான்.

''அம்மா!'' என்று கூவி அழைத்தவன் ஹரிணியிடம் சென்று, ''அம்மா நான் குட் பாயா இருந்தேன்னு அபி பாட்டி டூ சாக்லேட்ஸ் தந்தாங்க. இது எனக்கு. இது பாப்பாக்கு. அதனால நீங்க சாப்பிடுங்க'' என்று அவளது வாயில் திணித்துவிட்டான்.

மூன்றரை வயதில் அவனுக்கு இருந்த சகோதரப் பாசத்தைக் கண்ட ஹரிணி முறுவலித்துக் கொண்டாள்.

'வினுவோட பிள்ளைன்னு நிரூபிக்கிறான். அவர் தம்பி மேல பாசமா இருக்கிற மாதிரியே இவனும்... இன்னும் வெளியே கூட வராத இந்தக் குட்டி மேல பாசமா இருக்கான்' என்று நினைத்துப் பூரித்தாள்.

''தருண்!'' என்று வினய் அழைக்க,

''அப்பா நான் பிஸி. சீ யூ லேட்டர்'' என்று சொல்லிக் கொண்டே ஓடினான்.

''எல்லாம் நேரம்டா. நானும் ஒரு மாசமா பார்க்கிறேன். கல்யாண வேலையிலே பிஸியா இருக்கேன் என்று நான் சொல்லுகிற மாதிரியே சொல்லிக்கிட்டு அலையுற'' என்று வினய் அலுத்துக் கொண்டான்.

ஹரிணியின் அருகில் சென்று அவளது மேடிட்ட வயிற்றில் முத்தமிட்டு, ''குட்டிம்மா! அண்ணா



கொடுத்த சாக்லேட்டை சாப்பிட்டீங்களா? உங்களுக்கு உறுத்தக் கூடாதுன்னு அப்பா சாஃப்ட் சில்க் வாங்கிக் கொடுத்தேன். சுகமா இருக்கா? இல்ல உறுத்துதா?'' என்று கேட்டுக் கொண்டே நிமிர்ந்து மனைவியின் முகத்தை பார்த்தான்.

அவள் அவனை ஏக்கமாகப் பார்த்தாள். அவன் அவளை படுக்கையில் அமர வைத்துவிட்டு அவளருகில் அமர்ந்தான்.

''இன்னும் ரெண்டு நாள் தானடா ஹனி. அதுக்கு அப்புறம் எந்த வேலையும் கிடையாது. நான் உன் கூடவே இருப்பேன்'' என்று வாக்களித்தான்.

'நிஜமா தானே சொல்லுறீங்க? நீங்க என் கூட உட்கார்ந்து பேசி எத்தனை நாளாச்சு தெரியுமா? உங்களைப் பார்க்கவே முடியுறதில்லை'' என்று அவள் ஏக்கமாகக் கூறவும்,

''என்னடா பண்ணுறது? நம்ம மனோ கல்யாணத்துக்கு நான் வேலை பார்க்காமல் வேற யாரு பார்ப்பாங்க? ம்ம்ம் ஒரு வாரம் ஆபீஸுக்கு லீவ் போடு. நாம பக்கத்திலே எங்கேயாவது டூர் போகலாம். நாள் முழுசும் உன் கூடவே இருக்கேன். இட்ஸ் எ பிராமிஸ்'' என்றதும் அவள் முகம் மலர்ந்தாள்.

அவர்கள் அனைவரும் மண்டபத்திற்கு வந்து சேர்ந்தனர்.

மனோஜ் தன்னுடைய உடையை போலவே அண்ணனும் வாங்க வேண்டும் என்று வற்புறுத்திப் பார்த்தான். ஆனால் அன்றைய கதாநாயகன் நீ தான். நீ தனியாக தெரியணும் என்று கூறிய வினய் ஒரே மாதிரி உடை வாங்க மறுத்துவிட்டான்.

ஆனால் மனோஜ் தன்னுடையதை போலவே தன் அண்ணன் மகனான தருணுக்கும் உடை அமைய வேண்டும் என நினைத்து தன்னுடைய ஆடையை சிறிய அளவில் செய்து தரச் சொல்லி வாங்கினான். அதனால் அவர்கள் இருவரும் ஒன்றாக உடை அணிந்து மேடை ஏறினர்.

மலர்விழி அழகே உருவாய் மேடை ஏறி மனோஜ் அருகே வர அவன் அவளிடம் குனிந்து மெதுவான குரலில், "என்ன சின்னு மூணு இஞ்சுக்கு மேக் அப் போட்டு இருக்க?" என்று கிண்டல் பண்ணினான்.

அதோடு நிறுத்தாமல, "நாளைக்கு காலையிலே இப்படி மேக் அப் போடாதே. நான் அடையாளம் தெரியாமல் வேற யார் கழுத்திலாச்சும் தாலி கட்டிடப் போறேன்" என்றான்.

'கட்டுவடா கட்டுவ! என்று உள்ளுக்குள் கறுவிய மலர்விழி தன் மாலையை சரிசெய்வது போல் குனிந்து அடிக்குரலில், "டேய் அமுல் பேபி! உன் வாயை வச்சுக்கிட்டு சும்மா இரு. இல்லைன்னா பொது இடம் என்று கூடப் பார்க்க மாட்டேன். மொத்திடுவேன்" என்று மிரட்டினாள்.

"அடிப்பாவி! எனக்கு நீ வச்ச பட்ட பேரு அமுல் பேபியா?" என்று ஆச்சரியத்துடன் மனோஜ் வினவ மலர்விழி அகப்பட்டுக் கொண்டாள்.

இத்தனை வருடங்களாக அவன் கேட்டும் அவள் சொல்லாமல் சமாளித்து வந்தாள். இன்று தன்னையும் அறியாமல் உளறிவிட்டாள்.



"நானாடி அமுல் பேபி? இந்த பேபி என்னவெல்லாம் செய்யும் என்று நாளைக்கு நைட் பாரு" என்று கூறி அவளை சிவக்க வைத்தான்.

இருவரின் மலர்ந்த முகங்களை கண்ட உறவினர்கள் ஆனந்தப்பட்டார்கள். வினய் அனைவரையும் வரவேற்று உபசரித்துக் கொண்டு இருந்தான்.

உறவினர்கள் நண்பர்கள் என்று அந்த மண்டபமே கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. திரை உலகப் பிரமுகர் களின் கூட்டமும் அலைமோதியது. இன்னிசை கச்சேரி நடந்து கொண்டிருந்தது.

"இப்பொழுது இன்றைய கதாநாயகனான பின்னணி பாடகர் மனோஜ் பாடுவார்" என்ற அறிவிப்பை இன் னிசைக் குழுத் தலைவர் வெளியிட்டார்.

வினய் இதை ஏற்கனவே எதிர்பார்த்தான். அதனால் அவன் மேடைப் பக்கம் திரும்பாமல் தனது வேலையில் மும்முரமாய் இருந்தான். மேடையேறிய மனோஜ்,

"இப்போ நானும் எங்க வீட்டு குட்டி இளவரசனும் சேர்ந்து உங்களுக்காக ஒரு பாட்டுப் பாடப் போறோம்" என்று அறிவித்ததும் வினய் வேகமாக மேடைப் பக்கம் திரும்பினான்.

'தருணா? மூன்றரை வயசு பையன் இவன் கூட சேர்ந்து என்ன பாடுவான்?' என்று அவன் பிரமித்து போய் நின்றான்.

தனது பிஞ்சு கரங்களால் அந்த மைக்கை பிடித்துக் கொண்டு தருண் தன் சித்தப்பாவுடன் இணைந்து பாட ஆரம்பித்தான்.

காட்டுக்குயிலு மனசுக்குள்ள

பாட்டுக்கொன்றும் பஞ்சமில்லே பாடத்தான்

தவிலைத் தட்டு துள்ளிக்கிட்டு

கவலை விட்டு கச்சைக் கட்டு ஆடத்தான்

எல்லோரும் மொத்தத்திலே சந்தோஷ தெப்பத்திலே

நள்ளாடும் நேரத்தில உல்லாச நெஞ்சத்திலே ஹேய்...

என்று அவர்கள் பாடவும் வினய் மேடை அருகே வந்தான்

மனோஜ்: போடா எல்லாம் விட்டுத் தள்ளு

பழச எல்லாம் சுட்டுத் தள்ளு

புதுசா இப்போ பொறந்தோமுன்னு

எண்ணிக்கொள்ளடா... டோய்...

தருண்: பயணம் எங்கே போனால் என்ன

பாதை நூறு ஆனால் என்ன

தோட்டம் வச்சவன் தண்ணீர் விடுவான்

சும்மா நில்லடா... டோய்...

தருண் 'டோய்!' என்ற வார்த்தையை அழுத்தமாக உச்சரித்ததைக் கேட்ட கூட்டத்தினர் சிரித்தனர்.

தருண் பிசிறில்லாமல் பாடியதில் இருந்தே அவன் இதற்கு நிறைய பயிற்சி எடுத்திருப்பது வினய்க்கு புரிந்து போனது. 'இது தான் கடந்த ஒரு மாசமா சார் பிசியா இருந்த காரணமா?' என்று எண்ணிக் கொண்டான்.



தருண்: பந்தம் என்ன சொந்தம் என்ன

போனால் என்ன வந்தால் என்ன

உறவுக்கெல்லாம் கவலைப்பட்ட

ஜென்மம் நானில்லை... ஹஹா...

மனோஜ்: பாசம் வைக்க நேசம் வைக்க

அண்ணன் உண்டு வாழ வைக்க

அவனைத் தவிர உறவுக்காரன்

யாரும் இங்கில்லே...

தருண்: உள்ள மட்டும் நானே

உசிரைக் கூடத்தானே

மனோஜ்: என் அண்ணன் கேட்டால்

வாங்கிக்கன்னு சொல்லுவேன்

என்று மனோஜ் பாடலை மாற்றிப் பாடினான். 'தோழன்' என்று வரும் இடங்களை அவன் 'அண்ணன்' என்று மாற்றிப் பாட வினய் கண்கள் கலங்க உதட்டில் நிறைந்த புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

சோகம் விட்டு சொர்க்கம் தொட்டு

ராகம் இட்டு தாளம் இட்டு

பாட்டு பாடும் வானம்பாடி நாம் தான்... ஹேய்...

என்ற வரிகளை இருவரும் இணைந்து பாட தருணின் குரல் தனியாக ஒலிக்கவில்லை என்பதை கூட்டத்தினர் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

பாடலை பாடி முடித்த தருண், ''மனோப்பா நான் நல்லா பாடினேனா?'' என்று மைக்கில் கேட்க,

''ஆமாடா கண்ணா'' என்று கூறி அவனுக்கு முத்தம் கொடுக்க மனோஜ் குனிய அவனோ அவனிடம் இருந்து திமிறிக் கொண்டு மேடையை விட்டுக் கீழே இறங்கி தன் தந்தையை நோக்கி ஓடினான்.

தன்னை நோக்கி ஓடி வந்த மகனை வினய் அள்ளி அணைத்துக் கொண்டான்.

''அப்பா நான் நல்லா பாடினேனா?'' என்று அவனிடமும் தருண் கேட்டான்.

''ரொம்ப சூப்பரா பாடினேடா குட்டி. அப்பாகிட்ட சொல்லவே இல்லை. சஸ்பென்சா வச்சு இருந்தியா?'' என்று கேட்டு மகனது கன்னத்தில் முத்தம் பதித்தான். அவர்கள் அருகே வந்த மனோஜை வினய் தோளோடு அணைத்துக் கொண்டான்.

மலர்விழியும் ஹரிணியும் அவர்கள் மூவரையும் பெருமையோடு பார்த்துக் கொண்டிருந்தனர்.



# 30

மறுநாள் மிக நெருங்கிய உறவு மற்றும் நட்பு வட்டாரத்தின் மத்தியில் மனோஜ் மலர்விழியின் கழுத்தில் தாலிகட்டி தன்னவளாக்கிக் கொண்டான்.



அன்று இரவு மலர்விழி மிகுந்த தயக்கத்தோடு மனோஜின் அறைக்குள் நுழைந்தாள்.

''வெட்கமா? உனக்கா சின்னு?'' என்று மனோஜ் ஆச்சரியப்பட,

''ஏன் நான் பொண்ணு இல்லையா? எனக்கு வெட்கம் வராதா?'' என்று அவள் சண்டைக்கோழியாய் சிலிர்க்க,

''அப்பாடா! நான் கூட ஆள் மாறாட்டமோன்னு பயந்துட்டேன். இது என் சின்னு தான்'' என்றான்.

அவள் அவனருகே அமர்ந்ததும் அவன் அவளை இழுத்து அணைத்தான். அவனிடமிருந்து மெல்ல விலகியவள்,

''அதுக்குள்ள என்ன அவசரம்? நாம முதல்ல பேசிக்கிட்டு இருக்கலாம் மனோ'' என்றாள்.

'இத்தனை வருஷமா நாம பேசாததையா இந்த நிமிஷம் பேசப் போறோம்?' என நினைத்தவன் அமைதியாக இருந்தான்.

அவனது அமைதியை கண்டவள், ''என்னங்க கோபமாகிட்டீங்களா?'' என்றாள்.

''என்னங்கவா? ஷாக்குக்கு மேல ஷாக்கா குடுக்கறியே சின்னு? புதுசா இதென்ன மரியாதை? அண்ணன் சொன்னானா?'' என்று கேட்டவன்,

''கண்டிப்பா அவன் சொல்லி இருக்க மாட்டான். தனியா இருக்கும் போது அவனையே அண்ணி எப்படி கூப்பிடுவாங்களோ?! அம்மா... உன்னைப் பார்த்ததும் அவங்களுக்கு ஈன்னு பல்லை காட்டத் தான் தெரியும். அவங்களும் சொல்லி இருக்க மாட்டாங்க. அப்படின்னா

உங்க அம்மா தான் சொல்லி இருப்பாங்க. சரியா?'' என்றதும் அவள் ஆமாம் என்பதாய் தலையாட்டினாள்.

அவன் தன் கைப்பேசியை எடுத்து ரத்தினத்திற்கு அழைப்பு விடுத்தான்.

''இந்நேரத்தில் இவன் யாரை கூப்பிடுறான்?'' என்று மலர்விழி திகைத்துப் போய் அமர்ந்திருந்தாள்.

''என்ன மாப்பிள்ளை?'' என்று ரத்தினம் பதட்டத்தோடு வினவ,

''அத்தைகிட்ட கொஞ்சம் பேசணும். போனை கொடுங்க'' என்று மனோஜ் கூறியதும் அவர் ஒன்றும் புரியாதவராய் தன் மனைவியிடம் கைப்பேசியை கொடுத்து,

''மாப்பிள்ளை உன்கிட்ட பேசணுமாம்'' என்றார்.

''என்ன மாப்பிள்ளை இந்நேரம் போன் போட்டு இருக்கீங்க?'' என்று மலரின் தாயும் பதட்டத்துடனே பேசினார்.

''ஏன் அத்தை இந்நேரம் பேசக் கூடாதா? உங்க பொண்ணு தான் இது பேசுறதுக்கு ஏத்த நேரம் என்று சொன்னாள்'' என்றதும் மலர்விழி அவனை மொத்த ஆரம்பித்தாள்.

''என்னை மரியாதையா கூப்பிடச் சொல்லிக் கொடுத்து இருக்கீங்கன்னு தெரிஞ்சதும் உங்களுக்கு தாங்க்ஸ் சொல்லலாம் என்று தான் கூப்பிட்டேன். ஆனா என்னை அடிக்கக் கூடாதுன்னு நீங்க உங்க பொண்ணுக்கு சொல்லிக் கொடுக்கலையா அத்தை? உங்க பொண்ணு என்னை இந்த மொத்து மொத்துறாள்'' என்று அவன் கேலி பேச,

மலர்விழியின் தாய் மனோஜ் கேலி செய்கிறான் என்று புரிந்து நிம்மதியானார்.



மனோஜிடம் இருந்து போனை பறித்த மலர்விழி மனோஜிடம், ''நீ பேசாமல் அமைதியா இரு'' என்று மிரட்டிவிட்டு போனை காதில் வைத்து,

''அம்மா நான் காலையிலே பேசுறேன். இப்ப போனை வச்சுடுறேன்'' என்றாள்.

''மாப்பிள்ளையை அடிக்காதே மலர்'' என்று அவர் கூற,

''இவன் பண்ணுற காரியத்துக்கு இவனை கொஞ்சவாம்மா முடியும்?'' என்று கேட்டுக் கொண்டே அழைப்பை துண்டித்தாள்.

விஷயமறிந்த ரத்தினம் சிரித்துக் கொண்டார். மனோஜ் அமைதியாக அமர்ந்து இருக்கவும்,

''என்னடா பேச்சையே காணோம்? உட்கார்ந்துகிட்டே... அதுவும் கண்ணை திறந்து வச்சுக்கிட்டே தூங்குறியா?'' என்று கேட்டாள்,

''காலையிலே எங்க அண்ணி என்னை கூப்பிட்டு என்ன சொன்னாங்க தெரியுமா? மனோ இவ்வளவு நாளா நீங்க அண்ணன்தாசனா இருந்துட்டீங்க. இனிமேலாச்சும் பொண்டாட்டி சொல்றதை கேட்டு பொண்டாட்டிதாசனா நடந்துக்கோங்கன்னு சொன்னாங்க. அதான் நீ அமைதியா இருன்னு சொன்னதால கம்முன்னு உட்கார்ந்திருக்கேன்'' என்று அவன் அப்பாவியாகக் கூறினான்.

'மொத்தத்திலே என்னை வெறுப்பேத்த முடிவு பண்ணிட்டே' என நினைத்தவள், ''அப்போ நான் சொல்றதைக் கேட்டு படுத்துத் தூங்கு'' என்று கூறிவிட்டு படுத்துக் கொண்டாள்.

ஓகே என்றவன் அவளருகே படுத்தான். இரு நிமிடங்கள் கடந்தும் அவன் அமைதியாக இருக்கவும் ...ம் திரும்பிப் படுத்தாள்.

அவன் அவளையே இமைக்காது பார்த்தான். அவனது பார்வையை அவளால் எதிர்கொள்ள முடியாமல் விழிகளை தாழ்த்தினாள். அவளது விரல்களைப் பற்றி அழுத்தியவன் மிக மெல்லிய குரலில் கிறக்கத்துடன் பாட ஆரம்பித்தான்.

ஒண்ணும் புரியல சொல்லத் தெரியல
கண்ணு முழியில் கண்ட அழகுல
ஆசை கூடுதே
உச்சந்தலையில உள்ள நரம்புல
பத்து விரலுல தொட்ட நொடியில சூடு ஏறுதே
நெத்திப் பொட்டு தெறிக்குது
விட்டுவிட்டு றெக்கை முளைக்குது
நெஞ்சுக்குழி அடைக்குது மானே
மனம் புத்தி தாவியே தறிகெட்டு ஓடுது
உயிர் உன்ன சேரவே ஒரு திட்டம் போடுது

அவனது விரல்கள் கொடுத்த அழுத்தத்திலும் அவனது கிறங்கிய குரல் சொன்ன சேதியிலும் அவள் தன் வசம் இழந்தாள்.

அவளது நிலையைக் கண்டவன் விரிந்த புன்னகையுடனே அவளைத் தன்னோடு இறுக்கி அணைத்துக் கொண்டான். அவர்கள் தங்கள் வாழ்க்கையை செல்லச் சிணுங்கல்களுடனும் சின்னச் சண்டைகளுடனும் வாழ ஆரம்பித்தார்கள்.

வீட்டில் வாழும் மனிதர்களிடையே அன்பும் பாசமும் நிலைக்குமானால் அவர்களின் மகிழ்ச்சி என்றும் குறையாது. அந்த இல்லம் கோவிலாக மாறும். அங்கே அன்பும் அமைதியும் ஆட்சி செய்யும்.